செய்யிது அனபீய்யா புலவர்

Suaruby S

SIVARUBY S

நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்

உரையுடன்

வெளியிடுபவர்
செட்டியார் தெரு சீலாத் பிரசுரக் குழுவினர் - கொழும்பு-11

ANSRuSSR
Vl-54

Sivaruby. S
B
12 Arts

நபிகள் நாயகம்

சல்லல்லாகு அலைகிவசல்லம்

அவர்களின் பேரில்

பிள்ளைத் தமிழ்

தென்காசி, வடகரையூர்

செய்யிது அனபிய்யா சாகிபுப் புலவர்

அவர்கள் பாடியது

தமிழகம்

திருச்சிராப்பள்ளி

ஜமால் முகம்மது கல்லூரித்

தமிழ்த் துறைத் தலைவர்

பெரும் புலவர்

பேராசிரியர் சி. நயினர் முகம்மது எம். ஏ.

அவர்களின் உரையுடன்

வெளியிடுவோர்

இகாழும்பு, செட்டியார் தெரு மீலாத் இயக்கப்

பிரசுரக் குழுவினர்.

உரிமை பதிவு செய்யப்பட்டது
உரையுடன் கூடிய
இரண்டாம் பதிப்பு 1975

முதற்பதிப்பு
திருவெண்காடு
ஆறுமுக சாமிகளால் பார்வையிடப்பட்டு

திருவொற்றியூர்
இருசப்ப முதலியார் குமாரர்
பரசுராம முதலியார் அவர்களின்
பரப்பிரம முத்திராட்சரசாலையில்
1883 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது.

NABIKAL NAAYAKAM PILLAIT TAMIL
by
Seyyed Anafiyap Pulavar
with the commentary
by
Prof. C. Nayinar Mohamed, M. A.

Published by
The Publication Committee of
The Sea Street Meelaad Committee
Colombo-11.

Printed at
ALBION PRESS (Colombo) Ltd.
157, Jayantha Weerasekera Mawatha,
COLOMBO-10.
(Sri Lanka)

பொருளடக்கம்

அணிந்துரை	v
பதிப்புரை	vii
முன்னுரை	1
செய்யுள் முதற் குறிப்பகராதி	4
மூலம்	9
மூலமும் உரையும்	
காப்பு	51
காப்புப் பருவம்	57
செங்கீரைப் பருவம்	78
தாலப் பருவம்	99
சப்பாணிப் பருவம்	118
முத்தப் பருவம்	139
வருகைப் பருவம்	157
அம்புலிப் பருவம்	175
சிறுபறைப் பருவம்	194
சிற்றில் பருவம்	212
சிறுதேர்ப் பருவம்	231
பிள்ளைத் தமிழ் நூல்களின் பட்டியல்	250

Sivaruby. S
G.C.E (A/L)
T.H.L. College
12 'B' Arts

இலங்கை அரச
சேர்வுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும்
(1975—1978)
பல்கலைக் கழகப்புகுமுகத் தகமைகாண்
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)த்
தேர்வுக்கான

தமிழ்ப் பாடத்துக்குரிய பாட நூல்

Sivaruby. S

Valini.S

அணிந்துரை

தொண்ணூற்றுவகைப் பிரபந்தங்களைக் கொண்டு திகழ்கின்றது தமிழ் இலக்கியம் என அது யாவராலும் பாராட்டப்படுகிறது. இத்தகைய சிறப்புப் பொருந்திய தமிழ் இலக்கியப் பரப்பின் ஒரு பெரும் பகுதியாக விளங்குகின்றது இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியம். இவ்விஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பரப்பிலும் ஏறத்தாழ எல்லாப் பிரபந்தங்களும் இடம் பெற்றுள்ளன. அத்தகைய பிரபந்தங்களுள் ஒன்று பிள்ளைத் தமிழ். நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்களைப் பிள்ளையாக அமைத்து — அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ். முஸ்லிம் புலவர்களால் தமிழில் பாடப்பட்டுள்ள ஏராளமான பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் இதுவும் ஒன்று. இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த தமிழ் நூல்களை மாணவர் பயிலும் வாய்ப்பு அண்மையிலே ஏற்பட்டதொன்றாகும். இலங்கை அரசின் தேர்வுத் திணைக்களம் நடாத்தும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண, உயர்தரத் தேர்வுகளில் பாடப் புத்தகங்களாக இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் நூல்கள் அமையும் ஏற்பாடு அண்மைக்காலச் சாதனையாகும்.

இச்சாதனையின் வரலாறு சுவையானது. முதலில் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் சாதாரணதரப் பரீட்சைக்குரிய இலக்கிய பாடத்தில் சிறுப்புராணத்தின் பதுறுப்படலம் இராமாயணத்தின் கும்பகர்ணன் வதைப் படலத்தின் மாற்றுப் பாட நூலாக அமைந்திருந்தது. மாண்பு மிகு அல்ஹாஜ் பதியுத்தீன் மகமூத் அவர்கள் கல்வி அமைச்சராகப் பதவி ஏற்றதின் பின்னர் முஸ்லிம் மாணவருக்கெனத் தமிழ் இலக்கியப் பாடமாகத் தமிழ் இலக்கியம் ஆ பாடத் திட்டம் அமைந்தது. முதன் முதல் இப்பாடத் திட்டம் சேகுஞப் புலவரின் சுத்பு நாயகத்தின் யாத்திரைப்படலம், வாய்மை விளக்கிய படலம், பகுதாது புக்க படலம், கல்விபயில் படலம் என்பனவற்றையும் சாரணபாஸ்கரஞரின் யூசுப் சுலைகா என்பதையும் முகம்மதுப் புலவரின் புதுகுஷ்ஷாம் என்னும் வசனகாவியத்தின் சாண்டம் முகம்மதியா' என்பதையும் பிறையன்பன் (பேராசிரியர் கு. வித்தியானந்தன்) எழுதிய

கலையும் பண்பும் என்பதையும் கொண்டு அமைந்திருந்தது. இதே தோன்று கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரத் தேர்வுக்குரிய மாற்றுப்பாட நூலாக முதலில் வண்ணக்களஞ்சியப் புலவரின் இராஜ நாயகத்திலிருந்து இரண்டு படலங்களும் பின்னர் சேகுனுப் புலவரின் புதுகுஷ்ஷாம் என்னும் காவியத்திலிருந்து இரண்டு படலங்களும் அமைந்திருந்தன. இதனைத் தொடர்ந்து முஸ்லிம் மாணவர் மாத்திரம் அன்றி தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு தேர்வுக்குத்தோற்றம் அனைவரும் பயில வேண்டிய பாட நூல்களுள் ஒன்றுக சிறுப் புராணம் இடம் பெற்றது. சிறுப் புராணத்திலிருந்து அல்மா முலியூட்டுப்படலம் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 1975-ஆம் ஆண்டிலிருந்து அத்தகையோர் பயில வேண்டிய பாட நூலாக நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ் இடம் பெற்று விட்டது. அல்ஹம்து லில்லாஹ். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

மாணவரும் ஏனையோரும் பயன்பெறும் பொருட்டு நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழுக்கு உரை எழுதும் பொறுப்பை பெரும் புலவர் பேராசியர் சி. நயினர் முகம்மது அவர்கள் ஏற்றுக் கொண்டார். ஏற்றுக் கொண்ட பொறுப்பைச் செவ்வனே நிறை வேற்றியுள்ளார் என்பது பேராசிரியர் நயினர் முகம்மது அவர் கள் எழுதியுள்ள உரையிலிருந்து புலப்படுகிறது. பதவுரை, தெளிவுரை, விளக்கவுரை, இலக்கணக் குறிப்பு என்பன உரை யில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளன. விளக்கவுரையில் மாணவர் பாடல் சம்பந்தமாக அறிய வேண்டிய பல குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளமை இவ்வுரையின் சிறப்பம்சமாகக் கூறலாம். பேராசியரின் பணி போற்றப்பட வேண்டியது மட்டுமன்றி பின் பற்றப்பட வேண்டிய தொன்றுமாகும். இஸ்லாமிய அடிப்படை யில் தோன்றிய தமிழ் நூல்களுக்கு இத்தகைய உரை மிக மிக அவசியமாகும்.

உரையுடன் கூடிய நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ் நூலை வெளியிட முன் வந்த கொழும்பு செட்டியார் தெரு, மீலாத் சங்கப் பிரசுரக் குழுவையும் அதன் தலைவர் ஜனாப் எஸ். எம். கபூர்தீன் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய அரும்பணி புரிய எம் அனைவருக்கும் இறைவன் அருள் புரிவானாக.

'மர்சலி'
ஹேனமுல்லை,
பாணந்துறை.
1895. 10. 01
1975. 10. 07

ம. மு. உவைஸ்

பதிப்புரை

சீரான பணிகளைச் சிறப்பாகச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவது செட்டியார் தெரு மஸ்ஜித் குழு.

இக்குழுவினராகிய நாம், நமது பணிகளிற் சிறந்த ஒன்றாக இஸ்லாமிய இலக்கிய, கலாசார நூல்களை வெளியிடுவதையும் ஏற்றுள்ளோம்.

இந்த அடிப்படையில், முதன் முதலாகக் கடந்த—1974ஆம் வருடம், 'திருக்குர் ஆனின் அற்புதம்' என்ற ஒரு சிறு நூலை வெளியிட்டோம்.

இந்த நூலில் 'நமது நோக்கத்தை' விளக்கும் போது ".....உயர்தரப் கல்வி பயிலும் நமது மாணவர்கள், தமிழில் இஸ்லாமிய நாகரிகம் பற்றிப் படிப்பதற்குத் தகுதியான நூல்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய அவசியமான முயற்சிகளை எடுக்க இருக்கிறோம். அத்துடன், இஸ்லாமிய இலக்கியம், இலக்கிய வரலாறு போன்ற துறைகளில் எழுதப்பட்ட தகுதியான நூல்களை வெளியிடவும் ஆவன செய்கின்றோம்." என்று குறிப்பிட்டிருந்தோம்.

இறையருளால், இந்த வருடமே, உயர்தர வகுப்பு மாணவர்களுக்குரிய இலக்கிய நூலாகிய "நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்" என்ற இந்நூலை வெளியிடும் வாய்ப்பைப் பெற்றோம். இறைவனுக்கே புகழனைத்தும்!

1975-1976-1977-1978 ஆம் வருடங்களுக்குரிய க. பொ. த. உயர்தர வகுப்புக்குரிய பாடப் புத்தகமாக 'நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்' பரீட்சைப் பகுதியாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நூலுக்குத் திருச்சி ஜமால் முஹம்மதுக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரான பெரும் புலவர் சி. நெய்னர் முஹம்மது எம். ஏ. அவர்கள் அரிய முறையில் விளக்கவுரை எழுதியுள்ளார்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் எழுந்த இந்த 'நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்' என்ற நூல் இலக்கியம் பயிலும் உயர்தர வகுப்பு மாணவருக்கும், இலக்கிய ஆர்வம் கொண்ட ஏனையோருக்கும் இனிய பயன்தரும் என்பது எமது எண்ணம்.

இந்த நூலுக்கு விளக்கவுரை எழுதித் தந்த பேராசிரியர் சி. நெய்னர் முஹம்மது எம். ஏ. அவர்களுக்கும், எமது வேண்டுகோளுக்கேற்ப, நாம் அச்சிட்டு வெளியிடுதற்கான இலக்கிய நூலாக இந்த நூலைத் தேர்ந்து சிபாரிசு செய்தும், அச்சிட்டு வெளியிடத் தேவைப்படும் போதெல்லாம் ஆலோசனைகள் கூறியும் உதவிய நமது பேராசிரியர் அல்ஹாஜ் எம். எம். உவைஸ் எம். ஏ. அவர்களுக்கும் நமது அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது முயற்சிகள் வெற்றிபெறவும், நமக்குத் துணைதரும் நல்லுளங் கொண்டோர் அனைவருக்கும் அருள் புரியவும் அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறோம்.

நமது ஆக்கபூர்வமான முயற்சிகள் வளர்ந்து பயன்தரத் தொடர்ந்தும் ஆதரவுமாறு அன்பர்கள் அனைவரையும் அகமார வேண்டுகிறோம்!

இவ்வண்ணம்

133, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

செட்டியார் தெரு மீலாத் நபிக்கப்
பிரசுரக் குழுவினர்.

முன்னுரை

இன்பத் தமிழ், இலக்கியப் பரப்பும் இலக்கணச் சிறப்பும் கொண்ட பழமையான வாழும் மொழியாகும். எண்ணற்ற பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் கொண்டு சமுதாயத் திற்கு வளமும் நலமும் தந்து வலிவும் பொலிவும் ஊட்டு கின்றன. துங்க நிகர் சங்க இலக்கியங்கள் மங்கா ஒளி விடு கின்றன. பெருங்காப்பியங்களும் சிறுகாப்பியங்களும் பேரின்பம் பயக்கின்றன. பிற்காலத்தே எழுந்த தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களும் இலக்கியச் சுவையை வாரி வழங்குகின்றன. இப்பிரந்தங்களுள் பிள்ளைத் தமிழும் ஒன்று. பிள்ளைக்கவி என்வும் பிள்ளைப் பாட்டு எனவும் இது வழங்கப்படும். கடவுளரை யும் கடவுட் பெண்டிரையும் மன்னரையும் பெரியோரையும் குழந்தைப் பருவத்தினராகக் கொண்டு பிள்ளைத் தமிழ் நூல் கள் பாடப்பட்டுள்ளன. இப்பிரபந்தம் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் இருவகைப் படும். பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாகப் பாவித்துக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாராணை, அம்புலி முதலிய பத்து பருவங்களில் பாராட்டிப் பாடுவது இதன் இலக்கணமாகும். மூன்று மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரை ஒன்றித்த மாதங்களாகிய பத்து மாதங்களின் முறையே பத்துப் பருவங்களைச் சிறப்பித்துப் பாடுவர்.

சந்த நலங்கனிந்த விநத்தப் பாக்களினால் இப்பிரபந்தம் அமையும். பெரும்பாலும் ஒவ்வொரு பருவமும் பத்துப் பாடல் களைப் பெற்று வரும். பாடல்களின் எண்ணிக்கை கூடியும் குறைந்தும் அமைவதுண்டு. ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் மேற் கூறிய முதல் ஏழுபருவங் கள் பொதுவானவை. ஆண்பாற் பிள்ளைத் தமிழில் சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகியன அடுத்து வரும் மூன்று பருவங் களாகும். பெண்பாற் பிள்ளைத் தமிழில் அம்மூன்றுக்கும் நிகராகக் கழங்கு, அம்மானை, ஊசல் ஆகிய மூன்றும் அமையும். இவ் வமைப்பில் சிறிது வேறுபாடுமுண்டு.

இடைக் காலத்தில் தோன்றிய இவ்விலக்கிய வகை காலப் போக்கில் வளர்ந்து செழித்துள்ளது. ஒட்டக் கூத்தரின் குலோத் துங்க சோழன் பிள்ளைத் தமிழ் கிடைத்துள்ள பிள்ளைத் தமிழ் நூல்களுள் முதலாவதாகும். குமர குருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், முத்துக் குமார சாமி பிள்ளைத் தமிழும் வளம் மிகுந்து, கவிதை நலம் கனிந்து படிப்போர்க்குச் சுவை பயந்து பேரின்பம் செய்கின்றன.

'இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி' என்று கொண்ட முஸ்லிம் சான்றோர் இன்பத் தமிழுக்கு அன்புத் தொண்டாற்றி உள்ளனர். பேரிலக்கியங்களும் பல்நூற்றுக்கணக் கான சிற்றிலக்கியங்களும் படைத்தளித்துள்ளனர். சீறாப் புராணம், புத்துகுஷ்ஷாம் போன்ற பெருங்காப்பியங்களும், கலம்பகம், கோவை, அந்தாதி, அம்மானை, ஊசல், மாலை, மஞ்சரி முதலிய பிரபந்த வகைகளும் பாடிக் குவித்துள்ளனர். படைப்போர், தொண்டி நாடகம், நாமா, மசலா, முனாஜாத்து, கிஸ்ஸா முதலிய புதிய இலக்கிய மரபுகளையும் தமிழ் இலக்கிய அரங்கில் ஏற்றியுள்ளனர். நெஞ்சையள்ளும் பிள்ளைத் தமிழும் பாடியுள்ள னர். நாயகம் பிள்ளைத் தமிழ் முகையிதின் பிள்ளைத் தமிழ், நாகூர் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் முதலியன குறிப்பிடத்தக்கன.

நபிகள் நாயகம் மீது முத்தமிழ்வித்தகர் மூவர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளனர். இவர்களுள் சையது அனபியா சாகிபும் ஒருவர். இவரது நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ் எனும் இந்நூல் சொற் சுவையும் பொருட் சுவையும் கற்பனை வளமும் வடிவச் சிறப்பும் பொருந்திய பாடல் கவிகள் 103 கொண்டுள்ளது. இவரது அறபு மொழிப் பயிற்சியும் இஸ்லாமிய ஞானமும் தமிழ்ப் புலமையும் தத்துவ வித்தகமும் வடநூற் பயிற்சியும் சிறந்தும் படிப் போர்க்கு வியப்பையும் மகிழ்வையும் பயக்கின்றன. எல்லாவற் றையும் விட நபிகள் நாயகத்தின் மீது இவர் கொண்டுள்ள காதல் அளவு கடந்து விளங்குகின்றது. இவர் பாட்டுடைத் தலை வராகிய நாயகத்தைப் பிள்ளையாகப் பாவித்து அவர்களின் அரும் பெரும் செயல்களையெல்லாம் வியந்து வியந்து போற்றி மகிழ்ந்து மகிழ்ந்து பாடுகின்றார். உள்ளம் குளிர்ந்து உவந்து உவந்து பாடுகின்றார். நாயகம் அவர்களின் பிறப்பு, சிறப்பு, அருஞ் செயல்கள், ஆற்றியதாகக் கருதப்படும் அற்புதங்கள், அவர்களின் தோற்றத்தால் மாநில மக்கள் அடைந்த மாபெரும் நன்மைகள் அனைத்தையும் பாடலில் ஈடுபட்டு மெய் மறந்து மகிழும்படிச் செய்து விடுகின்றார்.

இத்தகு நூலைப் படைத்தளித்த சையது அனபியா சாகிப் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வடகரையைச் சேர்ந்தவர். சையத் மீரசா லெப்பை என்பவரின் அருமைப் புதல்வர். இவர் மார்க்கக் கல்வி பெற்று மக்கட்குப் போதித்து வந்தார் என்பது

இந்நூல் கொண்டு தெரிய வருகிறது. இந்நூல் செய்வதற்குத் திருநெல் வேலிப் பேட்டையைச் சேர்ந்த மேத்தர் முகியித்தீன் இராவுத்தர் என்பாரும் முகம்மது நயினார் இராவுத்தர் என்பாரும் உதவி செய்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

பின்னைக் கவிமுதாகத் திகழும் இவ்வினிய நூலைப் பாட நூலாக வைத்தள்ளமி நாட்டுக் கல்வித் துறையைப் பாராட்டு கிறேன். இவ்வரிய எழுக்கு உரைகாணும் பேற்றினைத் தந்த பேராசிரியர் அல்ஹாஜ் எம். எம். உவைஸ் அவர்களுக்கு என் நன்றி. இம்முயற்சியில் உறுதுணை செய்த தன்பர்கள் ஜனாப் அப்துல் ஜப்பார், ஜனாப். பிச்சை முகமது, ஜனாப். மன்சூர் ஆகியோர்க்கும் கடமைப்பட்டுள்ளேன்.

இதனை வெளியிடப் பொருளுதவி புரிந்த கொழும்பு செட்டியார் தெரு மீலாத் குழுவினருக்கும் சிறப்பாக அதன் கல்வவர் ஜனாப். எஸ். எம். சகாப்தீன் அவர்களுக்கும். நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த கொழும்பு 'அல்பீயன்' அச்சகத் தாருக்கும் எனது இதயம் கனிந்த நன்றி.

வாழ்க தமிழ்! வளர்க இஸ்லாம்!

அ. நயினார் முகமது.

ஹிஜ்ரி 1395 ஷவ்வால் பிறை 1
1975 ஒக்டோபர் 7.

தமிழ்த்துறை
ஜமால் முகம்மது கல்லூரி
திருச்சிராப்பள்ளி
தமிழகம்.

நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்

செய்யுள் முதற் குறிப்பகராதி

பாடல்		பக்கம்
அகதாயிருந்த யிறை	48,	238
அகம்பல தமைக்கு முன்	42,	207
அரிகடல் சூழ்ந்திடு	39,	191
அருவுருவி லமையாத	40,	196
அல்லில் விரியா	33,	162
அழியாத யிறை	28,	143
அறமணம் வென்றியை	16,	89
அறிவுக் கடலில்	20,	105
அறிவுக் கடலை	44,	214
அன்னமெனும் புள்	15,	83
ஆடற் கடங்கா திறை முனிவு	44,	218
ஆதநபி தலைமுறை	15,	84
ஆதி நபிபைப் படைக்கு முனம்	13,	74
ஆதி திருப் பேரொளிவு	9,	54
ஆதியி னருளொடு	50,	247
ஆவண வீதியில்	49,	245
இறையோன் தனைப் பிரியமுடனே	49,	240
இறையோன் மறையை	22,	114
உள்ளார் குலத்தினுயிர்	29,	148
எல்லிதனிற் பேர்பதித்த	16,	229
ஏர் பெருகு [illegible]யனும்	42,	203

ஒப்புவமை யில்லாத	24,	118
ஓகை யாயிறை	36,	175
ஓங்கலுள் வனங்களில்	41,	200
ஓதை தினமாருத	28,	141
கடவுளு வந்த பொருள்	32,	157
கனித புகழ்டங்காத	36,	179
கண்ணி லடங்கா	18,	99
கதாயுதங் கொண்ட	26,	133
கந்தம் பொதிந்த	33,	164
கரு ருவி லமையாத	48,	235
கள்ள மனதுள்ள	24,	124
கனமாகும் பூங்குழல்	24,	120
காரணமெங்கும் விளங்கிட	50,	245
காவி விழி கமலமுக	14,	81
குணியக மீறிய	15,	87
குயின்கள் திரண்டு	21,	103
குருமொழியை யயராமன்	48,	236
குவலையந் தனக்கொரு	27,	136
குனறவில் மிருந்த	11,	63
கோடானு கோடி	38,	188
சடசடென் றுருள்	47,	233
சங்க முழங்கு மலை	45,	221
சிங்க முழங்கு	21,	107
சித்து நிறைந்த	26,	134

சீர் கொண்ட வாவி	17,	97
செகம் விண் கடலுமலே	45,	223
செக்கர் நிறமாருத	43,	209
செம் பொற் சதங்கை	45,	219
சேனினுக் கரசான	38;	186
சொக்குளகுஞ்	31,	153
சோதி மீன் தங்கு	16,	91
தண்மணி கொழிக்குமலே	13,	76
தாரகைக் குழுவுண்டு	37,	181
திரை பிறழ்ந்தகலாத	41,	199
திருவளரு மக்க நகர்	9,	51
திருவின் மறையாய்	10,	57
துதியிலடங்காப் புகழுடைய	30,	151
துளி மேக மனதினில்	37,	183
தேனெடு முக்கனி	22,	112
தொலையாத புகழ்	17,	93
தோகை முருந்து	29,	147
நவமி லடங்கா திறை	10,	59
நல்லான் மறையும்	44,	216
நன்றி வினைக்குந்	32,	159
நேமியின் புள்	38,	185
பணமோடு படத்தில்	27,	139
பாணி நிறைந்த	46,	225
பார்க்குள் நெறி	11,	65
புத்திமதிக் கமையாத	39,	194
புவியேழுலகு மூயர்	49,	242
புனல் மாறி மாறுத	40,	197

பொங்கி வரும் புனலுள்ள	42,	205
பொறுமை நிலை தவருத	29,	146
பொறுமை மிகுந்த	12,	69
பொன்னென்ற தேரோளி	47,	261
பொன்னைப் பழித்த	34,	166
போகமது மாருத	25,	127
மங்குல மொத்த	17,	95
மணியும் பவள	18,	101
மண்ணுலசையின்றி	13,	72
மதிகெடாரு மும்மாரி	9,	55
மருவுமிகு குங்கும	14,	78
மருள் பெறுங் குபிர்	34,	169
மலைகடல் வையகந்	35,	171
மாலி யொழுகுஞ்	32,	161
மீளிபெறு மண்டலம்	25,	129
மூதலவனென்னுட	39,	190
முந்த சலாலு	34,	168
முந்த விருளானதில்	36,	177
மூரலுட மரகதமலை	31,	155
முனேர் நடந்த மறைவழியை	30,	149
மூரிவலா மும்மாரி	43,	212
வடவையினகர மது	35,	173
வண்டிசைகள் மாருத	26,	131
வர்த்திலுயர்ந்த	12,	67
வரபதி யொளிவிலில்	23,	115
வனமிறு வாரி	24,	122
வானம் புவியை	11,	61
விண்ணிற் சிறந்த	20,	103
விண்ணுல கடங்கலும்	41	202
விரிகதி ரொளி	21,	110
வையந்தலை யாளாசர்	46,	227

நபிகள் நாயகம்
பிள்ளைத் தமிழ்

காப்பு

1. திருவளரு மக்கநகர் குறைசிக் கெல்லாந்
தினகரன்போற் பிறந்திருளின் குபினை நீக்கி
மருவளரும் வனஞ்செறிந்த மதீனை நாட்டில்
மகிழ்ச்சியுற்றேயரசாகி மாருத் தீனின்
பொருள்வளரப் புவிமுழுதும் விளக்கச் செய்த
புகழ் நபிமு கம்மதுற்ற சூலுல்லா மேல்
அருள்வளரும் பிள்ளைக்கவி தமிழாற் கூற
அருளினெடு மருள் தருவா யாதி யோனே.

2. ஆதி திருப் பேரொளிவு பிரிந்த டங்கா
தருள் நிறைந்த வெழு கடலின் முழ்கி மூழ்கிச்
சோதிமணி யாயுதித்துப் பணிந்து வானத்
தோகை யெனும் வடிவு கொண்ட தன்பின் னுலே
சாதிமனு வடிவாகி முகம்ம தான
சஞ்சீவி சையிதிற சூலுல் லாமேல்
நீதிபெறும் பிள்ளைத் தமிழ்க் கவிதை கூற
நெறியுடனே வாக்கருள்வாய் தம்பி ரானே

3. மதிகடொறு மும்மாரி பொழிதல் சேர்ந்த
வடகரையூர் தனில் வாழுந் தீனு ளோர்க்கு
விதிமுறை கடவருமற் றினங்க டோறும்
விருப்பமதா யுரைக்குஞ்சை துமீரு லெப்பை
துதியுடைய தவப்பலனு லுதித்து வந்த
தோன்றல்சை யிதனபியா சாகி பாலுன்
கதியுடைய முகம்மதுநந் நபிமேற் பிள்ளைக்
கவிதை மொழி சிறப்பாகக் கழறி னுனே.

காப்புப் பருவம்

4. திருவின் மறையாய்ப் பொருளினமாய்த்
தெவிட்டா வறிவாயீப் பொறி வகையாயீச்
சிதையா துயிரா யானந்தமாய்ச்
சிறந்த சுவையாய்த் தெள்ளமுதாய்

மருவின் மணமா யருட்குணமாயீ
வயங்குந் தருவாய் மழை முகிலாயீ
மறையா மணியாய்க் கதிர்ச் சுடராய்
வழுப்பி னடங்கா வடிவேலோடு

பொருவி லமையாக் காரணமாய்ப்
புண்யத் துறையாய்ப் பெருவாழ்வே
பொங்கும் படியாய்ப் புகழ் செறிந்த
பொருளே பூவான் பல்லுயிர்க்குங்

கருவின் கருவா யாண்ட கையாய்க்
கருதிக் குன்னென் றெழுத்திலுட
கதுருப் படைத்தே மிசவாருங்
கலியின் முகமான் காப்பாமே. (1)

5. நவமிலடங்கா திறையொளிவால்
நவமா யுதித்து மலக் கூத்தில்
நறவங் கமழ்ந்த பொன்னூட்டில்
நகை சேர் கிந்திலெனும் விளக்காய்

தவங்கள் புரிந்த சபரூத்திற்
கமைந்த மஞ்ஞை வடிவாகித்
தனியோ வறிவாயீ லாகத்திற்
றனியே வளர்ந்தவெக்கீன் மரத்திற்

சிவமெய் பெருக வோயாமற்
சிறந்த மொழிசேர் கலிமாவை
சிபத்தாய் மொழிந்து பணிந்திருக்கச்
செயமுத் திறனுங் கொடுத்தருளி

பவம் புல் படிறு மணுகாமற்
படியிற் செங்கோ னடத்திடவே
பதியாயீப் பிறந்த காயீமைப்
பண்பாய்க் காப்பாய் முகமானே! (2)

6. வானம் புவியை மலைகடலை
மதியை யொளியைப் படைத்தருளி
வரிசை யிலையென் றருள்பொருகி
மகுமு தொளிகொண் டமரரொடு

தானும் லட்சத் தறுநான்கு
தவரு நபிக ளனைவரிலும்
தகுதி மிகுந்த முறுசல்நபி
தம்மைப் படைத்துத் தவப்புரிய

ஈன மணுகா நல்லினையை
எடுத்து நடத்த மாராய
மிசைத்த மறைநூல் வழிநேர்மை
இயல்பாய்க் காட்டிக் காத்ததுபோல்

மான மறிவு ஞானமொடு
மாழ்வின் குணமு மகமுறைந்த
மகுமூதரசைக் காத்தருள்வாய்
மறையின் பொருளே றகுமானே (3)

7. குறைவில் மிகுந்த இபுலீசின்
கொள்கை யகத்திற் குடிகொண்ட
கொலையுங் களவுங் கொடுங்கோ லும்
கூவில் நடத்து நுமுறூதை

மறையின் படியாய் நடப்பதற்கு
வந்து மொழிய மனம்வெகுண்டு
வடவைக் கனல்போல் வன்னிதனை
வளர்த்துப் பெருகி யக்குழியில்

இறைவன் விரைவில் வைக்கும்படி
யிறைக்கப் பிர்த்தே யெரியிடத்தில்
இடவல் வெரியைப் பூவணைபோல்
இருக்க விடரொன் றணுகாமல்

நறைமெல் கமழ்ந்த இபுறகி
ந'யினை நாட்டிற் காத்ததுபோல்
நபிகள் பெருமான் முகம்மதுவை
நயமாய்க் காப்பாய் நாயகனே (4)

8. பார்க்குள் நெறியின் முறையொழுங்கைப்
பால னுடனே யிபுறகீம்
பயமாய் நடத்தி வருநாளில்
பண்ணர் தனிலே பலரெழுந்து

மார்க்க மறிய வந்ததன்பின்
மகனை யறுத்து வழங்கெனவே
வாக்குப் படியே வைவசியால்
வலுகொண் டறுக்க மறிகொடுத்து

சிக்கி ரத்தின் விலக்கியுயிர்
சேதக் குறையொன் றணுகாமல்
செகத்தி லிசுமா யீலுதமைத்
தெள்வாய்க் காத்த வரிசையைப்போல்

தீர்க்க நபியாய்ப் புவிபிறந்த
செய்யி றிறசூ லகுமதர்க்குத்
தீங்கொன் றணுகா மற்காப்பாரீ
சிற்றுயர் நிறைந்த சீமானே (5)

9. வரத்தி லுயர்ந்த வையமதில்
வானேர் மனுவோர் வாழ்த்திடவே
மறைதேர் நபியாம் யகூபு
மகிழ்வாய்ப் பெற்ற முலாகளிலே

தரத்தில் வலிய வீரமொடு
சாந்த குணமும் பேரறிவும்
தவறுப் பொறுமை வாசகமுந்
தணியாத் தருமமும் பொருந்திடவும்

புரத்தில் வளப்பு பூத்துவொளி
பொங்கிச் சொரிய யூசுபைப்
புகழாய்ப் படைத்தே யம்புலிபோல்
பொலிவாயீ வளர்த்து வருநாளில்

சுரத்திற் கிணற்றிற் றள்ளிடவே
துன்ப மணுகாக் காத்தோனே
சோதி நபியைக் காத்தருள்வாய்
துய்ய பெரிய கோமானே! (6)

10. பொறுமை மிகுந்த புவிமாது
புனித முடனே புடையைப் போற்
புனைந்த திரைவா ருதியிடத்திற்
பொறிவிட் டெழுந்து குதித்திடுங்காற்

குறுமை யணுகா மீன்கூத்துக்
குணமாய் விழுங்க வதைத் தொடர்ந்தோர்
குன்று னிணநூன் மீன்விழுங்கிக்
குலவ ஐயெட்டெல் வரைக்குஞ்

சிறுமை யணுகா திருந்திடவுந்
திரை மீன் வெளியே கக்கிடவும்
சேத மணுகா மற்காத்துச்
செங்கோல் செலுத்த யூனுசுவை

நறுமை பெறவே வைத்தோனே
நவமா யுலகில் வந்துதித்த
நபிகட் கரசர் முகம்மதுவை
நயமாய்க் காப்பாய் நாயகனே. (7)

11. மண்ணுசை யின்றியுயர் பேரறி வினுசையில்
வலுக் கொண்ட வாலுேர்களும்
மாருமலி நபிமார்க ளாமினுர் பாலிலே
மாராயம் வந்தோதவும்

பெண்ணுசை யற்றபெரி யோர்களு மும்மலம்
பேணி வரு முதியோர்களும்
பெருமையாய்ப் பலநாளின் முன்பு முன்பாகவே
பிழையின்றி மொழியோதவும்

பண்ணுசை நற்றபல பாவலர் நாவலர்
பழுதற்ற பதியோர்களும்
பணிகலைகள் வகைவகைய ணிகொண்ட கூறுலீன்
பாவையர்கள் மடவார்களுங்

கண்ணுசை களிகொள்ள பூவினிற் காரணம்
காண்பிக்க வந்த மகவே
கனகமுடி யப்துல்லா கண்மணி முகம்மதைக்
காவலாயி றைகாக்கவே (8)

12. ஆத நபியைப் படைக்கு முனம்
அருமை நபியா யிருந்து திரை
யலைசூழ் புவன மனுவடிவி
லழகாய்ப் பிறந்த நபி பொருட்டால்

சீத சோலை நதி வளஞ்சூழ்
திருநெல் வேலிப் பேட்டைதனில்
சிற்ப்பா யுதித்த மேத்தர்மு
கியித்தீன் ராவுத்தர்க்கு மவ்வூர்

நீதி வழுவா முகம்மது நன்
நயினு ராவுத் தர்க்குநனி
நிதியே பெருகி யோங்கிவளர்
நேராயுள்ள வர்த்தகங்கள்

ஆதியோடே கொடுத்தருள்வாய்
அரிய பெரிய புகழுடைய
ஆதி முதலே யிறையவனே
யழியாப் பொருளே அல்லாவே (9)

13. தண்மணி கொழிக்கு மலைகடல் சூழ்ந்த
தரையெலாந் தீனெறி நடத்த
வண்மணி யாக வுதித்தநந் நபிமேல்
வரிசையின் கவிமிக மிகவும்

விண்மணிப் பிரபை யனைய பாச்சொல்லி
விண்டிடுங் கவிஞர்முன் மினிட்டான்
கண்மணிப் பிரவை போலுமியான் பிள்ளைக் (10)
கவிமழை சொரிந்த னனன்றே.

செங்கீரைப் பருவம்

14 மருவுமீகு குங்கும மாளிகையாட மாணிக்க நவரத்தின
மாலையொடு புயமீதிலாடவே யாரண மறவாத
மன மார்பிலே
மரகத பதக்கமணி யாடவே

திருபையுறு மைக்கணி னிமையாடவான்
வளர்பிறை நுதற் சுட்டியாடவே
மணமொய்த்த வடிவிலிற் சிவாடவே

அருமையொடு பேரறிவை யோது மறை நாவாட
அரத்தமிணை யிதழாடவொன் னுவிபோ லுதவுகர
மாடவே காப்பாட வண்டபகிரண்ட மாட

திருமலர்க் காலணி கொஞ்ச விளையாடுவீர்
செங்கீரை யாடியருளே
திருவொளி விலாவதுரை மகுமுது நாதரே
செங்கீரை யாடியருளே

15 காவிவிழி கமலமுக கூறுல்கி னுடவான்
கடவுளரி களித் தாடவே
கலிமறைக்க ரைகண்ட நபிமார்கள் புதல்வர்கள்
காதல்கொண் டுற்றுடவே

ஆவியுறு பைம்பரிக ளேழோடு தேராட
வாகித்த னும்மாடவே
அமுர்தக திராடவே லெளகிலெடு கலமாட
வறுசிலெடு குறுசாடவே

கோவுலகு சொர்க்கபதி தானுட துஞ்சிடான்
குதுறத்தி லுருவாகிய
குலவுபல சீவசெந் தோடுஜின் மாந்தருங்
கொள்கையாய்க் கொண்டாடவான்

தேவர் நதி நீராடி வந்தமணி வள்ளலே
செங்கீரை யாடியருளே
திருவொளிலி லானதுரை மகுமுது நாதரே
செங்கீரை யாடியருளே

2

16. அன்னமெனும் புள்வடிவ தாகிகளீ மாவையு
மருள்ளே டறைந்த வடிவே
அழகான நற்புரு வடிவுகொண் டாதியை
யஞ்சலித் துகந்த வரசே

அன்னிய மெனுங்குயில தாகியுயர் வானினி
லருந்தவம் புரிந்த குருவே
அஞ்சுவகை வர்ணமயி லாகிமனு வேடமா
யானபதி யனுகூலமே

மின்னெளிவுக் கெண்மடங் கொளிவுற்ற பொன்மகுட
மேவுமுயர் சிரமீதிலே
வெய்யகதிர் போல வெழு தாரகை தங்கிட
விறல் பெற்ற செயசெல்வமே

செந்நெல்வள மாருத மக்கநகர் வள்ளலே
செங்கீரை யாடி யருளே
திருவொளிவி லானதுரை மகுமூது நாதரே
செங்கீரை யாடி யருளே 3

17. ஆதநபி தலைமுறை யைம்பத்தி யொன்றினி
லழகா யுதித்த வடிவே
அழல் முழுகிடாஇபு ருகீநபி வழிமுறையி
லருள் வரம் பெற்ற கனியே

ஏதுமிட றில்லாத யிசுமாயில் தோத்திரத்
தியல்பாக வருநீபமே
ஈகைகுண மகலாத அதுநா னெனுங்கீர்த்தி
விருகீக்க வந்த நபியே

கோதுகுறை யணுகாத குறறியின் குலதிலக
கொண்ட மணி குணரத்னமே
கொற்றவபு துல்லாவின் மைந்தரென வாழ்த்தவே
கோவுலகில் வந்த குருவே

சதமடர் சோலைசெறி மக்கநகர் வள்ளலே
செங்கீரை யாடியருளே
திருவொளி விலானதுரை மகுமூது நாதரே
செங்கீரை யாடியருளே! 4

18. குனியக மிறிய தாய்மல ரடியினிற்
குபலென் முபுத்து காணுங்
கோல முகந்தலீ கவிழ்ந்து வணங்கிடக்
கொள்கை புரிந்தோரே

துனியக மிறிய வும்பர்க ணபிகளுஞ்
சோபனக் கனவாகத்
துன்பமு மனுகிடா மாதமும் பலதினஞ்
சொல்லிடக் கேட்டோரே

மணியொளி வீசிய பணிகலே சுமந்திடும்
வான்பதி மடவாரு
மருத்துவம் புரிந்திட ஆசியா மரியம்
வந்திடக் கண்டோரே

அணிபதி மக்கத் தபுதுல்லா மகவே
ஆடுக செங்கீரை
அருள்வரம் பெற்ற நபிக்குல நாயக
ஆடுக செங்கீரை 5

19. அறமணம் வென்றியை யறைந்திட மும்முர
சனுதின மிடிபோல
வறைந்துயர் தோரண வீதி செறிமனே
யணிபதி மக்காவில்

திறமுறும் வடிவினில் வாசனே பேரொளி
திகழ்பெறு கிபுலா நேர்
திசைமுக சென்னி கிளர்ந்து பணித்துயர்
செங்கரங் காலதனில்

நிறம்பெற வைத்தே பிறந்திறை போற்றின
நேருள ஆவிமே
நேசமும் பாசமும் வேதமும் போதமு
நெறியுள வெந்நபியே

அறிவகந் தங்கிய அபுதுல்லா மகவே
ஆடுக செங்கீரை
யருள்வரம் பெற்ற நபிக்குல நாயக 6.
ஆடுக செகீரை

20. சோதி மீன் தங்குசிர மீதினில் நெய்யொழுகச்
சுடர்விழியிற் கருமையுடன்
சுன்னத்துஞ் செய்யலாய்க் கொப்புளுங் கொய்யலாய்த்
துடக்கின்றி கஸ்தூரியும்

வீநிமனே சுற்றெலா மணம் பொங்கப் பாரெலாம்
விரிந்தொளிவு வானெட்டவு
மேலான திங்கள் றபீ வுலெளவல் மாதமில்
விளங்கு தின மீராறுதான்

தேதிமதி ராவினில் சிலையுறு புத்துகுலஞ்
சிரங்களிழ் இடுலீசொடு
கி.ச்சா சனைவ சேருவான் கோட்டையுஞ்
செஞ்சுடரு நூந்தழியவே

ஆதி நூல் வெளியேற்ற பூவிற் பிறந்த நபி
யாடியருள் செங்கீரையே
அறுசேறி வசனித்து வந்த மதுமுதரே
யாடியருள் செங்கீரையே 7

21 தொலையாத புகழ் பெற்ற வானவர்க ளேவலும்
தோகையென சூறுளீன்கள்
துதிகொண்டு சாமர மிரட்டவும் மும்முரசு
தொனியினெடு வெள்ளரவமும்

கலையான வேதமுஞ் சந்தனக் காவொடு
கயலேறு கோப் பெச்சையுங்
ககனமது தொடுகின்ற மரகத மாலையொடு
கனபதி கருப்பாறுடன்

தலையான சறுபந்து மவுலியுங் குங்குமத்
தாரொடு கார்க் கவிகையுஞ்
சார்ந்த விருதல்லாது சதகோடி விருதினெடு
தங்கியுயர் பொன்னூரொடு

அலையாழி ஆழுலக நிலையான துற்றதுரை
யாடியருள் செங்கீரையே
அறுசேறி வசனித்து வந்த மகுமூதரே
யாடியருள் செங்கீரையே 8

22. மங்குல மொத்த சுரிகுழல் தங்கிய
வானுறு மடவார்கள்
வந்துதினந் தோறு மஞ்சன மாட்டிட
வாகாய்க் களத்தோரே

திங்களு மின்றிய தீனெனும் பயிர்க்கொ ந
சீகர மானேரே
தீவினை துண்டமு மீனமுந் தீரச்சஞ்
சீவீயாய் வந்தோரே

செங்கதி ரேழு முருக்கிய நாளையிற்
செழுந்தரு வானேரே
செகதலந் தனக்கொரு மணிவிளக் கெனலாய்ச்
செங்கோல் கொளுங் கோவே

செங்கமலத் திருசரண விமோசரே
செங்கோ செங்கீரை
செக குலம் புகழ்மதி னுவினுக் கரசே
செங்கோ செங்கீரை 6

23. சீர்கொண்ட வாவிவள மேகொண்ட சோலைசூழ்
திருவார்ந்த திருநெல்வேலி
திகழ்கின்ற உடலினுயி ராய்வந்த மேத்தர்
முகியித் தினு ராவுத்தரொண்

கார்கொண்ட வண்டமிழ்க் கவிராயர் குலதில
கராய் வந்த விடலை யானேனுன்
கருணையிரு விழிமுகம் மதுநயினு ராவுத்தர்
கல்பாசனத் தினுடு

கூர்கொண்டு விளையாடி வருதுரைச் சிங்கமே
குவலயத்தோர் கள் வாணுர்
கூறுலீன் கன்னிபரி தேவுஜின் மற்றுமுள
கோடான கோடியுயிரும்

ஆர்கொண்ட சோபன மாராய வள்ளலே
ஆடியருள் செங்கீரையே
அறுசேறி வசனித்து வந்த மகுமுதரே
ஆடியருள் செங்கீரையே

10

தாலப் பருவம்

24. கண்ணி லடங்கா தொளிமிகுந்த
கதிரோன் செம்பொற் றிகிரியென
ககன நிறைந்த வடுவேந்தன்
களிப்பாய் வரும்வி மானமென

வண்ண மணிச்சட் டமுமொழுங்கும்
வான்மின் பிடித்தங் கமைத்ததென
வளபொற் கதிர்கள் வெயிலெறிப்ப
வயங்கும் பச்சை மரகதத்தாற்

பண்ணுங் குடம்போற் காற்குமிழும்
பசும்பொ னமைத்த சங்கிலியும்
பவன மடவார் தாலாட்டும்
பதஞ்சேர் வாணுர் போற்றிடவே

கண்ணுக் கடங்கா திருந்தாடுங்
காசீ நபியே தாலேலோ
கருணைக் கடலே முகம்மதுவே
கபீபே காமீம் தாலேலோ

25. மணியும் பவள மரகதத்தின்
வடிவா யிருந்து முன்னுளில்
மாரு உருவொன் றுய்ச் சமைந்து
மண்ணில் பிறந்த மாதவரே

அணியும் புயத்தார் நபிமார்க
ளனைவர்க் கரசாய் வந்தோரே
ஆதி மறைநூ லோதிடவே
யருள்சேர் திருநா வுடையோரே.

பணிதல் வழுவா தவர்க் குயிராய்ப்
பதவி யருளும் பாக்கியரே
பல நோயீ துன்ப மணுகாமல்
பலன்க டருவீ ரேந்நபியே

கனித லடங்கா தறிவுடைய
காசீ நபியே தாலேலோ
கருணைக் கடலா முகம்மதுவே
கபீபே காமீம் தாலேலோ. 2

26. விண்ணிற் சிறந்த விண்மணியே
விதுவின் மணியே வெண் மணியே
வேத மணியே வேயீ மணியே
மோகமணியே கடல் மணியே

திண்ணிற் சிறந்த தருமணியே
தீனின் மணியே செம்மணியே
திகழ்ந்த லுடைய வலீம மணியே
திரண்டு சிறந்த துகிர்மணியே

வண்ணித் சிறந்து பொலிவாக
வைரமணியே கருமணியே
வயங்கல் குறையாப் பைமணியே
மதிப்புக் கடங்கா நவமணியே

கண்ணிற் சிறந்த கண்மணியே
காசீ நபியே தாலேலோ
கருணைக் கடலே முகம்மதுவே 3
கபீபே காமீம் தாலேலோ

27. அறிவுக் கடலில் திக்கீர்க் கடலி
லடங்கா தொளியின் பெருங்கடலி
லழியாக் கடலி னிகுமத் தெனு
மரிய கடலிற் சழூருடைய

பொறுமைக் கடலி நாணமிகப்
பொலியுங் கடலி னிடங்க ளெல்லாம்
புகுத்து முழுகி யுருவாகிப்
புலியிற் பிறந்த புகழோரே

செறிவை யுடைய செழும் புயலே
சீந்தும புயலே செகம் புகழுஞ்
செல்வத் துரையே தணித் துரையே
செம்மற் கரசே யெமக்கரசே

கறுவ லணுகா மனமுடைய
காசீ நபியே தாலேலோ
கருணைக் கடலே முகம்மதுவே
கபீபே காமீம் தாலேலோ (4)

28. சிங்க முழங்கு மொலிகளெனச்
செறுநர் குலத்தைச் செகுத்துலகில்
இறப்பாய்த் தீனின் பயிரேற்றச்
செழுமா முகிலாய் வந்தோரே

மங்குல் முழங்கும் கவிகை நிழல்
வர்ணசயுடைய மாதவரே
மணியின் வடிவாய் மயில்வடிவாய்
மனுவின் வடிவாய் வந்தோரே

சங்க முழங்கும் வயலுழவர்
தரையில் முழங்குந் தெண்ணீரிற்
சலசு முழங்கும் புட்பிறக்கத்
தாவிக் கயல்கள் போயித் துரத்தச்

சங்கை முழங்கு மக்க நகர்
தலைவர்க் கரசே தாலேலோ
தாகா நபியே முகம்மதுவே
தாசீம் கா தீம் தாலேலோ 5

29. குயின்கள் திரண்டு படுத்திடுங்கால்
குயில்கள் மயங்த மயிலாடக்
கோலப் பிரச மிசைபாடக்
கோங்கு மலர்பூத் தேஞெழுக

வெயிலின் கிரணந் தோன்ருத
வியன்சோர் துடவை சூழ்ந்தோங்க
வெடிபோல் முரசு மருங்கொலிப்ப
வேழம் பரிசு முன்னடக்க

சயில மெனவே கொடுஞ்சிரதந்
தரையிற் பதிந்து பின்னடக்கத்
தளங்கள் நடக்கத் தெருத்தோறும்
தனியாப் பெரிய வளமுடலே

சயமுஞ் சேர்ந்த மதீன நகர்த்
தலத்துக் கரசே தாலேலோ
நாகா நபியே முகம்மதுவே
தாசீம் கா தீம் தாலேலோ. 6

30. விரிகதி ரொளிவென முத்துப்பொன்
முெட்டில் மேவிடத் தானுடா
விண்டெனப் புயத்தி னிலணிமணி
பதக்கமும் விதுவென வசைந்தாடத்

துருமல ரடிகளிற் பரிபுரவொ
லியது செயமெனப் பணிந்தாட
சிந்திரப் பஞ்சணை யின்னிறு
செங்கை சீவக்க வசைந்தாட

அரியாளி தங்கிய மனமூள
மெய்யது அணுவா யசைந்தாட
அஞ்சனங் கண்களிற் தீட்டிய கூறுளீன்
அறிவா யிசை பாட

சரண மடைவரைக் காக்குந் தவதிதி
தாகா தாலேலோ
தனிய புதுல்லா குமர சுதாகர
தாகா தாலேலோ 7

31. தேனெடு முக்கனி பாலொடு
சர்க்கரை தென்னமு தொன்றுகச்
சேர்த்தமு தூறிய செவ்விதழ்
வாய்க்கிடத் தித்தம தாகுமுயர்
கான மலர்குழ லலிமா
விடமூலக் கலச மருந்தாமல்
காரண மாகவே தோன்றிய
தனமொடு கலசமு துண்டோரே
மானவர் துதிசெயுஞ் வரத
சவந்தர மழை முகில் தாலேலோ
மறை நெறி பொங்கிய வரத
பரம்பர மனுபதி தாலேலோ
தானவர் துதிசெயுஞ் சாக
நீரம்பிய தவதிதி தாலேலோ
தனிய புதுல்லா குமர
சுதாகர தாகா தாலேலோ 8

32. இறையோன் மறையை யிகழ்ந்துபல
விளமை யணுகி மெலிந்தவரி
னிடைபோற் றேய்ந்த சிற்றிடையு
மியல் பாய் வணங்குந் தொழுகைதனை
மறதி யாக மறந்தோருள்
மனத்தி னிருட்போல் பைங்குழலும்
வளரும் பிறைநேர் முண்டகமும்
வளைந்த சிலைபோற் றிருநுதலும்

மறலி யயிற்போல் மை விழியும்
மதிபோற் குளிர்ந்த மரைமுகமு
மாடைச் சிமிட் போற் குவிதனமாய்
வடிவு பெறவே மூப்பிதனைத்

திறமாய்த் திருப்போ லாக்கிவைத்த
செல்வ நபியே தாலேலோ
சென்னத் - தரசே செகத்தரசே
செம்மற் கரசே தாலேலோ. 9

33. வரபதி யொளிவினிற பிரிந்தோரே
வடிவுள மணியென உதித்தோரே
மரகத மயில்வடி வாஞ்ரே
வரமுள நபிக்கர சாஞ்ரே
புரபதி புகழ்மக்கத் தூரோரே
புலவர்கள் துதிமதி ஞவோரே
பூமிக் கெல்லாங்குரு வாஞ்ரே
புண்ணிய பதிக்கர சாஞ்ரே

பரபதிக் கதிபதி தாலேலோ
பற்றலர் முடியிடி தாலேலோ
பாவ விநாசரே தாலேலோ
பதவி யருள்துரை தாலேலோ

நரபதி செயபதி தாலேலோ
நல்லவ ரணியுயிர் தாலேலோ
நவமணி திருமணி தாலேலோ
நபிஆத முஹ்வழி தாலேலோ. 10

சப்பாணிப் பருவம்

34. ஒப்புவமை யில்லாத வாதியொரு
வாசக முளங்கொண்டு நற்செபுயீ
லொளிகுலவு நபிமார்கள் முன்வந்
துரைத்திட அண்மைகொண் டுலகாளுதிற்

கந்புநீலை தவறுத மார்க்கவழி
வளர்வித்த கருணையுள நபிமார்களிற்
கள்ளுசைக் கற்கொண்டெ றிந்த இபு
ருகீம் நபி காதலுறும் வழியானதிற்

றுப்பு நிலை சேராத ஆசிங்
குலத்திலே துணிவான வறிவாளரே
தொல்லுல கிலுமது கலிமாவைப்
பல செந்துகள் சொல்கின்ற மொழியானதைத்

தப்பாமல் கேட்கலே வந்தமரு
மூதரே சப்பாணி கொட்டியருளே
தானமருள் தருவென்லக் கைகள்
சிவப்பூறவே சப்பாணி கொட்டியருளே! (1)

35. கனமாகும் பூங்குடித் தலைமுக
மைவிழிக் கனகதலை மடவார்களும்
கடவுளர்கள் முதலான நபிமார்க
ளனைவருங் கனலியொடு மதியானதும்

இனமாக மகிழ்கொள்ள இராகமிசை
தவறாம லியம்புமன மறையோர்களு
மெந்நாளுங் கற்புநிலை தவறாமல்
வாழ்கின்ற இனியமொழி யெழின் மாதருஞ்

சினமான தின்றிநெறி நீதமாய்
வாழ்கின்ற சித்திரமுடி ராசாக்களுந்
திரைகடல் லிலுருவாகி வந்ததிரு
மாது போற் சிறப்பான நற்றாயருந்

தனதாகக் களிகொள்ளத் தாமரைக்
கைகளால் சப்பாணி கொட்டியருளே
தண்டாரள மணியாக வந்தமகு
மூதரே சப்பாணி கொட்டியருளே. (2)

36. வளமீறு வாரிசூழ் மண்பெறும்
பூவிலில் வறுமையீட ரணுகாமலே
வளர்கின்ற செல்வமு மறிவோடு
பயனுள்ள மறையோர்கள் சிறியோர்களுஞ்

சினமாறி வாழ்கின்ற செயமக்க
நாட்டினிற் செயிலென்னு மழையதனி னுல்
சேதமாய்ப் போக கா... பாவினைக்
குறைசிகள் செய்திடு மந்நாளினில்

இனமான வீரியர்க ளெடுத்திடவு
மேலாம விருந்தகச றுல் அசுவதெ
நியம்பிடுங் கல்லதனை யெழுந்த சுவர்
தென்கீழில் மூலைக்கெடுத் தேந்தியே

தனதாக வைக்குஞ் செந்தாமரைக்
கைகளாற் சப்பாணி கொட்டியருளே
தவமேவு மக்கருரு தாசா
முகம்மதே சப்பாணி கொட்டியருளே. (3)

37. கள்ளமன துள்ளநிலை யானவன் குபிரரைக்
கண்ணெதிரி லுறுமேரையுங்
களிப்பான நெறியின்றி யாள்கின்ற பற்பல
காவலொடு சூழ்வோரையும்

வெள்ளமென யூகமது துஞ்சிடச் செம்புனல்
மிருந்தோட மேன்மேலுமே
வீசுவாள் வலியுள்ள ராய்வந்த வாசகரே
வீடமுள்ள தேனோடுமே

தொள்ளாயிரு வெயிற்றரவி னத்திலொடு மாறுதீ
சூடுள்ள வெரியானது
சுரப்பான புகையிலொடு பொறியொடு வளர்கின்ற
சுடரற்ற விருட்பிலம்பில்

தள்ளாமல் மன்றுடிக் கரையேற்றுங் கைகளாற்
சப்பாணி கொட்டியருளே
சயிலமோ டுரைபேசி வந்த மகுமுதரே
சப்பாணி கொட்டியருளே! (4)

38. போகமது மாறுத சொர்க்கநகர் தவிலுள்ள
பூவையர்கள் களிகொள்ளவும்
பொற்றேரி லுறைவா விரவியொடு புரவிகள்
புனிதமோ டொலிகொள்ளவும்

மேகமே ழொலிகொள்ள வெள்ளிம்லை யொப்பான
மேனிலைகள் மேன்மேடை வாழ்
மேகலைகள் பூண்கொண்ட மாதர்களு மொலிகொள்ள
வேதியர்க ளிசையாகவே

மோகமோ டொலிகொள்ள அலைகடல்க ளொலி கொள்ள
வுயர்பல தருத்தோறினு
மோராறு கால்கொண்ட வண்டினமு மொலிகொள்ள
வுலவுபல் சகுந்தங்களுங்

கோகிலமு மயிலினே டொலிகொள்ளக் கைகளாற்
கொட்டியருள் சப்பாணியே
குறைசிகுல திலக நிதி யானமகு
முதரே கொட்டியருள் சப்மாணியே! (5)

39. நீளிபெறு மண்டல மடங்களும் விரிவான
விண்ணினொடு வெண்மேகமும்
வீசுதிரை கடல்களொடு தருக்கள் செறி
மலைகளொடு விசும்பினுறை யெண்ணுகமுந்

தாளாபை யுள்ளபட மாயிரங் கொண்டநீர்
சர்ப்பமொடு விண்ணுகமுஞ்
சவியொளிவு குறையாத தபனனொடு நளிர்கொண்ட
சந்திரனே டுடுவானதுந்

தளியெழத் தரவுபரி யானையோடு தேர்கள்பல
தொடுத்தியொடு பலசேனையுஞ்
சோதியுறு மணிமகுட மன்னரோடு பலசீவ
செந்துமுதல் தொகையாவுமே

கோளனற் பணிகொள்ள சயவிர மாகவே
கொட்டியருள் சப்பாணியே
குறைகுல திலகநிதி யானமகு மூதரே
கொட்டியருள் சப்பாணியே (6)

40. வண்டிசைகள் மாறுத மலர் வாவி மக்கநகர்
வாழ்வோர்களில் மண்டலமும்
விண்டலமு மெண்டிசையு மாண்டுதீன்
வளர்விக்க வொன்னு ரொடு

கண்டமது துஞ்சவொரு கைப்பிடி மண்ணதால்
சயங்கொளுஞ் சயவிரரே
தன் கொண்ட மானுக்குப் பிணைநிற்கப் பூவினிற்
றனதாக வந்ததுரையே

தண்டாமரை மலரினைப் பான பாதத்திற் சரணென்
றடைந்தோர் கள்பாற்
சந்தோஷமாய்க் கிருபை தப்பாம லருள்கின்ற
சய்யது முகம்மதுவே

கொண்டலென ஈயுமலர்க் கைகளால் மேன்மையொடு
கொட்டியருள் சப்பாணியே
குறைசி குலதிலக நிதியான மகுமுதரே
கொட்டியருள் சப்பாணியே (7)

41. கதாயுதங் கொண்ட குபிரார் சுரத்திலிற்
கரைந்தே தள்ளாடக்
காலியில் வெள்ள மழைத்து வளிக்கவுங்
கயஞ்சேர் மண்ணை

சதாவிரு புகுந்து வாசனே வெல்லவுந்
தடமேல் வாழ்போதி
சரணம தென்று வணங்கவு மென்மேற்
சடமே வளர்வான

விதான மனத்துள் அபுசகல் மல்லால்
வெருண்டே மருண்டோட
வென்றியுஞ் செய்திட் வந்த முகம்மது
வேந்தே மெய்யான

குதாயுரை தவரு நல்வழி நீதா
கொட்டுக சப்பாணி
கொற்றவக் கரசரே அபுதுல்லா மகவே
கொட்டுக சப்பாணி (8)

42. திந்து நிறைந்த அலைக்கடல் ஆழ்ந்த
திலையிற் பாழ் கேணி
தெருளினிற் கண்ட பொழுதினிற் பலருணை
தெளிந்தே நற்பாணி

கந்த மதாகவே போக மானெடு
கதித்தே வந்தேணி
கமலடி வாழ்த்தவுங் கச்கொடு திருமறை
கற்றே நலவாணி

ஈந்தி யறிந்த நபிகளும் போற்றிட
முதலா யுதித்தாணி
முத்தி லுதித்தவன் வந்த முகம்மதே
முண்டகக் கைபேணி

கொந்தலு மின்றி களிப்பொடு நன்முப்
கொட்டுக சப்பாணி
குன்னூத் தொலைவு புயத் தங்கிய நபியே
கொட்டுக சப்பாணி! (9)

43. குவலயந் தனக்கொரு மறைந்திடா விளக்கே
கொட்டுக சப்பாணி
குணமிலாப் பிணிக்கொரு சஞ்சீவி மருந்தே
கொட்டுக சப்பாணி

குவளையின் மலரெனக் கண்ணிரு மணியே
கொட்டுக சப்பாணி
காபதி புகுந்திட அருள்செய்யுந் துரையே
கொட்டுக சப்பாணி

குவையிரு குறைசிக் குலங்க ளுயர்ந்திடக்
கொட்டுக சப்பாணி
குயில்மொழி யலிமாக் குலங்கள் தழைத்திடக்
கொட்டுக சப்பாணி

குவவு பெரும்புவி மன்னர் மன்னேறே
கொட்டுக சப்பாணி
குதாவொடு பேசி வந்த முகம்மதே
கொட்டுக சப்பாணி (10)

முத்தப் பருவம்

44. பணமோடு படமிதித் தமைகொண்ட
பாரினிற் பலனுள்ள நற் கீர்த்திதான்
பரிமதி மறைந்தாலும் வளர்வித்த
அபுதுல்முத் தலிபென்ற பதிசேய்களிற

துணைமோடு பலவறிவு நிறைவான
மனமுள்ள குளிர்ந்தமொழி நேரமேவின்
கொற்ற அபுதுல்லா செய்நற்றவப்
பேறிளை குழந்தைமக வானநபியே

நிண மேகவும் வசியவேற் செங்கரந்தனிற்
கொண்ட நிதிபரே குவைலீது கோள்
நேயமொடு பெற்றன்ன கூறுலீ
னிலீயான நெற்றுள்ள மகவானதை

மணமேக மலர்சூட வந்தமகு
மூதரே மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முகசந்திர மணியான
நகைகொண்ட மதுரவாயீ முத்தமருளே (1)

45. ஓதைதின மாருத வுவரிசூழ் உலகிலே
உயர்ந்தபதி மக்காவினி
லுடுபதியைக் குருவிலி லழைத்திடவு மதுகண்டு
ஒருமையோ டுறவோர்களும்

போதையுறும் பெரியோர்கள் முதியோர்கள் சிறியோர்கள்
பொன்மகுட முடியாளரும்
பொறியுள்ள மும்மறைப் பொருள்கண்ட மெய்ஞ்ஞானப்
பொறியுள்ள கபீபரசனும்

காதைமிகச் செய்கின்ற வீரரொடு சேனையும்
கரியகுழல் மடவார்களும்
கற்கண்டி னினிதான கவிமாலை நன்றுகக்
கழறும்படிச் செய்விக்கவே

வாதையணு காதயிறை யருளினுல் வந்தநபி
மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முகசந்திர மணியான நகைகொண்ட
மதுரவாய் முத்தமருளே. (2)

46. அழியாத யிறையுடைய முனிவினி லுருவான
அசாசிலொடு வழியாஅதி
லகப்பட்டு மாருத அழலுடைய நரகினி
லழுங்கின்ற குலமானதில்

எழின்மேகந் தழுவுநெடுமலே போல தச்சாலு
மிகலாகப் புவி பிதினி
லிடராய்ப் பிறந்தவனைச் சிபுறி லெடுத்தெறிந்திணை
யானகை கால்களில்

கழியான தொடருற்ற தளைபூட்டிக் கோபக்காக்
கல்லான கந்தரத்திற்
காவல்கொள் ளிறைபாலிற் கஞ்சமலர்க் கையேத்திக்
கருணையொடு கலிவாகநல்

வழியான மொழிகளாற்று வாச்செய்ய வந்தநபி
மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முகசந்திர மணியான நகைகொண்ட
மதுரவாச முத்தமருளே! (3)

47. பொறுமைநிலை தவறுத புவிமீதி லருந்தவம்
புரிந்திட்ட புகழோர்களின்
பொன்றியழிந் தோரரச னுயிர்பெற் றெழும்பிவரப்
புதுமைவழி தனைக்காட்டின

நறுமையுள யீசாநன் னபிநாதர் வாயினுல்
நவின்றமொழி நலமென்றுதா
னுடுதனி லறுநூறு வருடநாள் வரையிலு
நரர்கள்செலு நடைபாதையிற்

குறுமையணு காமலிருந் திரவுபக லிறைவனைக்
கொள்கையொடு தொழுதேத்தின
குணமுள்ள இசுறுக்கு பண்டிதன் கண்டுதான்
கொண்டாடி நின்றுடவும்

மறைவலர்க டொழுதேத்த வந்தமகு முதுநபி
மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முகசந்திர மணியான நகைகொண்ட
மதுரவாய் முத்தமருளே! (4)

48. தோகை முருந்து முல்லைநன் முயிர்த்
துலங்கி யின்ம கடியரும்புந்
துணிவு வுடைய தொடுபதமுஞ்
சுடாசேர் புட்ப ராகமொடுந்

நாகு வலரி யின்றமுத்து
நாக மிடத்தில் விரைத்தமுத்து
நகைதல் குறையா மதியின்முத்து
நாக மருப்பில் விளைந்தமுத்து

பாகுவுடை யகரும் பின்முத்தும்
பலதின் முத்தைக் கோர்த்துந்தன்
பதுமத் திகழ்வாய் முத்தினுக்குப்
பாவித் துரைத்தல் சரியாமோ

வாகு குறையா தொளிவுடைய
மணிவாய் முத்த மளித்தருளே
வல்லோ விடத்தில் மொழிந்துவந்த
மணிவாய் முத்த மளித்தருளே (5)

49. உள்ளார் குலத்து னுயிரனைத்து
முலகு தனைவிட் டந்தரத்தே
யோட்டு மொளிசேர் வசிவனே
யொத்த வருள்சே ரிருவிழியுந்

தெள்ள னுடைய மறைமொழியுந்
திகழ னுடைய பலகவிகள்
சீற்ற மகற்றிப் பிரியமொடு
சீராய்க் கேட்குந் திருச்செவியுள்

கள்ளம் பொருந்தா மாத்துயர்ந்த
கனகப் புயமுங் கதிர்முகமுங்
கடலி னமுதும் பாற்றேனுக்
கரும்பின் பாகுங் கலந்ததென

வின்னா வமிர்த மொழியுடைய
வேந்த முத்த மளித்தருளே
வேதப் பொருளே முகம்மதுவே
விரைவாய் முத்த மளித்தருளே! (6)

50. முன்னோர் நடந்த மறைவழியை
முனிந்து முரணை மிகவளர்த்த
மூடன பூசகலி வெறுத்து
சூரியுடைய வயப்புலி போற்

றன்னு ளுமறுவந் தருள்கலிமாச்
சகாதத் தோதிச் சேர்ந்தவுடன்
றவமும் புரியத் தகும்புடைத்துத்
தரமாய் வாங்கு சொல்லிடவும்

பொன்னு பரணப் பெருக்குடைய
புகழ் சேர் குடக்கோன் றனிலையில்
பொருந்தி வரவும் பூவுலகிற்
பொருந்த எவர்க்குங் காரணமாய்

முன்னே ளெளிவி னுதித்துவந்த
முத்தே முத்தமளித் தருளே
மோட்சப் பதவி காட்டவந்த
முத்தே முத்தமளித் தருளே! (7)

51. நீதியி லடங்காப் புகழுடைய
தோன்றல் பிறவுன் மகமாளு
தோகை யாகி யாதமையுஞ்
சூடரும் விரிந்த பொன்னுடனே

மதியைப் பழித்த மதிப்பெருகின்
வளஞ்சே ரிம்மூன் பெற்றெடுத்து
மானான மறிய மாதினையும்
வல்லோன் பொருட்டா லாகிறத்தில்

நீதியின் படியே வெண்மையுறு
மேனி யயிரா வதமிருந்து
வீருதுக் கொடியு முள்ளுலவ
விரைவாய்ப் பவனி வந்துமணம்

முதிய தவத்தாற் செய்யவந்த
முத்தே முத்த மளித் தருளே
முன்னே ளெளிவிற் பிரிந்தமகு
முத்தே முத்த மளித்தருளே (8)

52. சொக்குள கஞ்ச மலரிணை யடிகளிற்
சூட்டிய கௌசுடனே
சொல்லரி தான அறுசிட மேறிச்
சுபுகா னல்லா பால்

பக்கம தான மறையொடு மூதுரை
பண்பாயப் பேசிடவு
பற்றலா மணிமுடி துகள்படப் பொருதி
பலன்பெற தீன்பயிரை

திக்குல கெங்கும் வளர்த்துப் பெருக்கச்
செழுமழை முகிலெனவுஞ்
செம்மல்கள் மொய்த்தடி வந்துவ ணங்கித்
திறையிட வோர் குடையில்

முக்கிய மாக்கிட வந்த தவநிதி
முத்தந் தந்தருளே
மூமீன் முகம்மது வானகிருபாநிதி
முத்தந் தந்தருளே! (9)

53. முரனுட மரகத மலையினுக் கதிபா
முத்தந் தந்தருளே
முடவர்கள் நடந்திட வரஞ்செய்த நீதா
முத்தந் தந்தருளே

முருகு பொருந்திய கறுப்பாறு நாதா
முந்தந் தந்தருளே
மோட்ச பதிக்கதி பதியுள தாதா
முத்தந் தந்தருளே

முரடனுக் கறிவுரை பயிற்றிய வேதா
முத்தந் தந்தருளே
மூரிய நபிக்கெலா மூப்புள தாதா
முத்தந் தந்தருளே

முருடுமு முங்கிய நகர்மதி முபதி
முத்தந் தந்தருளே
மூமின் முகம்மது வானகிரு பாநிதி
முத்தந் தந்தருளே. (10)

வருகைப் பருவம்

54. கடவு ளுவந்த பொருள்வருக
கற்றோர் பெரியோர்க் குயிர் வருக
கல்வி நிறைந்த மனதுடைய
கபீப் வருக கண்ணடங்காச்

செடிவு குலவு மெக் கீன் மரத்திற்
சென்று தொழுத முனிவருக
திணையிற் றீனின் பயிரேற்றும்
தேவே வருக செழுமுகில் போற்

கொடைகள் கொடுக்கும் நபிமாரின்
கோமகன் வருக கொடுமை யுறுங்
கூடார் களுக்கு ஏறுவருக
குயிலு மயிலு மகலாத

துடவை செறிந்த மக்கநகர்த்
தோன்றல் வருக வருகவே
நுய்ய நபியே முகம்மதிற
ரூலே வருக வருகவே (1)

55. நன்றி விளக்குந் தவத்தோர்க்கு
நாதா வருக வேத மொழி
நவிலும் பவள இதழுடைய
ராவே வருக நாடுதலே

வென்றி யுளநூல் நான்மறைக்கும்
வித்தே வருக விக்கினங்கள்
வினக்குங் குருவாய் வந்துதித்த
விளக்கே வருக மெய்யறிவே

சென்று வரவே புவி பிறந்த
தீரா வருக திருவடியுஞ்
சேக நிழலுந் தோற்றுத
சீமான் வருக செந்நெல் கனற்

றுன்ற லுடைய மக்கநகர்த்
தோன்றல் வருக! வருகவே!
நுய்ய நபியே முகம்மதுற்
றசூலே வருக வருகவே (2)

56. மாலி யொழுகுஞ் செங்கமல
மலரின் பொகுட்டில் விற்றிருக்கு
மணியே ரன்னந் துயில்கொள்ள
வலியின் மணிகள் கொழித்தெறியு

நீல மலர்கள் விரித்திலங்க
ஞுமிறு வினங்க விசைபாட
நெவிந்தே வாலை விண்பாய்ந்து
நீக மழைக்கு மின்னிடிப்பாய்

போல வுழக்கி மழைபொழியப்
புனரி குளங்காற் றடாகமொடு
பொங்கிக் கலக்கப் போதினங்கள்
பூத்துச் சொரியத் தேனெழுகுஞ்

சோலை செறிந்த மக்கநகர்த்
தோன்றல் வழுக வருகவே
துய்ய நபியே முகம்மதுற்
றகூலே வருக வருகவே (3)

57 அல்லில் விரியாக் கமலமல
ரடியிற் சிலம்பு கிண்கிணியும்
அணிய வருக அவனிதனி
லலிவா ரிதிபோ லெதிர்சீறும்

ஒல்லார் மயங்கக் கழன் மணியை
யுவந்து வனிய வருக மணி
யொலியி லணிய வருக நெடு
வோங்க லணைய புயமார்பில்

நல்ல களபமத் தர்பன்னீர்
நாலு வகையின் பரிமளமு
நன்முய்ப் புலர்த்தக் கலையுடுத்த
நாடி வருகத் தொட்டில்தனில்

உல்லா சமதாய் வைத்தாட்ட
வுவப்பாய் வருக வருகவே
உண்மை யுடைய முகம்மதுவே
உவப்பாய் வருக வருகவே! (4)

58 கந்தம் பொதித்த திருவுடலிற்
கவசம் இசாறும் புனைந்துமுடுக்
கணமுந் தரித்த சிகரமதிற்
கதிர்போற் றுலங்கச் சறுபந்துவை

அந்தம் பெறவே யணிந்துமறை
யகலாக் குங்கும மாலையது
வசைய மணிகள் மழைபோல
வருளுந் தருக்கை யசையஓளி

உந்த மலர்த்தாள் கௌதடனே
வுலகி லடிகள் தோயாம
லாறிக் கவிகை நிழல்பீதி
லுவப்பாய் நடந்தே விளையாடிப்

பதீதோ குதித்தாள் நோவாமற்
பைய வருக வருகவே
பறக்கும் புருக்கு மாவலரே
பண்பாய் வருக வருகவே! (5)

59. பொன்னேப் பழித்தம ரைத்திருத்தாள்
புழுதி புரளா மல்வருக
பொற்பு கவலாப் புவனத்துள்
புனித மடவார துரைவருக

மின்னேப் பழித்த வானவர்கள்
விரும்பும் பெருமா னேவருக
விரும்பி யுவந்தே யுவந்தார்க்கு
வினையைத் தவிர்க்குந் தவம்வருக

தன்னேப் பழியாப் பொருள்வருக
சார்ந்தோர்க் குரிய துணைவருக
தமரின் றுனிதீர்த் திடவருக
சான்றோர் கண்ணின் மணிவருக

வன்னிப் படங்காப் புகழுடைய
வரதா வருக வருகவே
வறுமைய கற்றிச் செல்வந்தரும்
வள்ளல் வருக வருகவே! (6)

60. முந்த சலாலு சமாலியத்தாய்
முனைத்து வெழுந்த முதல்வருக
மூதி ருளினுக் கத்தவிபாய்
மூரி யுதித்த குரு வருக

விந்தம் பணைத்த நாகந்தனை
வென்றே காகா நகருடைய
வேந்தன் மகளை மணமுடிக்க
வேந்தாய்ப் பிறந்த நபி வருக

சிந்து வுடைய மகரந்தனைத்
தியங்கப் பிடித்து வதைத்ததுவைச்
சிவனளித்து எழுப்புவித்த
சிபத்து வுடையோரே வருக

மந்தம் படிறும் விலக்கவந்த
வரதர் வருக வருகவே
வறுமை "கற்றிச் செல்வந்தரும்
வள்ளல் வருக வருகவே (7)

61. மருள்பெறுங் குபிரர்க ளகத்தினில் வெடிவும
வயவரிப் புலியதுவும்
வளர்ந்துடல் வடிவுள வரிக்கழுத் தெட்டையு
மறியொடு மறியதுவும்

திருஞாறு வனத்திடை யுலவிய யுகிரடி
யிருகவை நாதடியு
மெறிதிரைக் கடலிடங் குலவிய கயல்கணுக்
கிறையென்ற கூலை யதுவுந்

தெருளுறும் பிறை நிமிர் விரிதலைப் புயங்கமுஞ்
சினமுறுஞ் செஞ்சுணங்குஞ்
சித்திரத் தம்புலி சுடரொடு முதற் பல
செந்துக ளுடன் திரமாய்

அருளொடு பறைந்திட விடைமொழி யுரைத்திடு
மகுமது நபிவரவே
அணிமலர்ப் புயத்துறு முறுசல் முகம்ம
தகுமது நபிவரவே. (8)

63. மலைகடல் வையகந் திசையொரு குடையினில்
மகிழ்வொடு செய்திடவும்
வல்வினை துன்பமும் தீர்த்து நெறிமுறை
மார்க்க நடத்திடவுந்

கொலைபுரி வையயில் மரைமலர்க் காமுறுங்
குறைசிக ளறபிகளுங்
குணமொடு தினந்துதி செயவதி செயங் கொண்டு
கொண்டு ஏத்திடவுஞ்

சிலைகரங் கொளும்பல குபிரர்கள் வணங்கிய
சிறுக்குள புத்துகளே
சிதறிட வடித்துடைத் தழித்து வெறிந்திடச்
செயம் பெற வந்தவரே

அலைபிறழ் தடரதி சூழ்மதி ஞனினுக்
கதிபதி நபிவரவே
அணிமலர்ப் புயத்துறு முறுசல் முகம்ம
தகுமது நபிவரவே (9)

64. வடவையி னரகம தடைத்திடச் சொல்லிய
வல்லவ னபிவரவே
வருடம தொறுங்களிற் வருவதை விலக்கின
வரபதி நபிவரவே

தடவையி னெய்த்திடு மொட்டக முன்செல
நடத்தின நபிவரவே
தயனங்கள் பொன்றினர் நயனங்கள் பொன்றிட
தவஞ் செய்த நபிவரவே

புடவியிற் பலபிணி யுரைமருந் தமுதெனப்
புணர்ணிய நபிவரவே
புரவலர் நுறவலர் சுவிவலர்க் கன்பொடு
பொறியருள் நபிவரவே

அடவிய லிடையரீன் கொறியமு துணும்பதி
யகுமது நபிவரவே
அணிமலர்ப் புயத்துறு முறுசல் முகம்ம
தகுமது நபிவரவே (10)

அம்புலிப் பருவம்

64. ஓகையா யிறையாதி யண்ட மொடு மண்டலமுண்
டாக்குமுன் னுற்றதிவர்காண்
ஒப்புவகை யில்லாத வொளிபரவும் வெண்டரள
முருக்கொண் டிருந்த திவர்காண்

தோகையாய் வடிவுகொண் டனேக நாள் வரையிலுந்
தொழுது கொண் டிருத்ததிவர்காண்
துய்தான வானவர் களிப்போடு வந்ததனைத்
துதிசெய்யப் பெற்றதிவர் காண்

வாகையாய் நூகுகூ யெழுதுமொளி பலகையாய்
மைக்கலமு முற்றதிவர்காண்
பனியாத நபியான கைவிரலு கிர்களில்
வரமாயிருந் ததிவர்காண்

ஆகையா லடல்வீரங் குறையாத வரசுடன்
அம்புலி யாடவாவே
ஆகிறத்தில் மன்ருடி யீடேற்று நபியுட
னம்புலி யாடவாவே (1)

65. முத்தவிரு ளானதில் நுக்கத்திலை டலிபாயு
முச்சுடரு மானதிவர்காண்
முக்கோண வட்டமனைக் கதிபராயத் தோன்றின
மூலவடி வானதிவர்காண்

நந்திமுன் ஞாயில் சிருட்டித்த பொருளுக்கு
நல்லகரு வானதிவர்கா
ணைழுவாமற் ரெழுதபல நபிமார்கள் மெய்யிலொளி
நவ்விபெற துற்றதிதுகாண்

பந்தமுறு மமலான ஆமினு அன்பிலெடு
பயின்ற மக வானதிவர்காண்
பதுமினியி லெளிப்பான அலிமாவின் சூகைமுலைப்
பாலுண்டபய காம்பரிவர்காண்

அந்தமிகு நபிநாத ரானதா லிவருடன்
அம்புலி யாடவாவே
ஆகிறத்தில் மன்ருடி ஈடேற்று நபியுடன்
அம்புலி யாடவாவே (2)

66. கணிதபுக ழடங்காத வல்லவ னுபுவ்வத்தைக்
கைப்புறங் கொண்டதிவர்காண்
கானவர் தானவெழு தாரகையைச் செல்லியிற்
கசிதமது கொண்டதிவர்காண்

மணிவிளைவு கொண்டவெழு பத்தலைப் போகியைவதை
செய்தரண சிங்கரிவர்காண்
வளர்ந்தமலை மீதிருந் தொட்டக நாற்பது
வகைவகை யழைத்ததிவர்காண்

துணியறிவு கற்றஅலி பணிதலுக் காகவொளி
சூரனை யழைத் ததிவர்காண்
சுடர் பரவு மெய்நெடிய மெய்குறிய துரையான
துய்யமகுமூ தரிவர்காண்

அணியழகுக் கடங்காத காரண ராகையால்
அம்புலி யாடவாவே
ஆகிறத்தில் மன்ருடி ஈடேற்று நபியுடன்
அம்புலீ ஆடவாவே (3)

67. தாரகைக் குழுவுண் டுனக்கதிக குத்துப்
தாரகைக் குழுவுண்டுகாண்
சார்ந்த மு யலொன்று இவருக்கு இறைவசனத்
தகுதி முயல் பலவுண்டுகாண்
மார்பான சேணினுக் கதிகார னீயிவர்
மண்விசும்புக் கதிகாரர் காண்
மாற்றவுனக் கொளியுண்டு இவருக்குக் குபிரை
மாற்றமகை மொழியுண்டுகாண்
ஏர்பெருகு மீரெட்டுக் கலையுண் டுனக்கதிக
மெட்டெட்டுக் கலையுண்டுகா
ணிடம்பெருக வளர்வதுங் குறைவது முனக்குண்டு
இடர் குறையில் லாததிவர்காண்
ஆர்வமுள பொருளான தாகையா லிவருடன்
அம்புலி ஆடவாவே
ஆகிறத்தில் மன்ருடி ஈடேற்று நபியுடன்
அம்புலி ஆடவாவே (4)

68. நளிமேக மனதினில் மறைவது மலைவதுந்
தோன்றுத மதியாகு நீ
சொல்லிசைக ளொவ்வாத பெருக்குள்ள பேரறிவு
துலங்குமதி யுள்ளதிவர்காண்
ஒளியேற வொருபட்சம் வளர்வதும் பெருமையோ
யுலகுதவிற் குன்றுமலே
ஒரு நாளுக் கொருதாளுக் கதிகமாய் வளர்கின்ற
வொளிவுள்ள வடிவாளர்காண்
தளர்மேகக் குடைவள்ளல் தாமரைத் தாள்தன்னை
தாவதண் டினைஞ்சாமலே
தாமதிப் பாகவுயர் விண்ணினி லிருப்பதே
தாழ் வாகுந் தனுவாகுமுன்
அவியாக வந்துவிழ் யாடவே நீதிகாண்
அம்புலீ யாடவாவே
புகிலதலம் புகழ்குறைசி நபிகள் பெருமானுடன்
அம்புலி யாடவாவே (5)

69. தேமியின் புள்வந் துணைச்செயு மிடரதனை
நீக்கிடு மன்னரிவர்காண்
நெடியவுடல் ராகிலெடு சஞ்சல நீக்கிடு
நிறவண்ணத் தோகைமயில்காண்
நேமிகுடல் சூழ்ந்தபடிக் கரசாகத் தோன்றின
நீதிசெறி மக்காவினில்
நிருபரதி பதியான கபீபர சனுக்காக
நெறியிலெடு அமாவாசையிற்
ருமத மின்றிமுன் கூலியுனை வாரமாய்த்
தான் செயப் போறபடியாற்
சலிபெருக வதற்குமுன் நீவந்து தாமரைச்
சரண்தொழுதன்பாகவே
ஆயிஞர் மகளுன தருமையுள நடியுட
னம்புலி யாடவாவே
அகிலதலம் புகழ்குறைசி நபிகள் பெருமானுடன்
அம்புலி யாடவாவே (6)

70. சேணினுக் கரசான வறுசின்முடி நீண்டவுஞ்
சேடனெடு முடி மீதினிற்
செஞ்சரணத் தடவிவருத் திடம்வீரம் குறையாத
சிபத்துடைய செம்மலிவரே
ஊனிலெ டுறக்கமு மில்லாத வாதியுட
னுவகையொடு மொழிபேசியு
மொப் புவனம யில்லாத அறுசினிற கௌசுட
னுலவியே மீளதிபரே
பாணினுக் கமையாத காரணங் காட்டிடும்
பாத்திப ரானதிவரே
பதவிதருங் குருவான செகமண்ட லாதிபதி
பதுமமல ரடியானதை
ஆண மொடு வந்துநீ தழுவிவீ யாடல் செய
அம்புலி யாடவாவே
அகிலதலம் புகழ் குறைசி நபிகள் பெருமானுடன்
அம்புலி யாடவாவே (7)

71. கோடான கோடி யொளி சூரியனு மொவ்வாத
கோலவுடல் நாதர்வர்காண்
குளிர்ந்தமரை வதனமு மருளால பார்வையுங்
குடிகொண்ட குணசீலர்காண்
கேடான கேடுவினை வந்துனக் கேற்றிலும்
கிட்டாம லொட்டாமலே
கிஞ்சுகமு மாறுத செவ்வரி துலங்கிவ
கிருபையுறுங் கண்ணேக்கிலுல்
நாடான நாடுவிண் ணழியுநாள் வரையிலும்
நடலையது நாடாதுமெய்
நாயனுடன் மன்றுடி மீட் சிதரு நாதரால்
நழுவாமல் விரைவாக நீ

ஆடாம வாடி நிதங் கூடவினோயாடல் செய
அம்புலி யாடவாவே
அகிலதலம் புகழ் குறைசி நபிகள்பெரு மானுடன்
அம்புலி ஆடவாவே (8)

72. முதலவ னென்னுட நுதரை யழைத்திவண்
வருகென மொழிந்திடவே
மூவர்கள் கேட்டுப் பக்கொடு வந்து
மொழிந்திடக் கேட்டவர்காண்
மதிகதி யுள்ள புருக்கினி லேறின
மாவல ரானவர்காண்
பயித்துல் முகத்திசில் கல்லித் துஃபத்தில்
வாசியைக் கட்டினவர்காண்
கதிரவனெனவொளி குலவிய ஏணியிற்
கழலொடு ஏறினர்காண்
ககன மடங்குலும் கண்டு களித்த
கபீபு முகம்மது காண்
அதபுநெறியுள ராகையா லிவருடன்
ஆடவா வம்புலியே
ஆதியும் லெளலாக் கென்றிசைத் தரசுட
னாடவா வம்புலியே (9)

73. அரிகடல் சூழ்ந்திடு புவிமன்னர் மகிழ்ந்திட
வருந்தசைக் கட்டிதன்னை
யழகுள மங்கையாய்ச் சிருட்டித்த வரசுட
னாடவா வம்புலியே
அரியென வபூபக்கர்க் கணுகிய விடமதை
யமுதெனு முமிழ் நீரால்
அகன்றிடும் படிசெய்த சஞ்சீவி மருந்துட
னாடவா வம்புலியே
அருமறை நான்கையுந் தெள்ளுற வறிந்திடு
மறிவுள சல்மானி
லலந்தை யந்தீரவே பொன்னள்ந் தகருட
னாடவா வம்புலியே
அருள்தவம் பெற்றவ குமது நபியுட
னாடவா வம்புலியே
ஆதியும் லெளலாக் கென் றிசைத் தரசுட
னாடவா அம்புலியே (10)

சிறுபறை பருவம்

74. புத்திமதிக் கமையாத வினறியாதி முன்னுள்ற்
பொலிவாக பல செந்துவின்
புட்கலனு முண்டாக் கிருந்தபின் களிப்பாக
புங்கவர்க் கரசனுரைப்

பத்திபெற வேழுபத் தாயிர மாண்டுதான்
படைப்பித்துக் கலிமாவையும்
பறையென்ற சொற்கேட்டுக் கலிமாவை முழுவதும்
பறையாத காலத்திலே
முத்திபெற சிபுறயீலுக் கறிவான கலிமாவை
முழுவது முறையாகவே
மொழித்துவழி நேராகக் காட்டின குணமுள்ள
மூதறிவு அகமீறிய
சித்தீக்கு மகள்தன்னே மணங்கொண் டசிங்கமே
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபறை முழக்கியருளே (1)

75. அருவுருவி லமையாத ஆதிறசு மான்றனே
யறிவாகப் போற்றுமலே
அழலின்பதிக் கிறையான யிடலீசின் செயல்செய்து
மகிதர்சூலம் வெடிகொள்ளவே
பொருள்களொடு தவருத வேதமொடு தீன்மார்க்கம்
பொலிவாக வளர்ந்தேறவே
புண்யநிலே குணமான தொழுகையொடு மறுமுறை
பொறுமையொடு மற மீறவே
திருவினிலே மாரும வினசுற்றங் குறையாமல்
தீவினேக ளணுகாமலே
சிறுமைநிலே யேரும லரசுநெறி தவருமல்
சிறப்பாகப் பெறுத்தோங்கவே
செருநர்பறை தொனிமாற வலேகடலின் நிரைசோரச்
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபறை முழக்கியருளே (2)

76. புனல்மாரி மாருத வனந்தோறு மிடிபோலப்
புலி சிங்க முழக்க வாசம்
புழுங்காத மலரீன்ற வாவியின் துறைதோறும்
பொறிகளின் முழக்கவிண் வாழ்
கன மேவு மதில்சூழ்ந்த நகர் தோறும் பல்லியங்
கடல் போல முழக்கக்கலேயோர்
கவிபாடி வீணையொடு கின்னரி முழக்கமிடு
கருதாரை கத்தல் செய்துதான்
தினந்தோறு மாருத வென்றியுந் தானமுஞ்
செயமான சுபமங்களச்
செய்கையொடு வகையாவ சோதியே மும்முரசு
தெருக்களில் முழக்க மீறுஞ்
சினமாறி மறையோர்கள் மும்மறை முழக்கநீர்
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபறை முழக்கியருளே (3)

77. திரைபிறழ்ந்த லகலாத ஆழியின் முழக்தமுஞ்
செழுமையுள
செழிப்புள்ள சங்கின முழக்கமும் விரிவான
சேணினிற் செறித்தோடிய
கரியபுயல் மின்னடி முழக்கிமுங் கதிரொத்த
காயமின் மடவார்களும்
களிப்பார வாழ்கின்ற வானுலகி லுள்ள பல
கருவியின மயராமலே
வரிவெருக நன்றதாய் முழக்கவும் பாரினில்
வளமூட்டைய வடல்கால்தளிச்
வாழ்கின்ற செங்கயல் முழக்கமுங் பலபல
வளர்தொழில் முழக்கமாதத்
திரிமாரி முழக்கமுள மக்க நகர் வள்ளலே
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மருமுதரே
சிறுபறை முழக்கியருளே (4)

78. ஓங்கலுள் வனங்களிற் றிருந்துமும் மதங்களை
யொழுகின்ற களிற்கோட்டினி
லொளி வருக விளைவுற்ற முத்தமுங் கழைமுத்து
மோசையில் விளைமுத்தமும்
வாங்க லணுகாதநீள் கமுகில் விளைமுத்தமும்
வாரியுறை துறைதோறுமே
வால்வளை முத்தமொடு தாமரை முத்தமும்
வாரியொத்த மள்ளரொலிகள்
நீங்காத மருதநிலச் செந்நெலொடு கன்னல்தரு
நித்திலங் கொழிக்கும்வாவி
நெருங்குவள மாருத புடைசூழ்ந்த மக்கநகர்
நெறியுடைய மதிஞவையுள்
தீங்குவினை மாற்றவே வந்தமணி வள்ளலே
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மருமுதரே
சிறுபறை முழக்கியருளே (5)

79. விண்ணுல கடங்கலுத் தள்ளாட வெழுமேகம்
வெறி கொண்டு வெருண்டோடவே
விசும்பன வுமட்ட கிரிமேருட நடுங்கிட
வேலைகட லதிர் கொள்ளவே
மண்ணுல கடங்கலு மசைந்திடவே சேடனு
மயக்கமது மிகக் கொள்ளவே
மாதிரத் துறைகின்ற யிருநான்கு யானைகள்
மதஞ் சிந்தி மருள் கொள்ளவே
கண்ணெளி விலமையா தகனமுந் திடுக்கிடக்
கனலியொடு மதியானதுங்
கருத்திகில்க லக்கமது கொண்டுதா னிசையன்றி
கற்றியொரு கலந்தோடவே

திண்ணமுள மெய்யான வடிவுள்ள கைகொண்டு
சிறுபறையு முழக்கியருளே
செழுமுகி லின்கவிகை நிழலுடை மகுமூதரே
சிறுபறையு முழக்கியருளே (6)

80. ஏர் பெருகு சூரியனு மொவ்வாத யிமையவர்க
ளின்பமொடு விசைகொள்ளவே
யிரு நான்கு திசையுள்ள அபுதாக்க ளானந்த
மின்புற்றுச் செவிகொள்ளவே
கார் பெருகுங் குழலுடைய கூருனி மாதர்கள்
கவிபாடிக் குனிந்தாடவே
கக்கனுரை தவருத நபிமார்க ளனைவர்கண்
காட்சி பெற்று இசைக்கவே
போர் பொருதும் வினைவிட்டுக் குபிரரசர் கலிமாவைப்
புகன்றடிமை யென்றேதவே
புகழ்கத் தண்டமிழின் கவிகளுரை செய்கின்ற
புலவோர்கள் கவிபாடவே
சீர்பெருகு மாமறை முழக்கவே வந்த நபி
சிறுபறை முழக்கியருளே!
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபதை முழக்கியருளே (7)

81. பொங்கிவரும் புனலுள்ள ஆற்றினிலு மைப்பின்னே
புகழாகச் சென்றது வுநீர்
புருடர்முதல் பலசெந்தை யிடர் மீறக் கொலைசெய்த
புலையவதை யெய்தது வுநீர்
பொங்கரிண யானதொரு போகியைத் துரும்பதாற்
பூமிதனிற் கொன்றது வுநீர்
போக்குவழி தப்பிவிட வொட்டையொடு முன்சென்று
பொருந்தும்படி சென்றது வுநீர்
.....
.....
கணிதபுக ழிடங்காத ராகையா லுமைநம்புங்
கடனென்னே பகன் றேடவே
செங்கமல மொவ்வாத வதனமதி வள்ளலே
சிறுபறை முழக்கியருளே
தீம்பயிர் விளக்கிடவே வந்தநபி நாதரே
சிறுபறை முழக்கியருளே (8)

82. அகம்பல தமைக்குமுன் னறுவாகி லபிபதா
யழதாயிருந் தவருளே
அவ்வல்பசிர் கொழுததோ ராதநபி நுதலிவி
லரியதா யிருந்த பொருளே
சுகம்பல தருள் செய்த அப்துல்லா நுதவினிற்
றுலக்கமா யிருந்த சுடரே
தோகையர்க் கரசான ஆமிலுர்க் கறிவுள்ள
தோன்றலா யுதித்தமணியே

முகம்பல துருக்கொண்ட செந்துகளின் பாடைபோல்
மூதறிவுரைத் தகுருவே
முப்புவனத் தப்புறஞ் சென்றுயிறை பாலினில்
மொழிந்திவணில் மீண்டதுரையே
செகம் புகழும் சிபத்துடைய ராகையாற் செம்மலே
சிறுபறை முழக்கியருளே
தீன்பயிர் விளக்கிடவே வந்தநபி நாதரே
சிறுபறை முழக்கியருளே (9)

83. செக்கர் நிறமாரூத செந்தமாரைப் பாத
சித்திக்கு மருகேசரே
தீஞ னபயிருக்கு மழையான போசரே
சிறுபறை முழிக்கியருளே
சிக்கமுன் சிவிவீட்டிற் சேராமற் பிறுதவுசில்
செயமாக சேர்ந்தாளவே
செகத்தினிற் சிபத்தாக வந்த மகுமுதரே
சிறுபறை முழிக்கியருளே
சிக்கல் மனதணுகாத நபிமார்க ளொலிமார்கள்
செயமன்னர் விறலாளருந்
தேவர் களுமடியதனிச்சே விக்க யேற்றதுரை
சிறுபறை முழக்கியருளே
திக்குலகு புகழ்மக்கங் குறைசிகுல திலகமே
சிறுபறை முழக்கியருளே
தீவினைக ளண்டாம லெனைக் காக்கும் வள்ளலே
சிறுபறை முழக்கியருளே (10)

சிற்றிற் பருவம்

84. மூரி யகலா மும்மாரி
முத்துஞ் சலமு மிகப் பொழிந்தே
முயற்சி வளமுங் குவளைமரை
முளைத்த நதிகாற் குளம்பகையில்
ஊரி யினமுஞ் சலஞ்சலமு
மூறைந்து வுறுபி ளிளுனைந்து
வுகுத்த மணிவென் முத்தங்களை
யன்னத் தினங்க ளண்டமென்று
வாரி யணைக்கும் வளஞ் செறிந்த
மக்கா மதீன நன்னகரை
வாழு மரசே புவிக்கரசே
மன்னர்க் கரசே விரிவான
சேரி தனிலே விளையாடுஞ்
சிறியேன் சிற்றில் சிதையேலே
செய்ய திறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (1)

85. அறிவுக் கடலைத் திதனிந் துரைக்கு
மறிஞ ரிசைகள் கேளாத
வசடர் மனைக ளறியீரோ
அரிய பெரியோன் றனக்காக

மறமாய் முவிந்தே கையிறுகள்
கொடா பகிலரில் லந் தெரியாதோ
வண்ண மகற்றி வழக்குரைக்கும்
வஞ்சர் பதியைக் காணீரோ

நிறைவன் மறைநூ லுணர்ந்த வரை
யிகழ்ந்தோ ரிடநீர் நோக்கிலையோ
யிடர்க ளதின்மே விளைக்கின்ற
யிரிஞர் வசதியீ தல்லவே

சிறுவர் மணலல் விளையாடுஞ்
சிறியேன் சிற்றிற் சிதையேலே
செய்யி றிறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றிற் சிதையேலே (2)

86. நல்லான் மறையு முமதுரையு
நலமென் றறியார் நகரமல்ல
நாட்டிற் றீஞ னவர் கிடறு
நடத்துங் குபிர சூருமல்ல

பொல்லா தவர்க்கு தவிசெய்யும்
புருட ருறைந்த புரமுமல்ல
பொய்யை மெய்யாய்ப் புகலுகின்ற
புல்ல ரிருக்கு மனையல்லவே

தொல்லை முறையா யாடுவர் போற்
சூழ்ந்தே நாங்கள் வீதியிலே
அலங்க லுடைய நுண்மணலிற்
சுபசோ பனம்போ லிந்நாளிற்

சிலவத் தனமாய் விளையாடுஞ்
சிறியேன் சிற்றில் சிதையேலே
சிசய்ய நிறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (3)

87. ஆடற் கடங்கா திறைமுனிவு
அடைந்த அள்ளற் பதியுமல்ல
வகத்தில் கொடிய வினைவிளைத்த
பூசகல் லோட கமுமல்ல

வாடி வருவோர்க் குறவர்க் கன்னம்
வழிங்கா திருக்கு மாடமல்ல
மகிழ்வாய பெருமை பேசுகின்ற
மடைய ருறைந்த வயினலவே

தோடு விரிந்த கமலக்கை
யுந்தோ ளுமயரச் சிறுவீடு
சுடர் சேர் மணலால் வீதினிற்
சும்மா வணைந்தோர் மாசுதோ

தேடி யிவணில் வந்த தென்ன
சிறியேன் சிற்றில் சிதையேலே
செய்ய திறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (4)

89. இசம் பொற் சதங்கைச் சிலம்பணிந்த
செந்தா மரைத்தாள் நோகாதோ
தினமே யிறைபாற் றுவாக் கேட்குஞ்
செழுங்கை ரண்டுஞ் சிவக்காதோ
அம்பர் மணமு மாருத
வங்கம் புழுக்கங் கொள்ளாதோ
அங்கிச் சருவந் திசார்தனிலே
அதனு லழுக்கு மேறுதோ
உம்பர் மதிபோல் வதனமது
ஒல்க வியர்வை தோற்றுதோ
ஓடித் திரிந்தாற் றூகமிக
வுற்றே நாவு முலராதோ
செம்பொன் மகுட முடிவேந்தே
சிறியேன் சிற்றிற் சிதையேலே
செய்ய திறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றிற் சிதையேலே (5)

89. சங்க முழங்கு மலைகடல் சூழ்
தரைவாழ் மன்னர் வந்துமரைத்
தாளிற் றொழவே தவமேற்ற
வத்தா ரபுதுல் முத்தலிபுந்
தூங்க ரபீத்தா லீபுவுமைத்
தொட்டு வெடுத்து முத்தமிட்டு
தோங்கல் புயந்தி லிருத்திடுங்காற்
சுண்ண மார்பிற் றோயாதோ
மங்கைக் கரசரா மினம்மாவா
வென்றெடுத் தமருங் கில்வைத்தால்
வண்ண மிகுந்த பட்டுடையில்
மலர்க்காற் றூளி புரளாதோ
செங்கை வருந்த நுண்மணலிற்
செய்கோள் சிற்றில் சிதையேலே
செய்யி திறசூல் முகம்துவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (6)

90. செகம் விண் கடலு மலைகள் பல
சீவ செந்து முதலெலையுந்
சிறப்பாய்ச் சிருட்டித் தழிக்கவிறை
செயலே யுமது தீனில்வரா
ஆதி குறைந்த புரந்தனையு
மடுத்து வொருவர்க் கொருவருக்குள்
அகமு முதலு மபகரித்த
வகட முறைந்தயில் வீடஞ் சென்

நிகளீட் டழிக்கக் குடிகுடிக
ளேற்ற சறுகின் விதிமுறையே
விறைவர்க் கரசே நபிக்கரசே
யிவ்வீ டழிக்கக் கடனுமுண்டோ

அகமி லுமது வழியுடைய
வடியேன் சிற்றி லழியேலே
ஆல நபியே முகம்மதுவே
அடியேன் சிற்றி லழியேலே (7)

91. பாணி நிறைந்த புவியெவையும்
படைத்த யிறைவ னொருவனென்று
பத்தி யகத்திற் கொள்ளாத
பாவிக் குபிரோர் வந்தெதிர்த்துக்

கேணி மதில்சூழ் திருமனைகள்
கீழ்த்தல் புரிய வருபவரைக்
கெடுத்து முடுக்கிப் புரிசையொடு
கிரிநேர் மனைக ளழியாமற்

பேணு மரச ரழித்திடவே
பிரிய மனதிற் கொண்டாக் காற்
பீடை யெவர்பா லினிதுரைப்போ
மெனவே பெரியோ ரொளிவிலுள

ஆணி மணியே தீனிலுள்ள
வடியேன் சிற்றி லழியேலே
ஆல நபியே முகம்மதுவே
அடியேன் சிற்றில் சிதையேலே (8)

92. வையந் தனையா ளரசர்களு
மறை நூல் தேர்ந்த மாதவரும்
மகிழ்ச்சி பெருக வந்துதிறை
வழங்கிச் செந்தா மரைத்தாளே

மெய்மை பெறவே தொட்டுமுத்தி
மெய்யோன் கலிமாத் தனைப்படித்து
வினையை யகற்றி யிசுலாமில்
மேவ வருவோ ரவர்களெல்லாந்

தொய்யல் மிகுந்த மனதுடைய
துரைதா னெங்கே யெனத்தேடி
சுற்றி யலைவா ராகையினுற்
சுடர் சேர் தவிசி லிருந்துநெறி

அய்யர் புரியச் செல்லெனவே
அடியேன் சிற்றி லழியேலே
ஆல நபியே முகம்மதுவே
அடியேன் சிற்றி லழியேலே (9)

93. எல்லி தனிற்பேர் பதித்தவர்க்கு
இருநா வரியின் விடமகற்றி
யின்பம் பெருகக் கிருபைசெய்த
விறையே சிற்றி லழியேலே

இல்லை யணுகான் மொழி மறுத்த
இபுலீ சுடைய பேரனுக்கு
யிடரை விலக்கி யருள் புரிந்த
விறையே சிற்றி லழியேலே

மூல்லை நிலத்தில் வாழ் மூப்பி
முதுமை யகற்றி மங்கையதாய்
முறையே யுலகி லாக்கிவைத்த
முத்தே சிற்றி லழியேலே

வல்லை யுடைய மக்க நகர்
வாழ்வீர் சிற்றி லழியேலே
வையம் புகழு மதின நகர்
மன்னே சிற்றி லழியேலே (10)

சிறுதேர்ப் பருவம்

94. பொன்னென்ற தேரொளிவு அகலாத ஞாலியிது
போல வொளிதான் வீசவே
பொற்புவக லாதகொடிக் கரத்தினுற் புழுதியை
விலக்கு தலின் போலாடவே

ன்னென்ற பிரவைவேல் வெறிமரைக் கரங்கொண்ட
வேந்தரொடு பலபேர்களும்
விதிவிட் டகலுங்க ளென்றுமுர சோதை போல
வெம்பரிகளைப் போங்கவே

மன்னென்ற நபிநாதர் மெய்வாசந் தூது போல்
வாராரென் றறிவிக்கவே
வந்துநவ ரத்னமணி யாசனத் தட்டிருந்து
வன்பிலெடு வலசாரியாய்

தென்றை யிடமொடு வடக்குமேல் கிழக்குமாய்
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்திற் பிறுதவுசுக் கரசான கூதரே
சிறுதேர் நடத்தியருளே (1)

95. சடசடென் றுருள் நிதிச் சகடெலாஞ் சிலைகளிற்
ருவிநிறை யுறை யானதாற்
றங்க நிறம் போலவெளி காட்டவே பூமியைத்
தாங்கின பணிச்சடலமும்

மடமடென் றிடமுடிகள் நிலையின்றிப் பனிகொள்ள
மாசற்ற நிக்கானதில்
வாழ்கின்ற அட்டகயந் தள்ளாடிச் செவிகேட்டு
மயல் கொண்டு நிலைநிற்கவே

நெட நெடென் றேறி வருங் கதிரத வாம்பரி
நெருப்பினீன கினமிஞ்சியே
நீனவதனில் வெடிவுற்று வொதுங்கி வலமிடமாக
நெடியவான் றனிற்செல்லவே

திடுதிடென் றேடுபரி புரக்கினுக் கரசே
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்தில் பிறதவுசுக் கரசான தூதரே
சிறுதேர் நடத்தியருளே (2)

96 கருவுருவி லமையாத யிறையாதி யொளிவினித்
களித்தலா லுருவாகினோர்
கண்ணிமைத் தறங்காத வானவர்க டினம்வந்து
களிப்பாகப் பணிந்தேற்றலும்
மருவுருவி னிறைவான நபிமார்கள் பலசிந்தும்
வகையான தொகையாவுமே
வணங்குதலு மேயாம லோங்கவே மகுடமிடி
மன்னர்பல மனுவோர்களுங்
குருவின்முறை தவருத தினுள பேர்களும்
கொண்டாடி நின்றுடியே
குணமாகப் பணிந்தேற்று மாலியமுறைன்ற
கோபகியின் மக்காவிலே
திருவிளை யாடல் விளையாடி வரும் செய்யிதே
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்திற் பிறதவுசுக் கரசான துதரே
சிறுதேர் நடத்தியருளே (3)

97. குருமொழியை யயராம லுளமீதி லறிவோடுங்
குடிகொண்ட வொருமாது தான்
குணமாக நல்லறிவு பலநாளு மகனுக்கு
கூறிவரக் கேளா மலே
முருகெனுடு சுராபான முண்டவெறியால் வந்து
மெய்த்தாயி னுருநேத்திர
முகம் விட்டுத் துள்ளிவிழ வடித்தபி னவ்வ் கொண்ட
மோகவெறி நீர்ந்தவுடனே
கருவிகொடு கரமதனை யறுத்தனன் பின்புதாய்க்
கண்ணிணெடு மகன் கையையுங்
காணியிற் புகழ்துன்ன பொருந்தும்படி செய்வித்த
காட்சியுள குருநாதரே
திருமதின நகராள கல்விமா னிதியமே
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்திற் பிறதவுசுக் கரசான துதரே
சிறுதேர் நடத்தியருளே (4)

98. அகதா யிருந்த யிறை ஐநா விருளைவிட்
டழியாநூக் கத்தெழுந்தது நீ
ரழகே மிகுந்த வரியாணை உயர்த்தியுள
அலிபாப் முளைத்ததுவு நீர்
உகமேழ் விசும்பனைத் துதிசே துதிக்க மீ
முருவா யுதித்தவு நீ
நயர்தீன் பயிர்வளர்த்து நெறிகோல் நடத்தமனு
வுருவாய்ப் பிறந்தது நீர்

பகைசேர் நரகுதனி லணுகாம லுஞ்சுவர்க்கப்
பதியே புகுத் துமிறை நீர்
படரே யனுவெனினுந் துடராய் பதவியுள்ள
பதியாயு தித்தவரசே
திகைவா னடுங்க வுயர்கொடியாடப் பொன் மகுடச்
சிறுதேர் நடத்தியருளே
சிவபூ லொகிக்குரிய மகுமூது நந்நபி
சிறுதேர் நடத்தியருளே (5)

99. இறையோன் றனைப்பிரிய முடனே தொழுதபணிந்
தியல்பா யிருந்த விறை மீர்
இடரே தவிர்த்தமறை மறையோர் களுக்குமுய
ரீறேற்ற இல்முள கனிநீர்
பெறிசேர் மனக்ககுபு புலவோர் தனக்குக்கூ
. புகழா யளித்த பொருள் நீர்
புனலே சுரத்திடத்தி லழைத்தே யருந்தும்படி
புகலே புரிந்த தருளுநீர்
மறியோ டுரைபகர்ந் திடரே விலக்கி யினமறிபா
லணுகுமட்படி விடுத்தீர்
வனஞ் சூழ் புலியிலிவ் வாற்போல் விணையகற்றி
வரமே எனக் கருளுவீர்
திரிலோர் புகழுமக்க மதினு நகராச
சிறுதேர் நடத்தியருளே
சிவபூ லொகிக் குரிய மகுமூது நந்நபி
சிறுதேர் நடத்தியருளே (6)

100. புவியே முழகுமுய ரெழுவான் குறுசறுகும்
பொருள்சேர் சுவர்க்கப் பதியும்
புரியூர்க் கடல் மலியும் பொன்று தமரரொடும்
பூஞர் அணங்கினமும்
சுவிசே நிரவியொடு மதியோடு டுவின்முஞ்
சரமாரி பெய்யுமழையுஞ்
சதுநான் குலகுநனி விருந்தே ரிகுதியுள
தரமா யெழுந்தவுயிரும்
நபிமா ரனைவரொடு கவிராசர் முத்றும்பல
நவகோடி புருடரிறையு
நந்தா திறை விதித்த பலசீவ செந்துமுதல்
நன்முயத் துதித்திக்கவே
செவிகேள் விகொண்டு வரமுடனே கொடுத்த நபி
சிறுதேர் நடத்தியருளே
சிவபூ லொகிக்குரிய மகுமூது நந்நபி
சிறுதேர் நடத்தியருளே (7)

101. ஆவணை மீதினி லெழுதுகள் விண்புக
அமரர்கள் விழியிமைக்க
அணையில் விடுந்செழு மழைமுகி லெழுந்துடர்
பெறக்குடை கவிக்க

ரவண மீதிள்ள சறுவந்து சிரசினிற்
பசுங்கதி ரென விரிக்க
பரிமள மெய்யினி லணிகலி யொளிவுக்குப்
பகலவ ஞெளியொளிக்க
பூவண் மீதொடு வறிவு கடங்கிய
புலவர்கள் துதிதுதிக்க
புறவலர் துறவலர் சதசத கோடி
புருடர் சலாமுரைக்க
சீவன மூரிய கரிபரி யகன்றிடத்
தேரை நடத்துகவே
செய செய சிங்க முகம்மது நந்நபி
தேரைநடத்துகவே (8)

102. காரண மெங்கும் விளங்கிடக் கலிவலர்
கட்டிய மிகக் கூறக்
கடல்வரை நுரையெனக் கவரிக ளிருபுறங்
கன்னியர் மிகவீச
ஆரண மோதிய வேதிய ரிசையொடு
அறபெனுங் கவிபாட
அணங்கு மெய்தங்கிய கூறுலின் மாத
ரரிநிற மலர்தூவ
மாரணம் புரிந்திடு மறுவகைச் சேனை
வடகட லென நடக்க
வகை வகை வாச்சிய மிடியெனத் தொனித்திட
மகிழ்வொடு வலப்புறமாய்ச்
சீரணி குலவிய ஆவண மீதினில்
தேரை நடத்துகவே
செய செய சிங்க முகம்மது நந்நபி
தேரை நடத்துகவே (9)

103: ஆதியி னருளொடு வரிசைக டங்கிய
அருமது நபிவாழ்க
ஆலசு காபொடு தீனவ ரடங்கலு
மறிஞரு முதல்வாழ்க
மேதினி மீதினி லிசையொடு படிப்பவர்
விதிமுறை யுடன்வாழ்க
விழையொடு கேட்பவர் சொடுப்பவர் தினையொடி
வியல்பெற பிகவாழ்க
நீதம தொடுபல சீவசெந் தடங்கலுங்
கெழுமையி னுறவாழ்க
கேதமு மணுகிடா விண்ணவர் கூறுலி
னிருபை யுடன்வாழ்க
நிதொடு பலவீன யகற்றியும் வாழ்கத்
தேரை நடத்துகவே
செய செய சிங்க முகம்மது நந்நபி
தேரை நடத்துகவே (10)

காப்பு

பிள்ளைத் தமிழ் நூல் முட்டின்றி முற்றுப் பெறும் பொருட்டு இறைவனிடத்து அருள் வேண்டிக் காப்புச் செய்யுள் பாடுவது மரபு. இந்நூலிலும் புலவர் இம்மரபினைப் போற்றுகின்றார். இருபாடல்களில் இறையருள் வேண்டிய புலவர் மூன்றாவது பாடலில் தம்மைப் பற்றிய குறிப்பையும் தந்துவிடுகின்றார்.

1. திருவளரு மக்கநகர் குறைசிக் கெல்லாந்
தினகரன்போற் பிறந்திருளின் குபிரை நீக்கி
மருவளரும் வனஞ்செறிந்த மதீன நாட்டில்
மகிழ்ச்சியுற்றேயரசாகி மாறுத் தீவின்
பொருள்வளரப் புவிமுழுதும் விளக்கச் செய்த
புகழ் நபிமு கம்மதுற்ற சூலுல்லா மேல்
அருள்வளரும் பிள்ளைக்கவி தமிழாற் கூற
அருவினெடு மருள் தருவா யாதி யோனே.

பதவுரை

திருவளரு மக்கநகர் குறைசிக் கெல்லாம் — சிறப்பு மிகும் மக்கமா நகரில் வாழும் குறைஷியர்களுக் கெல்லாம், தினகரன் போற் பிறந்து — சூரியனைப்போல் தோன்றி, இருளின் குபிரை நீக்கி — இருளைப் போன்ற இறை நிரா கரிப்பை அகற்றி, மருவளரும் வனஞ் செறிந்த மதீன நாட்டில் — மணம் பெருகும் சோலை அடர்ந்த மதீனமா நகரில், மகிழ்ச்சியுற்று அரசாகி — மகிழ்ச்சியுடன் ஆட்சிப் பொறுப்பேற்று, மாறுத்தீவின் — மாறுத சத்திய சன்மார்க்கத்தின், பொருள் வளர — நெறி வளர, புவி முழுதும் விளக்கஞ் செய்த — உலகமெலாம் பொலிவுன் திகழும் படியாகச் செய்த, புகழ் நபி — புகழ் மிகுந்த நபிகள் நாயகம், முகம்மதுற்ற சூலுல்லா மேல் — முகம்மதுற் றசூ லுல்லா மீது, அருள் வளரும் — அருள் மிகுந்து வரும், பிள்ளைக்கவி தமிழாற் கூற — பிள்ளைத் தமிழ் பாட, அருவினெடும் — தோன்றுத் துணையாய் நின்று, அருள் தருவாய் — அருள் புர்வாய், ஆதியோனே — ஆதியாகிய இறையவனே!

தெளிவுரை

சிறப்பு மிகும் மக்கமா நகரில் வாழும் குறைஷியர்களுக் கெல்லாம் சூரியனைப் போல் தோன்றி இருளைப் போன்ற இறை நிராகரிப்பை அகற்றி மனம் பெருகும் சோலை அடர்ந்த மதீனமா நகரத்தில் மகிழ்வுடன் ஆட்சிப் பொறுப்பேற்று மாறுத சத்திய சன்மார்க்கத்தின் நெறிவளர உலக மெல்லாம் பொலிவுடன் திகழும் படியாகச் செய்தபுகழ் மிகுந்த நபிகள் நாயகம் முகம்ம துற்ற சூலுல்லா (ஸல்) அவர்கள் மீது அருள் மிகுந்து வரும் பிள்ளைத் தமிழ் பாட தோன்றுத துணையாய் நின்று அருள் புரி வாய் ஆதியாகிய இறையவனே!

விளக்கவுரை

திரு எனும் சொல் செல்வம், சிறப்பு, அழகு, தெய்வீகம், ஈர்க்கும் ஆற்றல் முதலிய பொருள்களைக் கொண்ட தாகும்.

மக்கமா நகரம் தெய்வீகம் பொருந்திய திருநகராகும். இதன் சிறப்பு நாள் தோறும் வளர்ந்து கொண்டே வருகிறது. ஆண்டு தோறும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் அங்குச் கூடும் மக்கள் எண்ணிக்கை பல இலட்சங்களாகப் பெருகிக் கொண்டே வருகிறது. ஆதலின் திருவளரும் மக்க நகர் என ஆசிரியர் குறிப் பிடுவது பொருள் நிறைவு கொண்டதாகும். திரு என்னும் மங்க லச் சொல்லினால் இந்நூல் தொடங்குவதும் குறிப்பிடத்தக்க தாகும.

குபிர் — நிராகரிப்பு-உண்மை இறைவனை நிராகரித்தல். குரைை இருளாகக் குறிப்பிட்டு அவ்விருளை அகற்றும் சூரியனைப் போன்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் இருந்த தென்பது மிகப் பொருத்தமாகும். அரபியாவிலும அகிலத்தின பல பாகங் களிலும் இறை நிராகரிப் பென்னும் குபிரை நபிகள் நாயகத்தின் தோற்றம் நீக்கியுள்ளது. இருளை நீக்குவதில் கதிரவனுக்கு நிகர் ஏது?

மருவளரும் வனஞ் செறிந்த மதீனம்—பாலைவனச் சோலைகள் மதீனமா நகரிலும் அதைச் சுற்றிலும் மிகுதியாக உண்டு. மக்கா வில் அவ்வாறில்லை. இதனைக் கவிஞர் இத்தொடரால் பொருத்த மாக இங்குக் குறிப்பிடுகின்றார்.

மகிழ்ச்சியுற்று அரசாகி: நபிகள் நகயகம் (ஸல்) அவர்கள் பிறந்தது மக்காவில். நபித்துவம் பெற்றதும் மக்காவிலேதான். ஆனால் மக்கமா நகரக் குரைஷ்கள் தொடக்கத்தில் இஸ்லாமியக் கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்தார்கள். கல்லாலும் சொல் லாலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடித்தார்கள். ஒட்ட கத்தின்சாணத்தையும் அழுகியகுடலையும்குருதியையும்நாயகத்தின்

திருமேனி மீது வீசி யெறிந்தார்கள். உயிருகுகே உலை வைக்க முற்பட்டார்கள். ஆனால் மதீனமா நகரத்திலோ அணைக்கும் கரங்கள் அதிகமாயின. எதிர்த்தவர்களை வென்று வாகை சூடினர்கள். ஆடசிப் பொறுப்பையும் மாட்சியுடன் சிறப்பாக நடத்தி வந்தார்கள். இதனை இவ்விரு அடிகளாலும் உய்த்துணர வைக்கின்றார்.

மாறுத்தீன்—தின் என்பது செந் நெறி. இங்கு இஸ்லாத்தைக் குறிக்கும். இஸ்லாம் என்பது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மார்க்க மன்று. மனித குலத்தின் ஆதித் தந்தையாகிய ஆதம் நபி (அலை) முதல் நூஹ் (அலை) இப்ருகீம்(அலை) யூசுப்(அலை) மூசா(அலை) ஈஸா(அலை)முதலிய ஓர் இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களால் தொடர்ந்து பின்பற்றப் பெற்று வரும் மார்க்கமாகும். நபிகள் நாயகம் இதற்குப் புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் பொலிவும் வலிவும் தந்து செம்மைப் படுத்தினர்கள். இதனை மாறுதீன் எனக் கவிஞர் பொருத்தமாகக் குறிப்பிடுகிறார்.

பொருள் வளரப் புவிமுழுதும் விளக்கஞ் செய்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் கொள்கைகள் இவ்வுலகமெலாம் பரந்து சிறந்து வளர்ந்து திகழச் செய்தார்கள். "The most successful of all prophets and religious personalities" என என்சைக்கிலோபீடியா பிரிட்டானிக்கா குறிப்பிடுவது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

புகழ் நபி முகம்மதுற்ற சூலுல்லா: நபி எனும் அறபுச் சொல் வழிகாட்டி எனும் பொருளைத்தரும். 1,24,000 நபிமார்கள் இவ்வுலகத்தில் அவ்வப்போது ஆங்காங்குத் தோன்றியுள்ளார்கள். இவர்களில் புகழ் மிகுந்தவர் நபிகள் நாயகம் (ஸல்) ஆவார்கள்.

முஹம்மத் என்றால் புகழப் பெறறவர் என்பது பொருளாகும். அஹ்மத் எனும் இவர்களின் மற்றொரு பெயருக்குப் புகழுக்குரியவர் என்பது பொருளாகும். ஆதலின் புகழ் நபி முகம்மது என்பது மிகப் பொருத்தமாகும்.

றசூலுல்லா எனும் அறபுத் தொடர் அல்லாஹ்வின் தூதர் எனும் பொருளைத் தரும்.

ஆதியோனே பல உலகங்கட்கும் பல உயிர்கட்கும் படைப்பு அனைத்திற்கும் முதலாக இருப்பவன்.

பிள்ளைக்கவி: பிள்ளையைப் பற்றிப் பாடப்படும் கவி பிள்ளைத் தமிழ். பிள்ளைக்கவி என்றும் பிள்ளைப் பாட்டு என்றும் அழைக்கப் படுவதுண்டு.

இலக்கணக் குறிப்பு

மக்க நகர் — மக்கம் ஆகிய நகர் — இருபெயரொட்டுப் பண்புத் தொகை, இருளின் — (ஐந்தாம் வேற்றுமை) உவம உருபுப் பொருளில் வந்துள்ளது, நீக்கி — செய்து எனும் வாய் பாட்டு வினையெச்சம், செறிந்த — செய்த எனும் வாய் பாட்டுப் பெய ரெச்சம், மாருத்தீன் — ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் புகழ் நபி — வினைத்தொகை, ஆதியோனே — விளி.

2. ஆதி திருப் பேரொளிவு பிரிந்த டங்கா
தருள் நிறைந்த வெழு கடலின் மூழ்கி மூழ்கிச்
சோதிமணி யாயுகித்துப் பணிந்து வானத்
தோகை யெனும் வடிவு கொண்ட தன்பின் னுலே
சாதிமனு வடிவாகி முகம்ம தான
சஞ்சீவி சையிதிற சூலுல் லாமேல்
நீதிபெறும் பிள்ளைத் தமிழ்க் கவிதை கூற
நெறியுடனே வாக்கருள்வாய் தம்பி ரானே

பதவுரை

தம்பி ரானே — (தமது) தலைவனே, எமது இறைவனே, ஆதி திருப் பேரொளிவு பிரிந்து — ஆதியின் தெய்வீகப் பேரொளி பிரிந்து, அடங்காது அருள் நிறைந்த எழுகடலின் மூழ்கி மூழ்கி — எல்லையுள் அடங்காது அருள் நிரம்பிய ஏழ் கடலின் கண் பன் முறை மூழ்கி, சோதிமணியாய் உதித்து—சோதி வீசும் மணியா கத் தோன்றி, பணிந்து — பணிந்து, வானத் தோகை யெனும் வடிவு கொண்டு அதன் பின்னுலே — விண்ணகத்து மயில் வடிவு எடுத்து அதன் பின்னர், சாதிமனு வடிவாகி முகம்மதான — உயர்ந்த மனித வடிவாகி முகம்மது என்னும், சஞ்சீவி சையிது இறசூலுல்லா மேல் — மருந்தாகிய சையிது இறசூலுல்லா மேல், நீதி பெறும் பிள்ளைத் தமிழ்க் கவிதை கூற — நீதிகளை வழங்கும் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களைப் பாட, நெறியுடனே வாக்கருள் வாய் — முறையாக உரை அருள்வாய்.

தெளிவுரை

எமது இறைவனே, ஆதியில் ஆதியாகிய உன்னிடமிருந்து தெய்வீகத் திருப் பேரொளி பிரிந்து, எல்லையுள் அடங்காது, அருள் நிரம்பிய ஏழ் கடலின்கண் பலமுறை மூழ்கி, சோதி வீசும் மணி யாகத் தோன்றி, பணிந்து விண்மயில் வடிவு எடுத்து, அதன் பின் னர் உயர்ந்த மனித வடிவாகி, முகம்மது (ஸல்) எனும் மருந்தா கிய சையிது இறசூலுல்லா மேல் நீதிகளை வழங்கும் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களைப் பாட முறையுடனே உரை அருள்வாய்!

விளக்கவுரை

ஆதி திருப் பேரொளிவு— ஆதி எல்லும் தொடர் ஆதியில் எனவும் படைப்புக்கள் அனைத்திற்கும் ஆதியாகிய இறைவனிட மிருந்து எனவும் பொருள் தந்து நிறைவு செய்கிறது. நபிகள் நாயகம் (ஸல்) ஒளிமயமாகிய இறைவனிடமிருந்து ஒளியாகப் பிரிந்து ஆதம் (அலை) முதலாக நபிமார்கள் வழியாகப் பொருந்தி அப்துல்லாவின் நெற்றியில் இலங்கி அன்னை ஆமினையின் மணி வயிற்றில் தரித்ததாகக் கொள்வது இஸ்லாமிய நம்பிக்கை. இங்கு ஆதியில் ஒளியாகப் பிரிந்து, ஏழ்கடலில் மூழ்கி மூழ்கி சோதிமக்க மணியாகத் தோன்றி வண்ணமயில் வடிவு எடுத்துப் புனித மிக்க மனித உருத் தாங்கி வந்தார்கள் என்று ஆசிரியர் கூறுகிறார்.

சஞ்சீவி — மாநிலத்து மனித கோடி அதர்மம் என்னும் நோயி னால் அவதிப்பட்டபோது அந்நோய் நீங்க அரிய தொரு மருந்தாக நபிகள் நாயகம் (ஸல்) பிறந்தார்கள். சீறுப் புராண ஆசிரியர் "பவ நோய் இடர் தவிர்த்திடும் அருமருந்தாயீ" எனக் குறிப்பிடு வது சுண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

இலக்கணம்

ஏழு கடல் — ஏழ் கடல் என்பது மரபு. பண்புத் தொகை. எழுகின்ற, எழுந்த, எழும் கடல் என வினைத் தொகையாகக் கொண்டு பொங்கி எழுகின்ற கடல் என்றுங் கொள்வர். தாலப் பருவம் நாலாஞ் செய்யுளிற் கூறப்படும ஏழு கடல்களென்க. ஒளிவு—ஒளியை உகரச் சாரியைசேர்த்து ஒளிவு என முஸ்லிம்கள் கூறுவதுண்டு, பேரொளி — பண்புத் தொகை, மூழ்கி மூழ்கி — அடுக்குத் தொடர் பல முறை மூழ்குதல் ஆகும், நுண் பொருளாகிய கடலின்கண் திரும்பத் திரும்பமூழ்கியதனால் சோதி மணியாயுதித்து என்பது இங்கு உய்த்துணரற் பாலது, சோதிமணி — சோதியையுடைய மணி இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை, தோகை — இனையாகு பெயர், தம்பிரானே: பிரான் — தலைவர் எனும் பொருள் கொண்ட வடசொல் தம்பிரான் — தமது தலைவன், ஆறும் வேற்றுமைத் தொகை.

3. மதிகடொறு மும்மாரி பொழிதல் சேர்ந்த
வடகரையூர் தனில் வாழுந் தீனு ளோர்க்கு
விதிமுறை கடவருமற் றினங்க டோறும்
விருப்பமதா யுரைக்குஞ்சை துமீரு லெப்பை
துதியுடைய தவப்பலனு தித்து வந்த
தோன்றல்சை யிதனபியா சாகி பாலனு
கதியுடைய முகம்மதுநந் நபிமேற் பிள்ளைக்
கவிதை மொழி சிறப்பாகக் கழறி னனே.

பதவுரை

மதிகள் தொறும் மும்மாரி பொழிதல் சேர்ந்த — மாதந்தோறும் மும்மாரி பொழி கலிப் பொருந்திய, வடகரைபூர் தனில் வாழும் தீனுளோர்க்கு—வடகரை எனும் ஊரில் வாழும் முஸ்லிம்களுக்கு, விதிமுறைகள் தவறுமல் தினங்கள் தோறும் விருப்ப மதா யுரைக்கும் — மார்க்க விதிமுறைகளினின்றும் தவறுது நாள் தோறும் விரும்பிப் போதிக்கும், சையது மீரு லெப்பை துதியு டைய தவப்பலனுதித்து வந்த தோன்றல் சையிது அனபியா சாகிபாஞன் —சையிது மீரு லெப்பை இறை வணக்கத்தின பய னுல் உதித்த தோன்றலாகிய சையிது அனபியா சாகிபு, கதியு டைய முகம்மது நந்நபி மேற் பிள்ளைக் கவிஞத மொழி சிறப்பா கக் கழறினுனே — மோட்ச கதியுடைய நமது முகம்மது நபி (ஸல்) அவர்கள்மேல் பிள்ளைத் தமிழ் சிறப்பாகப் பாடினுன். ஏ — ஈற்றசை.

மாதந்தோறும் மும்மாரி பொழிதலைப் பொருந்திய வட கரை யெனும் ஊரில் வாழும் முஸ்லிம்களுக்கு மார்க்க விதிமுறை களினின்றும் தவறுது நடக்க நாள் தோறும் விரும்பிப் போதிக் கும் சையிது மீரு லெப்பை இறை வணக்கத்தின் பயனுல் உதித்த தோன்றலாகிய சையிது அனபியா சாகிபு, மோட்ச கதியுடைய முகம்மது நபி (ஸல்) அவர்கள் மேல் பிள்ளைத் தமிழ் சிறப்பாகப் பாடினுன்.

விளக்கவுரை

மதிகடொறு மும்மாரி பொழிதல் — மாதம் மும்மாரி பொழிதல். இது நாட்டுக்கு வளத்தினையும் நலத்தினையும் பெருக் கும், ஊரும் நாடும் செழிக்கும். நல்லவர் இருக்கும் ஊரில் மழை பொழியும் என்பது ஆன்றோர் வாக்கு. ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'' எனபது ஔவையின் மூதுரை. இங்கு வடகரையில் விதிமுறை கடவா மல் தீனோர் நடக்கும் வண்ணம் சையிது மீரு லெப்பை உபதேசம் செய்துள்ளார். கவி மழை பொழியும் சையிது அனபியா சாகிப் தோன்றிய ஊரில் மழை மாறுது மாதம் மும்முறை பொழிந்து வந்தது. தீன் — முன்னுள்ள பாடலின் விளக்கம் காண்க.

இலக்கணம்

மும்மாரி — பண்புத்தொகை, பொழிதல் — தொழிற்பெயர், விதிமுறை — ஆறும் வேற்றுமைத் தொகை, ஒரு பொருள் பன் மொழித் தொடருமாம், தவப்பலனுல் — தவத்தினது பலனுல் ஆறும் வேற்றுமைத் தொகை, தோன்றல் — ஆண்பால் சிறப்புப் பெயர், நந்நபி — நம்நபி ஆறும் வேற்றுமைத் தொகை.

காப்புப் பருவம்

பிள்ளைத் தமிழின் பத்துப் பருவங்களில் முதலாவது. குழந்தையாகிய பாட்டுடைத் தலைவரைக் காத்தருளும்படி திருமால் முதலிய கடவுளரை வேண்டிப் பாடுவது பிள்ளைத் தமிழ் மரபு. இங்கு இஸ்லாமிய மரபிற் கேற்ப உலகமெலாம் ஓரிறைவனையே வேண்டிப் பாடுகின்றார் புலவர். பாட்டுடைத் தலைவரைக் காக்கும்படிக் கடவுளரை வேண்டுவதே பிள்ளைத் தமிழ் மரபு. ஆனால் இங்கு புரவலரையும் காக்கும்படி வேண்டுகின்றார்.

1. திருவின் மறையாய்ப் பொருளினமாய்த்
தெளிந்த வறிவாய்ப் பொறி வகையாய்ச்
சிதையா துயிரா யானந்தமாய்ச்
சிறந்த சுவையாய்த் தெள்ளமுதாய்
மருவின் மணமா யருட்குணமாய்
வயங்குந் தருவாய் மழை முகிலாய்
மறையா மணியாய்க் கதிர்ச் சுடராய்
வகுப்பி னடங்கா வடிவினோடு
பொருவி லமையாக் காரணமாய்ப்
புண்யத் துறையாய்ப் பெருவாழ்வே
பொங்கும் படியாய்ப் புகழ் செறிந்த
பொருளே பூவான் பல்லுயிர்க்குங்
கருவின் கருவா யாண்ட கையாய்க்
கருதிக் குன்னென் றெழுத்தினுட
கதுருப் படைத்தே மிகவாளுங்
கலியின் றகுமான் காப்பாமே. (1)

பதவுரை

திருவின் மறையாய் — சிறப்பினையுடைய வேதமாக, பொருளினமாய் — பொருட்களின் தொகுதியாக, தெளிந்த அறிவாய் — தெளிவான அறிவாக, பொறி வகையாய் — புலனைத்தரும் பொறிகளாக, சிதையாது உயிர் ஆய் ஆனந்தமாய் — அழியாத உயிராக ஆனந்தமாக, சிறந்த சுவையாய்— உயர்ந்த சுவையாக, தெள்ள முதாய் — தெளிந்த அமுதமாக, மருவின் மணமாய் — மணத்தின் மணமாக, அருட் குணமாய்—கருணைப் பண்பாக

வயங்குந் தருவாய் — திகழும் தருவாக, மழை முகிலாய — மழை பொழியும் மேகமாக, மறையா மணியாய் — அழிவிலாத மணியாக, கதிர்ச் சுடராய் — கதிரவனின் ஒளியாக, வகுப்பின் அடங்கா வடிவினோடு — பகுத்துக் கூறுவதற்கு அடங்காத தோற்றத்தினோடு, பொருவின அமையாக் காரணமாய் — ஒப்புக் கூற முடியாத உலகம் அனைத்திற்கும் காரணமாக, புண்யத் துறையாய் — புண்ணியத்தின் துறையாக, பெரு வாழ்வே — வள வாழ்வே, பொங்கும் படியாய் புகழ் செறிந்த பொருளே — பெருகும் படியாகப் புகழ் நிறைந்த பொருளே! பூவால் பல்லுயிர்க்கும் — மண்ணகத்தும் விண்ணகத்தும் உள்ள பல வாகிய உயிர்களுக்கும், கருவின் கருவாய் — கருவினுள் கருவாக, ஆண்டு அதை — அங்கு அதனை, ஆய்க் கருதி — ஆய்ந்து எண்ணி, குன்னென் றெழுத்தினுடன்— உண்டாகுக என்று சொல்லி, கதுருப் படைத்து — கதுருகப் படைத்து, மித ஆளும் — சிறப்பாக ஆளும், கனியின் றகுமான் —செல்வத் தினையுடைய முகுமானின், காப்பாமே—காவலாகும்.

தெளிவுரை

சிறப்பினையுடைய வேதமாகப் பொருட்களுள் தொகுதியாக தெளிவான அறிவாக, புலனைத் தரும் பொறிகளாக, அழியாத உயிர்க்கு ஆனந்தமாக, உயர்ந்த சுவையாக, தெளிந்த அமுதமாக, மணத்திற்கு மணமாக, கருணைப் பண்பாக, திகழும் தருவாக, மழை பொழியும் மேகமாக, அழிவிலாத மணியாக, கதிரவனின் ஒளியாக, பகுத்துக் கூறவதற்கு அடங்காத அழகினோடு ஒப்புக் கூற முடியாத உலகம் அனைத்திற்கும் காரணமாக, புண்ணியத தின் துறையாக, வளவாழ்வு பெருகும் படியாகப் புகழ் நிறைந்த பொருளே மண்ணகத்தும் விண்ணகத்தும் உள்ள பல வாகிய உயிர்களுக்கும் அவற்றின் கருவினுள் கருவாக அங்கு அதனை ஆய்ந்து எண்ணி 'உண்டாகுக' என்று சொல்லிக் கதுருகப் படைத்துச் சிறப்பாக ஆளும் செல்வமுடைய றகுமானின் காவலாகும்.

விளக்கவுரை

திரு மின் மறை — தெய்வீக மறை. இறைவனால் அருளப் பட்ட வேதங்கள் நான்கு, அவை சபூர், தெளராத், இன்ஜில், பூர்க்கான். இவை முறையே தாவூது (அலை) மூசா (அலை) ஈசா (அலை) முகம்மது (ஸல்) ஆகியோர்க்கு அருளப்பட்டுள்ளன. வயங்குந் தரு — வேண்டியார்க்கு வேண்டிய பொருளை வேண்டியாங்கு தரும் வானலோகத்துக் கற்பகத் தரு. இறைவன் வேண்டியார்க்கு அருளும் தன்மையினை இத்தொடர் குறிப்பிடுகிறது. மறையா மணியாய் — பிற மணிகள் அழியுந் தன்மையுடையன இறைவன் அழியா மணியாக விளங்கும் இயல்பினன். 'அழிவிலா மணி' என உமறுப் புலவர் கூறுவது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. வகுப்பின் அடங்கா வடிவு இனைத்து என்று வகுத்துக் கூற முடி

யாத வடிவினை உடையவன் இறைவன், உருவமற்றவன்: குன் னென் றெழுத்தினுட — இறைவன் 'குன்' என்றதும் அவன் தோற்றுவிக்க விரும்பும் பொருட்களும் உயிர்களும் உண்டாகிவிடு கின்றன. கதுருப் படைத்து — விதிப்படி சிருட்டித்து.

இலக்கணம்

அருட்குணம் — அருள் குணம் — அருளாகிய குணம்— பண்புத் தொகை, மழை முகில் — மழையைப் பொழியும் முகில்— 2ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை, மறையாமணி — மறையா(த)மணி — ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம், கதிர்—ஆகுபெயர்(கதிரை) உடையவனுக்கு ஆகி வந்தது. அடங்கா வடிவு — ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம், அமையாக் காரணம் —ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம், பெரு வாழ்வு — பண்புத் தொகை.

5. நவமிலடங்கா திறையொளிவால்
நவமா யுதித்து மலக் கூத்தில்
நறவங் கமழ்ந்த பொன்னூட்டில்
நகை சேர் கிந்திலெனும் விளக்காய்

தவங்கள் புரிந்த சபபூத்தில்
சமைந்த மஞ்ஞை வடிவாகித்
தனியோ னறிவாய் லாகூத்தில்
றனியே வளர்ந்தவெக்கீன் மரத்தில்

சிவமெய் பெருக வோயாமற்
சிறந்த மொழிசேர் கலிமாவை
சிபத்தாய் மொழிந்து பணிந்திருக்கச்
செயமுந் திறனுங் கொடுத்தருளி

பவம் புன் படிறு மணுகாமற்
படியிற் செங்கோ லடத்திடவே
பதியாய்ப் பிறந்த காயிமைப்
பண்பாய்க் காப்பாய் றகுமானே! (2)

பதவுரை

நவமில் அடங்காது — அற்புதங்களுளெல்லாம் அடங்காமல், இறை யொளிவால் — இறைவனின் ஒளியால், நவமாய் உதி த்து — அற்புதமாய்த் தோன்றி. மலக்கூத்தில் — மலக்கூத்து என்னும் வானவர் வாழும் பகுதியில், நறவம் கமழ்ந்த பொன் னூட்டில் — தேன் மணம் கமழும் சொர்க்கப்பதியில், நகை சேர் கிந்தில் எனும் விளக்காய் — ஒளி பொருந்திய கிந்தில் என்னும் விளக்காக, தவங்கள் புரிந்து — தவங்களியற்றி, சபூத்தில் — மலக்குகள் வதியும் பகுதிக்கு மேலிடத்தில், சமைந்த மஞ்ஞை வடிவாகி — அமைந்த மயிலினது வடிவமாகி, தனியோன் அறி வாய்— இறைவனின் அறிவாய், லாகூத்தில்—இறைவன் தங்கும்

இருவிடத்தில், தனியே வளர்ந்த எக்கீன் மரத்தில்—தனிமையாக் வளர்ந்த ஈமானின் உறுதி எனும் எக்கீன் மரத்தில், சிவமெய் பெருகல் ஓயாமல் — நன்மையாகப் பெருகு தலினின்றும் ஒய்ந்து விடாமல், சிறந்த மொழி சேர் கலிமாவை — சிறப்பான மொழி பொருந்திய நம்பிக்கை என்னும் கலிமாவை, சிபத்தாகி மொழிந்து பணிந்து இருக்க — பண்புடன் கூறிப் பணிந்திருக்க, செயமும் திறனும் கொடுத்து அருளி — வெற்றியும் ஆற்றலும் கொடுத்தருளி, பவம் புன்படிறும் அணுகாமல் — பாவங்களும் கீழான குற்றங்களும் நெருங்காமல், படியில் — உலகில், செங்கோல் நடத்திடவே — செவ்விய ஆட்சி புரிந்திட, பதியாய்ப் பிறந்த — தலைவராகப் பிறந்த, காபீமை — ஹாபீமாகிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே, பண்பாய் காப்பாய் றகுமானே — பண்புடன் காப்பாய் அருளாளனே!

தெளிவுரை

அருளாளனே! பிற அற்புதங்களுளெல்லாம் அடங்காமல் இறைவனின் ஒளியால் பேரற்புதமாய்த் தோன்றி மலக் கூத்து என்னும் அமரர் வாழும் உலகில், தேன்மணம் கமழும் சொர்க்கப் பதியில் ஒளி பொருந்திய கிந்தில் என்னும் விளக்காக இருந்து தவங்களை இயற்றி, அமரர்கள் வாழும் பகுதிக்கு மேலிடமாகிய ஜபறூத்தில் மயிலினது வடிவமாகி, இறைவனின் அறிவாய் லாகூத்தில் தனியே வளர்ந்த ஈமானின் உறுதி எனும் எக்கீன் மரத்தில் திறைவாய்ப் பெருகுவதிலிருந்து ஓயாமல் சிறப்புப் பொருந்திய கலிமாவைப் பண்பாய் கூறிப் பணிந்திருக்க, வெற்றியும் திறமும் கொடுத்தருளி, பாவங்களும் குற்றங்களும் அணுகாமல் உலகத்தில் செங்கோல் செலுத்திடத் தலைவராகப் பிறந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பண்பாய்க் காப்பாயாக!

விளக்கவுரை

லாகூத்து — இறைவனின் இடம், — மலக் கூத்து — அமரர் வாழும் இடம், மலக்கு அமரர், ஜபறூத்து — அமரர் உலகிற்கு மேலிடம், கிந்தில்—இலறயொளையச் சுற்றிலும் வீசம் விளக்கு, எக்கீன் — ஈமானின் (நம்பிகையகயின்) உறுதி, சிவம் — நன்மை எனும் பொருளில் வந்துள்ளது, கலிமா — மூலமந்திரம் நம்பிக்கை, சிபத்து — பண்பு எனும் பொருள் கொண்ட அறபுச் சொல், காபீம் — ஹாபீம் — நபிகள் நாயகம் (ஸல்) குறிக்கும் ஒலிக் குறிப்பு.

இலக்கணம்

சேர் கிந்தில் — வினைத் தொகை, சமைந்த மஞ்ஞை — பெயரெச்சத் தொடர், எக்கீன் மரம் — உருவகம், புன் படிறு — புன்மை — பாறு — பண்புத் தொகை, செங்கோல் — அடையடுத்த ஆகு பெயர், றஹுமானே — அண்மை விளி.

6. வானம் புவியை மலைகடலை
மதியை யொளியைப் படைத்தருள்
வரிசை யிலையென் றருள்பெருகி
மகுமூ தொளிகொண் டமரரொடு

தானும் லட்சத் தறுநான்கு
தவரு நபிக ளனைவரிலும்
தகுதி மிகுந்த முறுசல்நபி
தம்மைப் படைத்துத் தவம்புரிய

ஈன மனுகா நல்வினையை
எடுத்து நடத்த மாராய
நிசைத்த மறைநூல் வழிநேர்மை
இயல்பாய்க் காட்டிக் காத்ததுபோல்

மான மறிவு ஞானமொடு
மாழ்வின் குணமு மகமுறைந்த
மகுமூதரசைக் காத்தருள்வாய்
மறையின் பொருளே றகுமானே (3)

பதவுரை :

மறையின் பொருளே றகுமானே—வேதத்தின் உட்பொருளாகிய அருளாளனே, வானம் புவியை மலைகடலை மதியை யொளியைப் படைத்தநளி—வானத்தையும், வையகத்தையும் மலைகளையும், கடல்களையும், சந்திரனையும், சூரியனையும், விண்மீன்களையும் படைத்து அருள் செய்து, வரிசையிலை என்று அருள் பெருகி—இவையெல்லாம் சிறப்பில்லை எனக்கருதி, உனக்கு இயல்பான பேரருள் பெருகி, மகுமூது ஒளி கொண்டு—மகுமூது என்னும் ஒளியைக் கொண்டு, அமரரொடு தானும்—வானவர்களுடனும், லட்சத்து அறுநான்கு ஆயிரம் நபிகள் அனைவரிலும்—இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களுள்ளும், தகுதி மிகுந்த முறுசல்நபி தம்மைப் படைத்து—தகுதி மிக்க முறுசலீன்களான 313 நபிமார்களையும் படைத்து, தவம் புரிந்திட—தவங்கள் செய்யவும், ஈனம் அணுகா நல்வினையை எடுத்து நடத்த—இழுக்கு அணுகாத நற்செயல்களை மேற்கொண்டு நடத்த, மாராயம் இசைத்த மறைநூல் வழிநேர்மை—நற்செய்தியை இயம்பும் வேதநூல்களின் மூலமாக நேர்வழியை, இயல்பாய்க் காட்டிக் காத்ததுபோல்—முறையாக விளக்கிக் காப்பாற்றியது போல், மானம் அறிவு ஞானமொடு—மானமும், உலக அறிவும் மெய்யறிவுடன், வாழ்வின் குணமும் அகம் உறைந்த மகுமூதரசைக்—வாழ்வளிக்கும் பண்புகளும் உள்ளத்தே உறைந்த மகுமூது (ஸல்) என்னும் அரசரைக், காத்தருள்வாய்—காத்து அருள் செய்வாயாக.

தெளிவுரை

வேதத்தின் உட்பொருளான அருளாளனே! வானத்தையும், வையகத்தையும், மலைகளையும், கடல்களையும், சந்திரனையும், சூரியனையும், விண்மீன்களையும் படைத்து, அருள் செய்து இவையெல்லாம் சிறப்பில்லை எனக்கருதி உனக்கு இயல்பான பேரருள் பெருகி 'மகுமூது' என்னும் ஒளியைக் கொண்டு வானவர்களுடன் இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களுள்ளும் தகுதி மிக்க முறுசலீன்களான 313 நபிமார்களையும் படைத்து, தவங்கள் செய்யவும், இழுக்கு அணுகாத நற்செயல்களையும் மேற்கொண்டு நடத்த, நற்செய்தியை இயம்பும் வேத நூல்களின் மூலமாக நேர்வழியை முறையாக விளக்கிக் காப்பாற்றியது போல், ஞானமும் உலக அறிவும் மெய்யறிவுடன் வாழ்வளிக்கும் பண்புகளும் உள்ளத்தே உறைந்த மகுமூது (ஸல்) என்னும் அரசரைக் காத்து அருள் செய்வாயாக!

விளக்கவுரை

இலட்சத்து அறுநான்கு ஆயிரம் நபிகள்—உலக மக்களுக்கு நேர் வழிகாட்ட அவ்வப்பொழுது ஆங்காங்கு இறைவனுல் தீர்க்க தரிசிகள் அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்கள் ஒரிலட்சத்து இருபத்து நான்காயிரம் என்பர். முறுசல் நபி—மேற்சுண்ட ஒரிலட்சத்து இருபத்து நன்காயிரம் தீர்க்கதரிசிகளுள் இறையுரைகள் பெற்றுவந்தவர்கள் 313 பேர். இவர்கள் முறுசலீன்கள் (இறைதூதர்கள், என அழைக்கப்படுவர் இறசூல் (தூதர்) என்னும் அறபுச் சொல்லின் பன்மையே 'முறுசலீன்' ஆகும். நமுமானே—அருளாளனே! இறைவன் தன் படைப்புகளிடத்துப் பேரருள் கொண்டவன்.

இலக்கணக் குறிப்பு

வானம் பூமியை, மலைகடலை, மதியை—உம்மைத்தொகை இலை—இல்லை என்பதன் இடைக்குறை, அணுகா (அணுகாத) சிறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நல்வினை—(நன்மை+வினை. பண்புத்தொகை. மறைநூல்— மறையாகிய நூல், இரு பெயரொட்டுப் பண்புத் தொகை

7. குறைவில் மிகுந்த இபுலீசின்
கொள்கை யகத்திற் குடிகொண்ட
கொலையுங் களவுங் கொடுங்கோலும்
கூவில் நடத்து நுமுறூதை

மறையின் படியாய் நடப்பதற்கு
வந்து மொழிய மனம்வெகுண்டு
வடவைக் கனல்போல் வன்னிதனை
வளர்த்துப் பெருகி யக்குழியில்

இறைவன் விரைவில் வைக்கும்படி
யிறைக்கப் பிர்த்தே யெரியிடத்தில்
இடவவ் வெரியைப் பூவணைபோல்
இருக்க விடரொன் றணுகாமல்

நறைமெல் கமழ்ந்த இபுரூகி
நபியை நாட்டிநீ காத்ததுபோல்
நபிகள் பெருமான் முகம்மதுவை
நயமாய்க் காப்பாய் நாயகனே (4)

பதவுரை

நாயகனே—இறைவனே!, குறைவில் மிகுந்த இபுலீசின்—குறைகளில் மிகுந்த இபுலீசினுடைய, கொள்கை யகத்திற் குடிகொண்ட—கோட்பாடுகள் மனத்தில் வாழும்படி கொண்ட, கொலையுங் களவுங் கொடுங்கோலும் கூவில் நடத்து நுமுறூதை—கொலையையும் களவையும் கொடுங்கோலையும் உலகில் நடத்திய நம் றூதை, மறையின் படியாய் நடப்பதற்கு—வேத நெறிப்படி நடப்பதற்கு, வந்து மொழிய—(இப்ரூஹீம் அலை) வந்து சொல்ல, மனம் வெகுண்டு—மனம் பொங்கி, வடவைக் கனல் போல் வன்னிதனை வளர்த்து — வடவா முகாக்கினி போல் நெருப்பினை வளர்த்து, பெருகிய அக்குழியில்—பொங்கி உயர்ந்த அக்குழியில், இறைவன் விரைவில் வைக்கும்படி—அரசன் விரைவில் போடும்படி, இறைக்க—கட்டளையிட, பிர்த்தே எரியிடத்தில் இட—அவரைத் தாம் இருக்கும் இடத்திலிருந்து வேறுபடுத்தி நெருப்புக் குண்டத்தில் இட, அவ் எரியைப் பூ அணை போலிருக்க இடர் ஒன்று அணுகாமல்—அந்நெருப்பினைப் பூப் படுக்கை போலிருக்கும்படி செய்து நெருப்பால் வினையும் துன்பம் ஒன்றும் அவரை நெருங்காமல், நறைமெய் கமழ்ந்த இப்ரூகிம் நபியை—மணம் கமழும் மேனியை உடைய நபி இப்ரூஹிம் (அலை) அவர்களை, நாட்டிற் காத்தது போல்— நானிலத்தில் காத்தருளியது போல, நபிகள் பெருமான் முகம்மதுவை—நபிகள் நாயகமாகிய முகம்மது (ஸல்) அவர்களை, நலமாய்க் காப்பாய்—நலமுறக் காத்தருள்வாயி!

தெளிவுரை

இறைவனே! குறைகளில் மிகுந்த இபுலீசினுடைய கோட்பாடு மனத்தில் வாழும்படி கொண்ட கொலை, களவு, கொடுங் கோலை உலகில் நடத்திய நம் றூதை வேதநெறிப்படி நடப் பதற்கு இப்ரூகீம் (அலை) வந்து சொல்ல, மனம் பொங்கி வடவாமுகாக்கினிபோல் நெருப்பினை வளர்த்து பொங்கி உயர்ந்த அந்நெருப்புக் குழியில் அரசன் விரைவில் அவரைப் போடும்படி கட்டளையிட, அவரைத் தாம் இருக்கும் இடத்தி லிருந்து வேறுபடுத்தி நெருப்புக் குண்டத்திலிட, அந்நெருப் பினைப் பூப்படுக்கைபோல் இருக்கும்படி செய்து நெருப்பால் விளையும் துன்பமொன்றும் அவரை நெருங்காமல் மணங் கமழும் மேனியை உடைய அந்நபியை நானிலத்தில் காத்த நளியது போல் நபிகள் நாயகமாகிய முகம்மது (ஸல்) அவர் களை நலமுறக் காத்தருள்வாய்!

விளக்கவுரை

இபுலீசு: இறைவன் கட்டளைக்கு அடிபணிய மறுத்தவன். இறைவன் ஆதம் (அலை) அவர்களைப் படைத்து அமரரனை வரையும் அவர்களைப் பணியும்படி ஆணையிட்ட போது இவன் மட்டும் 'நெருப்பால் படைக்கப்பட்ட நான் கேவலம் மண்ணால் படைக்கப்பட்ட ஆதத்தைப் பணியேன்' என மறுத்து விட் டான். ஆதலின் இறைவனின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாகிச் சொர்க்கத்திலிருந்து விரட்டப்பட்டான். ஆதம் (அலை) அவர்களுக்கும் அவர்களின் சந்ததியானவர்க்கும் கேடு செய்யச் சூளுரைத்து மனித குலத்திற்குத் தீங்கு செய்து வருகிறான். நூம றூது; நம் றூது அரசன். 'பாபில்' எனும் நாட்டை ஆண்டுவந்தான். விக்கிரக வழிபாட்டை எதிர்க்கும் இப்ரூகீம் (அலை) அவர்களை நெருப்புக் குண்டத்தில் இடச் செய்தவன். வடவைக்கனல்: பெட்டைக் குதிரையின் முகவடிவத்தில் கடலினடியில் உள்ள பெருநெருப்பு என்றும், இது ஊழிக் காலத்தின் இறுதியில் வெளிப்பட்டுக் கடல்நீரைச் சுவ றக் காய்ச்சி உலகங்களை அழிக்கும் என்றும் இந்து புராணங் கள் கூறும். இதனை வடவாமுகாக்கினி என்பர். இத்தகைய கவிக் கொள்கைகள் பலவற்றை ஆசிரியர் இந்நூலில் எடுத்தாண்டுள் ளார்.

இலக்கணக் குறிப்பு

கொடுங்கோல்—அடையடுத்த ஆகுபெயர், இறைக்க — செய வென் வாய்பாட்டு வினையெச்சம், பூவணை — மூன்றும் வேற் றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை, நறை மெய் கமழ்ந்த—ஏழாம் வேற்றுமைத் தொகை.

5. பார்க்குள் நெறியின் முறையொழுங்கைப்
பால னுடனே யிபுருகீம்
பயமாய் நடத்தி வருநாளில்
பண்ணர் தனிலே பலரெழுந்து

மார்க்க மறிய வந்ததன்பின்
மகனை யறுத்து வழங்கெனவே
வாக்குப் படியே வைவசியால்
வலுகொண் டறுக்க மறிகொடுத்து

ஈக்கி ரத்தின் விலக்கியுயிர்
சேதக் குறையொன் றணுகாமல்
செகத்தி லிசுமா யீலுதமைத்
தெளிவாய்க் காத்த வர்சையைப்போல்

தீர்க்க நபியாய்ப் புவிபிறந்த
செய்யி திறசூ லகுமதர்க்குத்
தீங்கொன் றணுகா மற்காப்பாயீ
சிற்றுய் நிறைந்த சீமானே (5)

பதவுரை

சிற்றுய் நிறைந்த சீமானே—அறிவாக நிரம்பிய செல்வனே, பார்க்குள் நெறியின் முறை ஒழுங்கை—உலகத்தில் சன்மார்க்கத்தின் முறைமையையும் ஒழுங்கையும், பாலனுடனே இபுருகீம் பயமாய் நடத்தி வருநாளில்—தமது அரும் புதல்வராகிய இஸ்மாயில் (அலை) அவர்களுடன் இபுருகீம் (அலை) பயபக்தியுடன் செயல்படுத்தி வரும் காலத்தில், பண்ணர் தனிலே பலர் எழுந்து மார்க்கம் அறிய வந்ததன்பின்— குருமார்கள் பலரும் சன்மார்க்கத்தை அறிந்து கொள்ளத் தம்மால் வந்ததன்பின்னர், மகனை அறுத்து வழங்கு எனவே—தமது மகனை அறுத்து உயிர்ப்பலி தருக என ஆணை பிறக்கவே, வாக்குப் படியே வைவசியால் வலுக்கொண்டு அறுக்க — அவ் இறை ஆணையின் படியே கூர்மையான வாளால் எலும்பு எல்லாம் கூட்டி அறுக்கும் பொழுது, மறிகொடுத்தது சீக்கிரத்தில் விலக்கி —ஆடொன்றினை வழங்கி விரைவாக மகனை அறுப்பதினின்றும் விலக்கி, உயிர்ச்சேதக் குறை ஒன்றும் அணுகாமல்—மைந்தர்க்கு உயிர்ச் சேதமோ, உடற் குறையோ ஏதும் நேராமல், செகத்தில் இசுமாயில் தமை—உலகில் இசுமாயில் (அலை) அவர்களை, தெளிவாயக் காத்த வரிசையைப் போல் — விளங்கும் படியாக காத்தருள்ய நிறப்பிசீனப் போல், தீர்க்க நபியாய்ப் புவிபிறந்த—முழுமை பெற்ற நபியாக உலகில் தோன்றிய செய்யிதிறசூல் அகுமதர்க்கு — தலைமைத் தகுதி கொண்ட திருத்தூதர் முகம்மது (ஸல்) அவர்களுக்கு, தீங்கு ஒன்றணுகாமல்—கேடெதுவும் நெருங்காமல், காப்பாய்—காத்தருள்வாய்,

தெளிவுரை

அறிவாக நிரம்பிய செல்வனே; உலகத்தில் சன்மார்க்கத்தின் முறைமையையும் ஒழுங்கையும் தம் அருமை புதல்வராகிய இஸ்மாயீல் (அலை) அவர்களுடன் இபுறாஹீம் (அலை) அவர்கள் பயபக்தியுடன் செயல்படுத்தி வரும் காலத்தில், குருமார்கள் பலரும் சன்மார்க்கத்தை அறிந்து கொள்ளத் தம்பால் வந்த பின்னர், தம் மகனை அறுத்து உயிர்ப்பலி தருக என இறை ஆணை பிறக்க அவ் இறையாணையின்படி கூர்மையான வாளினால் வலிமையெல்லாம் கூட்டி அறுக்கும் பொழுது, ஆடொன்றை வழங்கி, இறையாணை ஏற்றுச் செய்யப்பட்ட உயர்ந்த கரத்தினைத் தடுத்து மைந்தருக்கு உயிர்ச்சேதமோ உடற்குறையோ ஏதும் நேராமல் உலகில் இஸ்மாயீல் (அலை) அவர்களை விளங்கும் படியாகக் காத்தருளிய சிற்பியைப்போல் நிறைவுபெற்ற நபியாக உலகில் தோன்றிய தலைவராகிய திருத்தூதர் அகமது நபி (ஸல்) அவர்களுக்குக் கேடெதுவும் நெருங்காமல் காத்தருள்வாயாக;

விளக்கவுரை

தியாகம்:

இப்ராஹீம் (அலை) தம் அருந்தவப் புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களைக் காண்பதற்காக மக்கா வந்திருந்தார்கள். தமதருமை புதல்வரை அறுத்துப் பலியிடுவதாகக் கனவு கண்டார்கள். அடுத்த நாளிரவும் மூன்றும் நாளிரவும் அவ்வாறே கனவு கண்டார்கள். மூன்றாவது முறை தம்மக்களுள் ஒருவரை இறைவனுக்குப் பலியிட்டு அர்ப்பணிப்பதாகச் சூளுரைத்ததும் நினைவிற்கு வந்தது. ஆதலின் விடிந்ததும் கையில் கயிறும் வாளும் எடுத்துக்கொண்டு தனயரையும் அழைத்துக் கொண்டு சென்றார்கள். இருமலைகளுக்கிடையில் உள்ள பள்ளத்தாக்கிற்கு வந்ததும் இறைவன் கட்டளையை மைந்தரிடம் இயம்பினார்கள். இறைவன் ஆணையை நிறைவேற்றும்படி மைந்தரும் மகிழ்வுடன் வேண்டினார்கள். இப்ராஹீம் தாயாரிடமும் தனயரிடமும் தந்தையாரிடமும் தனது தடுப்பு வேலையைச் செய்ய முயன்றான், முடியவில்லை. இறுதியில் இறையாணையை நிறைவேற்ற உறுதியுடன் முற்பட்டார்கள். பெற்ற மகனைக் கூர்மையான கத்தியால் வலிமையை யெல்லாம் சேர்த்து அறுத்தார்கள். ஆனால் அறுபடவில்லை. 'இபுறாஹீமே! நீர் கண்ட கனவை மெய்ப்பித்தீர், நிச்சயமாக நாம் நன்மை செய்வோர்க்கு இவ்வாறே கூலி கொடுப்போம்; நிச்சயமாக இது மகத்தான சோதனையாகும். அருகே இருக்கும் ஆட்டை அறுப்பீராக என இறைவன் அறிவித்தான். இதனை நிறைவேற்றி மகிழ்ந்தார்கள். இத்தியாக நிகழ்ச்சியை நினைவு கூரும் வகையிலே ஆண்டு தோறும் கொண்டாடுவதே ஹஜ்ஜுப் பெருநாள்.

இலக்கணக் குறிப்பு

முறை ஒழுங்கை — உம்மைத் தொகை ஒரு பொருள் பன்மொழித் தொடராகவும் கொள்ளவும், வழங்கு — முன்னிலை ஏவல் வினைமுற்று, வைவசி — உரிச் சொற்றொடர், புவிபிறந்த

— ஏழாம் வேற்றுமைத் தொகை, மறி கொடுத்து — இரண்டாம் வேற்றுமைத் தொகை, வலுகொண்டு — வலிகொண்டென்பதை இவ்வாறு ஆசிரியர் கூறினர், இரண்டாம் வேற்றுமைத் தொகை

9. வரத்தி லுயர்ந்த வையமதில்
வானோர் மனுவோர் வாழ்த்திடவே
மறைதேர் நபியாம் யகூபு
மகிழ்வாய்ப் பெற்ற முலைகளிலே

தரத்தில் வலிய வீரமொடு
சாந்த குணமும் பேரறிவும்
தவறுப் பொறுமை வாசகமுந்
தணியாத் தருமமும் பொருந்திடவும்

புரத்தில் வனப்பு பூத்துவொளி
பொங்கிச் சொரிய யூசுபைப்
புகழாய்ப் படைத்தே யம்புலிபோல்
பொலிவாயீ வளர்த்து வருநாளில்

சுரத்திற் கிணற்றிற் றள்ளிடவே
துன்ப மணுகாக் காத்தோனே
சோதி நபியைக் காத்தருள்வாய்
துய்ய பெரிய கோமானே! (6)

பதவுரை

துய்ய பெரிய கோமானே — தூய்மையான பெருமைக் குரிய அரசனே! வரத்தில் உயர்ந்த வையமதில் — வரங்களால் உயர்ந்த உலகத்தில், வானோர் மனுவோர் வாழ்த்திடவே — அமரர்களும் மனிதர்களும் வாழ்த்திட, மறைதேர் நபியாம் யகூபு — வேதத்தில் தேர்ச்சி பெற்ற நபியாகிய யகூபு (அலை) அவர்கள் மகிழ்வாய்ப் பெற்ற முலைகளிலே — மகிழ்வுடன் பெற்றெடுத்த புதல்வர்களிலே, தரத்தில் வலிய வீரமொடு — தரமான வலிமை பொருந்திய வீரத்தோடு, சாந்த குணமும் பேரறிவும் — அமைதியான குணமும் நிரம்பிய அறிவும், தவறுப் பொறுமை வாசகமும் — வழுவாத பொறுமையும் கல்வியும், தணியாத் தருமமும் பொருந்திடவும் — தளராத தருமமும் பொருந்தவும், புரத்தில் வனப்புப் பூத்து — உலகில் அழகு மலர்ந்து, ஒளி பொங்கிச் சொரிய — ஒளி பொங்கிச் சிந்த, யூசுபை — யூசுப் (அலை) அவர்களை, புகழாய்ப் படைத்து — புகழ் மயமாய்ப் படைத்து, அம்புலி போல் பொலிவாய் வளர்த்து வருநாளில் — வளர்மதி போல் வனப்புடன் வளர்த்து வருங்காலத்தில், சுரத்தில் கிணற்றில் தள்ளிடவே — பாலை வன வழியில் கிணற்றில் அவர் தம் சோதரர்கள் தள்ளிவிடவும், துன்ப மணுகாக் காத்தவனே — அவர்க்குத் துன்ப மேதுமணுகாமல் காத்தவனே, சோதி நபியைக் காத்தருள்வாய் — ஒளி வீசும் நபிகள் நாயகத்தைக் காத்து அருள் புரிவாயாக!

தெளிவுரை

சூரய்மையான பெருமைக்குரிய அரசனே! வரங்களால் உயர்ந்த உலகத்தில் அமரர்களும் மனிதர்களும் வாழ்வு பெற்றிட, வேதத்தில் தேர்ச்சி பெற்ற நபியாகிய யகூபு (அலை) அவர்கள் மகிழ்வுடன் பெற்ற புதல்வர்களிலே, தரமான வலிமை பொருந்திய வீரத்தோடு, அமைதியான குணமும், நிரம்பிய அறிவும் வழுவாத பொறுமையும், கல்வியும், தளராத தருமமும் பொருந்தவும், உலகில் அழகு மலர்ந்து ஒளிபொங்கிச் சிறந்த யூசுபு (அலை) அவர்களைப் புகழ் மயமாய்ப் படைத்து வளர் மதிபோல் வனப்புடன் வளர்த்து வரும் காலத்தில் பாலை வன வழியில் கிணற்றில் அவர் தம் சோதரர்கள் தள்ளி விடவும், அவருக்குத் துன்பமேது மணுகாமல் காத்தவனே! ஒளி வீசும் நபிகள் நாயகத்தைக் காத்து அருள் புரிவாயாக!

விளக்கவுரை

யாக்கூபு நபி: நபி இஸ்ஹாக் (அலை) அவர்களின் புதல்வர். இவருக்கு நான்கு மனைவி மூலம் பன்னிரண்டு குழந்தைகள் பிறந்தனர். இவருள் ஒருவரே நபி யூசுப் (அலை) அவர்கள். இவரின் நற்குணத்தால் ஈஸ் எனும் இவருடைய சகோதரரும் பகை மறந்து நேசம் கொண்டார். பொறுமையுடன் வழிகாட்டிய பெருமைக்குரியவர்

யூசுப் (அலை) கிணற்றில் தள்ளப்பட்ட செய்தி

நபி யூசுப் (அலை) அவர்கள் நபி யாக்கூப் (அலை) அவர்களின் பன்னிரு புதல்வர்களில் ஒருவர். இரு புதல்வரைப் பயந்து விட்டுக் கள்ளமான இவ்வையமனைவியார்க்குப் பிறந்தவராவார். மிகவும் அழகானவர். தாயில்லாப் பிள்ளைகள் இருவர் மீதும் குறிப்பாகச் சிறுவர் யூசுப் மீது தந்தை மிகவும் அன்பாயிருந்தார். ஏனைய பதின்மருக்குப் பொறுமை மிகுந்தது. சிறுவர் யூசுபைக் கொன்றுவிடத் திட்டமிட்டனர். தந்தையிடம் நயவஞ்சகமாகப் பேசி அவரின் விருப்பத்திற்கு மாறுகத் தம்பியை ஆடு மேய்ப்பதாகக் காட்டிற்கு அழைத்துச் சென்று, கொல்வதற்குச் சூழும் போது சோதரர்கள் ஒருவரைக் கொலை செய்வதைத் தடுக்கவே அக் காட்டிலுள்ள பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டுச் சென்றனர். சிறுவர் யூசுபின் உடையை ஆட்டு இரத்தத்தில் தோய்த்துக் கொண்டு போய்த் தந்தையிடம் காண்பித்து ஓநாய் கொன்று விட்டதாகக் கூறினர். ஆடை கிழியாதிருப்பதைக் கண்டு தம் தீய புதல்வர்களின் கொடிய செயலை உணர்ந்து வருந்தினார்.

தரத்தில் வலிய வீரம்

தரத்தில் உயர்ந்த வலிமை மிகுந்த வீரம். இவர்தம் பேரழகில் வயப்பட்ட எகிப்து நாட்டு அமைச்சரின் மனைவி

ஸுலைஹா அவரைக்கூடி இன்புறப் பெருமுயற்சி செய்த போதும் பிறன் மனை விரும்பாத பேராண்மையுடன் விளங்கினார்கள். மன இச்சையை அடக்குவதை வள்ளுவரும் பிறன்மனை நோக்காப் பேராண்மை என்றார்.

பேரறிவு

பலதுறை அறிவுகனவு நாற் புலமை, எதிர்காலத்தில் நிகழக் கூடிய கொடிய பஞ்சத்தின் முன்னரே அறிந்து, அதற்கான தானியங்களைச் சேகரித்து வைத்து நாட்டு மக்களைக் காப்பாற்றிய எதிரதாக் காக்கும் அறிவு, பஞ்சத்தில் வாடி வந்து தானியம் பெற்றுச் சென்ற தம்சகோதரரை மீண்டும் வரவழைப்பதற்குச் செய்த சூழ்ச்சி.

தவறுப் பொறுமை

சகோதரர்கள் கிணற்றில் தள்ளிய போதும் நியாயமற்ற முறையில் எகிப்து நாட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட போதும், தீங்கு செய்த தம் சகோதரர்கள் பஞ்ச காலத்தில் தம்மிடம் உதவிக்கு வந்த போதும் பொறுமையை விடாது போற்றினார்.

தனியாத் தருமம்

ஏழாண்டுகள் கொடிய பஞ்சம் நாட்புல் நிலவிய போது சேகரித்து வைத்திருந்த உளைவுப் பொருள்களை மக்களுக்கு வழங்கினார். தம்மைப்பெரிதும் துன்புறுத்திய சகோதரர்களுக்கும் பேருதவி புரிந்தார்.

புரத்தில் வனப்பு

புரம் என்பது புரக்கப்படும் இடம், இங்கு இறைவனுல் புரக் கப்படும் உலகம். யூசுப் (அலை) நபிமார்களில் மிகவும் அழகு வாய்ந்தவர்.

10. பொறுமை மிகுந்த புவிமாது
புனித முடனே புடையைப் போற்
புனைந்த திரைவா ருதியிடத்திற்
பொறிவிட் டெழுந்து குதித்திடுங்காற்

சூறுமை யணுகா மீன்கூத்துக்
குணமாய் விழுங்க வதைத் தொடர்ந்தோர்
குன்றி னிணைநான் மீன்விழுங்கிக்
குலவ ஐயெட்டெல் வரைக்குஞ்

சிறுமை யணுகா திருந்திடவுந்
திரை மீன் வெளியே கக்கிடவும்
சேத மணுகா மற்காத்துச்
செங்கோல் செலுத்த யூனுசுவை

நறுமை பெறவே வைத்தோனே
நவமா யுலகில் வந்துதித்த
நபிகட் கரசர் முகம்மதுவை
நயமாய்க் காப்பாய் நாயகனே. (7)

பதவுரை

நாயகனே — இறைவனே!, பொறுமை மிகுந்த புவிமாது — பொறுமை மிகுந்த நிலமகள், புனிதம் உடனே புடைவை போல் புனைந்த திரை வாருதி இடத்தில் — தூய்மையுடன் சேலையைப் போல் உடுத்திய அலைகள் பொருந்திய கடலின் கண், பொறி விட்டெழுந்து குதித்திடுங்கால் — கப்பலை விட்டு எழுந்து குதித்த பொழுது, குறுமை யணுகா மீன் கூத்து — பெரிய கூத்து என்னும் மீன், குணமாய் விழுங்க — கடித்துச் சிதைக்காமல் முழுமையாக விழுங்க, அதைத் தொடர்ந்து குன்றின் இணை நான் மீன விழுங்கிக் குலவ—அந்தக் கூத்து என்னும் மீனைத் தொடர்ந்து மலைக்கு இணையான மிகப் பெரிய நூன் என்னும் மீன் விழுங்கிக் கடலில் உலவ, ஐ எட்டு எல் வரைக்கும் — நாற்பது நாள் வரைக்கும், சிறுமை யணுகாது இருந்திடவும் — தீமை ஏதும் நெருங்காது மீனின் வயிற்றில் தங்கியிருத்ததன் பின்னர், திரை மீன் வெளியே கக்கிடவும் — கடல் மீன் அவரை வெளியில் கக்கவும், சேதம் அணுகாமல் காத்து — சிதைவுகள் நெருங்காமல் காப்பாற்றி, செங்கோல் செலுத்த யூனுசுவை — செங்கோல் செலுத்தும்படி யூனுசு (அலை) அவர்களை, நறுமை பெறவே வைத்தோனே — மீன் வயிற்றில் இருந்தமையால் உண்டான புலால் நாற்றத்தைப் போக்கி நறுமணம் வீசும்படி செய்தவனே (அதுபோல்), நவமாய் உலகில் வந்து உதித்த நபிகட்கரசர் முகம்மதுவை— புதுமையான பூமியில் வந்து தோன்றிய நபிகளுக்கு நாயகமாகிய முகம்மது (ஸல்) அவர்களை, நயமாய்க் காப்பாய் — மேன்மையாகக் காத்தருள்வாய்

தெளிவுரை

இறைவனே! பொறுமை மிகுந்த நிலமகள், தூய்மையுடன் சேலையைப்போல் உடுத்திய அலைகள் பொருந்திய கடலின்கண் கப்பலை விட்டு எழுந்து குதித்த பொழுது பெரிய கூத்து என்னும் மீன் கடித்துச் சிதைக்காமல் முழுமையாக விழுங்க, அந்தக் கூத்து என்னும் மீனைத் தொடர்ந்து மலைக்கு இணையான மிகப் பெரிய நூன் என்னும் மீன் விழுங்கிக் கடலில் உலவ நாற்பது நாள் வரைக்கும் தீமை ஏதும் நெருங்காது மீனின் வயிற்றில் தங்கியிருத்ததன் பின்

னர், கடல் மீன் அவரை வெளியில் கக்கவும், சிதைவுகள் நெருங் காமல் காப்பாற்றிச் செங்கோல் செலுத்தும்படி யூனுசு (அலை) அவர்களை, மீன் வயிற்றில் இருந்தமையால் உண்டான புலால் நாற்றத்தைப் போக்கி நறுமணம் வீசும்படிச் செய்தவனே, புது மையாகப் பூமியில் வந்து தோன்றிய நபிகளுக்கு நாயகமாகிய முகம்மது (ஸல்) அவர்களை மேன்மையுடன் காத்தருள் வாயாக!

விளக்கவுரை

யூனுஸ் நபி; மவுத்தா என்பாரின் மகனார். நீனவா எனும் நகரத்து மக்களுக்கு நல்வழி காட்டும் பொருட்டு நபியாக அனுப் பப்பட்டார். 30 ஆண்டுகள் சன்மார்க்கப் பிரச்சாரம் செய்தார். அறியாமையில் ஆழ்ந்திருந்த அந்நகரத்து மக்கள் அவருக்குச் சொல்ல வொண்ணாத் தொல்லைகளைக் கொடுத்தனர். அடித்த னர், காலில் கயிறு கட்டி இழுத்துச் சென்று குப்பையில் தள்ளி னர். எவரும் திருந்தவில்லை. ஆதலின் கொடுமைக்காரர் அழியும் பொருட்டு நெருப்பு மழை பொழியச் செய்யும்படி இறைவனிடம் வேண்டினர். இறைவன் பொறுமை குறைந்த நபியின் வேண்டு தலை விருப்பமின்றி நிறை வேற்ற முற்பட்டான். நபி வேறிடம் சென்றார். நெருப்பு மழை பொழியத் தொடங்கியதும் மக்கள் மனம் மாறினர். யூனுஸ் நபியைப் போற்றினர். அவரைக் காண விரும்பினர். நீனவா நிலையறியாமல் மலைமையற்றுத் திரிந்த நபி ஒரு கப்பலில் ஏறிச் செல்ல விரும்பினர். அவர் ஏறியதும் கப்பல் செல்லாமல் நின்று விட்டது. ஆதலின் அதிலிருந்து கட லில் குதித்தார். திறந்த வாயுடன் திரிந்த நூன் எனும் மீன் நபியை விழுங்கி விட்டது. நாற்பது நாட்கள் மீன் வயிற்றிலிருந்து பின்னர் கரையில் வெளிப் போந்தார். மான் பால் கொடுத்தது. இறைவனுல் நீனவா மக்களின் உண்மை நிலை உணர்த்தப்பட்டு அங்குச் செல்லும் போது பிரிந்த மனைவியையும் இழந்த இருபுதல் வரையும் பெற்று நீனவா நகரில் மகிழ்ந்திருந்தார்.

இலக்கண குறிப்பு

புடையைப் போல்: (புடை என்பது பக்கம் பக்கங்களில் அணியப் பெறுவதான ஆடைக்கு ஆகிவந்ததால்) இடவாகு பெயர். திரைவாருதி: (திரையை உடைய வாருதி) இரண் டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. பொறிவிட்டெழுந்து: (பொறியை விட்டெழுந்து) இரண்டாம் வேற்றுமைத் தொகை. அணுகா மீன்: (அணுகாத மீன், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். குலவ—செயவென் வாய் பாட்டு வினையெச்சம். திரை—இங்கு கடலைக் குறித்தலில் சினை யாகு பெயர். திரை மீன்—(திரைக் கண் வாழும் மீன்) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. செங்கோல்—அடையடுத்த ஆகுபெயர்.

11. மண்ணுசை யின்றியுயர் பேரறி வினுசையில்
வலுக் கொண்ட வானோர்களும்
மாறுமல் நபிமார்க ளாதினர் பாலிலே
மாராயம் வந்தோதவும்

பெண்ணுசை யற்றபெரி யோர்களு மும்மலம்
பேணி வரு முதியோர்களும்
பெருமையாய்ப் பலநாளின் முன்பு முன்பாகவே
பிழையின்றி மொழியோதவும்

பண்ணுசை நற்றபல பாவலர் நாவலர்
பழுதற்ற பதியோர்களும்
பணிகலைகள் வகைவகைய ணிகொண்ட கூறுலீன்
பாவையர்கள் மடவார்களுங்

கண்ணுசை களிகொள்ள பூவினிற் காரணம்
காண்பிக்க வந்த மகவே
கனகமுடி யப்துல்லா கண்மணி முகம்மதைக்
காவலாயி றைகாக்கவே (8)

பதவுரை

மண்ணுசை யின்றி உயர் பேரறிவின் ஆசையில் வலுக் கொண்ட வானோர்களும் — பொருள் மீது பற்றின்றி உயர்ந்த பெருமை சான்ற அறிவினில் கொள்ளும் ஆசையில் உறுதி கொண்ட வானவர்களும், மாறுமல் நபிமார்களும் ஆதினர் பாலிலே மாராயம் வந்து ஓதவும் — நபிமார்களும் தொடர்ந்து அன்னை ஆதினுவிடம் நற்செய்தி வந்து கூறவும், பெண்ணுசை யற்ற பெரியோர்களும் மும்முலம் பேணி வரு முதியோர்களும் — பெண் இச்சை நீங்கிய பெரியோர்களும் மும்மலங்களிலி ருந்து தம்மைக் காத்து வரும் முதியவர்களும், பெருமையாய்ப் பல நாளின் முன்பு முன்பாகவே பிழையின்றி மொழி யோத வும் — பெருமையுடன் பல நாட்களுக்கு முன்னரே குற்றம் இன்றி முன்னறிவிப்பு மொழிகளைச் சொல்லவும், பண் ணுசை நற்றபல பாவலர் நாவலர் பழுதற்ற பதியோர்களும் — இன்னிசையில் ஆசை கொண்ட நல்ல பல பாவலர்களும் நாவலர்களும் குற்றமற்ற மண்ணகத்து மக்களும், பணிகலைகள் வகை வகை அணிகொண்ட கூறுலீன் பாவையர்கள் மட வார் களும் — வகைவகையாக அணிகலன்களும், ஆடைகளும் அணிந்த அழகிய கூறுலீன் எனும் மடப்பம் பொருந்திய விண்ண கத்துப் பெண்களும், கண்ணுசை களிகொள்ள — கண்ணுரக் கண்டு மகிழ, பூவினிற் காரணங் காண்பிக்க வந்த மகவே கனகமுடி அப்துல்லா கண்மணி முகம்மதை — உலகில் அற்பு தங்களை நிகழ்த்திக் காட்ட வந்த செல்வராகிய பொன்முடி சூடிய அப்துல்லாவின் கண்ணின் மணி போன்ற முகம்மது (ஸல்) அவர்களை, காவலாய் இறை காக்கவே — இறைவன் நன்கு பாதுகாப்பாஞக.

தெளிவுரை

பொருள் மீது பற்றின்றி உயர்ந்த பெருமை சான்ற அறிவினில் கொள்ளும் ஆசையில் உறுதிகொண்ட வானவர்களும் நபி மார்களும் தொடர்ந்து அன்னை ஆமினாவிடம் நற்செய்தி கூறி வந்தனர். பெண்ணிச்சை நீங்கிய பெரியோர்களும், மும் மலங்களிலிருந்து தம்மைக் காத்துவரும் முதியோர்களும் பெருமையுடன் பல நாட்களுக்கு முன்னரே குற்றமின்றி முன் னறிவிப்பு மொழிகளைச் சொல்லி வந்தனர். இன்னிசையில் ஆசைகொண்ட நல்ல பல பாவலர்களும் நாவலர்களும் குற்ற மற்ற மண்ணகத்து மக்களும் வகைவகையாக அணிகலன்க ளும் ஆடைகளும் அணிந்த கூறுளீன் எனும் மடப்பம் பொருந் திய விண்ணகத்துப் பெண்களும் கண்ணுரசக் கண்டு மகிழும் படியாக உலகில் அற்புதங்களை நிகழ்த்திக் காட்ட வந்த செல் வராகிய பொன்முடி சூடிய அப்துல்லாவின் கண்மணி போன்ற முகம்மது (ஸல்) அவர்களை இறைவன் இனிது பாதுகாப்பானாக.

விளக்கவுரை

மண்ணாசையின்றி உயர் பேரறிவினையிலுல் வலுக்கொண்ட வானோர்:

வானோர் பரம்பொருளைப் பறிறிய பேரறிவில் ஆசை கொண்டவர். இவ்வறிவு மண்ணகத்திலுள்ள பொருளாசை முதலியவற்றை நீக்கினுல் ஏற்படும். எவ்வளவுக்கு இவ்வாசை நீங்குகின்றதோ அவ்வளவுக்கு பேரறிவு உயரும். மண்ணாசை நீங்கி உயரும் பேரறிவின் ஆசையில் உறுதி கொண்டவரே வானவர். இந்நிலையை மண்ணகத்து மக்களும் பற்றலுத்து பற் நற்ற பரம்பொருளின் மீது பற்று வைத்தால் பெறலாம் எனும் குறிப்பும் இத்தொடரில் அமைந்துள்ளது. அன்னை ஆமினை அம் மையார் சூல்கொண்ட போது வானோர் தலைவர்கள் ஜிப்ரயில் (அலை) வந்து நன் மாராயம் கூறினர். நபிமார்களும் கூறினர். இச் செய்தி இப்பாடலில் இனிது கூறப்படுகிறது.

பெண்ணாசையற்ற பெரியோர்:

மண்ணாசையற்றவர் உயர் அறிவில் ஆசை கொண்டவர் எல்லு ஆகிரியர் பொண்ணாசையற்றவர் பெரியோர் எனக் கூறுவது நயம் பயப்பதாகும். தகாத பெண்ணாசை தரும் பெருமையும் கெடுத்தித் தாழ்வும் சிறுமையும் அடையச் செய்துவிடும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றன.

மண்ணுசையையும் பெண்ணுசையையும் மறுத்த ஆசிரியர் 'பண்ணுசை நற்ற பல பாவலர்கள் நாவலர்கள் பழுதற்ற பதியோர்கள்' எனப் பண்ணுசையைப் பாராட்டுகின்றார். இஸ்லாம் இசைக்கு எதிர் எனக் கூறுவர் ஒரு சாரர். எத்திக்கும் போற்றும் தித்திக்கும் திருமறை இசையமைதியுடன் ஓதப்பெறுவதை இங்கு குறிப்பிடலாம்.

இலக்கணக் குறிப்பு

உயர் பேரறிவு — வினைத் தொகை. பேரறிவு — பண்புத் தொகை. முன்பு முன்பு: வகை வகை — அடுக்குத் தொடர்கள்

12. ஆத நபியைப் படைக்கு முனம்
அருமை நபியா யிருந்து திரை
யலைசூழ் புவன மனுவடிவி
லழகாய்ப் பிறந்த நபி பொருட்டால்

சீத சோலை நதி வளஞ்சூழ்
திருநெல் வேலிப் பேட்டைதனில்
சிற்பா புதித்த மேத்தர்மு
கியித்தீன் ராவுத்தர்க்கு மவ்வூர்

நீதி வழுவா முகம்மது நன்
நயினா ராவுத் தர்க்குநனி
நிதியே பெருகி யோங்கிவளர்
நேராயுள்ள வர்த்தகங்கள்

ஆதியோடே கொடுத்தருள்வாய்
அரிய பெரிய புகழுடைய
ஆதி முதலே யிறையவனே
யழியாப் பொருளே அல்லாவே (9)

பதவுரை

ஆதி நபியைப் படைக்குமுனம் அருமை நபியாயிருந்து — ஆதி மனிதராகிய ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்கு முன்பதாகவே அருமை சான்ற நபியாக இருந்து, திரை அலைசூழ் புவன மனுவடிவில் அழகாப் பிறந்த நபி பொருட்டால்—அலை கடல் சூழ்ந்த இவ்வுலகின் கண் மனித வடிவில் அழகுறப் பிறந்த நபி முகம்மது (ஸல்) அவர்களின் பொருட்டாக, சீதசோலை நதி வளஞ்சூழ் திருநெல்வேலிப் பேட்டைதனில் — குளிர்ந்த சோலை

களும் ஆற்று வளமும் சூழ்ந்த திருநெல்வேலி பேட்டையின் கண், சிறப்பாயுதித்த மேத்தர் முகியித்தின் ராவுத்தர்க்கும் அவ்வூர் நீதிவழுவா நன் நயினு ராவுத்தர்க்கும் — சிறப்புடன் தோன்றிய மேத்தர் முகியித்தின் ராவுத்தர் என்பார்க்கும் அவ்வூரில் நீதி வழுவாமல் வாழ்ந்து வரும் நலம் சேர்ந்த முகம் மது நயினார் இராவுத்தர்க்கும், நனி நிதியே பெருகி ஓங்கிவளர் நேராயுள்ள வர்த்தகங்கள் ஆதியோடே கொடுத்தருள்வாய் — மிகுந்த செல்வம் பெருகி ஓங்கி வளர்கின்ற நேர்மையான வணிகத் தொழில்களே முதலிலிருந்தே தந்தருள்வாயாக, அரிய பெரிய புகழுடைய ஆதி முதலே இறையவனே அழியாப் பொருளே அல்லாவே — பிறர் பெறுதற்கரிய பெரிய புகழை உடைய ஆதியும் மூலமும் ஆகிய இறைவனே, அழிவில்லாத பரம் பொருளே அல்லாவே.

தெளிவுரை

பிறர் பெறுதற்கரிய பெரிய புகழை உடைய ஆதியும் மூலமும் ஆகிய இறைவனே, அழிவிலாதபரம் பொருளே, அல்லாவே, ஆதி மனிதராகிய ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்கு முன் பாகவே அருமை சான்ற நபியாக இருந்து அலை கடல் சூழ்ந்த இவ்வுலகின் கண் மனித வடிவில் அழகுறப் பிறந்த நபி முகம் மது (ஸல்) அவர்களின் பொருட்டாகக் குளிர்ந்த சோலைகளும் ஆற்று வளமும் சூழ்ந்த திருநெல்வேலிப் பேட்டையின் கண் சிறப்புடன் தோன்றிய மேத்தர் முகியித்தின் இராவுத்தர் என் பார்க்கும் அவ்வூரில் நீதி வழுவாமல் வாழ்ந்து வரும் நலம் சேர்ந்த முகம்மது நயினார் இராவுத்தர்க்கும் மிகுந்த செல்வம் பெருகி ஓங்கி வளர்கின்ற நேர்மையான வணிகத் தொழில்களே முதலிலிருந்தே தந்தருள்வாயாக.

விளக்கவுரை

புகழனைத்தும் இறைவனுக்கே என்பது இஸ்லாமிய சித்தாந்தம். இதனை அரிய பெரிய புகழுடையோன் எனும் தொடரால் குறிப்பிடுகின்றார்.

இறைவன் உலகங்களும் தோன்றுவதற்கு முன்னிலிருப்பவன். அனைத்தும் தோன்றி இயங்குவதற்குக் காரணமாக இருப்பவன். அழியும் இயல்புடைய உலகில் அழியாது இருக்கும் மெய்ப் பொருளாக இறைவன் விளங்குகின்றான். இதனை ஆதி முதலே இறையவனே அழியாப் பொருளே என்பதால் குறிப்பிடுகின்றார்.

இலக்கணக் குறிப்பு

திரை அலை சூழ் —ஆகுபெயர், சூழ் புவனம் — வினைத்தொகை, மனுவடிவில்— (மனுவினது வடிவில்) 6ம் வேற்றுமைத்தொகை. அழகாய் பிறந்த — அழகாகப் பிறந்த என்பதன் தொகுத்தல் விகாரம், வழுவா முகம்மது — ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம், நனிநதியே! —உரிச் சொற்றொடர், அழியாப் பொருளே — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

13. தண்மணி கொழிக்கு மலைகடல் சூழ்ந்த
தரையெலாந் தீனெறி நடத்த
வண்மணி யாக வுதித்தநந் நபிமேல்
வரிசையின் கனிமிக மிகவும்

விண்மணிப் பிரவை யனைய பாச்சொல்லி
விண்டிடுங் கவிஞர்முன் மினிட்டான்
கண்மணிப் பிரவை போலுயான் பிள்ளைக்
கவிமழை சொரிந்த னனன்றே.

பதவுரை

தண்மணி கொழிக்கும் அலைகடல் சூழ்ந்த தரையெலாம் தீன் நெறி நடத்த — குளிர்ச்சி பொருந்திய மணிகளை ஒதுக்கும் அலைகடல் சூழ்ந்த உலகமெங்கும் இஸ்லாத்தைப் பரப்பி நன் னெறியில் நடத்தும் பொருட்டு. விண்மணியாக உதித்த நந்நபி மேல் — வளந்திகழும் மணியாகத் தோன்றிய நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரில், வரிசை இன்கவி மிகமிகவும் விண் மணிப் பிரபை யனைய பாச்சொல்லி — சிறந்த இனிய கவி நலம் மிகுந்த விண்ணகத்து மணியாகிய சூரியன் ஒளிபோன்ற மிகுதியான பாக்களைப்பாடி, விண்டிடும் கவிமுன் — விளக்கிடும் கவிஞரின் முன்பு, மினிட்டான் கண்மணிப் பிரபை போன்ற — மினிட்டான் பூச்சியினது கண்மணியின் ஒளிபோலும், யான் பிள்ளைக் கவிமழை சொரிந்தனன் அன்றே — நான் பிள் ளைத் தமிழ்ப் பாமாலை மொழிந்தனன்.

தெளிவுரை

குளிர்ந்த ஒளி திகழும் மணிகளை ஒதுக்கும் அலைகடல் சூழ்ந்த இவ்வுலகமெங்கும் இஸ்லாம் பரவச் செய்து செந்நெறியில் சொத்தினை நடத்தும் பொருட்டு வளந்திகழும் மணியாகவள்ளல் நபி (ஸல்) தோன்றினார்கள். கவித் திறம் மிகுந்த கவிஞர்கள் நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரில் சிறந்த இனிய கவிநலம் கனிந்து மிகுந்த விண்ணகத்து மணியாகச் சூரியனின் ஒளி போன்ற பாக்களைப் பாடி விளக்குவார்கள். இவ்வித்தகக் கவிஞர்களுக்கு முன் நான் மினிட்டான் பூச்சியின் கண்மணியி னது ஒளியைப் போன்ற பிள்ளைத் தமிழ்ப் பாமாலை மொழிந்த னன்.

விளக்கவுரை

இறுதியில் வந்துள்ள அன்று, ஏ என்பவை அசைச் சொற்கள். அல்லது 'நன்றே' என அமைத்து தனது சிறுமையினை வியந்து கூறுவதாகவும் கொள்ளலாம். நன்று 'ஏ' எனக் கொண்டு நன் முகப் பாடியுள்ளேன் எனும் உணர்ச்சி தோன்றுவதாகவும் கொள்ளலாம். மிளிட்டான்—மின்மினிப்பூச்சி

இலக்கணக் குறிப்பு

தண்மணி — பண்புத் தொகை. அலைகடல் —(அலையை உடைய கடல்) 2ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. எலாம் — எல்லாம் என்பதன் இடைக்குறை. வண் மணி — பண்புத் தொகை. நம் நபி (நம்முடைய நபி) 6ம் வேற்றுமைத தொகை. இன்கவி—பண்புத் தொகை.

(காப்புப் பருவம் முற்றிற்று)

செங்கீரைப் பருவம்

பிள்ளைத் தமிழில் இரண்டாம் பருவமாகும். 5ம் மாதத்தில் நிகழ்வது கூறும். 'கீர்' என்பதற்குச் சொல் எனப் பொருள் கொண்டு பொருள் புரியாத ஒலியை எழுப்பும் பருவத்தைக் குறிக்குமென உரைப்பார் ஒரு சாரார். 'ஆடுக செங்கீரை' என வரும் தொடர்கொண்டு குழந்தை ஒரு காலை மடக்கி ஒரு காலை நிமிர்த்தி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி முகத்தை மேல் நிமிர்த்தி ஆடும் பருவத்தைக் குறிக்குமென இன்னொரு சாரார் கூறுவர். இதனையே சையதுஹனபியா சாகிப் போற்றுகிறார். இருதிறக் கருத்துக்களையும் பொருத்தி அமைப்பாரும் உளர்.

14 மருவுமிகு குங்கும மாலிகையாட மாணிக்க நவரத்தின
மாலையொடு புயமீதிலாடவே யாரண மறவாத
மன மார்பிலே
மரகத பதக்கமணி யாடவே
கிருபைபுறு மைக்கணி னிமையாடவான்
வளர்பிறை நுதற் சுட்டியாடவே
மணமொய்த்த வடிவினிற் சிவாடவே
அருமையொடு பேரறிவை யோது மறை நாவாட
அரத்தமிகு பாதயிதழாடவொன் னுவிபோ லுதவுகர
மாடவே காப்பாட வண்டபகிரண்ட மாட
திருமலர்க் காலணி கொஞ்ச விளையாடுவீர்
செங்கீரை யாடியருளே
திருவொளி விலாசதுரை மகுடாது நாதரே
செங்கீரை யாடியருளே

1

பதவுரை

மருவு மிகும் குங்கும மாலிகையாட — மணம் மிகுந்த குங்குமப் பூமாலை ஆட, மணி மாணிக்க நவரத்தின மாலையொடு புய மீதில் ஆடவே — நீலமணி மாணிக்கம் முதலிய நவமணிகளால்

தொடுத்த மாலைகள் தோள் மீது ஆட, ஆரணம் மறவாத மன மார்பிலே மரகதப் பதக்கமணி ஆடவே — மறையுரை மற வாத உள்ளம் பொருந்திய மார்பிலே மரகதம் பதித்த பதக்கத் தின் மணிகள் ஆட, கிருபையுறு மைக்கண்ணின் இமையாட — அருள் பொழியும் மை தீட்டிய கண்களின் இமைகள் ஆட, வான் வளர் பிறை நுதற் சுட்டி ஆடவே — வானகத்து வளரும் பிறை போன்ற நெற்றியில் சுட்டியெனும் ஆபரணம் ஆட, மணம் மொய்த்த வடிவினில் கசிவாட — மணங் கமழும் திரு மேனியில் வியர்வை சிந்த, அருமையொடு பேரறிவை ஒதும் மறை நாவு ஆட — அருமையுடன் பெருமை பொருந்திய ஞானத்தை உணர்த்தும் மறைநாவின் கண் ஆட, அரத்தம் இணை இதழ் ஆட — பவளம் போன்ற இரு அதரங்களும் ஆட, பொன்னெழில் போல் உதவு கரம் ஆடவே — பொன் மழை போல் வழங்கும் கரங்கள் ஆட, காப்பாட — அக் கரங்களில் அணிந்துள்ள காப்புக்கள் ஆட, அண்ட பகிரண்டம் ஆட — உலகமும், உலக வெளியாகிய பேரண்டங்களும் ஆட, திரு மலர்க்கால் அணி கொஞ்ச விளையாடுவீர் — அழகிய மலர் போன்ற காலில் அணி கொஞ்சும் படியாக விளையாடுபவரே, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள்வீராக!, திரு வெள்ளிலான துரை மகுமுது நாதரே — அழகிய ஒளியாலா கிய துரையே! மகுமுது நாதரே!, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள்வீராக!

தெளிவுரை

மணம் மிகுந்த குங்குமப் பூமாலை யாட, நவமணிகளால் தொடுத்த மாலைகள் தோளில் ஆட, மறையுரை மறவாத மனம் கொண்ட மார்பிலே மரகதப் பதக்க மணிகள் ஆட அருள் பொழியும் மைதீட்டிய கண்களின் இமைகள் ஆட, வானகத்து வளர்பிறை போன்ற நெற்றியில் சுட்டிகை ஆட, கத்தூரி மணங் கமழும் திருமேனியில் வியர்வை ஓட, அருமை யுடன் பெருமையுறு ஞானபோதம் ஒதும் மறை நாவில் ஆட, பவளம் போன்ற இரு உதடுகளும் ஆட, பொன் மழை போல் வழங்கும் கைகள் ஆட, அக் கரங்களில் அணிந்துள்ள காப்புக் கள் ஆட, அண்டங்களும் பகிரண்டங்களும் ஆட, அழகிய மலர் போன்ற திருவடிகளில் அணிகள் கொஞ்சியாட விளையாடு பவரே! செங்கீரை ஆடி அருள்வீராக! தெய்வீக ஒளியாலா கிய துரையே! மகுமுது நாதரே! செங்கீரை ஆடி அருள்வீராக!

விளக்கவுரை

மணி மாணிக்க நவரத்தின மாலையொடு புயம் மீதில் ஆடவே — மணி மாலை, மாணிக்க மாலை, நவரத்தின மாலை என மூன்றாகக் கொள்வது பொருட் சிறப்பினைத் தருவதாகும். மணி மாலை — நீல மணியால் ஆகிய அழகிய மாலையைக் குறிக்

கும். மாணிக்கக் கற்களால் மட்டும் தொடுக்கப்பட்ட மாலையை மாணிக்க மாலை குறிக்கும், கோமேதகம், நீலம், பவளம். புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் ஆகிய ஒன்பது மணிகளால் தொடுக்கப்பட்ட மாலையை நவரத்தின மாலை என்பது குறிக்கும்.

ஆரணம் மறவாத மனமார்பு — வேதம் மறவாத மனம் பொருந்திய மார்பு என நாயகக் குழந்தையின் மார்பைக் குறிப்பிட்டுள்ள பொருத்தம் உணர்ந்து மகிழத்தக்கது. திக்கற்ற இவ்வுலகிற்குத் திருநெறி காட்டத் தித்திக்கும் திருமறையைக் கொணர்ந்தார்கள். இத்துடன் முன்னுல் வந்த மூன்று வேதங் களையும் மதித்துப் போற்றியுள்ளார்கள்.

திருவைபுறு மைக்கண் என்றும், பொன்னுலி போல் உதவும் கரம் என்றும் அகிலத்திற்கோர் அருட்கொடையாக வந்து அல்லலுறுவார்க்கு அள்ளி வழங்கிய அண்ணலாரைக் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும். ஈண்டு ''கண்ணிற்கு அணிகலம் கண்ணேட்டம்' எனத் திருக்குறளிலும், ''மாகவான் நிகர் வண்கை மாநாய்க்கன்'' எனச் சிலப்பதிகாரத்திலும் வருவது நினைவு கூரத்தக்கன.

காழ்த்தில் குங்கும மாலிகையாட, தோளில் நவரத்தின மாலையாட, மார்பில் மரகதப் பதக்கமாட, கருனை மொழி சுண்ணிமையாட, நூதற் சுட்டியாட, வடிவினில் கசிவாட, மறை நாவாட, பவள இதழாட, மழைக் கரமாட, சுப்பாட, அண்ட பகிரண்டமாட, மலர்க் காலணி கொஞ்சிட செங்கீரை யாடியருள்க எனறு வேண்டுவது நயம் பயப்பதாகும்.

இலக்கணக் குறிப்பு

குங்குமம் — குங்குமப் பூ ஆகுபெயர், ரத்தினமாலை — இரத்தினங்களால் ஆகிய மாலை மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. ஆடவே — ஆட செயவென் வாய்ப் பாட்டு வினைபெச்சம். 'ஏ' அசைச் சொல். வான் வளர் — வானின் கண் வளர் 7ஆம் வேற்றுமைத் தொகை. வளர்பிறை — வினைத்தொகை. பொன்னுலி — உருவகம். அண்ட பகிரண்டம் — அண்டமும் பகிரண்டமும் உம்மைத் தொகை. துரை மகுடது — துரையாகிய மகுடது பண்புத் தொகை.

15 காலிவிழி கமலமுக கூறுல்கீ னுடவான்
கடவுளர் களித் தாடவே
கலீமறைக்க ரைகண்ட நபிமார்கள் புதல்வர்கள்
காதல்கொண் டுற்றுடவே

ஆவியுறு பைம்பரிக ளேழோடு தேராட
வாதித்த னும்மாடவே
அமுர்தக திராடவே லெளகிஞ்ஞெடு கலமாட்
வறுசிஞ்ஞெடு குறுசாடவே

கோவுலகு சொர்க்கபதி தானுட துஞ்சிடான்
குதுறத்தி லுருவாகிய
குலவுபல சீவசெந் தோடுஜின் மாந்தருங்
கொள்கையாய்க் கொண்டாடவான்

தேவர் நதி நீராடி வந்தமணி வள்ளலே
செங்கீரை யாடியருளே
திருவொள்வி லானதுரை மகுமுது நாதரே
செங்கீரை யாடியருளே 2

பதவுரை

காவிவிழி கமலமுக கூறுல் கீன் ஆட — குவளை மலர் போன்ற விழிகளும் செந்தாமரை மலர் போன்ற முகங்களும் உடைய கூறுலீன் பெண்கள் ஆட, வான் கடவுளர் களித்து ஆட — விண்ணகத்து அமரர் மகிழ்ந்து ஆட, கலீமறைக் கரை கண்ட நபிமார்கள் புதல்வர்கள் காதல் கொண்டு உற்று ஆடவே — கலீநலம் சான்ற மறைகளின் கரைகண்ட நபிமார்களும் அவர் தம் வழித்தோன்றல்களும் விருப்பமுற்று ஆட, ஆவியுறு பைம்பரிகள் ஏழோடு தேராட — அருபியான பசுமையான குதிரைகள் ஏழுடன் தேர் ஆட, ஆதித்தனும் ஆடவே — கதிரவனும் ஆட, அமுர்த கதிர் ஆடவே — அமுதகலீ பொருந்திய வெண்மதி ஆட, லெளகிஞ்ஞெடு கலம் ஆட — லெளகுடன் கலம் ஆட, அறுசிஞ்ஞெடு குறுசாடவே — அறுசிஞ்ஞெடு குறுசு ஆட, கோவுலகு சொர்க்கபதிதான் ஆட — உலகங்களுக்கு அரசாகிய சொர்க்கம் ஆட, துஞ்சிடான் குதுறத்தில் உருவாகிய — அந்த மிலா அல்லாஹ்வின் பேராற்றலில் தோன்றிய, குலவு பல சீவ செந்தோடு ஜின் மாந்தரும் — விளங்கும் சீவராசிகளுடன் ஜின்களும் மானிடரும், கொள்கையாய்க் கொண்டாட — கோட்பாடாகக் கொண்டு மகிழ்ந்தாட, வான் தேவர் நதி நீராடி வந்த வள்ளலே!, — வானகத்துத் தேவர்க்குரிய ஆற்றில் நீராடி வந்த அழகிய வள்ளலே, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள்வீராக!, திருவொள்ளிவில் ஆன துரை மகுமுது நாதரே — தெய்வீக ஒளியில் உருவான துரையே! மகுமுது நாதரே!, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள் வீராக.

தெளிவுரை

குவளைக் கண்களும், செந்தாமரை முகங்களும் கொண்ட கூறுளீன் பெண்களாட, விண்ணகத்து அமரர் மகிழ்ந்தாட, கலைநலஞ்சான்ற மறைகளின் கரைகண்ட நபிகளும் அவர் தம் வழித் தோன்றல்களும் விரும்பியாட, அரும்பமான அழகிய குதிரைகள் ஏழுடன் தேராட, தேரிலிவர்ந்து செல்லும் கதிரவனும் ஆட, அமுதகலை மதியாட, வளைகுடன் கலம் ஆட, அறுசுடன் குறுசு ஆட, அரச உலகாகிய சொர்க்கமும் ஆட, அந்தமில்லா அல்லாஹ்வின் வல்லமையினுல் உருவான சீவராசிகளுடன் ஜின்களும் மானிடரும் கொள்கையாகக் கொண்டாட, வான நதியில் நீராடி வந்த வனப்புமிகு வள்ளலே! செங்கீரை ஆடி அருள்வீராக! தெய்வீக ஒளியில் உருவான துரையே மகுழுது நாதரே! செங்கீரை ஆடி அருள்வீராக!

விளக்கவுரை

ஆலியுறு.... ஆதித்தனும் ஆடவே — இத்தொடரில் உருவ மற்ற ஏழு குதிரைகள் இழுத்துச் செல்லும் ஒற்றைச் சக்கரத் தேரிலிருந்து கதிரவன் உலகை வலம் வருகின்றான் என்னும் பௌராணிகச் செய்தி இடம் பெற்றுள்ளது. இங்கு அழகிய குதிரைகள் ஏழும் தேரும் ஆதவனும் ஆடச் செங்கீரை ஆடியருள வேண்டுகிறார். இஸ்லாம் இவ்வாறு கூறவில்லை. தமிழ்க் கவி பாடும் முஸ்லீம் கவிஞர் தம்மை மறந்து தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பௌராணிக மரபைப் போற்றி விடுகின்றனர்.

லௌகு: படைக்கப்பட்டுள்ள மக்கள் பற்றிய விவரங்கள் எழுதிவைக்கப்பட்டுள்ள பலகை. இதனை லௌஹுல் மஹ்பூல் என்றழைப்பர். கலம்: லௌகில் எழுதுவதற்கு உபயோகப் படும் எழுதுகோல். அறுசு: இறையாசனம். குறுசு: அறுகில் உள்ளது.

நபிகள் நாயகம் பிறந்ததும் ஜிப்ரயீல் (அலை) அள்ளியெடுத்துச் சென்று வானலோகத்து நதியில் நீராட்டி நெய் பூசி மை தீட்டிக் கொண்டுவந்து சேர்த்தார் என்பது சீறாப்புராணத்தில் கூறப் பெறுகின்றது. இச் செய்தி ''வான் தேவர் நதி நீராடி வந்த மணி வள்ளலே'' என்பதில் அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு

காவிவிழி — உவமத் தொகை. கமலமுகம் — உவமத் தொகை. மைம்பரி — பசுமையான பரி பண்புத் தொகை. வான் தேவர் நதி — வானத்தின் கண் உள்ள தேவர் நதி ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

16. அன்னமெனும் புள்வடிவ தாகிகலி மாவையு
மருள்வே டறைந்த வடிவே
அழகான நற்புரு வடிவுகொண் டாதியை
யஞ்சலித் துகந்த வரசே

அன்னிய மெனுங்குயில தாகியுயர் வானினி
லருந்தவம் புரிந்த குருவே
அஞ்சுவகை வர்ணமயி லாகிமனு வேடமா
யானபதி யனுகூலமே

மின்னொளிவுக் கெண்மடங் கொளிவுற்ற பொன்மகுட
மேவுமுயர் சிர மீதிலே
வெய்யகதிர் போல வெழு தாரகை தங்கிட
விறல் பெற்ற செயசெல்வமே

செந்நெல்வள மாருத மக்கநகர் வள்ளலே
செங்கீரை யாடி யருளே
திருவொளிவி லானதுரை மகுமூது நாதரே
செங்கீரை யாடி யருளே

8

பதவுரை

அன்னம் எனும் புள் வடிவது ஆகி — அன்னப் பறவை வடிவில் அமைந்து, கலிமாவையும் அ நளினலோடு அறைந்த வடிவே — கலிமாவை அருளுடன் மொழிந்த திருமேனியே, அழகான நற்புரு வடிவு கொண்டு — (பின்னர்) அழகு பொருந்திய நல்ல புருவினது வடிவில் அமைந்து, ஆதியை அஞ்சலித்து உகந்த அரசே — ஆதியாகிய அல்லாஹுவைத் துதித்து மகிழ்ந்த அரசே, அன்னியம் எனும் குயில் அது ஆகி — அன்னிய புட்டம் என்னும் குயில் வடிவாகி, உயர் வானினில் அரும்தவம் புரிந்த குருவே — உயர்ந்த விண்ணுலகில் செயற்கரிய தவம் செய்த குருவே, அஞ்சுவகை வர்ண மயிலாகி — ஐந்து நிறங்களைக் கொண்ட பஞ்சவர்ண மயிலாகி, மனுவேடம் ஆய் ஆன பதி அனுகூலமே — மானிட வடிவமாய் ஆன இறைவனின் சகாயமே, மின்னொளிவுக்கு எண்மடங்கு ஒளிவுற்ற பொன் மகுடம் — மின்னல் ஒளியின் எட்டு மடங்கு ஒளிபெற்ற பொன்முடி, மேவும் உயர் சிரம் மீதிலே — பொருந்திய உயர்ந்த தலையின் மேலே, வெய்ய கதிர்போல எழு தாரகை தங்கிட — விரும்பும் ஞாயிறு போன்று எழுகின்ற ஒளி தங்க, விறல் பெற்ற செய செல்வமே — வீரம் கொண்ட வெற்றிச் செல்வமே, செந்நெல் மாருத மக்கா நகர் வள்ளலே — செந்நெல் விளைவு மாருத மக்கமா நகரத்து வள்ளலே, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள்வீராக, திரு ஒளியில் ஆனதுரையே மகுமூது நாதரே — தெய்வீக ஒளியால் ஆகிய துரையே மகுமூது நபி நாதரே!, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள்வீராக!

தெளிவுரை

அன்னப் பறவை வடிவிலமைந்து கலிமாவை மொழிந்தரு ளிய திருமேனியே! அழகிய இனிய புரு வடிவாகி ஆதிஇறையை அஞ்சலித்து மகிழ்ந்த அரசே! குயில் வடிவு கொண்டு விண்ணு லகில் அருந்தவம் புரிந்த குருவே! பஞ்சவர்ண மயிலாகி மானிட வேடம் தாங்கிய அல்லாஹ்வின் அருட் கொடையே! பன்னெளி யின் எண் மடங்கு ஒளி பொருந்திய பொன்முடி சூடிய சிரத்தின் மீது ஞாயிறு போன்று எழும் ஒளி திகழும் வீரம் பொருந்திய வெற்றிச் செல்வமே! செந்நெல் வளம் கொழிக்கும் மக்கமா நகர் வள்ளலே! செங்கீரை ஆடி அருள்க! தெய்வீக ஒளியால் ஆகிய துரையே! மகமூது நாயகரே! செங்கீரை ஆடி யருள்க!

விளக்கவுரை

அன்னமெனும்..... அனுகூலமே — இப்பகுதியில் வரும் செய்திகளை முந்திய பருவப் பாடலின் விளக்க உரையில் காண்க. செந்நெல் வளம் மாறுத மக்க நகர் — மக்காவில் நெல் விளை யாது. வறண்ட பாலைவனப் பிரதேசமாகும். பாலையை நெல் விளையும் சோலையாகமாற்றிக் காட்டுகின்றார் ஆசிரியர். நெல்வேலி யைச்சேர்ந்த புலவரல்லவா? இவ்வாறு பாடுவது தமிழ்க் கவிஞர் மரபாகும்.. உமறுப் புலவர் வழியைப் பின்பற்றுகின்றார் கோசல நாட்டைக் கூறவந்த கம்பரும் பொன்னி வளங்கொழிக்கும் சோழவள நாட்டைக் கூறுவது காண்க.

இலக்கணக் குறிப்பு

அருந்தவம் — அருமையாகிய தவம் பண்புத் தொகை. பொன் மகுடம் — பொன்னால் ஆகிய மகுடம் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. எழுதாரகை — வினைத்தொகை.

17. ஆதநபி தலைமுறை யைம்பத்தி யொன்றினி
லழகா யுதித்த வடிவே
அழல் முழுகிடாஇபு ருகீநபி வழிமுறையி
லருள் வரம் பெற்ற கனியே

ஏதுமிட றில்லாத யிசுமாயில் தோத்திரத்
தியல்பாக வருதீபமே
சகைகுண மகலாத அதுநா வெனுங்கோயி
லிருக்கை வந்த நபியே

கோதுகுறை யணுகாத குறைசியின் குலதிலக
கொண்ட மணி குணரத்னமே
கொற்றவபு துல்லாவின் மைந்தரென வாழ்த்தவே
கோவுலகில் வந்த குருவே

சீதமடர் சோலைசெறி மக்கநகர் வள்ளலே
செங்கீரை யாடியருளே
திருவொளி விலானதுரை மகுமூது நாதரே
செங்கீரை யாடியருளே! 4

பதவுரை

ஆதம் நபி தலைமுறை ஐம்பத்து ஒன்றினில் —நபி ஆதம் (அலை) அவர்களின் ஐம்பத்தொன்றும் தலைமுறையில், அழகாய் உதித்த வடிவே — அழகுடன் தோன்றிய திருமேனியே, அழல் முழுகிடா இபுறுகீம் நபி வழிமுறையின் — நம்மது எழுப்பிய நெருப்புக் குழியில் மூழ்கிவிடாத நபி இப்ருகீம் (அலை) பரம்பரையின், அருள் வரம் பெற்ற கனியே —அருளால் வரம் பெற்ற கனியே, ஏதும் இடரில்லாத இசுமாயீல் தோத்திரத்து — எவ்விதத் துன்பமும் இல்லாத நபி இசுமாயீல் (அலை) அவர்களின் இறைஞ்சுதலால், இயல்பாக வரு தீபமே — தடையின்றி இயல்பாக வருகின்ற ஒளி விளக்கே, ஈகைக் குணம் அகலாத — ஈகைப் பண்பு நீங்காத, அதுஞன் எனும் கிளையில் இருள் நீக்க வந்த நபியே— அதுஞன் எனும் பிறவில் அறியாமை இருள் அகற்ற வந்த நபியே, கோது குறை அணுகாத குறைசியின் குலதிலக — குற்றம் குறை நெருங்காத குறைஷ்க் குலத்தின் திலகமே, கொண்ட மணி குணரத்னமே— சிறந்த அழகிய குணரத்தினமே, கொற்ற அபுதுல்லாவின் மைந்தரென வாழ்த்தவே — வெற்றி பொருந்திய அப்துல்லா என்பாரின் புதல்வர் என வாழ்த்திட, கோ உலகில் வந்த குருவே — பெருமை பொருந்திய உலகத்திற்கு வந்த குருவே, சீதம் அடர் சோலை செறி— குளிர்ச்சி மிகுந்த சோலைகள் செறிந்துள்ள, மக்க நகர் வள்ளலே—மக்க மா நகரத்து வள்ளலே, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள்வீராக, திரு ஒளியில் ஆன துரை — தெய்வீக ஒளியால் ஆகிய துரையே, மகுமூது நாதரே — முகம்மது நபி நாதரே, செங்கீரை ஆடி அருளே — செங்கீரை ஆடி அருள்வீராக!

தெளிவுரை

ஆத நபி அவர்களின் ஐம்பத்தொன்றும் தலைமுறையில் அழகுடன் தோன்றிய திருமேனியே! நம்மது எழுப்பிய நெருப்புக் குண்டத்தில் எரிந்து மூழ்கிடாத இப்ராகீம் நபி பரம்பரையின் அருளால் வரம்பெற்ற கனியே! எவ்விதத் துன்பமும் இல்லாத இஸ்மாயீல் நபி அவர்களின் இறைஞ்சுதலால் தடையின்றி இயல்பாக வருகிற ஒளிவிளக்கே! ஈகைப் பண்பு நீங்காத அதுஞன் எனும் கிளையில் இருள் நீக்க வந்த நபியே! குற்றம் குறை

நெருங்காத குறைவிக் குலத்தின் திலகமே! சிறந்த அழகிய குணரத்தினமே! வெற்றி பொருந்திய அப்துல்லா என்பாரின் புதல்வர் எனு வாழ்த்திடப் பெருமை பொருந்திய உலகத்திற்கு வந்த குருவே! குளிர்ச்சி மிகுந்த சோலைகள் செறிந்துள்ள மக்க மா நகரத்து வள்ளலே! செங்கீரை ஆடி அருள்வீராக! தெய்வீக ஒளியால் ஆகிய துரையே! முகம்மது நபி நாதரே! செங்கீரை ஆடி அருள்வீராக!

விளக்கவுரை

அழல் முழுகிடா இபுருகீம் நபி — நம்ரூது அரசன் தானே இறைவன் எனத் தருக்குக் கொண்டான். இப்ருகீம் (அலை) ஆதி அந்த மற்ற முழுமுதற் பொருளை வலியுறுத்தி வந்தார்கள். அதனால் வெகுண்டெழுந்த நம்ரூது ஆழக் குழியில் கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் நபியைத் தூக்கி எறிந்தான். சுடும் நெருப்போ இறைவன் அருளால் குளிர்ந்தது. நபியவர்களும் அக் குளிர்ச்சியில் மகிழ்ந்து மலர்ச்சியுற்றார்கள்.

இசுமாயில் தோத்திரம் — இப்ருகீம் (அலை) மகன் இஸ்மாயில் (அலை) அவர்கள் துணைபுடன் க.ப்பத்துல்லாவைப் புதுப்பித்துக் கட்டி முடித்து இறைவனிடம் எங்களுள் சிறந்த வழித் தோன்றலைத் தோற்றுவித்து அருள்வாயாக என இறைஞ்சினார்கள். அடியவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அல்லாஹ் இசுமாயீல் (அலை) அவர்களின் வழியில் நபிகள் நாயகம் அவர்களைத் தோற்றுவித்து அருளினான், ஆதலின் நபிகள் நாயகம் இஸ்மாயில் (அலை) அவர்களின் தோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பர். வைவசியால் வலுக் கொண்டறுத்தும் (காப்புப் பருவம் 5) இடருறுதிருந்த புதுமையை வியப்பார் ஏதுமிடரில்லாத இசுமாயில்'' என்றார்.

அது னுன் கிளை — நபி இசுமாயில் (அலை) அவளிர்கன் சந்ததியில் நாற்பதாம் தலைமுறையில் அது னுன் எனும் சான்றோர் ஒருவர் இருந்தார். அவருடைய சந்ததிகள் அது னுன் கிளைஞர் என்றழைக்கப்பட்டனர். இக் கிளையிலே தான் நபிகள் நாயகம் (ஸல்) தோன்றினார்கள்.

கொண்ட மணி குணரத்னமே — சிறந்த மணியே குணரத்னமே எனவும் பொருள் கொள்ளலாம்.

இலக்கணக் குறிப்பு

அழல் முழுகிடா — அழலில் முழுகிடா ஏழாம் வேற்றுமைத் தொகை. முழுகிடா இபுருகீம் — முழுகிடாத இபுருகீம் சுறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கனி, தீபம் — உவம ஆகு பெயர்கள். குலதிலகம் — குலத்தினது திலகம் 6ம் வேற்றுமைத் தொகை. கோ உலகு — உவமத் தொகை.

18. குணியக மீறிய தாய்மல ரடியினிற்
குபலென் றபுத்து கானுங்
கோல முகந்தலை கவிழ்ந்து வணங்கிடக்
கொள்கை புரிந்தோரே

துணியக மீறிய வும்பர்க ணபிகளுஞ்
சோபனக் கனவாகத்
துன்பமு மணுகிடா மாதமும் பலதினஞ்
சொல்லிடக் கேட்டோரே

மணியொளி வீசிய பணிகலை சுமந்திடும்
வான்பதி மடவாரு
மருத்துவம் புரிந்திட ஆசியா மரியம்
வந்திடக் கண்டோரே

அணிபதி மக்கத் தபுதுல்லா மகவே
ஆடுக செங்கீரை
அருள்வரம் பெற்ற நபிக்குல நாயக
ஆடுக செங்கீரை 5

பதவுரை

குணியக மீறிய தாய்மலர் அடியினில் — நற்பண்புகளை உடைய நபிகள் நாயகம் கருவாகச் சூலகத்தில் உருவாகி முதிர்ந்து இருந்த பொழுது அன்னை ஆமீனு அவர்களின் மலர் போன்ற திருவடிகளில், குபலென்ற புத்துக் கானும் — குபலாகிய விக் ரகமும், கோலமுகம் தலை கவிழ்ந்து வணங்கிட — அழகிய தமது முகம், தலை ஆகியவற்றைக் கவிழ்ந்து வணங்கும் படி யான, கொள்கை புரிந்தோரே — கோட்பாடு கொண்டவரே, துணியக மீறிய — அகத்தில் உறுதி மீகுந்த, உம்பர்கள் நபி களும் — வானவர்களும் நபிமார்களும், கனவாக — இனிய கனவுகளில், துன்பமும் அணுகிடா மாதமும் — துயரம் அணுகாத திங்கள் தோறும், சோபனம் பலதினம் சொல்லிடக் கேட்டோரே — பல நாட்கள் நல் வாழ்த்துக்களைக் கூறிடக் கேட்டோரே, மணியொளி வீசிய பணிகலை சுமந்திடும் வான் பதி மடவாரும் — ஒளி வீசும் மணிகள் பதித்த அணிகலன்களும் ஆடை வகைகளும் அணிந்த வானலோகத்து மகளிரும், மருத் துவம் புரிந்திட — பேறுகால மருத்துவம் செய்ய, ஆசியா மரி யம் — ஆசியா மரியம் என்பார், வந்திடக் கண்டோரே — வந் திடக் கண்டோரே, அணிபதி மக்கத்து — அழகிய ஊராகிய மக்கமா நகரத்து, அபுதுல்லா மகவே — அபுதுல்லாவின் புதல் வரே, ஆடுக செங்கீரை — செங்கீரை ஆடுவீராக, அருள் வரம் பெற்ற நபிக்குல நாயக — இறைவனது அருளை வரமாகப் பெற்ற நபிகளுக்கு நாயகரே, ஆடுக செங்கீரை — செங்கீரை ஆடுவீராக!

தெளிவுரை

நற் பண்புகளையுடைய தாங்கள் கருவாகச் சூலகத்தில் உருவாகி முதிர்ந்து இருந்த பொழுது அன்னை ஆமினு அவர்களின் மலர் போன்ற திருவடிகளில் குபல்போன்ற விக்ரகங்கள் அழகிய தமது முகம், தலை ஆகியவற்றைக் கவிழ்த்து வணங்கும்படியான கோட்பாடு கொண்டவரே! அகத்தில் உறுதி மிகுந்த வானவர்களும் நபிமார்களும் இனிய கனவுகளில் துயரம் அணுகாதிருக்கத் திங்கள் தோறும் பல நாட்கள் நல் வாழ்த்துக்களைக் கூறிடக் கேட்டோரே, ஒளி வீசும் மணிகள் பதித்த அணிகலன்களும் ஆடை வகைகளும் அணிந்த வானலோகத்து மகளிரும், பேறு கால மருத்துவம் செய்ய ஆசியா மரியம் என்பாரும் வந்திடக் கண்டோரே. அழகிய ஊராகிய மக்கமா நகரத்து அப்துல்லாவின் புதல்வரே செங்கீரை ஆடுவீராக. இறைவனது அருளை வரமாகப் பெற்ற நபிகளுக்கு நாயகரே செங்கீரை ஆடுவீராக.

விளக்கவுரை

குபல் — ஒரு விக்கிரகம் புத்துக்கான் — விக்கிரகங்கள். குணியகம்.... புரிந்தோரே — நபிகள் நாயகம் அன்னை ஆமீனு அவர்களின் சூலகத்தில் இருந்தபோது அன்னை ஆமினு அவர்களின் திருவடிகளில் குறைசிக் குப்பார்களால் வழிபட்டு வந்த விக்ரகங்கள் கவிழ்ந்து வீழ்ந்து வணங்கின என்பது வழிவழியாக வழங்கி வரும் செய்தி.
துணியக மீறிய.... சொல்லிடக் கேட்டோரே — நபிகள் நாயகம் கருவாக உருவாகி வந்த பொழுது மாதந் தோறும் பல நாட்களில் நபி ஆதம் (அலை) முதலிய நபிகளும். இப்ரயீல் (அலை) முதலிய வானோர்களும் அன்னை ஆமினு அவர்களின் வயிற்றில் தோன்றிக் கருவில் வளர்ந்து வரும் நபிகள் நாயகம் குறித்த நற்செய்திகளைக் கூறி வந்தார்கள்.
மணியொளி.... வந்திடக் கண்டோரே — நாயகக் குழந்தை அவனியில் பிறக்கப் போகும் காலத்து அன்னை ஆமீனு அவர்களுக்குப் பேறுகால மருத்துவம் செய்யும் பொருட்டு விண்ணகத்து மகளிரும் ஆசியா மரியமும் ஆமினு அவர்களின் வீட்டிறகு வந்தனர். இதனை நிகழ்ம்படி செய்தோரே எனவும் இவர்களைப் பார்த்தோரே எனவும் பொருள் கொள்ளலாம்.

இலக்கணக குறிப்பு

குணி — பண்பி. அகம் மீறிய — அகத்தின் கண் மீறிய 7ஆம் வேற்றுமைத் தொகை. உம்பர்கள் நபிகளும் — உம்மைத் தொகை. அணுகிடா மாதமும் — ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். வான்பதி மடவார் — வானப்பதியின் கண் உள்ள மடவார் 7ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. ஆடுக — வியங்கோள் வினைமுற்று.

19. அறமணம் வென்றியை யறைந்திட மும்முர
சனுதின மிடிபோல
வறைந்துயர் தோரண வீதி செறிமனே
யணிபதி மக்காவில்

திறமுறும் வடிவினில் வாசனே பேரொளி
திகழ்பெறு கிபுலா நேர்
திசைமுக் சென்னி கிளர்ந்து பணிந்துயர்
செங்கரங் காலதனில்

நிறம்பெற வைத்தே பிறந்திறை போற்றின
நேருள ஆலிமே
நேசமும் பாசமும் வேதமும் போதமு
நெறியுள வெந்நபியே

அறிவகத் தங்கிய அபுதுல்லா மகவே
ஆடுக செங்கீரை
யருள்வரம் பெற்ற நபிக்குல நாயக 6.
ஆடுக செங்கீரை

பதவுரை

அறம் மணம் வென்றியை அறைந்திட — கொடை, திருமணம் வெற்றி ஆகியவற்றைச் சாற்றிட, மும்முரசு அனுதினம் இடி போல அறைந்து — மூன்று முரசங்களும் நாள்தோறும் இடியைப் போன்று முழங்கி, உயர்தோரண வீதி — உயர்ந்த தோரணங்கள் கட்டியுள்ள வீதிகளும், செறிமனே — நெருங்கிய மாளிகைகளும் (கொண்ட), அணிபதி மக்காவில் — அழகிய ஊராகிய மக்கமா நகரில், திறமுறும் வடிவினில் — மேன்மை பொருந்திய வடிவில், வாசனே பேரொளி திகழ்பெறு கிபுலா — நறுமணமும், பெருகிய ஒளியும் விளங்கும் க.'.பத்துல்லா விற்கு, நேர்திசை முகசென்னி கிளர்ந்து பணிந்து — நேர்திசையில் தலையமைத்துப் பணிந்து, உயர் செங்கரம் காலதனில் நிறம் பெற வைத்தே — உயர்ந்த, செவ்விய கரங்களைக் கால்களின் நடுவில் பொருந்த வைத்தே, பிறந்து — தோன்றி, இறை போற்றின — இறைவனைத் துதித்த, நேருள ஆலிமே — நேர்மையுள்ள ஆலிமே, நேசமும் பாசமும் வேதமும் போதமும் நெறியுள — அன்பும் ஆர்வமும் வேதமும் ஞானமும் நன்னெறியும் உள்ள, எம் நபியே, அறிவு அகம் தங்கிய அப்துல்லா மகவே — அகத்தில் அறிவு பொருந்தியுள்ள அப்துல்லாவின் புதல்வரே, ஆடுக செங்கீரை — செங்கீரை ஆடுவீராக, அருள் வரம் பெற்ற நபிக்குல நாயக — இறைவனருள் வரமாகப் பெற்ற நபிகளுக்கு நாயகரே ஆடுக, செங்கீரை — செங்கீரை ஆடுவீராக.

தெளிவுரை

கொடை, திருமணம், வெற்றி, ஆகியவற்றை அறிவிக்கும் மும் முரசங்களும் நாள்தோறும் இடி போன்று முழங்கும் வீதிகளில் உயர்ந்த தோரணங்கள் கட்டித் தொங்கும் மாளிகைகள் நெருங் கியுள்ளன, இவ்வாறு அழகு பொருந்திய மக்கமா நகரில் மேன்மை பொருந்திய வடிவில் நறுமணமும் பெருகிய ஒளி யும் திகழும் க.'.பத்துல்லாவிற்கு நேர் திசையில் தலை சாய்த் துப் பணிந்து உயர்ந்த செவ்விய கரம் காலில் பொருந்திப் பிறந்தீர்கள். பிறக்கும் போதே இறைவனைத் துதித்த நேரிய ஆலீமே. நேசமும் பாசமும் வேதமும் ஞானமும் நன்னெறியும் கொண்ட எம்முடைய நபியே. நெஞ்சில் அறிவு நிரம்பியுள்ள அப்துல்லாவின் அருமைப் புதல்வரே, ஆடுக செங்கீரை. அருள் வரம் பெற்ற நபிகளுக்கு நாயகரே ஆடுக செங்கீரை.

விளக்கவுகரை

திறமுறும்... ஆலிமே — நபிகள் நாயகம் பிறந்தபோது ஸஜ்தா நிலையில் காணப்பட்டார்கள். இந்நிலையினை வர்ணித்துப் பிறக்கும்போதே இறைவனைப் போற்றிடும் இயல்பு கொண்ட கற்றறிவாளர் எனப் பாராட்டுகின்றார் ஆசிரியர். ஆலிம் — கற்றறிந்தாரைக் குறிக்கும் அறபுச் சொல். கல்வி எனும் பொருளுள்ள இல்ம் எனும் மூலத்திலிருந்து பிறந்தது. ஆசிரி யர், பெற்றோர், உற்றோரால் கற்பிக்கப்பட்டு அறிந்த பின்னர் தான் இறைவனைத் தொழுவது இயற்கை. ஆனால் நபிகள் நாய கம் அன்னையாரின் கருவறைத் திலிருந்து தோன்றும்போதே இறை வனை வழிபடும் இனிய நிலையிலே காணப்பெற்றார்கள். ஆதலின் இவர்களைப் பிறந்ததும் இறை போற்றிய நேருள ஆலிமே என் கின்றார். கற்று ஆலிமாக அமையாமல் பிறக்கும்போதே நேராக ஆலிமாக அமைந்தார்கள் என்பது உம்மி நபி என்பதன் பொருளை உணர்த்துகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களி டம் உறைந்து உயர்வு பெற்ற நேசமும் பாசமும் வேதமும் போதமும் நெறியும் இயல்பாக அமைந்து இன்னிசை எழுப்பு கின்றன.

இலக்கணக் குறிப்பு

வென்றி — வெற்றி என்பதன் மெலித்தல் விகாரம். மும்முரசு — பண்புத் தொகை. செங்கரம் — செம்மை—கரம்— பண்புத் தொகை. ஆடுக — வியங்கோள்.

20. சோதி மீன் தங்குரை மீதினில் நெய்யொழுகச்
சுடர்விழியிற் கருமையுடன்
சுன்னத்துஞ் செய்யலாய்க் கொப்புளுங் கொய்யலாய்த்
துடக்கின்றி கஸ்தூரியும்

வீதிமீன சுற்றெலா மணம் பொங்கப் பாரெலாம்
விரிந்தொளிவு வானெட்டவு
மேலான திங்கள் றபீ வுலௌவல் மாதமில்
விளங்கு தின மீராறுதான்

தேதிமதி ராவினில் சிலேயுறு புத்துகுலஞ்
சிரங்கவிழ் இபுலீசொடு
சிங்கா சனநவ சேருவான் கோட்டையுஞ்
செஞ்சுடரு நூந்தழியவே

ஆதிநூல் வெளியேற்ற பூவிற் பிறந்த நபி
யாடியருள் செங்கீரையே
அறுசேறி வசனித்து வந்த மகுமூதரே
யாடியருள் செங்கீரையே

பதவுரை

சோதி மீன் தங்கு முரம் மீதினில் நெய்யொழுக— ஒளி பொருந்திய விண் மீன் தங்கும் தலைமீது நெய் பூசி, சுடர் விழியில் கருமையுடன் — ஒளி திகழும் விழிகளில் கரிய மை தீட்டப் பெற்று, சுன்னத்தும் செய்யலாய் — விருத்த சேதனமும் செய்யப் பெற்று, கொப்புளுங் கொய்யலாய் — கொப்புளுங் கொய்யப் பெற்று, துடக்கின்றி — தீட்டின்றித் தூய்மையாக, வீதி மீன சுற்றெலாம் — வீதிகளிலும் வீடுகளிலும் சுற்றுப் புறங்களிலுமெல்லாம், மணம் பொங்க — நறுமணம் கமழ, பாரெலாம் விரிந்து ஒளிவு-வான் எட்டவும் — புவியெல்லாம் பரந்து ஒளி வானளாவவும், மேலான திங்கள் றபீஉல் அவ்வல் மாதமில் — மேன்மை பொருந்திய மாதமாகிய றபீஉல் அவ்வலில் விளங்கு தினம் ஈராறு தான் தேதி — விளங்குகின்ற 12 ஆம் நாளில், மதிராவினில் — நிலாவொளி வீசும் இரவினில், சிலேயுறு புத்துகுலஞ் சிரங்கவிழ் — சிலை உருப்பெற்ற புத்துகள் தலை கவிழவும், இபுலீசொடு — இபுலீசுடன், சிங்காசனம் நவசேருவான் கோட்டையும் — சிம்மாதானமும் நவசேருவான் கோட்டையும், செஞ்சுடரும் நூந்து அழியவே — செந்நெருப்பும் அவிந்து அழிந்திடவே, ஆதிநூல் வெளியேற்ற — ஆதியாகிய இறைவனது திருமறையை வெளிப்படுத்தும் பொருட்டு, பூவில் பிறந்த நபி — பூவுலகின் கண் பிறந்த நபியே, ஆடியருள் செங்கீரையே — செங்கீரை ஆடி அருள்வீராக, அறுசு ஏறி வசனித்து வந்த மகுமூதரே — அறுசின் கண் ஏறிச் சென்று இறைவனிடம் உரையாடி வந்த மகுமூது நபியே, ஆடி அருள் செங்கீரையே — செங்கீரை ஆடி அருள்வீராக.

தெளிவுரை

ஒளி திகழும் தலைமீது நெய்யொழுக சுடர்விழிகளில் கரியமையுடன் விருத்தசேதனம் செய்யப்பெற்று, தொப்புளும் கொய்யப் பெற்று, தீட்டுப்படாமல் வீடு வீதி சுற்றுப் புறங்களெங்கும் நறுமணம் பொங்கவும், புவியெலாம் ஒளி பரவி வானளாவவும் சிறந்த றபீஉல் அவ்வல் மாதம் பிறை பன்னிரண்டில், நிலவு பொழியும் இரவினில், சிலை உருப்பெற்ற புத்துக்கள் தலை கவிழவும், இபுலீசும் நவசேருவானின் சிம்மாசனமும் வான்கோட்டையும் அவனுடைய செந் நெருப்பும் அழித்திடவும், ஆதி இறைவனது திருமறை வெளிப்படவும் புவியின் கண் பிறந்த நபியே, செங்கீரை ஆடி அருள்வீராக. அறுசில் ஏறி இறைவனுடன் உரையாடி வந்த மகுமுது நபி (ஸல்) அவர்களே செங்கீரை ஆடி அருள்வீராக.

விளக்கவுரை

சோதி மீன்..... இரவினில் — நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் றபீஉல் அவ்வல் மாதம் பிறை பன்னிரண்டில் பிறந்தார்கள். இவர்கள் தலையில் நெய் பூசி, கண்களில் மை தீட்டி, விருத்த சேதனம் செய்யப்பெற்று, கொப்புள் அறுக்கப்பெற்று, தீட்டு இன்றி கத்தூரி மணம் கமழ ஒளி திகழப் பிறந்தார்கள் என்பர். நபிகள் நாயகம் பிறந்தபோது நரக நெருப்பு அவிந்து போய் விட்டது. இப்லீசு அரசிழந்தான். அவனது சிம்மாசனமும் கோட்டையும் அழிந்தன. விக்கிரகங்கள் தலை கவிழ்ந்தன எனும் செய்தி '' சிலையுறு .. அழியவே '' எனும் பகுதியில் அமைந்துள்ளது. நவசேருவான் — இஸ்லாத்துக்கு முன்னர் பாரசீக நாட்டை ஆண்டவன். நெருப்பை வணங்கி வந்தவன். அவனுடைய மாளிகையில் தூருத நெருப்பு இருந்தது. நபிகள் (ஸல்) அவர்கள் பிறந்ததும் அந்நெருப்பு மூண்டுவிட்டது. இச் செய்தி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

அறுசேறி... மகுமுதரே — நபிகள் நாயகம் இறைவன் விருப்பத்தற்கேற்ப விண்ணுலகு சென்று அறுசில் ஏறி இறைவனிடம் உரையாடி வந்தார்கள். இது மி... முஜ் எனப்படும். இச்செய்தி இப்பகுதியில் கூறப்பெறுகின்றது.

இலக்கணக் குறிப்பு

கங்கு சிரம் — வினைத் தொகை, விளங்கு தினம் — வினைத் தொகை, சுடர்விழி — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் தொக்க தொகை, வீதிமுன் சுற்று — உம்மைத் தொகை. — இடைக்குறை — தொகுத்தல் விகாரம், செஞ்சுடர் ம + சுடர் — முன்புத்தெதை.

21 தொலையாத புகழ் பெற்ற வானவர்க ளேவலும்
தோகையென கூறுலீன்கள்
துதிகொண்டு சாமர மிரட்டவும் மும்முரசு
தொனியினெடு வெள்ளாணையும்

கலையான வேதமுஞ் சந்தனக் காவொடு
கயலேறு கோப் பெச்சையுங்
ககனமது தொடுகின்ற மரகத மாலையொடு
கணபதி கருப்பாறுடன்

தலையான சறுபந்து மவுலியுங் குங்குமத்
தாரொடு கார்க் கவிகையுஞ்
சார்ந்த விருதல்லாது சதகோடி விருதினெடு
தங்கியுயர் பொன்னூரொடு

அலையாழி ஆழுலக நிலையான துற்றதுரை
யாடியருள் செங்கீரையே
அறுசேறி வசனித்து வந்த மகுமூதரே
யாடியருள் செங்கீரையே 8.

பதவுரை

தொலையாத புகழ் பெற்ற வானவர்கள் ஏவலும் — அழியாத புகழைப் பெற்ற வானவர்கள் ஏவல் செய்தலும், தோகை எனக் கூறுலீன்கள் — மயில் அனைய கூறுலீன்கள், துதி கொண்டு சாமரம் இரட்டவும்— வணங்கி வெண்சாமரை வீசவும், மும்முரசு தொனியின் ஓடு — கொடை, திருமணம், வெற்றி காலங்களில் முழங்கும் மூன்று முரசுகளின் ஒலியுடன், வெள்ளாணையும் — (விண்ணகத்து) வெள்ளை நிற யானையும், கலையான வேதமும் — கலை நலம் திகழும் வேதமும், சந்தனக் காவோடு கயலேறு கோப்பெச்சையும் — சந்தனத் தோப்புடன் கயல் மீன்கள் ஏறும் கோப்பெச்சையும், ககனமது தொடுகின்ற — வானகத்தைத் தொடுகின்ற, மரகத மாலையொடு— மரகத மணிகளால் தொடுக்கப்பட்ட மாலையுடன், கணபதி கருப்பாறுடன்—பெருமை பொருந்திய தலைமை சான்ற காரிய பாறுடன், தலையான சறுபந்து, மவுலியும் —தலை அணியாகிய முடியும், குங்குமத் தாரோடு — குங்கும மலர்களால் தொகுக்கப்பட்ட மாலையோடு, கார்க் கவிகையும் — கார்மேகமாகிய குடையும், சார்ந்த விருது அல்லாது — பொருந்திய வெற்றிச் சின்னங்களன்றி, சதகோடி விருதினெடு — நூறுகோடி வெற்றிச் சின்னங்களுடன், தங்கியுயர் பொன்னூரோடு — தங்கி உயர்ந்த அழகிய ஊராகிய மக்க மா நகரத்துடன், அலை ஆழிசூழ் உலகம் நிலையானது உற்றதுரை — அலை கடல் சூழ்ந்த உலகம்

நிலையாகும்படி பொருந்திய துரையே, ஆடி அருள் செங் கீரையே— செங்கீரை ஆடி அருள்வீராக, அறுசு ஏறி வசனித்து வந்த மகுமூது நாதரே — அறுசின் கண் ஏறிச்சென்று இறைவ னுடன் உரையாடி வந்த மகுமூது நாதரே, ஆடி அருள் செங் கீரையே — செங்கீரை ஆடி அருள்வீராக.

தெளிவுரை

அழியாத புகழைப் பெற்ற வானவர்கள் ஏவல் செய்யவும் மயில் அனைய கூறுவீன்கள் வணங்கி வெண்சாமரை வீசவும் கொடை, கடி மணம் படையாகிய மூன்று முரசுகளின் ஒலியு டன் தேவலோகத்து வெள்ளை நிற யானையும், கலை நலம் திக ழும் வேதமும் சந்தனத் தோப்புடன் கயல் மீன்கள் ஏறும் கோப்பெச்சையும் வானகத்தைத் தொடுகின்ற மரகத மணி களால் தொடுக்கப்பட்ட மாலையுடன் பெருமை பொருந்திய தலைமை சான்ற சுரியபாறுடன் தலை அணியாகிய முடியும் குங் கும மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையோடு கார்மேக மாகிய குடையும் பொருந்திய வெற்றிச் சின்னங்கள் அன்றி மேலும் நூறு கோடி வெற்றிச் சிலைகளுடன் தங்கி உயர்ந்த அழகிய மக்கமா நகரத்துடன் அலை கடல் சூழ்ந்த உலகம் நிலை யாகும் படி பொருந்திய துரையே, செங்கீரை ஆடி அருள்வீராக, அறுசின் கண் ஏறிச் சென்று இறைவனுடன் உரையாடி வந்த மகுமூது நாதரே செங்கீரை ஆடி அருள்வீராக.

விளக்கவுரை

மும்முரசு.... வெள்ளானையும் — மண முரசு, கொடை முரசு, படை முரசு எனும் மூன்று முரசுகளின் ஒலியோடு கூடிய தேவ லோகத்து வெள்ளை நிற யானையும். உலகில் காணப்படும் யானை கள் கருமையானவையே. வான லோகத்து தேவர் தம் தலைவ னாகிய இந்திரனது பட்டத்து யானை ஐராவதம வெள்ளை நிறத் தது என்பர். தமிழிலக்கியங்களில் பெரிதும் காணப்படும் இப் புராணச் செய்தியைத் தமது தமிழ் இலக்கியத்திலும் ஆள்கின் றார் ஆசிரியர்.

கார்க்கவிகையும் — நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழி நடந்து செல்லும் போது வெம்மையைத் தடுத்து குளிர்ச்சி தரும் பொருட்டு கார்முகில் குடையாக அமைந்து தொடர்ந்து செல்லும் எனக் கூறுவது முஸ்லிம் கவிஞர் மரபு.

இலக்கணக் குறிப்பு

அலையாழி — 2ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. வினைத் தொகையுமாம். சூழ் உலகம் — வினைத் தொகை. அறுசேரி — அறுசின் கண் ஏறி — 7ஆம் வேற்றுமைத் தொகை.

22. மங்குல மொத்த சுரிகுழல் தங்கிய
வானுறு மடவார்கள்
வந்துதினந் தோறு மஞ்சன மாட்டிட
வாகாய்க் களித்தோரே

திங்களு மின்றிய தீனனும் பயிர்க்கொரு
சீகர மாஞ்ரே
தீவினை துண்டமு மீனமுந் திரச்சஞ்
சீவீயாய் வந்தோரே

செங்கதி ரேழு முருக்கிய நாளியிற்
செழுந்தரு வாஞ்ரே
செகதலந் தனக்கொரு மணிவிளக் கெனலாயீச்
செங்கோல் கொளுங் கோவே

செங்கமலத் திருசரண விமோசரே
செங்கோ செங்கீரை
செக குலம் புகழ்மதி னுவினுக் கரசே
செங்கோ செங்கீரை 9

பதவுரை

மங்குல் அம் ஒத்த சுரிகுழல் — மேகத்தை நிகர்த்த அழகிய கரிய சுருண்ட கேசம், தங்கிய வானுறு மடவார்கள் — பொருந்திய வானகத்து மகளிர், வந்து தினந்தோறும் மஞ்சனம் ஆட்டிட — மக்க நகரத்திற்கு நாள்தோறும் வந்து நீராட்டிட, வாகாய்க் களித்தோரே — எழிலுற மகிழ்ந்தோரே, திங்களும் இன்றிய — மாதம் பொழியும் மும்மாரி இல்லாமல் (வாடிய), தீனனும் பயிர்க்கு ஒரு சீகரம் ஆஞ்ரே — சன்மார்க்கப் பயிர்க்கு ஒப்பற்ற மழையாக அமைந்தவரே, தீவினை துன்பமும் ஈனமும் தீர — தீயவினைகளும் துன்பங்களும் இழிவுளும் நீங்கிட, சஞ்சீவியாய் வந்தோரே — மருந்தாய் வந்தோரே, செங்கதிர் ஏழும் — செந்நிறக் கதிர்கள் ஏழும், உருக்கிய நாளியில் — (சுட்டு) வருத்தும் நாளில், செழுந்தரு வாஞ்ரே — செழுமையான தருவாக அமைந்தோரே, செகதலந் தனக்கு — உலக மண்டலத்திற்கும், ஒரு மணி விளக்கு எனலாய் — ஒப்பற்ற மணி விளக்காக, செங்கோல் கோளுங் கோவே — செங்கோல் செலுத்தும் அரசே, செங்கமலத்து இரு சரணம் விமோசரே — செந்தாமரை யனைய இரு நிருவடிகளால் விமோசனம் அளிப்போரே, செங்கோ செங்கீரை — செங்கீரை ஆடியருள்க, செகதலம் புகழ் மதினுவினுக்கு அரசே — உலகெலாம் புகழும் மதினை மா நகர அரசே, செங்கோ செங்கீரை — செங்கீரை ஆடி அருள்க.

தெளிவுரை

மேகமனைய அழகிய சுருண்ட கூந்தல் பொருந்திய விண்ணகத்து மகளிர் வந்து நாள்தோறும் நீராட்டிட அழகுடன் மகிழ்ந்தோரே. தீனுல் இஸ்லாம் எனும் பயிர்க்கு செழுமழையாஞரே தீவினைகளும் துன்பங்களும் இழிவுகளும் தீர்த்திடும் அருமருந்தாய் வந்தோரே. ஏழு கதிர்களுஞ் சேர்ந்து எரித்து வருதலும் மறுமை நாளில் செழும் தருவாக அமைவோரே. உலகத்திற் கோர் மணிவிளக்காய் செங்கோல் செலுத்தும் அரசே. செந்தாமரைத் திருவடிகளால் ஈடேற்றம் அளிப்போரே, செங்கீரை ஆடி அருள்க. உலகெலாம் புகழும் மதினமா நகர்க்கு அரசே செங்கீரை ஆடி அருள்க.

விளக்கவுரை

நாயகம் (ஸல்) குழந்தையாகத் தோன்றியபோது நாள்தோறும் வானக மகளிர் வந்து நீராட்டிச் சென்றனர் என்பது இஸ்லாமிய இலக்கியங்கள் இயம்பும் செய்தி, இது ''மங்குலம்.... களித்தோரே'' என்பதில் குறிப்பிடப்படுகின்றது.

''திங்களும் இன்றி... சீகரமானேரே'' மாதம் மும்மாரி பொழிதல் வேண்டும் என்பது தமிழ் நாட்டு மக்களின் விருப்பம். நல்லரசு நாட்டில் நிலவுமாயின் மாதம் மூன்று மழை பொழியுமென நம்பப்பட்டு வந்தது. மாதம் மும்மாரி பொழியும் மழை போயிற்று. பயிர் வாடி வதங்கியது. இவ்வேளையில் ஒப்பற்ற மழை பொழிந்தால் பயிர் செழித்துப் பயன் தரும். வாடி வதங்கி வந்த தீனெனும் பயிர்க்கு வள்ளல் நபி நாயகம் (ஸல்) ஒப்பற்ற மழையாக அமைந்து தழைத்துப் பயனளிக்கச் செய்தார்கள் எனும் நயம் எண்ணி மகிழ்தற்குரியது.

''பானுவின் கதிரால் இடருறுங் காலம்
படர் தரு தருநிழல் எனலாய்
ஈனமுங் கொலையும் விளைத்திடும் பவநோய்
இடர் தவிர்த்திடும் அருமருந்தாய்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய்
குறைசியின் திலகமே எலாய்
மானிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபி பிறந்தனரே ''

எனும் சிருவின் பாடல் ஒப்பு நோக்கத் தக்கது.

இலக்கணக் குறிப்பு

சுரிகுழல் — விகுதித் தொகை, தீனெனும் பயிர்—உருவகம், செங்கதிர், செழுந்தரு — பண்புத் தொகைகள், செங்கமலத் திரு சரணம் — உவமத் தொகை.

23. சீர்கொண்ட வாவிவள மேகொண்ட சோலைசூழ்
திருவார்ந்த திருநெல்வேலி
திகழ்கின்ற உடலினுயி ராய்வந்த மேத்தர்
முகியித் தினு ராவுத்தரொண்

கார்கொண்ட வண்டமிழ்க் கவிராயர் குலதில
கராய் வந்த விடலை யாளனென்
கருணையிரு விழிமுகம் மதுநயினு ராவுத்தர்
கல்பாசனத் தினுடு

கூர்கொண்டு விளையாடி வருதுரைச் சிங்கமே
குவலயத்தோர் கள் வானோர்
கூறுலீன் கன்னிபரி தேவுஜீன் மற்றுமுள
கோடான கோடியுயிரும்

ஆர்கொண்ட சோபன மாராய வள்ளலே
ஆடியருள் செங்கீரையே
அறுசேறி வசனித்து வந்த மகுமுதரே
ஆடியருள் செங்கீரையே 10

பதவுரை

சீர்கொண்ட வாவி வளமே கொண்ட — சிறப்புப் பொருந்திய நீர் நிலைகளும் வளங்களும் கொண்ட, சோலை சூழ் — சோலைகள் சூழ்ந்த, திருவார்ந்த திருநெல்வேலி—செல்வம் பொருந்திய திருநெல்வேலியின், திகழ்கின்ற உடலின் உயிராய் வந்த மேத்தர் முகியித்தின் ராவுத்தர் — விளங்குகின்ற உடலினது உயிர்போல் உதித்த மேத்தர் முகியித்தீன் ராவுத்தர், ஓங்கார் கொண்ட வண்டமிழ் — ஒளிபொருந்திய மழை முகிலினைய வளாவிய தமிழ், கவிராயர் குலத்திலகராய் வந்த — கவியரசர் குலத்தினது திலகம் போல வந்த, விடலையாளனென் — வீரனனவன், கருணையிருவிழி முகம்மது நயினர் ராவுத்தர் — கருணை பொழியும் இரு விழிகளைக் கொண்ட முகம்மது நயினர் ராவுத்தர், கல்பு ஆசனத்தினுடு— மனபீடத்தின் மீது, கூர்கொண்டு விளையாடி வரு துரைச் சிங்கமே — சிறப்புடன் விளையாடி வருகின்ற துரையாகிய சிங்கமே, குவலயத்தோர்கள் — உலகத்து மக்களும், வானோர் கூறுலீன் கன்னி — வானலோகத்தவர்களும் கூறுலீன் கன்னியரும், பரிதேவுஜீன் — பரிகளும் தேவுகளும் ஜின்களும், மற்றுமுள கோடான கோடி உயிரும் — கோடிக் கணக்கான உயிர்களும், ஆர்கொண்ட — சிறப்பாகக் கொண்ட, சோபன மாராய வள்ளலே — நல்வாழ்த்து கூறும் வள்ளலே, ஆடியருள் செங்கீரை — செங்கீரை ஆடி அருள்வீராக, அறுசு ஏறி வசனித்து வந்த மகுமுதரே — அறுசின் கண் ஏறி இறைவனுடு உரையாடி வந்த நபி நாதரே ஆடியருள் செங்கீரை —செங்கீரை ஆடியருள்வீராக.

தெளிவுரை

சிறப்புப் பொருந்திய நீர்நிலைகளையும் வளங்களையும் கொண்ட சோலைகள் சூழ்ந்த செல்வம் பொருந்திய திருநெல்வேலியின் விளங்குகின்ற உடலினது உயிர்போல் உதித்த மேத்தர் முகியித் தீன்ராவுத்தர் ஒளி பொருந்திய மழை முகிலனைய வளவிய தமிழ்க் கவியரசர் குலத்தினது திலகம் போல வந்த வீரஞன கருணை பொழியும் இரு விழிகளைக் கொண்ட முகம்மது நயினர் இராவுத்தர் மனபீடத்தின் மீது சிறப்புடன் விசோயாடி வருகின்ற சிங்கமே, உலகத்து மக்களும் வானலோகத்தவரும் கூறுலீன் கன்னியரும் பரிகளும் தேவுகளும் ஜின்களும் கோடிக் கணக்கான உயிர்களும் சிறப்பாகக் கொண்ட நல்வாழ்த்துக்களும், கூறும் வள்ளலே, செங்கீரை ஆடி அருள்வீராக. அறுசின் கண் ஏறி இறைவனோடு உரையாடி வந்த முகம்மது நபி நாதரே, செங்கீரை ஆடி அருள்வீராக.

விளக்கவுரை

கல்பு — ஆசனம் — கல்பாசனம். கல்பு என்பது அறபுச் சொல் மனம் எனும் பொருள் கொண்டது.
பரி தேவுஜின் — பரி, தேவு, ஜின் என்பன ஜின் இனத்தின் பிரிவுகள், ஜின் இறைவனால் நெருப்பைக் கொண்டு படைக்கப் பட்டவர்கள். மானுடக் கண்களுக்குத் தென்படாதவர்கள்.

இலக்கணக் குறிப்பு

வண்டமிழ் — பண்புத் தொகை, கருணை இரு விழி — கருணையைப் பொருந்திய இரு விழிகள் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கல்பாசனம் — இரு பெயரொட்டுப் பண்புத் தொகை உருவகம்.

தாலப் பருவம் 7-8

இது பிள்ளைத் தமிழின் மூன்றுவது பருவமாகும். இது இரண்டாம் பருவமாகவும் செங்கீரை மூன்றும் பருவமாகவும் வருவதுண்டு. ஏழாம் திங்களில் நிகழ்வது கூறும். தாலாட்டு என்பது தால் என மருவி வழங்குகிறது. தால் எனும் சொல் நா எனுப் பொருள் தரும். குழந்தைகளை உறங்கச் செய்வார் தம் நாவையசைத்துப் பாடுவர். இப் பருவச் செய்யுட்கள் தாலேலோ என்று முடிகின்றன.

24. கண்ணி லடங்கா தொளிமிகுந்த
கதிரோன் செம்பொற் றிகிரியென
ககன நிறைந்த வடுவேந்தல்
களிப்பாய் வரும்வி மானமென

வண்ண மணிச்சட் டமுமொழுங்கும்
வான்மின் பிடித்தங் கமைத்ததென
வளபொற் கதிர்கள் வெயிலெறிப்ப
வயங்கும் பச்சை மரகதத்தாற்

பண்ணுங் குடம்போற் காற்குமிழும்
பசும்பொ னமைத்த சங்கிலியும்
பவன மடவார் தாலாட்டும்
பதஞ்சேர் வானோர் போற்றிடவே

கண்ணுக் கடங்கா திருந்தாடுங்
காசி நபியே தாலேலோ
கருணைக் கடலே முகம்மதுவே
கபீபே சாமீம் தாலேலோ

பதவுரை

கண்ணில் அடங்காது ஒளிமிகுந்த — கண் பார்வைக்கு அடங்காமல் ஒளி மிகுந்த, கதிரோன் செம்பொன் திகிரியென — சூரியனது செம்பொன் சக்கரமென. ககனம் நிறைந்த உடுவேந்தன் — விண்ணகம் நிறைந்த விண் மீன்களுக்குத் தலைவன்

களிப்பாய் வரும் விமானமென— மகிழ்ந்து உலாவரும் விமான மென, வண்ண மணிச் சட்டமும் ஒழுங்கும் — அழகிய மாணிக்கத்தால் இழைத்த சட்டமும் அமைப்பும். வான்மின் பிடித்தங்கு அமைத்ததென — வானகத்து மின்னலைப் பிடித்து வைத்தாற் போல, வளர் பொற்கதிர்கள் வெயிலெறிப்ப — வளர்கின்ற பொன்போன்ற கதிர்கள் ஒளியைச் சிந்த, வயங்கும் பச்சை மரகதத்தால் பண்ணும் குடம்போல் காற் குமிழும் — விளங்குகின்ற பச்சை மரகதத்தால் செய்யப்பெற்ற குடம் போன்ற (தொட்டிலின்) கால் குமிழும. பசும்பொன் அமைத்த சங்கிலியும் — பசும் பொன்னால் கமைத்த சங்கிலியும், பவன மடவார் தாலாட்டும — வானலோகத்து மகளிர் தாலாட்டவும், பதஞ்சேர் வானோர் போற்றிடவே — ஒளிமிக்க வானோர்கள் போற்றவும், கண்ணுக்கு அடங்காது இருந்து ஆடுங்— கண் கொள்ளாக் காட்சியாக வீற்றிருந்து ஆடுகின்ற, காசீம் நபியே தாலேலோ — ஹாஷிம் குலத்திலுதித்த நபியே தாலேலோ, கருணைக் கடலே முகம்மதுவே — கருணையின் கடலே முகம்மது நபி (ஸல்) அவர்களே, கபீபே காசீம் தாலேலோ — இறை நேசரே ஹாசீம நபியே தாலேலோ.

தெளிவுரை

கண் பார்வைக்கு அடங்கா ஒளி மிகுந்த சூரியனது செம் பொன் சக்கரம் போலவும், விண்ணகம் நிரம்பிய மீன்களுக்குத் தலைவன் மகிழ்ந்து உலாவரும் விமானம் போல அழகிய மாணிக்கத்தால் இழைத்த சட்டமும் ஒழுங்கும் வானகத்து மின்னலைப் பிடித்து வைத்தாற் போல வளர்கின்ற பொன் கதிர்கள் ஒளியைச் சிந்தவும். பச்சை மரகதத்தால் செய்யப்பெற்ற குடம் போன்ற கால் குமிழும் பசும் பொன்னால் செய்த சங்கிலியும் பொருத்தி கட்டிலில் வானலோகத்து மகளிர் தாலாட்டவும் ஒளிமிக்க வானோர்கள் போற்றவும் கண்கொள்ளாக் காட்சியாக வீற்றிருந்து ஆடுகின்ற ஹாஷிம் குலத்தில் உதித்த நபியே தாலேலோ, கருணையின் கடலே, முகம்மது நபி (ஸல்) அவர்களே இறை நேசரே, ஹாசிம் நபியே தாலேலோ.

விளக்கவுரை

கண் நிலடங்கா .... திகிரியென — சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைக் கால் தேரில் உலகத்தைச் சுற்றி வருகிறானென்பது தமிழ்க் கவிஞர் கூறும் மரபுச் செய்தியாகும். சூரியனது தேர்க்கால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்து ஆடும் தொட்டிலுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

ககன.... உடுவேந்தன் — விண்மீன்களுக்கு வேந்தனாகிய சந்திரன் உலா வருகின்ற விமானம் முழு நிலாப் போன்றது. நபிகள் நாயகம் (ஸல்) ஆடுகின்ற தொட்டில் எனும் செய்தி இத் தொடரில் அமைந்துள்ளது. தொட்டிலின்து சட்டமும் ஒழுங்கும் கால் குமிழும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

காமீம் தோழமை. தலைமைத் தகுதி பெற்றவர்களிடத்துத் தான் இறைவன் தோழமை கொள்ள இயலும். மகித குலத்தின் தலைமைத் தகுதியினை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறைவரப் பெற்றுள்ளார்கள் என்பது இதனால் உணர்த்தப்படுகிறது.

இலக்கணக் குறிப்பு

செம்பொன் — பண்புத் தொகை. உடுவேந்தன் — 4ஆம் வேற்றுமைத் தொகை, ஈன் தொகை எனினுமாம். வான்மின்.... அமைத்தென — இல்பொருள் உவமையணி. வளர் பொற்கதிர் — விசேடத் தொகை. பொற்கதிர் — உவமத் தொகை. பசும் பொன் — பசுமை + பொன் — பண்புத் தொகை. பொன் அமைத்த — பொன்னால் அமைத்த 3ஆம் வேற்றுமைத் தொகை.

25. மணியும் பவள மரகதத்தின்
வடிவா யிருந்து முன்னுளில்
மாறு உருவொன் றுய்ச் சமைந்து
மண்ணில் பிறந்த மாதவரே

அணியும் புயத்தார் நபிமார்க
ளனைவர்க் கரசாய் வந்தோரே
ஆதி மறைநூ லோதிடவே
யருள்சேர் திருநா வுடையோரே.

பணிதல் வழுவா தவர்க்குயிராய்ப்
பதவி யருளும் பாக்கியரே
பல நோயீ துன்ப மணுகாமல்
பலன்க ளருவீ ரெந்நபியே

கனிந்த லடங்கா தறிவுடைய
காசீ நபியே தாலேலோ
கருணைக் கடலா முகம்மதுவே
கபீபே காமீம் தாலேலோ. 2

பதவுரை

முன்னுளில் மணியும் பவளம் மரகதத்தின் வடிவாயிருந்து — முற்காலத்தில் மாணிக்கமாகவும் பவளமாகவும் மரகதமாகவும் உருக்கொண்டிருந்து, மாறு உரு ஒன்றுய்ச் சமைத்து — அவற்றின் ஒளி மாறுமல் ஓர் உருவாகச் சமைத்து, மண்ணில் பிறந்த மாதவரே — மண்ணகத்துத் தோன்றிய மாதவ சீலரே, அணியும் புயம்தார் நபிமார்கள் — புயத்தில் மாலையணிந்த நபிமார்கள், அனைவர்க்கு அரசாய் வந்தோரே, ஆதி மறைநூல்

ஒதிடவே — ஆதி இறைவனின் மறை உரைகளை ஓதிட; அருள் சேர் திருநா உடையோரே — இறைவனது அருள் பொருந்திய அழகிய நா உடையோரே, பணிதல் வழுவாதவர்க்கு — பணிவதனைத் தவறுமல் போற்றுவோர்க்கு, உயிராய்ப் பதவி அருளும் பாக்கியரே — உயிர் போன்று அமைந்து நற்பதவியை அருளும் பாக்கியரே, பலநோய் துன்பம் அணுகாமல் — பலவகை நோய்களும் துன்பமும் நெருங்காமல், பலன்கள் தருவீர் எம் நபியே — நற்பலன்களை நல்குவீர் எங்கள் நபியே, கணிதல் அடங்காத அறிவுடைய — கணித்தலில் அடங்காத அறிவினை உடைய, காசி நபியே தாலேலோ — ஹாஷிம் குலத்துதித்த நபியே தாலேலோ, கருணைக் கடலே முகம்மதுவே — அருட் கடலே முகம்மது நபி (ஸல்) அவர்களே, கபிபே காசீம் தாலேலோ — இறைவன் நேசரே ஹாமிமே தாலேலோ.

தெளிவுரை

முன்னுளில் மாணிக்கப் பவள மரகத மணிகளாக இருந்து ஒருருவாகச் சமைந்து மானுலத்தில் தோன்றிய மாதவரே நபிகளுக்கெல்லாம் அரசே, ஆதி மறை ஓதிட அருள் பொருந்திய நாவலரே பணிதலைத் தவறுது போற்றுவார்க்கு உயிராயமைந்து பதவியருளும் பாக்கியசீலரே பல்வகை நோய்களும் துன்பங்களும் நெருங்காமல் பலனளிக்கும் எங்கள் நபியே கணிக்க முடியா அறிவுடைய ஹாஷிம் நபியே தாலேலோ கருணைக் கடலே முகம்மது நபியே ஹபீபே ஹாமீமே தாலேலோ.

விளக்கவுரை

பணிதல்.....பாக்கியரே — இஸ்லாம் எனும் அறபுச் சொல் அமைதி எனும் பொருள் கொண்டது. முஸ்லிம் எனும் சொல் லுக்கு அடிபணிதல் எனும் பொருளும் உண்டு. இறைவனுக்கு அடிபணிதல், நபிகளார்க்கும் சான்றோர்க்கும் பணிவுடன் நடக்க வேண்டும் எனும் இஸ்லாமியக் கொள்கை இத் தொடரில் அமைந்துள்ளது. ''அடக்கம் அமரருள் உய்க்கும்'' ''பெருக்கத்து வேண்டும் பணிவு'' எனும் திருக்குறள் தொடர்கள் ஒப்பு நோக்கத்தக்கன.
அருட்பெருங்கடலாக விளங்கிய அண்ணல் நபியைக் கருணைக் கடல் என உருவகித்திருப்பது மகிழ்தற்குரியது.

இலக்கணம்

மாரு உரு — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், அருள் சேர் திருநா — வினைத் தொகை, திருநா — அடையடுத்த பெயர், பணிதல் — தொழிற் பெயர், பணிதல் வழுவாதவர்க்கு — இரண்டாம் வேற்றுமைத் தொகை. கணிதல் — தொழிற் பெயர், கணித்தல் என்பதன் இடைக் குறையாகவும் கொள்ளலாம்.

26. விண்ணிற் சிறந்த விண்மணியே
விதுவின் மணியே வெண் மணியே
வேத மணியே வேய் மணியே
மோகமணியே கடல் மணியே

திண்ணிற் சிறந்த தருமணியே
தீனின் மணியே செம்மணியே
திகழ்ந்த வுடைய வஹ்மணியே
திரண்டு சிறந்த துகிர்மணியே

வண்ணிற் சிறந்து பொலிவாலை
வைரமணியே கருமணியே
வயங்கல் குறையாப் பைமணியே
மதிப்புக் கடங்கா நவமணியே

கண்ணிற் சிறந்த கண்மணியே
காசீ நபியே தாலேலோ
கருணைக் கடலே முகம்மதுவே
கபீபே காசீம் தாலேலோ

பதவுரை

விண்ணில் சிறந்த விண்மணியே — வானத்துச் சிறந்த மணியாகிய சூரியனே, விதுவின் மணியே — சந்திரனே, வெண் மணியே — வெள்ளியாகிய மணியே, வேத மணியே — வேத ஒளி வீசும் மணியே, வேய் மணியே — மூங்கிலில் விளைந்த முத்தே, மேக மணியே — முகிலில் தோன்றிய முத்தே, கடல் மணியே — கடலின் கண் தோன்றிய முத்தே, திண்ணிய சிறந்த தருமணியே — செறிந்திருந்த கற்பகத்துக்குப் பயந்த மணியே, தீனின் மணியே — சன்மார்க்க ஒளி திகழும் மணியே, செம் மணியே — மாணிக்கமே, திகழ்ந்த உடைய வஹ்மணியே — விளக்கம் பொருந்திய சங்கினின்றும் தோன்றிய முத்தே, திரண்டு சிறந்த துகிர்மணியே — திரட்சி பொருந்திச் சிறந்த பவளமணியே, விண்ணில் சிறந்து பொலிவான — நால்வகை நிறத்தில் சிறந்து நலம் திகழும் ஒளியுடன் கூடிய, வைர மணியே — வைரமாகிய மணியே, கருமணியே — கரிய மணியே (நீலமணியே), வயங்கல் குறையாப் பை மணியே, ஒளி குன்றாப் பச்சை மரகத மணியே, மதிப்புக்கடங்கா நவ மணியே — மதித்தற்கரிய கோமேதகம், நீலம், பவளம், புட்ப ராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம், ஆகிய நவமணியே, கண்ணில் சிறந்த கண்மணியே — கண்ணிலே சிறந்து விளங்கும் மணியே, ஹாசீம் குலத்துதித்த

நபியே, தாலேலோ — தாலேலோ, கருணைக் கடலே — அருட் கடலே, முகம்மதுவே — முகம்மது நபியே (ஸல்) அவர்களே, ஹபிபே கா மீமே—ஹபிபே, ஹா மீமே, தாலேலோ—தாலேலோ.

தெளிவுரை

மானகத்துச் சிறந்த சூரியனே சந்திரனே வெள்ளி யாகிய மணியே வேத மணியே வேல் மணியே முகிலில் தோன்றிய முத்தே கடலில் விளைந்த முத்தே கற்பகத் தருவில் தோன்றிய மணியே தீனின் மணியே மாணிக்கமே ஒளி விளங்கும் சங் கில் விளைந்த மணியே திரண்டு சிறந்த பவளமே நிறம் சிறந்த நலம் நிகழும் வைரமே நீல மணியே விளங்கும் மரகதமே மதிக்க முடியா நவமணியே கண்ணிற் சிறந்த கண்மணியே காசிம் நபியே தாலேலோ கருணைக் கடலே முகம்மது நபி (ஸல்) அவர்களே ஹபிபே ஹா மீமே தாலேலோ.

விளக்கவுரை

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நவமணிகளையும் சூரிய சந்திர வெள்ளியாகிய ஒளிக் கோளங்களையும் உவமை கூறி முடிவான ஒப்பாய்வு நிகர வழியாயிருக்கும் விழியின் மணி யாகிய கண்மணியை உவமித்திருப்பது இன்பம் பயப்பதாகும். விண்ணிற் சிறந்த விண்மணி — விசும்பில் ஒளி வீசுவதில் மிக வும் சிறந்து விளங்கும் சூரியன். உலகிற்கு ஒளிதருவனவற்றுள் சிறந்து விளங்குவது சூரியனே. வெண்மணியாகிய மணி — வெள்ளியாகிய மணி — வெள்ளி மின், சுக்கிரன்

வேய் மணியே, மேக மணியே, கடல் மணியே, திகழ்தலுடைய வினை மணியே — மதி, மேகம், சங்கு, சிப்பி, மின், நத்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை கமுகு, கரும்பு, செந் நெல், மூங்கில், யானைக் கொம்பு, பசுவின் பால், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து ஆகிய முத்துப் பிறக்கும் இடங்க ளில் மூங்கில், மேகம், சிப்பி, மின், நத்து முதலை வாழும் கடல் சங்கு ஆகியவற்றைக் கூறினர்.

முத்து, மாணிக்கம், பவளம், வைரம், நீலம், மரகதம் முதலி யவற்றைத் தனித்தனியே கூறி நிறைவு காணாத ஆசிரியர் மொத்தமாக நவமணியே என்றும் விளிக்கின்றார். இதிலும் அமைதி காணாமல் மனிதனுக்கு இன்றியமையாத நுண்ணிய உறுப்பாகிய கண்ணின் மணியே என விளித்து மகிழ்கின்றார்.

27. அறிவுக் கடலில் திக்கீர்க் கடலி
லடங்கா தொளியின் பெருங்கடலி
லழியாக் கடலி னிகுமத தெனு
மரிய கடலிற் சபூருடைய

பொறுமைக் கடலி நாணமிகப்
பொலியுங் கடலி னிடங்க ளெல்லாம்
புகுந்து முழுகி யுருவாகிப்
புவியிற் பிறந்த புகழோரே

செறிவை யுடைய செழும் புயலே
சிந்தும் புயலே செகம் புகழுஞ்
செல்வத் துரையே தனித் துரையே
செம்மற் கரசே யெமக்கரசே

கறுவ லணுகா மனமுடைய
காசீ நபியே தாலேலோ
கருணைக் கடலே முகம்மதுவே
கபீபே காபீம் தாலேலோ (4)

பதவுரை

அறிவுக் கடலில் — ஞானமாகிய கடலில், திக்கீர்க் கடலில் — இறை துதிக்கடலில் (பக்திக் கடலில்), அடங்காத ஒளியின் பெருங்கடலில் — சொல்லிலடங்கா ஒளியின் பெருங்கடலில், அழியாக் கடலில் — அழியாமை எனும் கடலில், நிகுமத்து எனும் அரிய கடலில் — இறைவனின் அருட் கொடை யெனும் அருங் கடலில், சபூருடைய பொறுமைக் கடலில் — சகிப்புத் தன்மை யுடைய பொறுமையெனும் கடலில், நாணம் மிகப் பொலியும் கடலில் — மிகவும் சிறந்து விளங்கும் நாணம் ஆகிய பண்புக் கடலில், இடங்களெல்லாம் புகுந்து முழுகி உருவாகி — துறைகள் தோறும் நுழைந்து தோய்ந்து மூழ்கி உருவாகி, புவியில் பிறந்த புகழோரே — பூலகில் கண் பிறந்த புகழ் பொருந்தியவரே, செறிவை உடைய செழும் புயலே — சூல் கொண்ட செழிய மேகமே, சிந்தும் புயலே — மழை பொழியும் முகிலே, செகம் புகழும் — உலகம் புகழும், செல்வத் துரையே — செல்வம் பொருந்திய துரையே, தனித் துரையே — தனிச் சிறப்புள்ள துரையே, செம்மற்கு அரசே — தலைமையுடையோர்க்கு அரசே, எமக்கரசே — எங்கட்கு அரசே, கறுவல் அணுகா மனமுடைய — கினம் நெருங்காத மனத்தை உடைய, காசீம் நபியே — ஹாஷிம் குலத்தில் பிறந்த நபியே!, தாலேலோ — தாலேலோ, கருணைக் கடலே முகம்மதுவே — அருட் கடலே! முகம்மது நபி (ஸல்) அவர்களே!, கபீபே காபீம் — ஹபீபே! ஹாபிமே!, தாலேலோ — தாலேலோ.

தெளிவுரை

அறிவுக் கடலில், துதிக்கடலில், ஒளிப் பெருங் கடலில், அழி யாமை ஆகிய கடலில், அருட்கடலில், பொறுமைக் கடலில், நாணம் பொலியும் பண்புக் கடலில் எல்லாம் புகுந்து மூழ்கி உருவாகி பூவுலகில் பிறந்த புகழோரே! சூல் கொண்ட செழிய மேகமே! பொழியும் முகிலே! உலகம் புகழும் செல்வத் துரையே! தனித் துரையே! செம்மலர்க்கு அரசே! எமக்கரசே! தினம் சேராத சிந்தையுடைய ஹாஷீம் நபியே! தாலேலோ கருணைக் கடலே! முகம்மது (ஸல்) அவர்களே! ஹபீபே! தாலேலோ

விளக்கவுரை

அறிவு..... புகழோரே — ஏழு சிறந்த பண்புகளாகிய அறிவு, பக்தி, ஒளி, அழியாமை, அருட்கொடை, பொறுமை, நாணம் ஆகிய வற்றையெல்லாம் ஏழு கடல்களாக வருணித்து அவற்றில் மூழ்கி மூழ்கி வடிவெடுத்துப் புவியில் பிறந்த புகழோரே என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விளிப்பது நயம் பயப்ப தாகும். பாயிரத்தின் இரண்டாஞ் செய்யுளிலும் அடங்கா அருள் நிறைந்த ஏழு கடலின் மூழ்கி மூழ்கி என்றும், முகம்மது எனும் அறபிச் சொல்லிற்குப் புகழப்பட்டவர் என்பது பொருளா கும், இங்கு முகம்மது (ஸல்) அவர்களைப் புகழோரே என்று விளித்திருப்பது அறபுப் பெயரின் சிறந்த மொழி பெயர்ப்பாகவும் அமைந்து விடுகின்றது. திக்ரு — இறை நாம உச்சாடனமாகும். இறைவனுடைய நாமாவளியை மனமொன்றி மெய்ம் மறந்து கூறுதல். இடையீடின்றிச் சிந்தித்தல். கறுவல் அணுகா மண முடைய காசிம் நபியே — இத்தொடர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சினமற்ற, பழிவாங்க வேண்டு மென்ற வஞ்சமற்ற, அருட் குணத்தைக் குறிப்பிடுகின்றது. 'சொல்லாலும் கல்லாலும் அடித்தனர், கழுத்தில் துணி போட்டு இறுக்கினர். ஒட்டகத்தின் இரத்தத்தையும் சாணியையும் அழுகிய குடலையும் தலையையும் வீசி யெறிந்தனர். வழியில் கல்லும் முள்ளும் பரப்பினர், கூப்பை வாரித் தலையில் கொட்டினர். உயிருக்கே உலைவைக்கக் கோலை வாளை உருவினர். தோழர்களையும் உறவினரையும் கொன்று கொடுமை செய்தனர். இத்தனை கொடுமைகளும் செய்த குறைஷ் கூலை மக்கா வெற்றியின் போது மன்னித்தார்கள் மாநபியார். தாயிப் நகர மக்கள் துன்புறுத்திய போது சாபமிடத்தம் தோழர் கூறிய போதும் மறுத்து விட்டார்கள் கருணை நபி (ஸல்). இப்படி வாங்கா அருளுளர்வைத் தொடர் நட்பமாக உளர்த்துகிறது.

இலக்கணக் குறிப்பு

அறிவுக் கடல், திக்ரிக் கடல், கருணைக் கடல் — முதலியன உருவகங்கள், புகழோர்—வினையாலணையும் பெயர், செழும்புயல் — அடையடுத்த ஆகுபெயர், கறுவா மணம் — ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

28. சிங்க முழங்கு மொலிகளெனச்
செறுநர் குலத்தைச் செகுத்துலகில்
சிறப்பாய்த் தீனின் பயிரேற்றச்
செழுமா முகிலாய் வந்தோரே

மங்குல் முழங்குங் கவிகை நிழல்
வரிசையுடைய மாதவரே
மணியின் வடிவாய் மயில்வடிவாய்
மனுவின் வடிவாய் வந்தோரே

சங்க முழங்கும் வயலுழவர்
தரையில் முழங்குந் தெண்ணீரிற்
சலச முழங்கும் புட்பிறக்கத்
தாவிக் கயல்கள் போய்த் துரத்தச்

சங்கை முழங்கு மக்க நகர்
தலைவர்க் கரசே தாலேலோ
தாகா நபியே முகம்மதுவே
தாசீம் கா ரீம் தாலேலோ 5

பதவுரை

சிங்கம் முழங்கும் ஒலிகள் என — சிங்கம் கர்ஜிக்கும் ஒலி எனக் கூறும்படி, முழங்கி உலகில் செறுநர் குலத்தைச் செகுத்து — இவ்வுலகிலே பகைவர் கூட்டத்தை வென்று, சிறப்பாய் தீனின் பயிர் ஏற்ற — சிறப்பாகத் தீன்பயிர் செழித்து வளர்த்திட, செழுமா முகிலாய் வந்தோரே — செழுமையான கார் மேகமாய் வந்தோரே, மங்குல் முழங்கும் கவிகை நிழல் — இடித்து முழங்கும் மேகக் குடையின் நிழலில், வருகின்ற வரிசை உடைய மாதவரே — சிறப்பை உடைய மாதவத்தோரே. மணியின் வடிவாய் — மணிவடிவாகவும், மயில் வடிவாய் — மயிலின் வடிவாகவும் (இருந்து), மனுவின் வடிவாய் வந்தவரே — மானிட வடிவில் வந்தவரே, சங்கம் முழங்கும் வயல் உழவர் — சங்குகள் ஒலிக்கின்ற வயல் உழவர்கள், தரையில் முழங்கும தெண்ணீரில் — தரையில் முழங்கும் தெளிந்த தண்ணீரில், சலசம் முழங்கும் — தாமரைகள் ஒலிக்கும்படி, புட் பறக்க — பறவைகள் பறந்திட, தாவிக் கயல்கள் போய்த் துரத்த — கயல் மீன்கள் தாவிப் போய்த் துரத்திட, சங்கை முழங்கும் மக்கநகர் — சங்கீன முழங்குகின்ற மக்கமா நகரத்து, தலைவர்க்கரசே தாலேலோ — தலைவர்களுக்கு எல்லாம் அரசே தாலேலோ, தாகா நபியே முகம்மதுவே தாசீம் கா ரீம் தாலேலோ — தாகா நபியே முகம்மது (ஸல்) வே தாசீம் ஹா ரீம், தாலேலோ.

விளக்கவுரை

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பகைவரை வெல்லும் வலிவும், அன்பர்க்கருளும் அன்பும் ''சிங்க.....முகிலாய் வந்தோரே'' எனும் தொடரில் கூறப்பெறுகின்றன. 'தீன்': மார்க்கம். அதனைப் பயிரென உருவகித்தார். பகைவரை அழிக்கும் இங்கமாகவும், அன்பரைப் புரந்துகாக்கும் அருள்மழையாகவும் வந்தவர்கள் பெருமானார். மணிவடிவாய்.....வந்தோரே — முன்னரே விளக்கப்பட்டுள்ளது. சங்கு முழங்கும்; உழவர் முழங்குவர்; தாமரை சலசலக்க சயல்மீன்கள் உயரத்தாவிப்பறக்கும் பறவைகளைத் துரத்தும் என நயம்பட நீர்வளம் கூறுகிறார். சங்கை முழங்கும் மக்க நகர் — சிறப்பு முழங்கும் மக்கநகர் எனவும் கொள்ளலாம்.

இலக்கணக் குறிப்பு

செறுநர் — வினையாலணையும். பெயர் செழுமாமுகிலாய் — உரிச்சொல் தொடர். செழும், மா—உரிச்சொற்கள். கவிதை — தொழிலாகு பெயர் தெண்ணீர் — பண்புத் தொகை. தாஹா, முகம்மது, தாசீம், ஹாமீம் என்பன நபிகளார் (ஸல்) திருநாமங்கள்.

19. குயின்கள் திரண்டு படுத்திடுங்கால்
குயில்கள் மயங்க மயிலாடக்
கோலப் பிரச மிசைபாடக்
கோங்கு மலர்பூத் தேலெழுக

வெயிலின் கிரணந் தோன்றுத
லியம்சேர் துடவை சூழ்ந்தோங்க
வெடிபோல் முரசு மருங்கொலிப்ப
வேழம் பாடி முன்னடக்க

சயில மெலாவே கொடுஞ்சிரதந்
தரையிற் பதிந்து பின்னடக்கத்
தளங்கள் நடக்கத் தெருத்தோறும்
தணியாப் பெரிய வளமுடனே

சயமுஞ் சேர்ந்த மதீன நகர்த்
தலத்துக் கரசே தாலேலோ
நாகா நபியே முகம்மதுவே
தாசீம் காமீம் தாலேலோ.

பதவுரை

குயின்கள் திரண்டு படுத்திடும் கால் — மேகங்கள் திரண்டு படிந்திடும் போது, குயில்கள் மயங்க மயில் ஆட — குயில்கள் மயங்கும்படி மயில்கள் ஆடிட, கோலப் பிரசம் இசைபாட — அழகிய வண்டுகள் இசை பாடிட, கோங்கு மலர் பூத் தேனெழுக — கோங்க மரத்து மலர்கின்ற பூக்களிலிருந்து தேன் சிந்த, வெயிலின் கிரணம் தோன்றுத — சூரியனது சுடுகின்ற ஒளிக்கற்றை உட்புகுந்து தோன்றுத, வியன் சேர் துடவை சூழ்ந்து ஓங்க — வானமளாவிய பூஞ்சோலைகள் சூழ்ந்து ஓங்கிட, தெருத்தோறும் — வீதிகள் தோறும், வெடிபோல் முரசம் மருங்கு ஒலிப்ப — இடிபோல் முரசுகள் அருகில் முழங்க, வேழம் பரியும் முன்னடக்க — களிறுகளும் குதிரைகளும் முன்னே நடக்க, சயிலம் எனவே கொடிஞ்சி ரதம் — மலைகள் என்று சொல்லும்படியான மொட்டுக்கூ உடைய தேர்கள், தரையில் பதிந்து பின்னடக்க — தரை பதியும்படியாக அவற்றிற்குப் பின்னே செல்ல, தளங்கள் நடக்க — படைகள் நடக்க, தணியாப் பெரிய வளமுடனே சயமும் சேர்ந்த—குறையாத பெரிய வளங்களுடனே வெற்றியும் பொருந்திய, மதீன நகர்த் தலத்துக்கு அரசே தாலேலோ — மதீன மாநகர் எனும் திருத்தலத்திற்கு அரசே தாலேலோ, தாகா நபீயே முகம் மதுவே தாசீம் ஹா மீமே! தாலேலோ.

தெளிவுரை

மேகங்கள் திரண்டு படியும்; குயில்கள் மயங்கும்படி மயில்கள் ஆடும்; வண்டுகள் ரீங்காரம் பாடும்; கோங்க மரங்கள் மலர்ந்து தேன் சிந்தும்; சூரியனின் கதிர்களும் உட்புக முடியாவண்ணம் உயர்ந்த சோலைகள் சூழ்ந்துள்ளன. வீதிகள் தோறும் யானைகளும் குதிரைகளும் முன்னே செல்ல மலை களைப் போன்ற தேர்கள் பின்னே செல்லுகின்றன; காலாட் படைகள் இடையில் நடந்து செல்லுகின்றன. இவ்வாறு குறையாத வளங்களும் வெற்றியும் கொண்ட மதீனமா நகர்க்கு அரசே! தாலேலோ! தாஹா நபீயே! முகம்மதுவே! தாசீம் ஹா மீமே! தாலேலோ!

விளக்கவுரை

குயின்கள் — மேகங்கள், மேகம் திரண்டு கூட கானமயில் ஓகை கொண்டு தோகை விரித்து ஆடும். இவ்வாட்டத்தைக் கண்டு குயில் மயங்கித் தன் பாடும் தொழிலை யொழிந்து விட்டது. ஆடலுக்குப் பாடல் வேண்டுமே வண்டுகள் பாடுகின்றன. ஆடல் பாடல் அரங்கை நிகழ்த்தி நகர் வளம் நவிலுவது இன்பம் பயக்கின்றது. கதிரவன் ஒளிக்கதிரும் புகமுடியாத வண்ணம் சோலை செறிந்து உயர்ந்துள்ளது என்பதும் கற்பனை நலம் கனிந்ததாகும். யானை குதிரை தேர் காலாட்

படை காட்டி மதனமாநகரைக் சோநகராகக்கொண்டு ஆண்ட மாநபியின் மாட்சியைப் புலப்படுத்தும் பாங்கும் மகிழ்தற்குரியது.

இலக்கணக் குறிப்பு

மலர் பூ—வினைத்தொகை, தணியாப் பெரிய வளம்—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்,

30. விரிகதி ரொளிவென முத்துப்பொன்
மிருட்டில் மேவிடத் தாளுட
விண்டெனப் புயத்தி னிலெணிமணி
பதக்கமும் விதுவென வசைந்தாடத்

தூநமல ரடிகளிற் பரிபுரவொ
லியது செயமெனப் பணிந்தாட
சித்திரப் பஞ்சணை யின்சிறு
செங்கை சிவக்க வசைந்தாட

அரியொளி தங்கிய மணிமுள
மெய்யது அணுவா யசைந்தாட
அஞ்சனங் கண்களிற் தீட்டிய கூறுளீன்
அறிவா யிசை பாட

சரண மடைவரைக் காக்குந் தவழிதி
தாகா தாலேலோ
தனிய புதுல்லா குமர சுதாகர
தாரா தாலேலோ 7

பதவுரை

விரிகதிர் ஒளிவு என முத்துப் பொன் தொட்டில்—கதிரவனது ஒளி என்று கூறும்படியான ஒளிவீசும் முத்துக்களைத்த பொன்னாலாகிய தொட்டில், மேவிடத் தாளுட — பொருந்தித் தான் ஆட, விண்டெனப் புயத்தில் — மலை என்னும்படியான புயங்களில், அணி மணிப் பதக்கமும் — அணிந்துள்ள மணிகள் பொதிந்துள்ள பதக்கமும், விது என அசைந்து ஆட — சந்திரன் என்னும்படி அசைந்து ஆட; திருமலர் அடிகளில் — அழகிய மலர்போன்ற பாதங்களில், பரிபுரம் ஒலியது செயம் எனப் பணிந்தாட—சிலம்புகளின் ஒலி வெற்றி என்று தாழ்ந்து ஆட, சித்திரப் பஞ்சணையில் — அலங்கரரப் பஞ்சணையில், சிறு செங்கை சிவக்க அசைந்து ஆட—சிறிய செவ்விய கை சிவக்கும் படியாக அசைந்து ஆட, அரியொளி தங்கிய — சூரியனது ஒளி பொருந்திய, மணி முள — கத்தூரி மணம் கமழும், மெய்யது அணுவாய் அசைந்தாட — உடலில் ஒவ்வொரு அணுவும் அசைந்தாட, அஞ்சனம் கண்களில் தீட்டிய கூறுளீன்—கண்களில் மைதீட்டிய கூறுளீன் பெண்கள் அறிவாய் இசைபாட — பொருத்தமாகக் கருத்துக்

செறிந்த இசைப்பாடல்களைப்பாட, சரணமடைவரை காக்கும் — தஞ்சம் புகுவார்க்கு அருள்செய்து காப்பாற்றும், தவ நிதி — தவத்தினது நிதியே, தாகா தாலேலோ — தாகா நபியே தாலேலோ, தனி அபுதுல்லா குமர — தனிச்சிறப்புள்ள அப்துல் லாவின் புதல்வரே! சுதாகர — சந்திரனே, தாகா தாலேலோ தாகா நபியே! தாலேலோ.

தெளிவுரை

கதிரவன் போல் ஒளிசிந்தும் முத்துக்களிழைத்த பொன் னிலான தொட்டிலில் பொருந்திக் தாளாட, மலையனைய தோள் களணிந்துள்ள மணிகள் பதித்த பதக்கமும் சந்திரனைப் போல இசைந்தாட, மலர்ப் பாதங்களில் சிலம்பு வெற்றி வெற்றி யென ஒலி செய்து பணிந்தாட, அலங்காரப் பஞ்சனையில் செஞ் சிறுகைகள் சிவந்து அசைந்தாட, சூரிய ஒளி பொருந்திக் கத் தூரி மணம் கமழும் உடல் அணு ஒவ்வொன்றும் அசைந்தாட, மைதீட்டி விழிகள் கொண்ட கூறுலின் பெண்கள் பொருத்த மாக இசைபாட, அடைக்கலம் என்பார்க்கு அருள் செய்து காப் பாற்றும் தவநிதியே! தாகா நபியே! தாலேலோ. தனிச்சிறப் புள்ள அப்துல்லாவின் புதல்வரே! சந்திரனே! தாகாவே! தாலேலோ.

விளக்கவுரை

சரணம்டைவாரைக் காக்கும் தவநிதி — தமது திருவடி களில் தாழ்ந்து பணிவாரைக் காப்பாற்றும் தவத்தின் நிதி போன்றவர். இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வர லாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. கத்தி யின்றி இரத்தமின்றி மக்காவை நபிகள் நாயகம் (ஸல்) வெற்றி கொண்டார்கள். மக்கா வாசிகள் திரண்டு கூடியிருந்தார்கள். அவர்களை நோக்கி, 'என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கின் றீர்கள்' என்று கேட்டார்கள். அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தார்க்கும், தோழர்க்கும் சொல்லொணாக் கொடுமை செய்தவர்களும் அக் கூட்டத்திலிருந்தார்கள். பெருமானாரது சிறிய தந்தை ஹளரத் ஹம்ஸா அவர்களைக் கொன்ற வஹ்ஷி இருந்தார். அவரது நெஞ்சப் பிளந்து ஈரல் எடுத்து மென்று துப்பிய ஹிந்தாவும் இருந்தாள். ஸைஷிகள், ''இரக்கமுள்ள சகோதரரின் இரக்கமுள்ள புதல்வரே, மன்னிக்க வேண்டுகி றோம்'' என்றனர். அத்தனை பேரையும் மன்னித்து அருளினார் கள். நினைத்திருந்தால் கொடுமை செய்தவர்களைக் கொன்று தீர்த்திருக்கலாம்; இ...து உலகியல்பு. இவ்வுலகியல்பை மாற் றிய பெருமை அண்ணல் (ஸல்) அவர்களைச் சாரும். அம்மணி பதக்கம்—அழகிய மணிகள் பொதித்திழைத்துச் செய்த பதக்கம் எனவும் பொருள் கொள்ளலாம். சுதாகரன்—அபிர்தகிரணன்— சந்திரன்.

இலக்கணக் குறிப்பு

விர்கதிர் — வினைத்தொகை, அணிமணிப்பதக்கம் — வினைத் தொகை, பண்புத் தொகையுமாம். மலரடி — உவமத் தொகை.

31. தேனெடு முக்கனி பாலொடு
சர்க்கரை தென்னமு தொன்றுகச்
சேர்த்தமு துறிய செவ்விதழ்
வாய்க்கிடத் தித்தம தாகுமுயர்

கான மலர்குழ லலிமா
விடமுலைக் கலச மருந்தாமல்
காரண மாகவே தோன்றிய
தனமொடு கலசமு துண்டோரே

மானவர் துதிசெயுஞ் ரெத
சவுந்தர மழை முகில் தாலேலோ
மறை நெறி பொங்கிய வரத
பரம்பர மனுபதி தாலேலோ

தானவர் துதிசெயுஞ் சாக
நிரம்பிய தவநிதி தாலேலோ
தலிய புதுல்லா குபர
சுதாகர தாகா தாலேலோ 8

பதவுரை

தேனெடு முக்கனி — தேனுடன் மா, வாழை, பலா, ஆகிய மூவகைக் கனிகளையும், பாலொடு சர்க்கரை — பாலுடன் சர்க் கரையையும், தென்னமுது — தென்னமுதையும், ஒன்றுகச் சேர்த்து — ஒன்றுகக் கூட்டி, அமுது ஊறிய — அமுதம் ஊறிய, செவ்விதழ் வாய் — செந்நிற இதழ்களை உடைய வாயின் கண், கிடத்தித் தமதாகும் — பொருத்தித் தம்முடைய தாகும், உயர்கால மலர்க் குழல் அலிமாவிடம் — உயர்ந்த நறுமலர் சூடிய கூந்தலை உடைய அலிமா அம்மாவிடம், முலைக்கலசம் அருந்தாமல் — நகிலாகிய கலசத்தில் பால் அருந்தாமல், காரணமாகவே தோன்றிய தனமொடு — அற்புதமாகத் தோன்றிய நகிலொடு, கலசம் அமுது உண்டோரே — கலசத்தில் பாலமுது பருகியவரே,

மானவர் துதி செயும் வரத — மனிதரெல்லாம் வணங்கிப் போற்றும் உபகாரியே, செளந்திர மழை முகில் தாலேலோ — அழகிய மழைமேகமே தாலேலோ, மறை நெறி பொங்கிய வரத — வேத நெறி ததும்பிய உபகாரியே, பரம் பரம் மனுபதி தாலேலோ — பரம்பரையாக வரும் மனித குலத்தின் தலைவரே தாலேலோ, தானவர் துதி செயும் — வித்தியாதரர் போற்றும், சாரம் நிரம்பிய — உண்மை நிலைநாட்ட, தவநிதியே! தாலேலோ தனி அபுதுல்லா குமரா — தனிச் சிறப்புள்ள அபுதுல்லாவின் புதல்வரே!, சுதாகர தாகா தாலேலோ — சந்திரனே! தாகா நபியே! தாலேலோ.

தெளிவுரை

தேனுடன் முக்கனிகளும் பாலுடன் சர்க்கரையும் தெள்ளிய அமுதும் ஒன்றுகச் சேர்த்து அமுதூறிய செவ்விதழ் வாய் பொருத்தி அலிமா அம்மாளின் மார்பகத்து அப்படியே பருகாமல் அற்புதமாகத் தோன்றிய அவரது மார்பகத்தில் பாலமுது பருகியோரே! மாந்தரெல்லாம் போற்றும் உபகாரியே! அழகிய மலை முகிலே! தாலேலோ. வேதநெறி ததும்பிய வள்ளலே! வழிவழியாக வரும் மனிதகுல மகுடமே! தாலேலோ விஞ்ஞையர் போற்றிடும் உண்மை நிலைநாட்ட தவநிதியே! ஒப்பற்ற அப்துல்லாவின் புதல்வரே! சந்திரனே! தாகா நபியே தாலேலோ.

விளக்கவுரை

தேனெடு ..... கலசமுதுண்டோரே! — தேன், முக்கனிச்சாறு, பால், சர்க்கரை, தெள்ளமுது ஆகிய ஒன்றுகச் சேர்த்து ஊறிய செந்நிறவாய் நபிகள் நாயகம் அவர்களின் செவ்வாய் எல்லாம் நயம் பயப்பதாகும். நாயகக் குழந்தையின் வாய் செவிலித்தாய் அலிமாவின் வற்றிய நகிலில் பொருந்தியதும் கும்பிய மார்பு சுடர் விட்டுச் செழித்து அமுதூறியது எல்லாம் வரலாற்றுச் செய்தி இச்செய்தி கற்பனை நயந்தோன்ற வர்ணிக்கப் பெற்றுள்ளது.

இலக்கணக் குறிப்பு

முக்கனி — பண்புத்தொகை. தெள்ளமுது — தெள்ளிய அமுது, பண்புத்தொகை. மலர் குழல் — மலரைச் சூடியுள்ள குழல், 2 ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. மனுபதி — 4 அல்லது 6 ஆம் வேற்றுமைத் தொகை.

32. இறையோன் மறையை யிகழ்ந்துபல
விளமை யணுகி மெலிந்தவரி
னிடைபோற் றேய்ந்த சிற்றிடையு
மியல் பாய் வணங்குந் தொழுகைதனை

மறதி யாக மறந்தோருள்
மனத்தி னிருட்போல் பைங்குழலும்
வளரும் பிறைநேர் முண்டகமும்
வளைந்த சிலைபோற் றிருநுதலும்

மறலி யயிற்போல் மை விழியும்
மதிபோற் குளிர்ந்த மறைமுகமு
மாடைச் சிமிட் போ. நீ குவிதனமாய்
வடிவு பெறவே மூப்பிதனைத்

திறமாய்த் திருப்போ லாக்கிவைத்த
செல்வ நபியே தாலேலோ
சென்னத் தரசே செகத்தரசே
செம்மற் கரசே தாலேலோ. 9

பதவுரை

இறையோன் மறையை இகழ்ந்து — இறைவன் அருளியுள்ள திருமறையைப் பழித்து, பல இளமை அணுகி மெலிந்தவரின் — பலவகையிலும் அறிவின்மையை அறைந்து மெலிந்து போனவரின், இடைபோல் தேய்ந்து போன சிற்றிடையும்— இடைபோல் தேய்ந்துபோன சிற்றிடையும், இயல்பாய் வணங்கும் தொழுகைதனை — இயல்பாக வழிபடும் தொழுகையை, மறதியாக மறந்தோர் — மறப்பு காரணமாகச் செய்ய மறந்தவரின், உள் மனத்தின் இருள்போல — உள் மனத்தில் உறைந்துள்ள இருள் படலம் போல, பைங் குழலும் — பசிய கூந்தலும், வளரும் பிறை நேர் முண்டகமும் — வளர்பிறை போன்று நெற்றியும், வளைந்த சிலைபோல் திருநுதலும் — வளைந்துள்ள வில்லைப்போன்ற அழகிய நெற்றியும், மறலி அயில்போல் மைவிழியும் — எமனது வேலாயுதம் போன்ற மைதீட்டிய விழிகளும், மதிபோல் குளிர்ந்த மறைமுகமும் — சந்திரனைப் போன்று (பொர்ச்சி பொருந்திய செந்தாமரை முகமும், மாடைச் சிமிழ் போல் — பொற் செப்புப்போல், குவிதனமாய் —குவிந்த நகில்களுமாய், வடிவு பெறவே — அழகிய உருவம் பெற்றிட, மூப்பதனைத் திறமாய்த் திருப்போல் ஆக்கிவைத்த, மூதாட்டியைத் திறமுடன் திருமகள் போல் செய்வித்த, செல்வ நபியே தாலேலோ — செல்வம் போன்ற நபியே! தாலேலோ, சென்னத்து அரசே — சொர்க்க லோகத்திற்கு அரசே! செகத்து அரசே — இவ்வுலகத்திற்கும் அரசே! செம்மறகு அரசே தாலேலோ —தலைவர்களுக்கெல்லாம் அரசே தாலேலோ,

தெளிவுரை

இறை மறையை இகழ்ந்து அறிவீனமடைந்து மெலிந் தோரின் இடைபோன்று தேய்ந்த சிற்றிடையும், இறைவனை வணங்கும் தொழுகையை மறந்தவரின் மனத்தில் உறைந்துள்ள இருள்போன்று கறுத்த கூந்தலும், பிறைபோன்ற நெற்றியும் வளைந்த வில்லைப்போன்ற புருவங்களும் எமனது வேல்படை போன்ற மைவிழிகளும் மதிபோன்ற முகமும் பொற்சிமிழ் போன்ற குவிந்த நகில்களும் பெற்று, மூப்புடைய கிழவியைத் திருமகள்போல் நிகழச் செய்த செல்வ நபியே! தாலேலோ! சென்னத்தரசே! செகத்தரசே! செம்மலரசே! தாலேலோ.

விளக்கவுரை

இறையோன்.....சிற்றிடை — மகளிர்க்குரிய சிற்றிடையை அருமையாக வர்ணிக்கின்றார் ஆசிரியர். இறையருளிய மறை களை இகழ்ந்துரைத்த அறிவினத்தால் தேய்ந்து மெலிந்து போனவரின் இடைபோல் தேய்ந்துபோன சிற்றிடை எனக் கூறுவது நயம்பயப்பதாகும். இயல்பாய்.....பைங்குழலும் — இளமாதரின் கருங்கூந்தலுக்கு இறைவனை வணங்குவதை மறந் திருப்பவர் தம் நெஞ்சில் நிரம்பியுள்ள இருளை உவமை கூறி யிருப்பதும் எண்ணி மகிழ்தற்குரியது. இறைமறை இகழ்பவர் அறிவு தேய்ந்து மெலிவர் என்பதும் இறைவனை வணங்க மறந்த வரின் நெஞ்சில் இருள் நிரம்பும் என்பதும் குறிப்பாக உணர்த் தப்படுகின்றன. மதியாற் குளிர்ந்த மரைமுகம் — இத்தொட ரில் மதியைப்போன்று குளிர்ந்த தாமரைமுகம் எனும் உவமையும் அமைந்துள்ளது. திருப்போல் — திருமகள் போல், அழகிற்கு எடுத்துக்காட்டாகத் திருமகளைக் கூறுவர். இது தமிழ் மரபு.

இலக்கணக் குறிப்பு

பைங் குழல் — பண்புத் தொகை. மறையில் — 6 ஆம் வேற்றுமைத் தொகை. மரைமுகம்—உவமத்தொகை. தாமரை என்பது முதல் எழுத்துக் கெட்டு மரை என்றுயிற்று. தொகுத் தல் விகாரம்.

33. வரபதி யொளிவினீ றபிரிந்தோரே
வடிவுள மணியென வுதித்தோரே
மரகத மயில்வடி வாளுரே
வரமுள நபிக்கர சாளுரே

புரபதி புகழ்மக்கத் தாரோரே
புலவர்கள் துதிமதி னுவோரே
பூமிக் கெல்லாங்குரு வாளுரே
புண்ணிய பதிக்கர சாளுரே

பரபதிக் கதிபதி தாலேலோ
பற்றலர் முடியிடி தாலேலோ
பாவ விநாசரே தாலேலோ
பதவி யருள்துரை தாலேலோ

நரபதி செயபதி தாலேலோ
நல் லவ ரணியுயிர் தாலேலோ
நவமணி திருமணி தாலேலோ
நபிஆத முஹவழி தாலேலோ. 10

பதவுரை

வரபதி ஒளிவினில் பிரிந்தோரே — வரமளிக்கும் தலைவ னுடைய இறை ஒளிவிலிருந்து பிரிந்து ஒளியாக வந்தோரே, வடிவு உள மணி என உதித்தோரே — அழகுள்ள மணியாகத் தோன்றியோரே, மரகத மயில் வடிவு ஆனேரே — பச்சை மணி வண்ண மயில் வடிவாக ஆனேரே, வரம் உள நபிக்கு அரசு ஆனேரே — இறைவனது அருட் பேறு கொண்ட நபிகளுக்கு எல்லாம் அரசாக ஆனேரே, புரம் பதி புகழ் மக்கத்து ஊரோரே —ஊர்களுக்கு எல்லாம் அரசாகிய புகழ் பொருந்திய மக்கம் எனும் ஊருக்குரிய தலைவரே, புலவர்கள் துதி மதினாவோரே —புலவர்கள் துதிக்கும் மதினா நகர்த் தலைவரே, பூமிக்கு எல்லாம் குருவானேரே — உலகங்களுக்கு எல்லாம் குருவாக அமைந்த வரே, புண்ணிய பதிக்கு அரசானேரே — சொர்க்கபதிக்கு அர சானேரே! பரபதிக்கு அதிபதி தாலேலோ — மேல் உலகிற்குத் தலைவரே தாலேலோ, பற்றலர் முடி இடி தாலேலோ — பகை வர் முடிகளுக்கு இடியானவரே தாலேலோ, பாவ விநாசரே— பாவங்களை அழிப்பவரே, பதவி அருள் துரை தாலேலோ— நற் பதவி அளித்து அருளும் துரையே தாலேலோ, நரபதி — மானி டர்க்குத் தலைவரே, செயபதி – வெற்றிக்குரிய தலைவரே, நல்ல வர் அணி உயிர் தாலேலோ — நல்லவரின் அழகிய உயிரே தாலேலோ, நவமணி — நவமணியே, திருமணி தாலேலோ — அழகிய மணியே! தாலேலோ, நபி ஆதம் முஹவழி தாலேலோ— நபி ஆதம் (அலை) அவர்களின் வழித்தோன்றலே தாலேலோ.

தெளிவுரை

இறைவனின் பேரொளிப் பிழம்பிலிருந்து பிரிந்து வந்த ஒளியே! அழகுமணியாகத் தோன்றியவரே! மயில்வடிவாக ஆனேரே! அருளுடைய நபிமார்க்கெல்லாம் அரசே! ஊர்களுக் கெல்லாம் அரசாகிய மக்கமாநகர்க் கரசே! புலவோர் புகழும் பதியாகிய மதினமாநகர்க்கரசே! புவிக்கெல்லாம் பெருங்குருவே! பொன்னுலக அரசே! விண்ணுலகத் தலைவரே! பகைவர் முடிக்கு இடியேறே! தாலேலோ. பாவவிநாசரே! பதவியருளும் துரையே!

தாலேலோ, மாந்தர் தம் தலைவரே! வெற்றித் தலைவரே! நல்ல வரின் அழகிய உயிரே! தாலேலோ. ஆதம் நபி வழித் தோன்றலே! தாலேலோ.

விளக்கவுரை

''வரபதி.....பிரிந்தோரே,'' ''வடிவுள.....உதித்தோரே'' ''மரகத மயில் வடிவாளெரே'' — இவற்றிற்கு விளக்கங்கள் முந்திய பாடல்களில் காண்க.

வரமுள நபிக்கர சாளெரே — இவ்வுலகிற்கு நல்வழி காட்டும் பொருட்டு இறைவனது அருள்பெற்று அவ்வப்போது நபிமார்கள் வந்துள்ளார்கள். இவர்களுள் இறுதியாக வந்தவர்கள் நபிகள் நாயகம். அனைவரின் அருளுரைகளையும் சேர்த்து உறுதியான வேதமும் செயல் முறைகளும் கொண்டுவந்தவர்கள். ஆதலின் நபிகளுக்கெல்லாம் நாயகம் எனப் போற்றப் பெறுகின்றார்கள். ''The most Successful of all the prophets and religious personalities'' எனப் பிரித்தானியக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுவது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பாவ விநாசரே — நபிகள் நாயகம் போதனையால் மக்கள் புறநெறி விட்டு அறநெறி நடக்க முற்பட்டனர். ஆதலின் பாபங்கள் செய்யப்பெரு தொழிந்தன என்பது குறிப்பு.

இலக்கணக் குறிப்பு

புரபதி—புரங்களுக்குப்பதி — 4 ஆம் வேற்றுமைத்தொகை. துதிமதிஞ — விகுத்தொகை. பற்றலர் — எதிர்மறை வினையாலணையும் பெயர்.

(தாலப்பருவம் முற்றிற்று)

சப்பாணிப் பருவம்

இது பிள்ளைத் தமிழின் நான்காவது பருவமாகும். ஐந்தாவது மாதத்தில் நிகழ்வது கூறும். பிள்ளை நிமிர்ந்து, உட்கார்ந்து இரு கைகளையும் ஒன்றுசேர்த்துக் கொட்டி ஒலிக்கும். இவ்வாறு உட்காரும் நிலையிலை இதற்குச் சப்பாணிப் பருவம் என்று பெயர் வந்தது என்பர் ஒருசாரார். கொட்டும் அமைப்பிற்குச் சப்பாணிப் பருவம் பொருந்தும் என்பர் பெரும்பாலோர்.

34. ஒப்புவமை யில்லாத வாதியொடு
வாசக முளங்கொண்டு நற்செபுறயீ
லொளிகுலவு நபிமார்கள் முன்வந்
துரைத்திட அண்மைகொண் டுலகானதிற்

கற்புநிலை தவருத மார்க்கவழி
வளர்வித்த கருணையுள நபிமார்களிற்
கன்னைசைக் கற்கொண்டெ றிந்த இபு
ருகீம் நபி காதலுறும் வழியானதிற்

றுப்பு நிலை சேராத ஆதிங்
குலத்திலே துணிவான லறிவாளரே
தொல்லுல கிலுமது கலிமாவைப்
பல செந்துகள் சொல்கின்ற மொழியானதைத்

தப்பாமல் கேட்கவே வந்தமகு
மூதரே சப்பாணி கொட்டியருளே
தானமருள் தருவெல்லக் கைகள்
சிவப்பூறவே சப்பாணி கொட்டியருளே! (1)

பதவுரை

ஒப்புவமை யில்லாத ஆதியொடு வாசகம் — இணையற்ற ஆதி இறைவனின் மொழியை, உளங்கொண்டு நற்செபுறயீல் —

நன்மை பொருந்திய ஜிபுறயீல் (அலை) மனத்தில் கண் கொண்டு, ஒளி குலவு நபிமார்கள் முன்வந்து உரைத்திட — ஒளி திகழும் நபிமார்களிடம் வந்து கூறிட, உண்மை கொண்டு உலகு ஆனதில் — அவ்வுண்மையை ஏற்றுக் கொண்ட இவ்வுலகில், கற்புநிலை தவறுத மார்க்க வழி — தூய நிலை தவறுத சன்மார்கக நெறியை, வளர்வித்த கருணைஉள நபிமார்களில்— வளரச் செய்த அருள் பொருந்திய நபிமார்களில், கல்லைசைக் கற்கொண்டு எறிந்த இபுருகீம் நபி — ஹன்ஞஸ் எனும் சைத் தானைக் கல்லால் எறிந்த நபி இபுருகீம் (அலை), காதல் உறும் வழியானதில் — அவர்களின் காதல் மிக்குத் தோன்றிய சந்ததி யிலே, துப்பு நிலை சேராத — தூற்றம் பொருந்தாத, ஆசீம் குலத் திலே — ஹாஷீம் குலத்தில், தூணிவான அறிவாளரே — உறுதி யான அறிவினை ஆளுவோரே, தொல்லுலகில் உமது கலிமாவை — தொன்மையான இவ்வுலகில் உங்களின் கலிமா எனும் தாரக மந்திரத்தை, பல செந்துகள் சொல்கின்ற மொழியானதை — பல உயிர்களும் கூறுவதை, தப்பாமல் கேட்க வந்த மகுமூதரே — தவறுமல் கேட்கும் பொருட்டு இவ்வுலகிற்கு வந்த மகுமூது நபி (ஸல்) அவர்களே, சப்பாணி கொட்டியருளே — இருகைகளை யும் சேர்த்து ஓசை எழுப்பி சப்பாணி கொட்டி அருள்வீராக, தருவன்ன தானம் அருள் கைகள் — கற்பகத் தரு போல தான தருமங்களை அருள்கின்ற உங்களின் கைகள், சிவப்பூறவே சப் பாணி கொட்டியருளே — செந்நிறம் கொள்ளும்படி சப்பாணி கொட்டி அருள்வீராக!

தெளிவுரை

ஒப்புமை இல்லாத ஆதி இறைவனின் மொழியை நன்மை பொருந்திய ஜிபுறயீல் (அலை) மனத்தில் கண் கொண்டு, ஒளி திகழும் நபிமார்களிடம் வந்து கூறிட, அவ்வுண்மையைஏற்றுக் கொண்ட இவ்வுலகில், தூயநிலை தவறுத சன்மார்க்க நெறியை வளரச் செய்த அருள் பொருந்திய நபிமார்களில், ஹன்ஞஸ்' எனும் சைத்தானைக் கல்லால் எறிந்த நபி இபுருகீம் (அலை) விரும் பிப் போற்றும் வழியில், குற்றம் பொருந்தாத ஹாஷிம் குலத் தில் உறுதியான அறிவினை ஆளுவோரே! தொன்மையான இவ் வுலகில் உங்களின் கலிமா எனும் மூலமந்திரத்தைப் பல உயிர் களும் கூறுவதைத் தவறுமல் கேட்கும் பொருட்டு இவ்வுல கிற்கு வந்த முகம்மது நபி (ஸல்) அவர்களே! இரு கைகளையும் சேர்த்து ஓசையெழும்படி சப்பாணி கொட்டி அருள்வீராக! கற்பகத் தருவைப் போல தான தருமங்களை அருள்கின்ற உங்க ளின் கைகள் செந்நிறம் கொள்ளும்படி சப்பாணி கொட்டி அருள்வீராக!

விளக்கவுரை

ஒப்புவமை.....உரைத்திட — இறைவனது மறைமொழிகளை மனத்தில் வாங்கி ஜிபுறயீல் (அலை) இறைவனது ஆணைக்கேற்ப

அந்தந்த நபிமார்களுக்கு வெளியிட்டு வந்தார். அம் மொழி களின் தொகுப்பே வேதங்கள் எனப்படும். நபிமார்கள் பெற்ற வேத உரைகள் சுஹுபுகள் எனப்படும். நபிமார்கள் நால்வர்க்கு வஹியின் மூலம் நான்கு வேதங்கள் அருளப்பட்டுள்ளன.

கன்னுசைக் கற்கொண்டு எறிந்த இபுருகீம் நபி:

நபி இபுருகீம் (அலை) கனவில் பெற்ற இறைவனது ஆணையை நிறைவேற்றும் நோக்கத்தோடு தமது அருந்தவப் புதல்வர் இஸ் மாயீல் (அலை) அவர்களைக் 'குர்பான்' செய்யும் பொருட்டு மீனு மலைக்கு அழைத்துச் சென்றார்கள். அன்னை ஹாஜரு விடம் தாய்ப் பாசத்தைத் தூண்டிவிட்டு இப்புனிதக் கடமை யைத் தடுக்க முற்பட்டான் ஷைத்தான்; தோல்விகண்டான். தனயர் இஸ்மாயீல் (அலை) அவர்களிடம் வந்து சாகசம் செய் தான். அங்கும் பலிக்கவில்லை. இறுதியாக இறைபக்தியில் முதிர்ந்த நபி இபுருகீம் (அலை) அவர்களிடமே அவனது கெடுக் கும் திறத்தைக் காட்டினான். முறியடிக்கப்பட்டான். இறைவ னிடம் மகுந்த காதல் கொண்ட இபுருகீம் (அலை) அடுத்துக் கெடுக்கும் சைத்தானைக் கல்லால் எறிந்து துரத்தினார்கள். இந் நிகழ்ச்சியை ஆசிரியர் சுட்டுகிறார்.

இலக்கணக் குறிப்பு

உளம் கொண்டு — உளத்தில் கொண்டு — 7 ஆம் வேற் றுமைத் தொகை. உளம் — உள்ளம் என்பதன் இடைக்குறை, தொடுத்தல் விகாரம். தொல்லுலகில் — பண்புத்தொகை.

35. கனமாகும் பூங்குடிற் கமலமுக
மைவிழிக் கனகதன மடவார்களுங்
கடவுளர்கள் முதலான நபிமார்க
ளனைவருங் கனலியொடு மதியானதும்

இனமாக மகிழ்கொள்ள இராகமிசை
தவறுமை யியம்புமன மறையோர்களு
மெந்நாளுங் கற்புநிலை தவறுமல்
வாழ்கின்ற இனியமொழி யெழின் மாதருஞ்

சினமான தின்றிநெறி நீதமாய்
வாழ்கின்ற சித்திரமுடி ராசாக்களுந்
திரைகடல் விளுருவாகி வந்ததிரு
மாது போற் சிறப்பான நற்றாயருந்

தனதாகக் களிகொள்ளத் தாமரைக்
கைகளால் சப்பாணி கொட்டியருளே
தண்டாரள மணியாக வந்தமது
மூதரே சப்பாணி கொட்டியருளே. (2)

பதவுரை

கனமாகும் பூங்குழல் — மேகத்தைப் போன்ற பூச்சூடிய கூந்தலையும், கமல முக — செந்தாமரை மலர் போன்ற முகத்தினையும், மைவிழி — மையுண்ட கண்களையும், கனக தன மட வார்களும் — பொன் போன்ற அழகிய தன பாரங்களையும் உடைய மாதர்களும், கடவுளர்கள் முதலான நபிமார்கள் அனைவரும் — வானவர்கள் முதலாகிய நபிமார்கள் அனைவரும், கனலியொடு மதியானதும் — சூரிய சந்திரரும், இனமாக மகிழ்கொள்ள இராகமிசை தவறுமல் இயம்பு மன மறையோர் களும்—கூடியுள்ளோர் மகிழ்ச்சி கொள்ளும்படியாக இராகமும், இசையும் தவறுமல் வேதம் ஓதுகின்ற மறையோர்களும், எந்நாளும் கற்புநிலை தவறுமல் வாழ்கின்ற இனிய மொழி எழில் மாதரும்—எப்போதும் எந்நாளிலும் கற்புநெறி தவறு மல் வாழ்ந்து வருகின்ற இன்மொழி பேசும் அழகிய பெண் களும், சினமான தின்றி நெறி நீதமாய் வாழ்கின்ற சித்திர முடி ராசாக்களும்—கோபமில்லாமல் நெறிமுறையில் வாழ் கின்ற அழகிய முடி சூடியுள்ள அரசர்களும், திரைகடலில் உருவாகி வந்த திருமாது போற் சிறப்பான நற்குயரும்—பாற் கடலில் தோன்றிய திருமகளைப் போன்ற சிறப்புப் பொருந் திய நல்ல தாய்மாரும், தனதாகக் களிகொள்ள — தம்முடை யதாகக் கொண்டு மகிழ்ச்சி கொள்ளும்படி, தாமரைக் கைக ளாற் சப்பாணி கொட்டியருளே — உங்களின் செந்தாமரை மலர் போன்ற கைகளால் சப்பாணி கொட்டி அருள்க. தண் தரளமணியாக வந்த மகமூதரே — குளிர்ச்சி பொருந்திய முத்துமணியாக வந்த மகமூதுரே (ஸல்) அவர்களே! சப் பாணி கொட்டியருளே — சப்பாணி கொட்டியருள்வீராக!

தெளிவுரை

நிறைந்த பூச் சூடிய மேகம் போன்ற கூந்தலையும் செந தாமரை மலர் போன்ற முகத்தையும் மையுண்ட கண்களை யும், பொன் போன்ற தனபாரங்களையும் உடைய மாதர்களும், வானவர்கள் முதலாகிய நபிமார்கள் அனைவரும் சூரிய சந்தி ரரும், கூடியுள்ளோர் மகிழ்ச்சி கொள்ளும் படியாக இராக மும் இசையும் தவறுமல் வேதம் ஓதுகின்ற மறையோர்களும், எப்பொழுதும் எந்நாளும் கற்புத் தவறுமல் வாழ்ந்து வரு கின்ற இன்மொழி பேசும் அழகிய பெண்களும், கோபமில் லாமல் நெறி முறையில் வாழ்கின்ற அழகிய முடி சூடியுள்ள அரசர்களும், பாற்கடலில் தோன்றிய திருமகளைப் போன்ற சிறப்புப் பொருந்திய நல்ல தாய்மாரும் தம்முடையதாகக் கொண்டு மகிழ்ச்சி கொள்ளும்படி உங்களின் செந்தாமரை மலர் போன்ற கைகளால் சப்பாணி கொட்டியருள்க. குளிர்ச்சி பொருந்திய முத்து மணியாக வந்த மகமூது (ஸல்) அவர்களே! சப்பாணி கொட்டி அருள்வீராக!

விளக்கவுரை

மடவார்களும் —, எழில்மாதரும் — நற்றுயரும்.....இவை முறையே கன்னிப் பெண்களையும் இல்லற மகளிரையும், அன்னையரையும் குறித்து நயம் பயக்கின்றன. திருமகளை நற்றுயருக்கு உவமித்தார் கலிமரபு பற்றி. இஸ்லாத்தில் இத்தகைய கொள்கை இல்லையெனினும் கலிமரபைப் பேணும் புலவர்கள் இங்ஙனம் கூறுவதில் தவறில்லை யென்க.

இலக்கணக் குறிப்பு

பூங்குழல் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கமலமுகம் — உவமைத் தொகை. திரைகடல் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. நற்றுயர் — பண்புத் தொகை. தாமரைக் கைகளால் — உவமைத் தொகை. தண்டரளம் — (தண் — தரளம்) — பண்புத் தொகை. தரளமணி — இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

36. வனமீறு வாரிசூழ் மண்பெறும்
பூவிலில் வறுமையிட ரணுகாமலே
வளர்கின்ற செல்வமு மறிவோடு
பயனுள்ள மறையோர்கள் சிறியோர்களுஞ்

சினமாறி வாழ்கின்ற செயமக்க
நாட்டினிற் செயிலென்னு மழையதனினுல்
சேதமாய்ப் போகை க.. பாவினைச்
குறைகிகள் செய்திடு மந்நாளிலில்

இனமான வீரியர்க ளெடுத்திடவு
மேலாம லிருந்தகச றுல் அசுவதென்
றியம்பிடுங் கல்லதனை யெழுந்த சுவர்
தென்கீழின் மூலைக்கெடுத் தேந்தியே

தனதாக வைக்குஞ் செந்தாமரைக்
கைகளாற் சப்பாணி கொட்டியருளே
தவமேவு மக்கருரு தாகா
முகம்மதே சப்பாணி கொட்டியருளே. (3)

பதவுரை

வனம் மீறு வாரி சூழ் — நீர் மிகுந்த கடல் சூழ்ந்த, மண் பெறும் பூவினில் — நிலத்தைக் கொண்டுள்ள இவ்வுலகில், வறுமை இடர் அணுகாமலே — வறுமைத் துன்பம் நெருங்

காமல், வளர்கின்ற செல்வமும்—குறையாமல் பெருகிவரு
கின்ற பொருட் செல்வமும், அறிவொடு பயனுள்ள—அறி
வுடன் பயனும் உள்ள, மறையோர்கள் சிறியோர்களும்—
மறைவல்லுநர் மட்டுமேயன்றி சிறியோர்களும், சினமாறி
வாழ்கின்ற—கோபமின்றி வாழ்ந்து வருகின்ற, செய மக்க
நாட்டினில்—வெற்றி பொருந்திய மக்கா மா நகரத்தைத்
கொண்ட நாட்டில், செயில் எல்லும் மழை அதனில்—
செயில் என்று அழைக்கப்படும் பெரு மழையினில், சேத
மாய்ப் போன க.ஃ.பாவினை—பழுதடைந்து போன க.ஃ.பத்
துல்லாவை, குறைசிகள் செய்திடும் அந்நாளினில்—மக்காவில்
வாழ்ந்த குறைஷி மக்கள் புனருத்தாரணம் செய்த அந்த
நாளில், இனமான வீரியர்கள்—உயர்ந்த சாதியார் எனக்
கருதப்பட்ட குறைசியருள் பராக்கிரம சாலிகள், எடுத்திட
வும் ஏலாமல் இருந்த—எடுத்து வைக்க இயலாமல் இருந்த,
கசறுல் அசுவத் என்று இயம்பிடும் கல்லதனை—ஹஜறுல் அசு
வத் என்று கூறப்பெறும் கல்லினை, எழுந்த சுவரில்—கட்டி
எழுப்பிய கஃ.பதுல்லாவின் சுவரில், தென்கீழின் மூலைக்கு
எடுத்து ஏந்தியே—தென்கிழக்கு மூலைக்குத் தூக்கி எடுத்து
ஏந்தி, தனதாக வைக்கும்— தனக்குரியதாக வைத்திடும்,
செந்தாமரைக் கைகளால் சப்பாணி கொட்டியருளே—செந்
தாமரை மலர்போன்ற கைகளால் சப்பாணி கொட்டி அருள்
வீராக. தவம் மேவு மிக்க குரு தாகா முகம்மதே—தவம்
பொருந்திய குருவே! தாகா முகம்மது (ஸல்) அவர்களே, சப்
பாணி கொட்டி அருளே — சப்பாணி கொட்டி அருள்வீராக!

தெளிவுரை

நீர் மிகுந்த கடல் சூழ்ந்த நிலத்தைக் கொண்ட இவ்
வுலகில் வறுமையும் துன்பமும் நெருங்காமல் பெருகிவரும்
செல்வமும் அறிவும் பயனும் பொருந்திய மறையோர்களே
யன்றி இளைஞரும் கோபம் நீங்கி வாழ்ந்து வரும் வெற்றித்
திரு நகராகிய மக்காவில் 'செயில்' எல்லும் பெருமழை
பொழிந்தது. க.ஃ.பத்துல்லா பழுதடைந்தது. இதனைப் புதுப்
பித்துக் கட்ட முற்பட்டனர், அப்போது உயர்ந்த தமது
குறைஷிக் குலத்தவருள் வீரபராக்கிரமருள்ளவர் எடுத்துவைக்க
முயன்று இயலாமற் போன ஹஜறுல் அசுவத் எனும் புனித
மிக்க கல்லினைக் கட்டப்பட்ட சுவரின் தென்கிழக்கு மூலையில்
எடுத்து ஏந்தி வைத்த செந்தாமரைக் கரத்தால் சப்பாணி
கொட்டி அருள்வீராக! தவத்தில் சிறந்து மிகுந்த குருவே!
தாகா முகம்மது நபி (ஸல்) அவர்களே! சப்பாணி கொட்டி
அருள்வீராக!

விளக்கவுரை

வளமீறு...—பூவினில் — அழகு மிகுந்த சோலை சூழ்ந்தி
வளமார்ந்த நிலம் கொண்ட உலகில் எனவும் காடுகள்

மிகுந்து நீர்வளம் பொருந்திய நிலத்தைக் கொண்ட உலகில் னவும் பொருள் கொள்ளலாம்.

கசறுல் அசுவத்: க.·.பத்துல்லாவின் சுவரில் தென்கிழக்கு மூலையில் பொதிந்திருக்கும் புனிதக்கல் ஹஜறுல் அஸ்வத் ஆகும். இது சொர்க்கத்திலிருந்து இறைவனால் அருளப்பெற்ற து நபி இப்ருகீம் (அலை) க.·.பாவைக் கட்டிய போது இக்கல்லை இணைத்தார்கள்.

நபிகள் நாயகம் இளைஞராக இருந்த பொழுது பெருமழை பொழிந்தது. க·.பா பழுதடைந்தது. குறைஷிகள் இதனைப் புதுப்பித்துக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். ஹஜறுல் அஸ்வத் எனும் புனிதக் கல்லை யார் எடுத்து வைப்பது என்பதில் பிரச்சினை எழுந்தது. பல்வேறு பிரிவினர் அடங்கிய அவர்கள் மறுநாள் காலையில் க.·.பாவிற்கு யார் முதலில் செல்லுகிறாரோ அவரே எடுத்து வைப்பது என முடிவு செய்தனர். இம்முடிவின்படி அடுத்தநாள் காலையில் முதலில் க.·.பாவிற்குச் சென்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே இப்பணியைச் செய்ய வேண்டியதாயிற்று, ஒரு துணியை விரித்து அதில் அக்கல்லைத் தங்கள் மலர்க்கரங்களால் எடுத்து வைத்து வேறு பட்ட பிரிவின் தலைவர்களைத் துணியின் தூனிகளைப் பிடித்துத் தூக்கித் தரச் செய்து தங்கள் திருக்கரங்களால் சுவரின்மேல் தென்கிழக்கு மூலையில் எடுத்து வைத்தார்கள். நடக்கவிருந்த பெரிய சண்டை நிறுத்தப்பட்டது. அத்துணை பேரும் இதனைப் பாராட்டினர்,

இலக்கணக் குறிப்பு

செந்தாமரை — பண்புத் தொகை. தாமரைக் கைகள் — உவமைத் தொகை,

37. கள்ளமன துள்ளநிலை யானவன் குபிரரைக்
கண்ணைதிரி லுறுரோரையுங்
களிப்பான நெறியின்றி யாள்கின்ற பற்பல
காவலொடு சூழ்வோரையும்

இவள்ளமென யூகமது துஞ்சிடச் செம்புனல்
பிறுந்தோட மேன்மேலுமே
வீகவாள் வலியுள்ள ராய்வந்த வாசகரே
விடமுள்ள தேளோடுமே

தொள்ளலுள வெயிற்றரவி னத்தினெடு மாருத
சூடுள்ள வெரியானது
சுரப்பான புகையினெடு பொறியொடு வளர்கின்ற
சுடரற்ற விருட்பிலம்பில்

தள்ளாமல் மன்முடிக் கரையேற்றுங் கைகளாற்
சப்பாணி கொட்டியருளே
சயிலமோ டுரைபேசி வந்த மகுமூதரே
சப்பாணி கொட்டியருளே! 4

பதவுரை

கள்ள மனது உள்ள நிலையான வல் குபிரரை — வஞ்சக நெஞ்சம் பொருந்திய மாற்ற நிலாத நிலைத்த வலிய இறை விரோதிகளுள், கண் எதிரில் உற்றுரையும் — தன் முன் வந்து எதிர்த்தோரையும், களிப்பான நெறியின்றி ஆள்கின்ற — மகிழ்ச்சி தரும் அறவழியில்லாமல் ஆளுகின்ற, பற்பல காவலொடு சூழ்வோரையும், — பல வகையான காவல் ஏற்பாடுகளால் சூழ்ந்துள்ளோரையும், யூகம் அது துஞ்சிட — படைகள் பட்டொழிந்திட, வெள்ளமென செம்புனல் மீகுந்தோட — வெள்ளம் போல குருதி பெருகி ஓட, மேன்மேலுமே வீக — மேலும் மேலும் வீழ்ந்திட, வாள் வலி உள்ளராய் வந்த அரசரே — வாள் வலிமை கொண்டவராய் வந்த அரசே, விடம் உள்ள தேளொடுமே — விடம் கொண்ட தேளுடன், தொள்ளல் உள்ள எயிற்று அரவு இனத்தினொடு — துளையுள்ள பற்களைக் கொண்ட பாம்புத் திரளுடன், மாருத சூடுள்ள எரியானது — ஆருத வெப்பம் பொருந்திய நெருப்பு, சுரப்பான புகையினொடு பொறியொடு வளர்கின்ற — செறிவான புகையுடனும் பொறிகளுடனும் பெருகி எழுகின்ற, சுடரற்ற இருள் பிலம்பில் தள்ளாமல் — ஒளியற்ற இருள் அடர்ந்த குழியில் தள்ளி விடாமல், மண் முடிக் கரை யேற்றும் — இறைவனிடம் இறைஞ்சி இன்பக்கரை சேர்க்கும், கைகளால் சப்பாணி கொட்டியருளே — திருக்கரங்களால் சப்பாணி கொட்டியருள்வீராக, சயிலமோடு உரை பேசி வந்த மகுமூதரே — மலையின் பக்கம் உரையாடி வந்த முகம்மது நபி (ஸல்) அவர்களே, சப்பாணி கொட்டியருளே — சப்பாணி கொட்டி யருள்வீராக!

தெளிவுரை

வஞ்ச நெஞ்சமுள்ள நிலையான வலிய இறைவிரோதிகளுள் தம்முன் வந்து எதிர்த்தோரையும், மகிழ்வுதராத மற நெறியில் ஆளுகின்ற மதில், அரண், படை முதலிய காவலால் பகுந்த மன்னர்களையும் படைகள் பட்டொழிந்து வெள்ளமென இரத்தம் பெருகி ஓடி மேலும் மேலும் வீழ்ந்திடச் செய்யும் வாள் வலிமை கொண்டு வந்த அரசே! விடமுள்ள தேளுடன் துளைப் பற்களையுடைய பாம்புத் திரளுடன் ஆருச் சூடுள்ள நெருப்பும் பொருந்தி வளரும் செறிவான புகையுடனும் பொறிகளுடனும் பெருகி எழும் ஒளிபற்ற இருட் குழியில் தள்ளிவிடாமல் இறைவனிடம் ஏந்தி இறைஞ்சி இன்பக் கரைசேர்க்கும் தங்களின்

திருக் கரங்களால் சப்பாணி கொட்டியருள்வீராக! மலையின் பக்கம் உரையாற்றிவந்த மகுமூது நபி (ஸல்) அவர்களேசப்பாணி கொட்டி அருள்வீராக.

விளக்கவுரை

குபிரர் — குபிருடையவர், இறைவனுக்கு மாறுக நடப்பவர், குபிர் என்னும் அறபுச் சொல்லுக்கு இறைவிரோதம் என்பது பொருளாகும்.

கள்ள மனதுள்ள நிலையான வன்குபிரர் :

இறை நேசம் கொண்டோரைக் கொன்று துன்புறுத்தும் கபட நெஞ்சம் கொண்டோர், இறைவனைக் குறித்த உண்மை களை உணர்ந்ததும் இறை நேசமும் பாசமும் கொண்டு விளங் கியவர் எண்ணற்றோராவர். இவ்வாறன்றி இறை விரோதம் செய்யும் மோசக்காரர்களாக மீடித்து இறை நேசர்களுக்கு வஞ் சம் புரிந்து வந்தவர்களும் உண்டு, இவர்களின் தாக்குதலிலி ருந்து தற்காப்புக்காக நபிகள் நாயகம் வாளெடுத்துப் போர் செய்ய நேர்ந்தது, அபூஜஹல் போன்ற கொடியவர்கள் பத்று முதலிய போர்களில் அழிந்து போயினர்.

விடம்.....பிலம்பில் :

விடம் கொண்ட தேள்களும் பாம்புகளும் நெளிந்திடும் மாறுத நெருப்பும் புகைப்படலமும் பொருந்திய நரகக் குழி. அக்குழியில் தம்மைப் பின்பற்றிய அன்பர்கள் விழுந்து துன்புறு திருக்கும் பொருட்டு நபிகள் நாயகம் (ஸல்) இருகையேந்தி இறைவனிடம் இறைஞ்சுவார்கள் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை.

சயிலம் மாடு உரைபேசி வந்த மகமூதரே :

முகம்மது (ஸல்) அவர்கள் உலக மக்கள் துன்பத்தினின் றும் உய்யும் நெறி இல்லையே என உள்ளம் பதைத்து ஹிரா மலைக் குகைக்குச் சென்று தியானித்து வந்தார்கள். இவ்வாறு தியானித்து வந்த போது ஒரு நாள் வானவர் தலைவர் ஜிப்ரயீல் (அலை) தோன்றி ''நாயகமே ஓதுவீராக'' எனக் கூறினர். நபிகள் நாயகம் (ஸல்) 'எதை ஓதுவது' எனக் கேட்டார்கள். 'படைத்த இறைவன் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக' எனக் கூறி ஆரத் தழுவினர் ஜிப்ரயீல் (அலை). இறை மறை உரை அருளப்பெற்றது. அன்று தொடங்கி மறை உரைகள் அவ்வப்போது அருளப்பெற்றன. நானிலை மக்களுக்கு நன்னெறி காட்டும் நபியாகத் திகழ்ந்தார்கள்.

சயிலம் ஆடு எனப் பிரித்து மலையாடாகிய மானுடன் பேசி வந்த மகுமூதரே என்றும் பொருள் கொள்ளலாம்.

இலக்கணக் குறிப்பு

வன் குபிரர் — பண்புத் தொகை. சூழ்வோர் — விகுதி பெற்ற வினையும் பெயர்.

38. போகமது மாறுத சொர்க்கநகர் தனிலுள்ள
பூவையர்கள் களிகொள்ளவும்
பொற்றேரில் இறைவான விரவியொடு புரவிகள்
புனிதமோ டொலிகொள்ளவும்

மேகமே ழொலிகொள்ள வெள்ளிமலை யொப்பான
மேனிலைகள் மேன்மேடை வாழ்
மேகலைகள் பூண்கொண்ட மாதர்களு மொலிகொள்ள
வேதியர்க ளிசையாகவே

யோகமோ டொலிகொள்ள அலைகடல்க ளொலி கொள்ள
வுயர் பல தருத்தோறிலு
மோராறு கால்கொண்ட வண்டினமு மொலிகொள்ள
வுலவுபல் சகுந்தங்களுங்

கோகிலமு மயிலினே டொலிகொள்ளக் கைகளாற்
கொட்டியருள் சப்பாணியே
குறைசிகுல திலக நிதி யானமகு
மூதரே கொட்டியருள் சப்பாணியே! 5

பதவுரை

போகம் அது மாறுத — இன்ப நுகர்ச்சி குறையாத சொர்க்க நகர் தனிலுள்ள பூவையர்கள் — சொர்க்க லோகத்தில் உள்ள மகளிர், களி கொள்ளவும் — மகிழ்வு எய்தவும், பொன் தேரில் உறைவான இரவியொடு — பொன்மயமான தேரில் அமர்ந்துள்ள சூரியனுடன், புரவிகள் — அத்தேரை இழுத்துச் செல்லும் குதிரைகள், புனிதமொடு ஒலி கொள்ளவும் — பரிசுத்தத்துடன் ஓசை பெறவும், மேகம் ஏழ் ஒலி கொள்வ —ஏழு மேகங்களும் முழங்கவும், வெள்ளிமலை ஒப்பான — இமய மலைக்கு நிகரான, மேல்நிலைகள் மேல்மேடை வாழ் — உயர்ந்த மாளிகைகளின் உப்பரிகைகளில் வதிகின்ற, மேகலைகள் பூண் கொண்ட — மேகலாபரணங்களை அணிந்துள்ள மாதர்களும், ஒலி கொள்ள — மகளிரும் ஆரவாரம் கொள்ளவும், வேதியர்கள் இசையாகவே யோகமோடு ஒலி கொள்ள — வேதம் ஓதுபவர்

கள் இசையென தியானத்துடன் ஆரவாரம் கொள்ளவும், அலைகடல்கள் ஒலி கொள்ள — அலையும் கடல்கள் ஆரவாரம் கொள்ளவும், உயர்பல தருத்தோறினும் — உயர்ந்த பலவகை யான மரங்கள் தோறும், ஓராறு கால் கொண்ட வண்டி னம் — ஆறு கால்களையுடைய வண்டுக் கூட்டங்கள், ஒலி கொள்ள — ரீங்காரம் செய்யவும், உலவுபல சகுந்தங்களும் — பறந்து திரிகின்ற பலவகைப் பறவைகளும், கோகிலம் மயி லொடு — குயில்களுடனும் மயில்களுடனும், ஒலி கொள்ள — ஆரவாரம் செய்யவும், கைகளால் கொட்டியருள் சப்பாணியே — திருக்கரங்களால் சப்பாணி கொட்டியருள்வீராக. குறைவி லுலதிலக — குறைவுக் குலத்தின் திலகமே, நிதியான மகு மூதரே — செல்வமாகிய முகம்மது அவர்களே! கொட்டியருள் சப்பாணியே — சப்பாணி கொட்டி அருள்வீராக.

தெளிவுரை

இன்ப நுகர்ச்சி குறையாத சொர்க்க லோகத்தில் பெண் கள் மகிழ்ச்சி கொள்ளவும், பொற்றேரில் அமர்ந்துள்ள சூரி யனுடன் பூட்டிய ஏழு குதிரைகளும் பரிசுத்ததுடன் ஆரவாரம் செய்யவும் ஏழு மேகங்களும் முழங்கவும் இமயமலை போன்ற மாளிகைகளின் மாடங்களில் வாழும் மகளிரும் மகிழ்ச்சி ஆர வாரம் செய்யவும் வேதியர்கள் இசையாக தியானத்துடன் ஒலி செய்யவும், உயர்ந்த மரங்கள் தோறும் வண்டினங்கள் இசை எழுப்பவும் பறந்து திரிகின்ற பலவகைப் பறவைகளும், குயில்களும், மயில்களும் மகிழ்வுடன் இன்னிசை எழுப்பும் திருக் கரங்களால் சப்பாணி கொட்டியருள்வீராக! குறைஷி குலத் திலகமே! செல்வமே! முகம்மது நபி (ஸல்) அவர்களே சப் பாணி கொட்டியருள்வீராக!

விளக்கவுரை

நாயகக் குழந்தை சப்பாணி கொட்டி ஒலி செய்வதனால் தேவ மாதரும் சூரியனும் மேகங்களும் உப்பரிகையில் உறைபவும் மாதர்களும், அலைகடல்களும் வண்டினங்களும், பறவையின மாகிய குயில்களும் மயில்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் என்று அமைத்திருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

பொற்றேரில்.....ஒலி கொள்ளவும் :

சூரியன் ஏழு குதிரைகள் இழுத்துச் செல்லும் ஒற்றைக்கால் தேரில் உலகைச் சுற்றி உலா வருவது கூறப்படுகின்றது. இது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. மேகலைகள் பூண் கொண்ட— மேகலைகளையும் பூண்களையும் அணிந்துள்ள என்றும் கொள்ள லாம்.

மேகம் ஏழ் — ஏழு மேகங்கள் உண்டு எனவும் இவை இந்திரனின் ஏவலுக் கேற்ப மழை பொழிவன எனவும் இந்து புராணங்கள் கூறும்.

குறைசி குல திலகம்: இந்துக்கள் நெற்றியில் இட்டுக்கொள்ளும் பொட்டிற்குத் திலகம் என்பர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறைஷிக்குலமாகிய பெண்ணுக்கு அழகு செய்யும் திலகம் எனக் கூறுகிறார். இது தமிழ் இலக்கிய மரபுமாம்.

இலக்கணக் குறிப்பு

களி — முதனிலை தொழிற் பெயர், பொற்றேர் — மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. குலத்திலகம் — உருவகம்.

39. மீளிபெறு மண்டல மடங்கலும் விரிவான
விண்ணிஞெடு வெண்மேகமும்
வீசுதிரை கடல்களொடு தருக்கள் செறி
மலைகளொடு விசும்பினுலை யெண்ணுகமுந்

தாளாமை யுள்ளபட மாயிரங் கொண்டநீர்
சர்ப்பமொடு விண்ணுகமுஞ்
சவியொளிவு குறையாத தபனனெடு நளிர்கொண்ட
சந்திரனை டுடுவானதுந்

தூனியெழத் தூவுபரி யாணையொடு தேர்கள்பல
தொத்தியொடு பலசேனையுஞ்
சோதியுறு மணிமகுட மன்னரொடு பலவே
சென்துமுதல் தொகையாவுமே

கோளனற் பணிகொள்ள சயவீர மாகவே
கொட்டியருள் சப்பாணியே
குறைசிகுல திலகநிதி யானமக மூதரே
கொட்டியருள் சப்பாணியே. 6

பதவுரை

மீளிபெறு மண்டலம் அடங்கலும் — பெருமை பெற்ற பூமி முழுவதும், விரிவான விண்ணிஞெடு வெண்மேகமும் — விரிந்துள்ள வானத்துடன் வெண்மையான மேகமும், வீசு திரை கடல்களொடு — அலைவீசுகின்ற கடல்களுடன், தருக்கள் செறி மலைகளொடு — மரங்கள் அடர்ந்த மலைகளுடன் விசும்பினுலை எண்ணுகமும் — ஆகாயத்தில் தங்கியுள்ள அட்டதிக்கு யானைகள் சட்டும், தாளாமை உள்ள படமாயிரம்

கொண்ட — ஊக்கம் கொண்ட ஆயிரம் படங்களை உடைய, நீர் சற்பமொடு விண்நாகமும்—நீரில் வாழும் பாம்பும் விண் ணுலகத்தப் பாம்பும், சவியொளிவு குறையாத தபனனொடு— அழகிய ஒளிகுறையாத சூரியனுடன், நளிர் கொண்ட சந்திர னொடு — குளிர்ச்சியைக் கொண்ட சந்திரனுடன், உடுவானதும் —விண்மீன்களும், தூளெழ—புழுதி எழ, தரவு பரி யானை யொடு தேர்சல் பல தொத்தியொடு பல சேனையும்—பிடரி முடியுடைய குதிரை யானைகளுடன் தேர்கள் பல தொகுதியுடன் பலவகைப்பட்ட படைகளும் (உடைய), தேசோதியுறு மணி மகுட மன்னரொடு—ஒளிபொருந்திய மணிகள் பதித்த முடி சூடிய மன்னர்களுடன், பல சீவ செந்து முதல் தொகை யாகவுமே—பலவகை உயிர்களுமுதல் திரளாக உள்ள அனைத்தும், கோள நற்பணி கொள் — வட்டமாக நின்று நல்ல பணிபுரிய, சய வீரமாகவே—வெற்றி வீரமாகவே, கொட்டியருள் சப் பாணியே — சப்பாணி கொட்டி அருள்வீராக! குறைசி குல திலக நிதியான மகுமூதரே — குறைஷி குலத்தின் நிலகம்போன் றவரே செல்வமான மகமூது நபி (ஸல்) அவர்களே, கொட்டி யருள் சப்பாணியே—சப்பாணி கொட்டி அருள்வீராக!

தெளிவுரை

பெருமை பெற்ற புவி முழுதும் விரிந்த வானமுடல் வெண் மையான மேகமும் அலை கடலுடன் மரங்கள் செறிந்த மலைகளும் அட்ட திக்கு யானைகள் எட்டும், ஊக்கமும் ஆயிரம் படங்களு முடைய நீரில் வாழும் பாம்பும் விண்ணகத்துப்பாம்பும், அழகிய ஒளி குறையாத சூரியனுடன் குளிர்ந்த சந்திரனும் விண் மீன் களும், புழுதி எழும்படி பிடரி முடியுடைய குதிரை யானையுடன் தேர்கள் பல தொகுதியுடன் பல்வேறு படைகளும் உடைய மணி முடி சூடிய மன்னர்களும் பலவகையான உயிர்த் தொகுதிகள் அனைத்தும் வட்டமாக நின்று நற்பணிபுரிய சப்பாணி கொட்டி அருள்வீராக! குறைஷி குலதிலமே! நிதியான மகுமூது நபி (ஸல்) அவர்களே! சப்பாணி கொட்டியருள்வீராக!

விளக்கவுரை

எட்டுத் திக்குகளிலும் எட்டு யானைகள் இருந்து உலகிற்குக் கேடுகள் வராமல் காத்து வருகின்றன என்பது இந்துப் புரா ணச் செய்தி. ஆயிரம் தலைகள் கொண்ட ஆதிசேடன் பாம்பும் இந்துப் புராணங்களில் கூறப்படுகின்றது. இங்கு ஆயிரம் தலை கள் கொண்ட நீர்ப்பாம்பும் வானுலகப் பாம்பும் கூறப்படுகின் றன.

இலக்கணக் குறிப்பு

நீர் சர்ப்பம் — ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. தரவு — இடவாகு பெயர்.

40. வண்டிசைகள் மாறுத மலர் வாவி மக்கநகர்
வாழ்வோர்களில் மண்டலமும்
விண்டலமு மெண்டிசையு மாண்டுதீன்
வளர்விக்க வொன்னு ரொடு

கண்டமது துஞ்சவொரு கைப்பிடி மண்ணதால்
சயங்கொளுஞ் சயவீரரே
தளை கொண்ட மானுக்குப் பிணைநிற்கப் பூவினிற்
றனதாக வந்ததுரையே

தண்டாமரை மலரினைப் பான பாதத்திற் சரணென்
றடைந்தோர் கள்பாற்
சந்தோஷமாய்க் கிருபை தப்பாம லருள்கின்ற
சய்யது முகம்மதுவே

கொண்டலென ஈயுமலர்க் கைகளால் மேன்மையொடு
கொட்டியருள் சப்பாணியே
குறைசி குலதிலக நிதியான மகுழ்தரே
கொட்டியருள் சப்பாணியே. 7

பதவுரை

வண்டிசைகள் மாறுத மலர்வாவி மக்கநகர் வாழ்வோர் களில் — வண்டுகளின் ரீங்காரம் மாறுத மலர்கள் பூத்துள்ள குளங்களைக் கொண்ட மக்கமா நகரத்தில் வாழ்பவர்களில், மண்டலமும் விண்டலமும் — பூவுலகும் வானுலகும், எண்டிசை யுமாண்டு தீன் வளர்விக்க — எட்டுத்திக்குகளிலும் சிறந்து தீன் நெறியை வளர்க்கும் பொருட்டு, ஒன்னுரொடு கண்டமது துஞ்ச ஒரு கைப்பிடி மண்ணதால் சயங்கொள்ளும் சயவீரரே — பகைவருடன் அவர்களின் படைகளும் அழிந்துபட ஒரு கைப்பிடி மண்ணால் வெற்றி பெறும் கொற்ற வீரரே, தளை கொண்ட மானுக்குப் பிணைநிற்க — கட்டுண்ட மானுக்குப் பிணையாக நிற் பதற்கு, பூவினில் தனதாக வந்த துரையே — உலகில் தாமே என வந்த துரையே, தண்தாமரை மலரின் ஒப்பான — குளிர்ந்த செந்தாமரைக்கு நிகரான, சரண் என்றவர்பால் சந்தோஷ மாய் கிருபை தப்பாமல் அருள்கின்ற — திருவடிகள் துணை என்று வந்தவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அருளைத் தவருமல் சொரி கின்ற, சய்யது முகம்மதுவே — தலைவராகிய முகம்மது நபி (ஸல்) அவர்களே, கொண்டல் என ஈயும் மலர்க் கைகளால் — கார்மேகத்தைப் போன்று வழங்கும் மலர்போன்ற தங்களின் கரங்களால், மேன்மையொடு கொட்டியருள் சப்பாணியே — மேன்மையுடன் சப்பாணி கொட்டி அருள்வீராக! குறைசி குல திலக நிதியான மகுழ்தரே — நிதி போன்ற நாதர் முகம்மது நபி (ஸல்) அவர்களே, கொட்டி அருள் சப்பாணியே — சப் பாணிகொட்டி அருள்வீராக.

தெளிவுரை

வண்டிசைப் பாடும் மலர்கள் பூத்துள்ள சோளங்களைக் கொண்ட மக்கமா நகரில் வாழ்பவருள் மண்ணகத்திலும் விண்ணகத்திலும் எட்டுத்திக்குகளிலும் சிறந்த முறையில் தீன் நெறியை வளர்க்கும் பொருட்டு பகைவர் தங்களின் படையுடன் அழிந்துபட ஒருபிடி மண்ணைல் வெற்றி பெற்ற கொற்றவரே! கட்டுண்ட மானுக்குப் பிணையாக நிற்பதற்கு உலகில் வந்த துரையே! குளிர்ந்த செந்தாமரை போன்ற தங்களின் திருவடிகளே துணை என்று வருவோருக்கு மகிழ்வுடன் தவறுமல் அருள்புரிகின்ற தலைவராகிய முகம்மது நபி (ஸல்) அவர்களே! மழைபோல் வழங்கும் தங்களின் மலரணைய கைகளால் மேன்மையுடன் சப்பாணி கொட்டியருள்வீராக! குறைஷி குல திலகமே! நிகியான மகுமூது நபி (ஸல்) அவர்களே! சப்பாணி கொட்டியருள்வீராக!

விளக்கவுரை

பிடி மண்ணைல் வெற்றிபெற்ற வரலாறு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த பொன்னகரை விட்டுச் சென்றபோதும் இஸ்லாத்தை அழிக்க முட்பட்ட குறைஷிகள் விட்டார்களில்லை. முஸ்லீம்களைத் தாக்கப் படையெடுத்துச் சென்றனர். பயிற்சி பெற்ற போர்வீரர்கள் ஆயிரம் பேர், குதிரைப் படை நூறு படைக்கலமும் உணவும் பிறவசதிகளும் பெற்றிருந்தனர். தற்காப்பிணை மேற்கொண்ட முஸ்லீம்களோ முன்னூற்று பதிமூன்று பேர். படைக்கலமும் இல்லை. போதிய பயிற்சியுமில்லை. முதியவருமிருந்தனர். இரண்டு குதிரைகள் தான் இருந்தன. இரு படைகளும் ஹிஜ்ரி 2ம் ஆண்டில் ரமலான் மாதம் பிறை 17 ல் பத்து எனும் இடத்தில் சந்தித்தனர். இவ்விடம் மதினாவிலிருந்து எண்பது மைல் தூரத்திலும் மக்காவிலிருந்து இருநூறு மைல் தூரத்திலும் இருக்கின்றது. போர் கடுமையாக நடைபெற்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம் மனமுருகி இறைஞ்சினார்கள். ஒரு கை மண்ணெடுத்து எதிரிகளை நோக்கி வீசியெறிந்தார்கள். இம்மண் துகள் பகைவரின் கண்காதுகளில் பட்டு பாதிக்கும்படி செய்தது இது சீறுவிலும் கூறப்படுகின்றது.

மானுக்குப் பிணை:

ஒரு சமயம் வேடனொருவன் மிகவும் முயன்று பெண்மானை ஒன்றைக் கண்ணிவைத்துப் பிடித்தான். அம் மானை தன் குட்டிக்குப் பால் கொடுக்கவும், தன்னைப் பிரிந்து அலமரும் ஆண் மானைக் கண்டு வரவும் விரும்பியது. வருந்திப் பிடித்த வேடன் விடுவானா? அவ்வேளையில் ஆங்கு வந்த நபிகள் நாயகம் (ஸல்) இதனையறிந்து இரக்கம் கொண்டார்கள். பெண்மான் தன் ஆண்

மானைக் கண்டும் குட்டிக்குப் பால் கொடுத்தும் வழுவதற்கு அனு மதிக்க வேண்டும் என்றும் அது வரத் தவறுமாயின் இருமான் களைத் தாம் தருவதாகவும் கூறினர்கள். நாயக மொழியில் தம் பிக்கை கொண்ட வேடன் அவ்வாறே செய்தான். பெண்மானும் ஆண்மானைக் கண்டு குறித்த காலத்தில் குட்டியுடன் திரும்பி யது. வியப்பில் ஆழ்ந்த வேடன் நாயக நெறியினை ஏற்று நல் வாழ்வு நடத்தினன். இவ்வரலாறு சீருப் புராணத்தில் மானுக் குப் பிணை நின்ற படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

மலர் வாவி — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை. மக்கநகர் வாழ்வோர்,— ஏழாம் வேற்றுமைத் தொகை. வாழ்வோர் ஒன்னூர் வினையாலணையும் பெயர். தண் டாமை — பண்புத் தொகை.

41. கதாயுதங் கொண்ட குபிரர் கரத்திலிற்
கரைந்தே தள்ளாடக்
காலையில் வெள்ள மழைத்து வலிக்கவுங்
கயஞ்சேர் மண்ணுன

சதாவிரு புகுந்து வாசனை வெல்லவுந்
தடமேல் வாழ்போகி
சரணம தென்று வணங்கவு மென்மேற்
சடமே வளர்வான

விதான மனத்துள் அபுசகல் மல்லாக்
வெருண்டே மருண்டோட
வென்றியுஞ் செய்திட வந்த முகம்மது
வேந்தே மெய்யான

குதாயுரை தவரு நல்வழி நீதா
கொட்டுக சப்பாணி
கொற்றவர்க் கரசரே அபுதுல்லா மகவே
கொட்டுக சப்பாணி. 8

பதவுரை

கதாயுதங் கொண்ட குபிரர் சுரத்திலிற் கரைந்தே தள் ளாடு அக்காலையில்—கதாயுதத்தையுடைய காபிர்கள் பாலை வழி யில் வேதனைப்பட்டுத் தள்ளாடுகின்ற வேளையில், வெள்ள மழை துவலிக்கவும் — மழை ஆராவாரத்துடன் பொழியவும், கயஞ் சேர் மண்ணுன சதா இரு புகுந்து வாசனை வெல்லவும்—மண்ணுக ளிருந்த சலத்தில் நீர் தொடர்ந்து மிகுதியாகப் புகுந்து பரிமளம் அதிகரிக்கவும், தடமேல் வாழ்போகி சரணமதென்று வணங்க வும்—தடத்தின் மீது வாழ்வு பெற்றுத் தஞ்சமென்று உங்களடி

யில் வணங்கவும், சடமே வளர்வான விதான மனத்துள்—கொடு மையே வளர்கின்ற வானம் போல் அகன்றிருக்கும் வஞ்சக மனத் தில், அபூசகல் மல்லால் வெருண்டே மருண்டோட, அபூசகல் என்பான் போர் செய்தலில் அஞ்சி மருட்சி கொண்டு ஓடவும், வென்றியும்செயீதிட வந்த முகம்மது வேந்தே—வெற்றிகொள்ள வந்த வேந்தராகிய முகம்மது நபி (ஸல்) அவர்களே, மெய்யான குதா உரை தவரு நல்வழி நீதா கொட்டுக சப்பாணி—உண்மை யான இறை உரை தவறுமல் நன்னெறி நடந்து காட்டிய நீதி வடிவானவரே சப்பாணி கொட்டுவீராக! கொற்றவர்க்கரசரே அபுதுல்லா மகவே கொட்டுக சகபாணி—அரசர்களுக்கு அரசரே! அப்துல்லாவின் புதல்வரே! சப்பாணி கொட்டுவீராக!

தெளிவுரை

கதாயுதத்தையுடைய காபிர்கள் பாலைவனப் பாதையில் வேதனைப்பட்டுத் தடுமாறுகின்ற வேளையில் மழை ஆராவாரத் துடன் பொழிந்து மண்ணைகவிருந்த குளத்தில் மழை நீர் தொடர் ந்து மிகுதியாகப் புகுந்து பரிமளம் அதிகரிக்கவும் தடத்தில் வாழ்வு பெற்றுத் தஞ்சமென்று தங்களின் தாள்களை வணங்கவும், கொடுமை வளர்கின்ற வானவிதானம் போன்ற வஞ்சக மனத் தில் அபூஜகல் அஞ்சி ஓடவும் வெற்றி கொள்ள வந்த வேந்த ராகிய முகம்மது நபி (ஸல்) அவர்களே! உண்மையான இறை யுரை தவறுமல் நன்னெறி நடந்து காட்டிய நீதி வடிவானவரே! சப்பாணி கொட்டுவீராக! வெற்றி வேந்தர்க்கரசே! அப்துல்லா வின் புதல்வரே! சப்பாணி கொட்டுவீராக!

விளக்கவுரை

அபூஜகல்: நபிகள் நாயகம் அவர்களின் கொடிய பகைவன். இஸ்லாம் பரவாமல் தடுக்கப் பெருமுயற்சி செய்தவன். இறுதி யில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்வதற்குத் துணிந்த வன். பத்று போரில் அவன் மாண்டொழிந்தான்.

இலக்கணக் குறிப்பு

கதாயுதம் — இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. வென்றி — மெலித்தல் விகாரம். கொட்டுக — வியங்கோள் வினை முற்று.

42. சிந்து நிறைந்த அலைக்கடல் ஆழ்ந்த
திரையிற் பாழ் கேணி
தெருவினிற சுண்ட பொழுதினிற் பலருண
தெளிந்தே நற்பாணி

கந்த மதாகவே போகவு மாஞ்டு
கதித்தே வந்தேணி
கழலடி வாழ்த்தவுங் கக்கொடு திருமறை
கற்றே நலவாணி

முந்தி யறிந்த நபிகளும் போற்றிட
முதலா யுதித்தாணி
முத்தி லுதித்தவண் வந்த முகம்மதே
முண்டகக் கைபேணி

கொந்தலு மின்றி களிப்பொடு நன்குயிக்
கொட்டுக சப்பாணி
குங்குமத் தொடையு புயந் தங்கிய நபியே
கொட்டுக சப்பாணி! 9

பதவுரை

சிந்து நிறைந்த அலைகடல் சூழ்ந்த — நீர் நிரம்பிய அலைகளைக் கொண்ட கடல் சூழ்ந்த தினையில் பாழ்கேணி தெருவினிற் கண்ட பொழுதில், மிகவும் சிறிய நீர் வறண்ட கேணி வீதியில் தங்களைக் கண்ட மாத்திரத்தில், பலருணத் தெளிந்தே நற்பாணி — பலரும் உண்ணும்படியாகத் தெளிந்த நல்ல நீர், கந்தமது ஆகவே போகவும் — மணங்கமழும் தேனைப் பாயவும், மாஞ்சொடு கதித்தே வந்தேனி கழலடி வாழ்த்தவும்—புருக்குடன் விரைந்து ஸீரூஜ் செய்த கழலணிந்த திருவடிகளை வாழ்த்தவும், கக்கொடு திருமறை கற்றே நலவாணி — இறைவனிடம் வேதங்களைக் கற்றுப் புனித மொழிகளை, முந்தியறிந்த நபிகளும் போற்றிட — முன்னரே அறிந்த நபிமார்களும் போற்றிசெய்ய, முதலாய் உதித்த — முதலாவதாக மூலமாய் உதித்த, ஆணி முத்தில் உதித்து அவண் வந்த முகம்மதே—சிறந்த ஆணி முத்தில் தோன்றி அவ்விடம் வந்த முகம்மது நபி (ஸல்) அவர்களே, முண்டகக் கைபேணி கொந்தலும் இன்றிக் களிப்பொடு நன்குயிக் கொட்டுக சப்பாணி— தாமரை போன்ற தங்களின் கைகளைக் கொண்டு குறையின்றிக் களிப்புடன் நன்கு சப்பாணி கொட்டு வீராக. குங்குமத் தொடை புயம் தங்கிய நபியே கொட்டுக சப்பாணி—குங்கும மலரால் தொடுக்கப்பட்ட மாலை புயத்தில் பொருந்திய நபியே சப்பாணி கொட்டுவீராக!

தெளிவுரை

நீர் நிரம்பிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த உலகில் மிகவும் வறண்டிருந்த கேணி, தெருவில் தங்களைக் கண்ட மாத்திரத்தில் பலரும் பருகும்படியாக தெளிந்த நல்ல நீர் மணங்கமழும் தேனைப் பாயவும் புருக்குடன் சென்று ஸீரூஜ் செய்த தங்களின் கழலணிந்த திருவடிகளை வாழ்த்தவும், இறைவனிடம் திருமறைகளைக் கற்று நல்ல புனித மொழிகள் பூண்கூட்டியே அறிந்திருந்த நபிமார்கள் போற்றி செய்ய மூலமாக உதித்து சிறந்த ஆணிமுத்தில் தோன்றி அன்று வந்த முகம்மது நபி (ஸல்) அவர்களே! உங்களின் தாமரைக் கைகளைக் கொண்டு குறைவின்றிக் களிப்புடன் நன்கு சப்பாணி கொட்டுவீராக! குங்கும மலர்மாலை புயத்தில் பொருந்திய நபியே சப்பாணி கொட்டுவீராக.

தெளிவுரை

நி. . . ருஜ் : இவ்வழுப்புச் சொல் ஏணிஎனும்பொருள் கொண்டது. நபிகள் நாயகம் மக்காவிலிருந்து பைத்துல் முகத்திஸிற்குச் சென்றுஅங்குள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளியிலிருந்து இறைவன் சந்நிதானத்திற்குச் சென்றுஇறைவனுடன் உரையாடி ஜிவெகூத் தொழுகைத் திட்டத்தைப் பெற்று வந்தார்கள்.

ஆணி முத்திலுதித்தல் : முன்னரே கூறப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

அலைக்கடல், கழலடி — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. நற்பாணி — பண்புத்தொகை முண்டகத்தை — உவமைத்தொகை.

43. குவலயந் தனக் கொரு மறைந்திடா விளக்கே
கொட்டுக சப்பாணி
குணமிலாப் பிணிக்கொரு சஞ்சீவி மருந்தே
கொட்டுக சப்பாணி

குவளையின் மலரெனக் கண்ணிரு மணியே
கொட்டுக சப்பாணி
காபதி புகுந்திட அருள்செய்யுந் துரையே
கொட்டுக சப்பாணி

குவைமிகு குறைசிக் குலங்க ளுயர்ந்திடக்
கொட்டுக சப்பாணி
குயில்மொழி யலிமாக் குலங்கள் தழைத்திடக்
கொட்டுக சப்பாணி

குவவு பெரும்புவி மன்னர் மலைறே
கொட்டுக சப்பாணி
குதாவொடு பேசிட வந்த முகம்மதே
கொட்டுக சப்பாணி. 10

பதவுரை

குவலயந்தனக்கொரு மறைந்திடா விளக்கே கொட்டுக சப்பாணி — உலகத்திற்கு அணையாத விளக்கே சப்பாணி கொட்டுவீராக. குணமிலாப் பிணிக்கொரு சஞ்சீவி மருந்தே கொட்டுக சப்பாணி — தீராத நோய் தீர்க்கும் ஒப்பற்ற மூலிகை மருந்தே சப்பாணி கொட்டுவீராக. குவளையின் மலரெனக் கண்ணிரு மணியே கொட்டுக சப்பாணி — குவளைமலர் எனும்படியான இரு கண்களின் மணியே சப்பாணி கொட்டுவீராக. காபதி புகுந்திட அருள் செய்யும் துரையே கொட்டுக சப்பாணி —

பாதுகாவலை உடைய சொர்க்கப் பதியில் சேர்ந்திட அருள்புரியும் துரையே சப்பாணி கொட்டுவீராக. குவைமிகு குறைசிக் குலங்கள் உயர்ந்திட கொட்டுக சப்பாணி — கூட்டம் மிகுந்த குறைஷிக் குலங்கள் உயர்ந்திட சப்பாணி கொட்டுவீராக. குயில் மொழி அலிமா குலங்கள் தழைத்திட கொட்டுக சப்பாணி — குயில் போலும் மொழிபேசும் அலிமா அம்மையாரைப்போன்ற தாய்க்குலம் தழைத்தோங்க சப்பாணி கொட்டுவீராக. — குவை பெரும்புவி மன்னர் மன்னேறே கொட்டுக சப்பாணி — மிகுந்துள்ள பெரிய புவியாளும் அரசர்க்கெல்லாம் அரசரேறே சப்பாணி கொட்டுவீராக. குதாவொடு பேசிட வந்த முகம்மதே கொட்டுக சப்பாணி — இறைவனோடு பேசிடப் போந்த முகம்மது நபி (ஸல்) அவர்களே சப்பாணி கொட்டுவீராக.

தெளிவுரை

உலகின் அணையா விளக்கே சப்பாணி கொட்டுவீராக. தீராத நோய் தீர்க்கும் ஒப்பற்ற மருந்தே சப்பாணி கொட்டுவீராக. குவலை மலரனைய இரு கண்மணியே சப்பாணி கொட்டுவீராக. காவல் பொருந்திய சொர்க்கப் பதியில் சேர்ந்திட அருளும் துரையே சப்பாணி கொட்டுவீராக. கூட்டம் மிகுந்த குறைஷிக் குலங்கள் உயர்ந்திட சப்பாணி கொட்டுவீராக. குயில்போல மொழி பேசும் அலிமா போன்ற தாய்க் குலங்கள் தழைத்தோங்க சப்பாணி கொட்டுவீராக.

விளக்கவுரை

குறைஷிக் குலங்கள்: நபிகள் நாயகம் (ஸல்) தோன்றிய குலம் குறைஷிக் குலமாகும். குலப் பிரிவுகளைப் பாராட்டக் கூடாது. 'ஒன்று தெய்வம் ஒன்று மக்கள் சாதி' என்பதே இஸ்லாத்தின் கொள்கையாகும். ஆதலின் இங்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவோரனைவரையும் குறிப்பிடுவதற்காக குலங்கள் என்று பன்மையில் அமைத்துள்ளார்.

''மாலிலந் தனைக்கோர் மணிவிளக்கெனலாய்'' எனவும் ''ஈனமுங் கொலையும் விளைந்திடும் பவநோய் இடர் தவிர்த்திடும் அருமருந்தாய்'' எனவும் சீறாப்புராணம் குறிப்பிடும்.

அலிமா:

நாயகக் குழந்தைக்குப் பாலமுதூட்டிய செவிலித்தாய்; ஸஅது குலத்தைச் சேர்ந்தவர். ஹலீனுல் நகரத்தினர். வறுமையால் வாடினார்; செல்வர் குழந்தைக்குப் பாலூட்டிப் பிழைக்கலாம் என்று மக்கா சென்றார். நாயகக் குழந்தையின் ஸ்பரிசத்தால் உடல் பூரித்தது. வறுமை நீங்கிச் செல்வப் பெருமை ஏற்பட்டது. நாயகமவர்கள் பெண்களுக்கு உரிமை வழங்கிச் சிறப்பித்தார்கள். இதனையும் கவிஞர் குறிப்பாக உணர்த்துகிறார்.

காபதி : கற்பகக் காவினை உடைய பதி என இந்துப் புராணம் கூறும் வழக்கும் பொருந்துவது காண்க.

இலக்கணக் குறிப்பு

மறைந்திடா விளக்கே குணமிலாப்பிணி — ஈறுகெட்டஎதிர் மறைப் பெயரெச்சங்கள். கொட்டுக — வியங்கோள் வினை முற்று. காபதி — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. குயில்மொழி — உவமத் தொகை குவவு பெரும்புவி — வினைத்தொகை. குதா — அல்லாஹ்வைக் குறிக்க உபயோகப்படுத்தப் பட்டுள்ள பாரசீகச் சொல்.

(சப்பாணிப் பருவம் முற்றிற்று.)

11-12

முத்தப் பருவம்

இது பிள்ளைத் தமிழின் ஐந்தாவது பருவமாகும். பதினொராம் மாதத்தில் நிகழ்வது கூறும். பிள்ளையை முத்தம் தாவென வேண்டுவதாக அமையும். முத்தம், ஊருணை, அம்புலி ஆகிய மூன்றும் பிள்ளைத் தமிழின் மிகச் சிறந்த பருவங்கள்.

44. பணமோடு படமீதிற் கலைகொண்ட
பாரினிற் பலனுள்ள நற் கீர்த்திதான்
பரிதிமதி மறைந்தாலும் வளர்வித்த
அபுதுல்முத் தலிபென்ற பதி நேயர்கள்ற்

குணமோடு பலவறிவு நிறைவான
மனமுள்ள குளிர்ந்தமொழி நேரமேவின்
கொற்ற அபுதுல்லா செய்நற்றவப்
பேறினுற் குழந்தைமக வானபியே

நிண மேவும் வலியவேற் செங்கரத்தினிற்
கொண்ட நிதிபரே குலைதீது கோன்
நேயமொடு பெற்றன்ன கூறுலீ
னிலையான நெறியுள்ள மகவானதை

மணமேக மலர்சூட வந்தமரு
மூகரே மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முக சந்திர மணியான
நகைகொண்ட மதுரவாய் முத்தமருளே.

பதவுரை

மனமோடு படமீதிற் கலை கொண்ட பாரினில் — பாம்பினது படத்தினுல் தாங்கப்பட்டுள்ள உலகில் பலனுள்ள நற் கீர்த்திதான், பரிதி மதி மறைந்தாலும் வளர்வித்த — சூரியன் சந்திரன் மறைந்தாலும் மறையாத புகழை வளரும்படி செய்த, அப்துல் முத்தலிபு என்ற பதிநேயர்களில் — அப்துல் முத்தலிபு என்னும் தலைவரின் மக்களில், குணமோடு பல அறிவு நிறைவான மனமுள்ள குளிர்ந்தமொழி நேரமேவுதின் கொற்ற அப்துல்லா — நற்குணத்தோடு பல துறை அறிவுகளும் நிரம்பிய மன நலமுள்ள, இனிய குளிர்ச்சியான மொழிகள்பொருந்திய வெற்றியையுடைய அப்துல்லா என்பார். செய் நற்றவப் பேறினுல் குழந்தை மகவு ஆன நபியே — செய்த நல்ல தவத்தின் பயனைக் குழந்தை

யாய்ப் பிறந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே, நீணம் மேவு வசிய வேல் செங்கரந் தனில் கொண்ட நிதிபரே — பகைவரின் கொழுப்புப் பொருந்திய அழகிய வேலாயுதத்தைத் தமது செவ்விய கையினிற் கொண்ட அரசே, குவைலீது கோன் நேயமொடு பெற்ற அன்னம் கூறுலீன் நீலியான நெற்றியுள்ள மக வானதை — குவைலிது மன்னர் விருப்பத்தோடு பெற்றெடுத்த அன்னம் போன்ற, கூறுலீன் என்னும் வானக மகளிரின் உயர் நீலை கொண்ட, பெண்மை நெறி பொலிகின்ற மகளாரா கிய கதீஜா நாயகியாரை, மணம்மேவ மலர் சூட வந்த மகு மூதரே — திருமணம் புரிய, மாலை சூடுவதற்காக வந்துள்ள முகம்மது நபி (ஸல்) அவர்களே, மதுரவாய் முத்தம் அருளே— இனிமை நிறைந்த தங்களின் திருவாய் கொண்டு முத்தம் தந்த ருள்வீராக. மரையொத்த முக சந்திர மணியான நகைகொண்ட மதுரவாய் முத்தமருளே—செந்தாமரைபோன்ற முகத்தில் சந்திர ஒளி போன்ற பற்களைக் கொண்ட இனிமை பொருந்திய தங்க ளின் திருவாயினுலே முத்தம் தந்து அருள்வீராக.

தெளிவுரை

பாம்பினது படத்தினுல் தாங்கப்பட்டுள்ள உலகில் சூரிய சந்திரன் மறைந்தாலும், மறையாத புகழை வளரும்படி செய்த அப்துல் முத்தலிபு என்னும் தலைவரின் மக்களில், நற்குணத் தோடு பலதுறை அறிவுகளும் நிரம்பிய மன நலமுள்ள இனிய குளிர்ச்சியான மொழிகள் பொருந்திய வெற்றியை உடைய அப்துல்லா என்பார் செய்த நல்ல தவத்தின் பயனைக் குழந் தையாய்ப் பிறந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே! பகைவ ரின் கொழுப்புப் பொருந்திய அழகிய வேலாயுதத்தைத் தமது செவ்விய கையினிற் கொண்ட அரசரே! குவைலிது மன்னர் விருப்பத்தோடு பெற்றெடுத்த அன்னம் போன்ற கூறுலீன் என் னும் வானக மகளிரின் உயர்நிலை கொண்ட, பெண்மை நெறி பொலிகின்ற மகளாராகிய கதீஜா நாயகியாரைத் திருமணம் புரிய மாலை சூடுவதற்காக வந்துள்ள மகுமூது நபி (ஸல்) அவர் களே இனிமை நிறைந்த தங்களின் திருவாய் கொண்டு முத்தம் தந்தருள்வீராக.

விளக்கவுரை

பணமோடு படமீதிற் சுமைகொண்ட — ஆயிரம் தலை கொண்ட ஆதி சேடன் என்ற பாம்பு இவ்வுலகைத் தன் தலை களால் தாங்கிக் கொண்டிருக்கிறது என்பது இந்துப் புராணச் செய்தியாகும்.

குவைலிது கோன் மகவு — நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதல் மனைவியார் கதீஜாப் பிராட்டியாரின் தந்தை யின் பெயர் குவைலித் ஆகும். கதீஜா நாயகியாரின் அருந்துணை யும் செல்வாக்கும் இஸ்லாம் பரவத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் உதவி யாயிருந்தன. நபிகள் நாயகத்தின் நுபுவத்தை முதல் முதலாக ஏற்றுக்கொண்டு இஸ்லாமிய நெறியில் நின்றவர்கள் இவ்வம்மை யாரே — எனவே 'நெறியுள்ள மகவு' என்றார்.

இலக்கணக் குறிப்பு

படமோடு, உருபுமயக்கம், நற்கீர்த்தி, நற்றவம்—பண்புத் தொகை, பரிதி மதி — உம்மைத் தொகை, குழந்தை மகவு — இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. செங்கரம்—பண்புத் தொகை, மதுரவாய் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

45. ஓதைதினை மாரூத வுவரிசூழ் உலகிலே
உயர்ந்தபதி மக்காவினி
லூடுபதியைக் குருவினி லழைத்திடவு மதுகண்டு
ஒருமையோ டுறவோர்களும்

போதையுறும் பெரியோர்கள் முதியோர்கள் சிறியோர்கள்
பொன்மகுட முடியாளரும்
பொறியுள்ள மும்மறைப் பொருள்கண்ட மெய்ஞ்ஞானப்
பொறியுள்ள கபீபரசனும்

காதைமிகச் செய்கின்ற வீரரொடு சேனையும்
கரியகுழல் மடவார்களும்
கற்கண்டி னினிதான கலிமாவை நன்முகச்
கழறும்படிச் செய்விக்கவே

வாதையணு காதயிறை யருளினுல் வந்தநபி
மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முகசந்திர மனியான நகைகொண்ட
மதுரவாய் முத்தமருளே. 2

ஓதை தினமாரூத — ஆரவாரம் என்றும் மாறுத, உவரி சூழ் உலகிலே — கடல் சூழ்ந்த நிலவுலகில், உயர்ந்த பதி மக்காவினில் — சிறந்த நகரமாகிய மக்காவினில், ஊடுபதியைக் குருவினில் அழைத்திடவும் — நட்சத்திரங்களுள் தலைவனாகிய சந்திரனை அமாவாசைநாளில் அழைச்சவும், அதுகண்டு ஒருமையொடு உறவோர்களும் — அதனைப் பார்த்து ஒன்றுபட்டுச் சுற்றத்தார்களும், போதையுறும் பெரியோர்கள் முதியோர்கள் சிறியோர்கள் பொன்மகுட முடியாளரும் — மதியயக்க முற்ற பெரியோர்களும் முதியவர்களும் சிறியவர்களும்பொன் முடி சூடிய மன்னர்களும், பொறியுள்ள மும்மறைப் பொருள் கண்ட மெய்ஞ்ஞானப் பொறியுள்ள கபீபரசனும் — அறிவு பொருந்திய மூன்றுமறைகளின் உட்பொருள் கண்ட மெய்ஞ்ஞானப் போதத் தினையுடைய ஹபீப் எனும் அரசரும், காதைமிகச் செய்கின்ற வீரரொடு சேனையும் — கொலையமிகச் செய்கின்ற வீரர்களுடன் படைகளும், கரியகுழல் மடவார்களும் — கருமையான கூந்தலையுடைய பெண்களும், கற்கண்டின் இனிதான கலிமாவை நன்முகக் கழறும்படிச் செய்விக்கவே — கற்கண்டைக் காட்டிலும் இனிமையான கலிமா எனும் மூலமந்திரத்தை நன்குக் கூறும்படிச் செய்வதற்காகவே,

வாதை அணுகாத இறை அருளினுல் வந்த நபி — நரகவேதனை நெருங்காமல் காக்கும் இறையவன் திருவருளினுல் வந்த நபியே, மதுர வாய் முத்தம் அருளே — இனிமை பொருந்திய தங்களின் திருவாயினுலே முத்தம் தந்து அருள்வீராக! மரை யொத்தமுகம் — செந்தாமரை போன்ற முகத்தில், சந்திர மணியான நகை கொண்ட — சந்திர ஒளிபோன்ற பற்களைக் கொண்ட, மதுரவாய் முத்தம் அருளே — இனிமை பொருந்திய தங்களின் திருவாயினுலே முத்தம் தந்து அருள்வீராக!

தெளிவுரை

ஆரவாரம் என்றும் மாறாத கடல் சூழ்ந்த நிலவுலகில் சிறந்த நகரமாகிய மக்காவினில் நட்சத்திரங்களின் தலைவனுகிய சந்திரனை அமாவாசை நாளில் அழைக்கவும் அதனைப் பார்த்து ஒன்றுபட்டுச் சுற்றத்தார்களும் மதிமயக்கமுற்ற பெரியோர் களும் முதியவர்களும் சிறியவர்களும் பொன்முடி சூடிய மன்னர்களும் அறிவு பொருந்திய மூன்றுமறைகளின் உட்பொருள் கண்ட பெய்ஞ்ஞானப் போதத்தினையுடைய ஹபீப் எனும் அரசரும் கொலையைமிகச் செய்கின்ற வீரர்களுடன் படைகளும் கருமையான கூந்தலையுடைய பெண்களும் கற்கண்டைக் காட்டிலும் இனிமையான கலிமா எனும் மூலமந்திரத்தை நன்றுகக் கூறும்படிச் செய்வதற்காகவே நரகவேதனை நெருங்காமல் காக்கும் இறையவன் திருவருளினுல் வந்த நபியே! இனிமை பொருந்திய தங்களின் திருவாயினுலே முத்தம் தந்து அருள் வீராக! செந்தாமரை போன்ற முகமும் சந்திர ஒளிபோன்ற முறுவலும் கொண்ட இனிமைபொருந்திய தங்களின் திருவாயி னுலே முத்தம் தந்து அருள்வீராக!

விளக்கவுரை

மும்மறை — திருக்குர் ஆனுக்கு முன்னுல் இறைவனுல் நபி மூசா (அலை) அவர்களுக்கும் நபி தாவூது (அலை) அவர்களுக்கும் நபி ஈசா (அலை) அவர்களுக்கும் அருளப்பெற்ற தௌராத், ஸபூர் இன்ஜில் ஆகிய மூன்று வேதங்களைக் குறிக்கும்.

உடுபதியைக் குருவினில் அழைத்திட — இது குறித்த வரலாறு முன்னரே கூறப்பட்டுள்ளது. கலிமா — முஸ்லிம்களின் மூலமந்திரம்-லாயிலாஹ இல்லல்லாஹு முகம்மதுற் றசூலுல்லா (இறைவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை. முகம்மது நபி (ஸல்) அவர்கள் இறைவனின் திருத்தூதராவார் கள்.)

இலக்கணக் குறிப்பு

உவரிசூழ் உலகு — வினைத் தொகை. உடுபதி — ஆறும் வேற்றுமைத் தொகை. நான்காம் வேற்றுமைத் தொகையுமாம். பொன் மகுடம் — மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்

தொக்க தொகை. குழல் மடவார் — இரண்டாம் வேற்றுமைத் தொகை. கற்கண்டின் — ஐந்தாம் வேற்றுமை உருபு உறழ்ச்சிப் பொருளில் வந்துளது. மரை தாமரையான முதல் குறை; தொடுத்தல் விகாரம்.

46. அழியாத யிறையுடைய முனிவினில் உருவான
அசாசிலொடு வழியானதி
லகப்பட்டு மாறுத அழலுடைய நரகினி
லழுங்கின்ற குலமானதில்

எழின்மேகந் தழுவுநெடுமலை போல தச்சாலு
மிகலாகப் புவி மீதினி
லிடராய்ப் பிறந்தவனீச் சிபுறீ லெடுத்தெறிந்திணை
யானகை கால்களால்

கழியான தொடருற்ற தளைபூட்டிக் கோபக்காக்
கல்லான கந்தரத்திற்
காவல்கொள் ளிறைபாலிற் கஞ்சமலர்க் கையேந்திக்
கருணையொடு கனிவாகநல்

வழியான மொழிகளாற்று வாச்செய்ய வந்தநபி
மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முகசந்திர மணியான நகைகொண்ட
மதுரவாய் முத்தமருளே! 3

பதவுரை

அழியாத யிறையுடைய முனிவினில் உருவான அசாசிலொடு — என்றும் அழியாதவனுகிய இறைவனின் கோபத்தால் உருவான அசாசிலுடன், வழியானதில் அகப்பட்டு — அவனுடைய தீயவழியில் அகப்பட்டு, மாறுத அழலுடைய நரகினில் அழுங்கின்ற குலமானதில் — என்றும் அழியாத நெருப்புடைய நரகத்தில் துன்புறுகின்ற கூட்டத்தினரில் உள்ள, எழின் மேக தழுவு நெடுமலை போல — அழகிய மேகம் தழுவுமாறு நீண்டு வளர்ந்துள்ள மலைபோல உயர்ந்த, தச்சாலு மிகலாப் புவி மீதினில் — தஜ்ஜால் என்பான பகைமையாக உலகத்தில் நல்லோர்க்கு இடராய்ப் பிறந்தவனை — இடராகப்பிறந்தான். அவனை சிபுறீலெடுத்து எறிந்து இணையான கைகால்களில் —ஜிபுறயீல் என்னும் அமரர் தலைவரைக் கொண்டு இறைவன் தூக்கி எறிந்தான், கழியான தொடருற்ற தளைபூட்டி —கைகளையும் கால்களையும் நெடுமையான தொடர்ந்த சங்கிலியால் கட்டி, கோபக் காக் கல்லான கந்தரத்தில்— கோபக்காமலையின் குகையில் அடைத்து, காவல் கொள் இறைபாலில் — சிறை செய்து காத்துவருகிறான் அத்தகைய இறைவனிடத்தில், கஞ்சமலர்க் கையேந்திக் கருணையொடு கனிவாக நல்வழியான மொழிகளால் — தாமரை மலர்போன்ற கைகளை ஏற்றிக் கருணையோடு இனிமையான நல்வழிகாட்டும் மொழிகளால்,

துஆச் செய்ய வந்த நபி மதுரவாய் முத்தமருளே — பிரார்த்தனை செய்வதற்காக வந்த நபிகள் நாயகமே இனிய வாய் கொண்டு முத்தம் அருள்வீர்களாக! மரையொத்த முகசந்திர மணியான நகை கொண்ட மதுரவாய் முத்தமருளே — தாமரை போன்ற முகத்தில் சந்திர ஒளிபோன்ற பல்வரிசை கொண்ட இனிய வாய்கொண்டு முத்தமருள்வீர்களாக.

தெளிவுரை

என்றும் அழியாதவனுகிய இறைவனின் கோபத்தில் உருவான அசாசிலுடன், அவனுடைய தீய வழிகளில் அகப்பட்டு, என்றும் அழியாத நெருப்புடைய நரகத்தில் துன்புறுகின்ற கூட்டத்தில் உள்ள, அழகிய மேகம் தழுவுமாறு நீண்டு வளர்ந்துள்ள மலைபோல உயர்ந்த தஜ்ஜால் என்பான் பகைமையாக உலகத்தில் நல்லோர்க்கு இடராகப் பிறந்தான். அவனை ஜிபுறயீல் என்னும் அமரர் தலைவரைக் கொண்டு இறைவன் தூக்கி எறிந்தான். கைகளையும் கால்களையும் நெடுமையான தொடர்ந்த சங்கிலிகளால் கட்டி கோபக்கா மலையில் குகைகளில் அடைத்துச் சிறை செய்து காத்துவருகிறான். அத்தகைய இறைவனிடத்தில் தாமரை மலர்போன்ற கைகளை ஏந்தி, கருணையோடு இனிமையான நல்வழிகாட்டும் மொழிகளால் பிரார்த்தனை செய்வதற்காக வந்த நபிகள் நாயகமே! இனியவாய் கொண்டு முத்தம் அருள்வீர்களாக! தாமரைபோன்ற முகத்தில் சந்திரனின் ஒளிபோன்ற பல்வரிசை கொண்ட இனியவாயினல் முத்த மருள்வீர்களாக!

விளக்கவுரை

அசாஜில்: (Azazil) ஷைத்தான் கூட்டத்தின் தலைவன். இறைவனின் சீற்றத்திற்கு ஆளானவன்.

தஜ்ஜால்:

நரகக் குழியில் வேதனைப்படும் நரகவாதிகளில் முக்கியமானவன். மிகவும் மலைபோன்ற தோற்றமுடையவன். இறுதிநாளின் (கியாமத் நாள்) முன் வந்து உலக மக்களிடத்தில் வந்து கடவுள் நம்பிக்கை குறித்துப்பேசி தானே கடவுள் என்று உரைப்பான். நபி ஈசா (அலை) அவர்களும் மஹதி (அலை) அவர்களும் அவனை அழித்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பர். இவனை ஜிறப்யீல் (அலை) அவர்கள் பற்றி இரு கைகளையும் கால்களையும் கட்டி கோபக்கா மலைக் குகையில் தள்ளியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு

அழுங்கின்ற — அழுங்குகின்ற என்பதன் தொகுத்தல் விகாரம். எழில் மேகம் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. நெடுமலை — பண்புத்தொகை. தச்சாலும் — தஜ்ஜால் என்னும் அறபுப் பெயரின் தமிழ்வடிவம்.

சிபுரீல்— ஜிப்றயில் என்னும் அறபுப் பெயரின் தமிழ் வடிவம். கஞ்சமலர் — இருபெயரொட்டுப் பண்புத் தொகை — மலர்க்கை—உவமைத் தொகை துவா — பிரார்த்தனையைக் குறிக்கும் அறபுச் சொல்.

47. பொறுமைநிலை தவறுத புவிமீதி லருந்தவம்
புரிந்திட்ட புகழோர்களின்
பொன்றியழிந் தோரரச னுயிர்பெற் றெழும்பிவரப்
புதுமைவழி தனைக்காட்டினை

நறுமையுள ஈசாநன் னபிநாதர் வாயினுல்
நவின்றமொழி நலமென்றுதா
னுடுதனி லறுநூறு வருடநாள் வரையிலு
நரர்கள்செலு நடைபாதையிற்

குறுமையணு காமலிருந் திரவுபக லிறைவனைக்
கொள்கையொடு தொழுதேத்தின
குணமுள்ள இசுருக்கு பண்டிதன் கண்டுதான்
கொண்டாடி நின்றுடவும்

மறைவலர்க டொழுதேத்த வந்தமகு மூதுநபி
மதுரவாய் முத்தமருளே
மரையொத்த முகசந்திர மணியான நகைகொண்ட
மதுரவாய் முத்தமருளே! 4

பொறுமை நிலை தவறுத புவிமீதில் அருந்தவம் புரிந்திட்ட புகழோர்களில் — பொறுமை நிலையிலிருந்து தவறுத இப்பூவுலகில் அரிய தவங்களை இயற்றிப் புகழ்படைத்தவர்களில், பொன்றி அழிந்த ஓர் அரசன் உயிர் பெற்று எழும்பி வர — இறந்தொழிந்த ஒரு மன்னன் மீண்டும் உயிர் பெற்று எழுந்து வரும் படியாக, புதுமை வழிதனைக் காட்டின, வியப்பான அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய — நறுமையுள ஈசா நன் நபி நாதர் — நன்மை பொருந்திய ஈசா (அலை) எனும் நல்ல நபியாகிய நாதர், வாயினுல் நவின்ற மொழி — திருவாயினுல் மலர்ந்தருளிய சொற்கள், நலமென்று தான் நாடுதனில் அறுநூறு வருட நாள் வரையிலும் நரர்கள் செலு நடைபாதையில் — நலமென்று கருதி தன்னுடைய நாட்டில் அறுநூறு வருடங்கள் வரையிலும் மனிதர்கள் நடந்து செல்லும் பாதையில், குறுமை யணுகாமல் இருந்து இரவுபகல் இறைவனைக் கொள்கையோடு தொழுதேத்தின — சிறுமை அணுகாமல் தங்கியிருந்து இரவிலும் பகலிலும் இறைவனை நெறிப்படி தொழுது போற்றிய, குணமுள்ள இசுருக்கு பண்டிதன் கண்டு தான் கொண்டாடி நின்றுடவும் — நற்பண்புகள் பொருந்திய இசுருக்கு என்னும் கிறித்துவப் பண்டிதர் நேரில் கண்டு மகிழ்ந்து கொண்டாடும்படியாக, மறைவலர்கள் தொழுதேத்த வந்த மகுமூது நபி — மறையில் தேர்ந்த வல்லுநர்கள் துதித்துப் போற்ற வந்த மகுமூது நபி (ஸல்) அவர்களே! மதுரவாய் முத்தம் அருளே — இனிமை

பொருந்திய திருவாயினுல் முத்தம் தந்தருள்வீராக. மரை யொத்த முக சந்திரமண்டல நகை கொண்ட மதுரவாய் முத் தம் அருளே! செந்தாமரைபோன்ற முகத்தில் சந்திர ஒளிபோன்ற பற்களைக் கொண்ட இனிமை பொருந்திய தங்களின் திருவாயி னுல் முத்தம் தந்தருள்வீராக.

தெளிவுரை

பொறுமை நிலையிலிருந்து தவறுத இப்பூவுலகில் அரிய தவங் களை இயற்றிப் புகழ் படைத்தவர்களில், இறந்தொழிந்த ஒரு மன்னன் மீண்டும் உயிர் பெற்று எழுந்து வரும்படியாக வியப் பான அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய நன்மை பொருந்திய ஈசா (அலை) எனும் நல்ல நபியாகிய நாதர் திருவாயினுல் மலர்ந் தருளிய சொற்கள் நலமென்று கருதி தன்னுடையநாட்டில் அறு நூறு வருடங்கள் வரையிலும் மனிதர்கள் நடந்து செல்லும் பாதையில் சிறுமை அணுகாமல் தங்கியிருந்து இரவிலும் பகலி லும் இறைவனை நெறிப்படி தொழுது போற்றிய நற்பண்புகள் பொருந்திய இசுரூக்கு என்னும் கிறித்துவப் பண்டிதன் நேரில் கண்டு மகிழ்ந்து கொண்டாடும் படியாக மறையில் தேர்ந்த வல் லுநர்கள் துதித்துப் போற்ற வந்த மகுமூது நபி (ஸல்) அவர் களே! இனிமை பொருந்திய திருவாயினுல் முத்தம் தந்தருள் வீராக! செந்தாமரை போன்ற முகத்தில் சந்திர ஒளிபோன்ற பற்களைக் கொண்ட இனிமை பொருந்திய தங்களின் திருவாயி னுல் முத்தம் தந்தருள்வீராக!

விளக்கவுரை

இசுரூக்கு: அரபு நாட்டில் வாழ்ந்த முதிய கிறித்துவப் பண் டிதர். திருக்குர் ஆனுக்கு முன்னர்த் தோன்றிய வேதங்களைத் துறை போகக் கற்றவர். ஈசா (அலை) அவர்கள் தம் மறையில் முகம்மது நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பின் வந்து மனித இனத்தை ஈடேற்றம் பெறச் செய்வார்கள் என்று கூறியுள் ளார். (நற்போதனைகள் பைபிள் பிரதிகளில் இப்பகுதி நீக்கப்பட் டுள்ளது). இதனை உணர்ந்த இசுரூக்குப் பண்டிதர் முகம்மது நபி (ஸல்) வருவதை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார். நபிகள் நாயகம் இளைஞராக இருந்தபோது தம்முடைய பெரிய தந்தை யாருடன் ஷாம் நகர் சென்று கொண்டிருந்தார்கள். இசுரூக்குப் பண்டிதர் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ப்பாற முற்பட்டார் கள். இளைஞரின் தோற்றப் பொலிவைக் கண்ட பண்டிதர் ஈசா நபி குறிப்பிட்ட ரட்சகர் இவர்தாம் என்று தெளிந்து மகிழ்ந்து விருந்து செய்து போற்றினர். இச் செய்தி சீறாப் புராணத்தில் விரிவாகக் காணப்படுகிறது.

இலக்கணக்குறிப்பு

அருந்தவம் — பண்புத் தொகை. நன்னபி — பண்புத் தொகை, இரவுபகல் — உம்மைத் தொகை.

48. தோகை முருந்து முல்லைநன்முரல்
துலங்கி யீன்ற கடியரும்புந்
துணிவு வுடைய தொடுபதமுஞ்
சுடர்சேர் புட்ப ராகமொடுந்

நாகு வலரி யீன்றமுத்து
நாக மிடத்தில் விரைத்தமுத்து
நகைதல் குறையா மதியின்முத்து
நாக மருப்பில் விளைந்தமுத்து

பாகுவுடை யகரும் பீன்முத்தும்
பலதின் முத்தைக் கோர்த்துந்தன்
பதுமத் திதழ்வாய் முத்தினுக்குப்
பாவித் துரைத்தல் சரியாமோ

வாகு குறையா தொளிவுடைய
மணிவாய் முத்த மளித்தருளே
வல்லோ னிடத்தில் மொழிந்துவந்த
மணிவாய் முத்த மளித்தருளே (5)

பதவுரை

தோகைமுருந்தும் — மயில் தோகையின் அடிக்குருத்தும், முல்லை நன்முரல் துலங்கியீன்ற கடியரும்பும் — முல்லைக் கொடி வளமுடன் ஈன்ற மணங்கமழும் அரும்பும், துணிவு வுடைய தொடுபதமும் — மருதநிலத்தில் வாழும் துணிச்சலையுடைய கொக்கின் கண் பிறந்த முத்தும், சுடர் சேர் புட்பராகமொடும் — ஒளி பொருந்திய புஷ்பராக மணியுடனும், நாடு வலரி ஈன்ற முத்தும் — செழுமையான தாமரை மலர் ஈன்றமுத்தும், நாகம் இடத்தில் விரைந்த முத்தும் — மலையின் கண் தோன்றி முற்றிய முத்தும், நகைதல் குறையா மதியின் முத்தும் — ஒளியில் குறையாத சந்திரனிடத்துப் பிறந்த முத்தும், நாக மருப்பில் விளைந்த முத்து — யானையின் தந்தத்தில் விளைந்த முத்தும், பாகுவுடைக் கரும்பின் முத்தும் — தித்திக்கும் பாகினைத் தருகின்ற கரும்பின் முத்தும், பலதின் முத்தைக் கோர்த்துந்தன் — இவ்வாறு பல் வேறு வகையான முத்துக்களையும் நன்முகக் கோர்த்தாலும் உங்களின், பதுமத் திதழ்வாய் முத்தினுக்கு — செந்தாமரை போன்ற ஈவந்த இதழ்களுடைய திருவாயில் உள்ள பற்களாகிய முத்துக்களுக்கு, பாவித்துரைத்தல் சரியாமோ — ஒப்பிட்டுக் கூறுதல் சரியாகுமா? வாகு குறையா தொளிவுடைய மணிவாய் முத்தம் அளித்தருளே — அழகு குறையாத ஒளியுயினையுடைய தங்களின் மாணிக்க வாயினுல் முத்தம் தந்து அருள்வீராக! வல்லோனிடத்தில் மொழிந்துவந்த மணிவாய் முத்தம் அளித்தருளே — எல்லாம் வல்ல இறைவனிடத்தில் உரையாடி வந்த மாணிக்கத் திருவாயினுல் முத்தம் தந்தருள்வீராக.

விளக்கவுரை

முத்துக்கள் பிறக்குமிடம் முன்னரே கூறப்பட்டுள்ளது.

இக்கணக் குறிப்பு

கடியரும்பு — உரிச் சொற்றொடர், சுடர்சேர் புட்பராகம் — வினைத்தொகை, நகைத்தல் குறையா — தொகுத்தல் விகாரம், சரியாமோ — ஓகாரம், விளிப் பொருளது. மணிவாய் — உவமைத் தொகை.

49. உள்ளார் குலத்தி னுயிரனைத்து
முலகு தனைவிட் டந்தரத்தே
யோட்டு மொளிசேர் வசிவனீ
யொத்த வருள்சே ருருவிழியுந்
தெள்ள லுடைய மறைமொழியுந்
திகழ லுடைய பலகவிகள்
சீற்ற மகற்றிப் பிரியமொடு
சீராய்க் கேட்கு நிருச்செவியுள்
கள்ளம் பொருந்தா மாத்துயர்ந்த
கனகப் புயமுங் கதிர்முகமுங்
கடலி னமுதும் பாற்றேனுக்
கரும்பின் பாகுங் கலந்ததெனை
விள்ளா வமிர்த மொழியுடைய
வேந்த முத்த மளித்தருளே,
வேதப் பொருளே முகம்மதுவே
விரைவாய் முத்த மளித்தருளே! (6)

பதவுரை

உள்ளார் குலத்தின் உயிர் அனைத்தும் — பகைவர் கூட்டத்தின் உயிர்களை எல்லாம், உலகு தனைவிட்டு அந்தரத்தே ஓட்டும் — உலகை விட்டு விண்ணுலகிற்கு ஓட்டுகின்ற, வசிவனீ ஒத்த அருள்சேர் இருவிழியும் — கூர்மையான வாளைப்போன்ற அருள் சேர்ந்த இரு விழிகளும், தெள்ளல் உடைய மறைமொழியும் — தெளிவுடைய திருமறை வசனமும், திகழல் உடைய பலகவிகள் சீற்றம் அகற்றிப் பிரியமொடு சீராய்க் கேட்கும் திருச்செவியும் — விளக்கம் பொருந்திய பலகவிகளையும் சினத்தை அகற்றி விருப்பத்துடன் சிறப்பாகக் கேட்கும் திருச்செவிகளும், கள்ளம் பொருந்தா மாத்து உயர்ந்த கனகப் புயமும் — குறைகள் ஏதுமில்லா மாற்றுயர்ந்த பொன் போன்ற தோள்களும், கதிர் முகமும் — ஒளி பொருந்திய முகமும், கடலின் அமுதும் பால் தேனும் கரும்பின் பாகும் கலந்ததென — பாற்கடலில் தோன்றிய அமுதமும் பாலும் தேனும், கரும்பின் பாகும் கலந்தது போல, விள்ளா அமிர்த மொழி உடைய வேந்தே — இனிமை மாறுத அமிர்தம் போன்ற மொழியையும் உடைய அரசே, முத்தம் அளித்தருளே — முத்தம் தந்து அருள்வீர்களாக. விரைவாய் முத்தம் அளித்தருளே — மணம் கமழும் திருவாயின் முத்தம் தந்து அருள்வீர்களாக.

தெளிவுரை

பகைவர் கூட்டத்தின் உயிர்களை யெல்லாம் இவ்வலகை விட்டு விண்ணுலகிற்கு ஓட்டுகின்ற கூர்மையான வாளைப்போன்ற அருள் சேர்ந்த இரு விழிகளும், தெளிவுடைய திருமறை வசனமும், விளக்கம் பொருந்திய பல கலைகளையும், இனத்தை அகற்றி விருப்பத்துடன் சிறப்பாகக் கேட்கும் திருச்செவிகளும், குறைகள் ஏதும் இல்லா மாற்றுயர்ந்த பொன் போன்ற தோள்களும், ஒளி பொருந்திய முகமும், பாற்கடலில் தோன்றிய அமுதமும் பாலும் தேனும் கரும்பின் பாகும் கலந்தது போல் இனிமை மாறுத அமிர்தம் போன்ற மொழியையும் உடைய அரசே முத்தம் தந்து அருள்வீர்களாக! மனம் வீசும் திருவாயின் முத்தம் தந்து அருள்வீர்களாக!

இலக்கணக் குறிப்பு

உள்ளார் — எதிர்மறை வினையாலணையும் பெயர், தொள்ளுடைய — இரண்டாம் வேற்றுமைத் தொகை. திருச்செவி — அடையடுத்த பெயர், பொருந்தா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கதிர் முகம் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை. பால்தேன் — உம்மைத் தொகை. விள்ளா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

50. முன்னோர் நடந்த மறைவழியை
முனிந்து முரணி மிகவளர்த்த
மூடன பூசகலை வெறுத்து
மூரியுடைய வயப்புலி போற்

றன்னு லுமறுவந் தருள்கலிமாச்
சகாதத் தோதிச் சேர்ந்தவுடன்
றவமும் புரியத் தகும்புடைத்துத்
தரமாய் வாங்கு சொல்லிடவும்

பொன்னு பரணப் பெருக்குதடைய
புகழ் சேர் குடக்கோன் நீனிலையில்
பொநந்தி வரவும் பூவுலகிற்
பொருந்த எவர்க்குங் காரணமாய்

முன்னே ளெள்வி லுதித்துவந்த
முத்தே முத்தமளித் தருளே
மோட்சப் பதவி காட்டவந்த
முத்தே முத்தமளித் தருளே! (7)

பதவுரை

முன்னோர் நடந்த மறைவழியை — முன்பு நேராக நடந்து வந்த மறையின் நெறியை, முனிந்து முரணே மிகவளர்த்த மூடன் அபுசகலே வெறுத்து — வெறுத்து பகைமையை மிகவும் வளரும்படி செய்த அறிவிலியாகிய அபுஜஹலே வெறுத்து, மூர்யுடைய வயப்புலி போல் — சினம் கொண்ட வலிய புலியைப் போல், தன்னுல் உமறு வந்தருள் கலிமாச் சகாதத் தோதி — உமறிபுனு கத்தாப் தானுகவே வந்து மூல மந்திரமாகிய கலிமா சகாதத்தை ஓதி, சேர்ந்தவுடன் — இஸ்லாத்தைத் தழுவியவுடன், தவமும் புரியத் தகும் புடைத்து — தவம் புரிந்து விக்கிரகங்களே உடைத்து, தரமாய் வாங்கு சொல்லிடவும் — சிறப்பாக 'பாங்கு' என்னும் தொழுகைக் குரிய அழைப்பினைக் கூறிடவும், பொன்னுபரணப் பெருக்குடைய புகழ்சேர் குடக்கோன் தீன்நிலையில் பொருந்தி வரவும் — பொன்னுல் ஆகிய அணிகளே நிறையப் பெற்ற புகழ் பொருந்திய மேலே நாட்டு அரசன் சன்மார்க்க மாகிய இஸ்லாத்தினைத் தழுவிடவும், பூவுலகிற் பொருந்த எவர்க்கும் காரணமாய் — பூவுலகின் கண் உள்ள அனைவர்க்கும் பொருந்துகின்ற அற்புதமாய், முன்னோன் ஒளியில் உதித்து வந்த முத்தே முத்தம் அளித்தருளே! ஆதி இறைவனுடைய ஒளியில் தோன்றி வந்த முத்தே முத்தம் தந்தருள்வீராக. மோட்சப் பதவி காட்ட வந்த முத்தே முத்தமளித்தருளே— சொர்க்கப் பதவியினை அனைவர்க்கும் காட்ட வந்த முத்தே முத்தம் தந்தருள்வீராக.

தெளிவுரை

முன்பு நேராக நடந்து வந்த மறையின் நெறியை வெறுத்துப் பகைமையை மிகவும் வளரும்படி செய்த அறிவிலியாகிய அபுஜஹலே வெறுத்து, சினம் கொண்ட வயப்புலியைப் போல் உமறிபுனு கத்தாப் தானுகவே வந்து மூல மந்திரமாகிய கலிமா சஹாதத்தை ஓதி இஸ்லாத்தைத்தழுவியவுடன் தவம் புரிந்து, விக்கிரகங்களை உடைத்து சிறப்பாக 'பாங்கு' என்னும் தொழுகைக்குரிய அழைப்பினைக் கூறிடவும், பொன்னுல் ஆகிய அணிகளே நிறையப் பெற்ற புகழ் பொருந்திய மேலே நாட்டு அரசன் சன்மார்க்க மாகிய இஸ்லாத்தினைத் தழுவிடவும் பூவுலகின் கண் உள்ள அனைவர்க்கும் பொருந்துகின்ற அற்புதமாய் ஆதி இறைவனுடைய ஒளியில் தோன்றி வந்த முத்தே முத்தம் தந்தருள்வீராக! சொர்க்கப் பதவியினை அனைவர்க்கும் காட்டவந்த முத்தே! முத்தம் தந்தருள்வீராக!

விளக்கவுரை

உமறிபுனு கத்தாப்: கத்தாபின் புதல்வர் உமறு என்பதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் போதிக்கத் தொடங்கியபோது அவர்களின் சிரத்தைக்

கொய்து வர கொலைவாள் எடுத்துப் புறப்பட்டார். வழியில் சந்தித்த ஒருவரின் கருத்திற்கிணங்க தன் தங்கையின் வீட்டிற்குச் சென்றார். அங்கிருந்து திருக்குர்ஆன் நாதம் வெளிப்பட்டது. சீற்றத்துடன் உள்ளே சென்றார். தன் சகோதரியும் மைத்துனரும் தங்களுக்குத் திருக்குர் ஆனைக் கற்றுக் கொடுத்த ஆசிரியரை மறைத்துவிட்டு அஞ்சி நின்றனர். தன் மைத்துனரை அடிக்க முற்பட்டார். சகோதரி இடை மறித்தார். உமறின் தாக்குதலுக்கு இடையன் சகோதரியின் நெற்றியிலிருந்து குருதி ஒழிந்தது. உமறின் மனம் மாறியது. அவர்கள் ஓதிய திருமறையைப் பெற்று ஓதினார். 'ஸப்பஹலில் லாஹி' எனத் தொடங்கும் இறைவசனம் உமறின் உள்ளத்தை உருக்கியது. இஸ்லாம் அவர்களை இழுத்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருக்குமிடம் சென்று கவி மாலை ஓதி இஸ்லாத்தைத் தழுவினார். இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அடுத்து மிகச் சிறப்பாக மதிக்கப்படுகிறார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமறு அல்லது அபூஜகலை இஸ்லாத்தில் சேர்த்தருளும்படி இறைவனிடம் கேட்ட துவா நிறைவேறியது.

இலக்கணக் குறிப்பு

வயப் புலி — உரிச் சொற்றொடர், பொன்னுபரணம் — மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை. குடக்கோன் — வேற்றுமைத் தொகை.

வாங்கு — பாங்கு — இது பாரசீகச் சொல். இதற்குச் சமமான அறபுச் சொல் அதான்.

51. துதியி லடங்காப் புகழுடைய
தோன்றல் பிறவுன் மகமான
தோகை யாசி யாதமையுஞ்
சுடரும் விரிந்த பொன்னுடனே
மதியைப் பழித்த மதிப்பெருக்கின்
வளஞ்சே ரிம்மூன் பெற்றெடுத்த
மகளா மறிய மாதினையும்
வல்லோன் பொருட்டா லாகிறத்தில்
விதியின் படியே வெண்மையுறு
மேனி யயிரா வதமிருந்து
விருதுக் கொடியு மூன்குலவ
விரைவாய்ப் பவனி வந்துமணம்

முதிய தவத்தாற் செய்யவந்த
முத்தே முத்த மளித் தருளே
முன்னே ளெளிவிற் பிரிந்தமகு
மூதே முத்த மளிததருளே. (8)

பதவுரை

துதியில் அடங்காப் புகழுடைய தோன்றல் — புகழ்ச்சியில் அடங்காத கீர்த்தியுடைய தோன்றல், பிறவுன் மகமான

தோகை ஆசியா தமையும் — 'பிர்அவுன்' உடைய மனைவியான மயில்போன்ற ஆசியா அம்மையாரையும், சுடரும் விரிந்த பொன்னுடனே — ஒளி மிகுந்த பொன்னுடன், மதியைப் பழித்த மதிப்பெருக்கின் — கலைகளாற் பொலியும் சந்திரனையும் தம் அறிவால் பழித்த அறிவுப் பெருக்கை உடைய, வளஞ் சேர் இம்ரூன் பெற்றெடுத்த மறியம் மாதினையும் — வளங்கள் சேர்ந்த இம்ரூன் என்பார் பெற்றெடுத்த மறியம் என்னும் மங்கையரையும், வல்லோன் பொருட்டால் — இறைவனின் திருவுள்ளப்படி, ஆகிறத்தில் விதியின்படியே வெண்மையுறு மேனி அயிராவதம் இருந்து — விதியின்படி, வெண்மையான மேனியையுடைய ஐராவதம் என்ற யானையில் இருந்து, விருதுக் கொடியும் முன்குலவ — வெற்றிக் கொடியானது முன்பு விளங்க, விரைவாய்ப் பவனி வந்து — விரைவாக உலாவந்து, மனமும் முதிய தவத்தால் செய்ய வந்த முத்தே — பெருந் தவத்தால் மணம் செய்துகொள்ள வந்த ஒளி முத்தே, முத்த மளித்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக, முன்னோன் ஒளியில் பிரிந்த மகுமூதே — ஆதி இறைவனின் பேரொளியிலிருந்து பிரிந்த ஒளியான மகுமூது நபி (ஸல்) அவர்களே, முத்தம் அளித்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக.

தெளிவுரை

புகழ்ச்சியில் அடங்காத கீர்த்திடயுடைய தோன்றல் 'பிர்அவுன்' உடைய மனைவியான மயில் போன்ற ஆசியா அம்மையாரையும் ஒளி மிகுந்த பொன்னுடன் கலைகளாற் பொலியும் சந்திரனையும் தம் அறிவால் பழித்த அறிவுப் பெருக்கை யுடைய வளங்கள் சேர்ந்த இம்ரூன் என்பார் பெற்றெடுத்த மறியம் என்னும் மங்கையாரையும் இறைவனின் திருவுள்ளப் படி சுவனப்பதியில் இறைவன் விதியின்படி வெண்மையான மேனியுடைய ஐராவதம் என்ற யானையிலிருந்து வெற்றிக் கொடியானது முன்பு விளங்க விரைவாக உலா வந்து பெருந் தவத்தால் மணம் செய்துகொள்ள வந்த ஒளி முத்தே! முத்தம் தந்தருள்வீர்களாக! ஆதி இறைவனின் பேரொளியிலிருந்து பிரிந்த ஒளியான மகமூது நபி (ஸல்) அவர்களே! முத்தம் தந்தருள்வீர்களாக!

விளக்கவுரை

ஆசியா: பிர்அவுன் மன்னனின் மனைவி. மிக அழகு வாய்ந்தவர். பிர்அவுனிடம் உடலுறவு கொள்ளாதவர். விண்ணகத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மணப்பார் என்பது செய்தி.

மறியம்: இம்ரூனின் மகள். ஈசா (அலை) அவர்களின் அன்னையார். கன்னித்தாய். விண்ணகத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மணப்பார் என்பது செய்தி.

ஐராவதம்: வானவர் தலைவனுகிய இந்திரனுக்குரிய வெள்ளை யானை என்பது இந்துப் புராணச் செய்தி.

இலக்கணக் குறிப்பு

அடங்கா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், தோன்றல் — ஆண்பாற் சிறப்புப் பெயர், தோகை — கிளியாகு பெயர், தோகை ஆசியா — உவமைத் தொகை.

52. சொக்குள கஞ்ச மலரிணை யடிகளிற்
சூட்டிய கௌசுடனே
சொல்லரி தான அறுசிட மேறிச்
சுபுகா னல்லா பால்

பக்கம தான மறையொடு மூதுரை
பண்பாயப் பேசிடவும்
பற்றலர் மணிமுடி துகள்படப் பொருதி
பலன்பெற தீன்பயிரை

திக்குல கெங்கும் வளர்த்துப் பெருக்கச்
செழுமழை முகிலெனவுஞ்
செம்மல்கள் மொய்த்தடி வந்துவ ணங்கித
திறையிட வோர் குடையில்

முக்கிய மாக்கிட வந்த தவநிதி
முத்தந் தந்தருளே
மூமீன் முகம்மது வானகிருபாநிதி
முத்தந் தந்தருளே! (9)

பதவுரை

சொக்குள கஞ்ச மலர் இணையடிகளில் — அழகிய செந்தாமரை மலர் போன்ற இரு திருவடிகளில், சூட்டிய கௌசுடனே — சூட்டிய பாதுகாப்புடன், சொல்லரிதான அறுசிட மேறி — சொல்லுதற்கு அரிதான விண்ணுலகில் உள்ள அறுசில் சென்று, சுபுகா னல்லாபால் — இறைவனிடம், பக்கமதான மறையொடு மூதுரை பண்பாய்ப் பேசிடவும் — அருகில் திருமறையுடன் பொருள் முதிர்ந்த மொழிகளைப் பண்புடன் பேசவும், பற்றலர் மணிமுடி துகள்படப் பொருதி — பகைவர்களின் மணிமகுடங்கள் தூளாகும்படி போர் செய்து, பலன் பெற தீன்பயிரை — உலகமக்கள் பயன்பெறும் பொருட்டு தீன சன்மார்க்கமாகிய தீன் எனும் பயிரை, திக்குலகெங்கும் — உலகின் திசையெங்கும், வளர்த்து பெருக்க — வளர்த்து பெருகும்படி செய்ய, செழு மழை முகிலெனவும் — செழுமை தரும் மழையினைப் பொழிகின்ற மேகம் போலவும், செம்மல்கள் மொய்த்து

அடி வந்து வணங்கி — தலைமை சான்ற மன்னர்கள் திரண்டு வந்து திருவடிகளை வணங்கி, நிறையிட — கப்பம் செலுத்த, ஓர் குடையில் —ஒப்பற்ற வெண் கொற்றக் குடையில், முக்கிய மாக்கிட வந்த தவ நிதி — முதன்மையாக்கிட வந்த தவத்தின் நிதியே, முத்தம் தந்தருளே — முத்தம் தந்து அருள்வீராக, மூமீன் முகம்மதுவான கிருபாநிதியே — மூமீன் முகம்மது நபி (ஸல்) ஆகிய அருட் செல்வமே, முத்தம் தந்தருளே — முத்தம் தந்தருள்வீராக!

தெளிவுரை

அழகிய செந்தாமரை போன்ற திருவடிகளில் சூட்டிய பாதுகாப்புடன் சொல்லுதற்கு அரிதான விண்ணுலகில் உள்ள அறுகில் சென்று, இறைவனிடம் அருகில் திருமறையுடன் பொருள் முதிர்ந்த மொழிகளைப் பண்புடன் பேசவும், பகைவர் களின் மணிமகுடங்கள் தூளாகும்படி போர் செய்து உலக மக்கள் பயன்பெறும் பொருட்டு சன்மார்க்கமாகிய தீன் எனும் பயிரை உலகின் திசையெங்கும் வளர்த்துப் பெருகும் படி செய்ய செழுமை தரும் மழையினைப் பொழிகின்ற மேகம் போலவும், தலைமை சான்ற மன்னர்கள் திரண்டு வந்து திரு வடிகளை வணங்கிக் கப்பம் செலுத்த ஒப்பற்ற வெண்கொற்றக் குடையில் முதன்மையாக்கிட வந்த தவத்தின் நிதியே! முத்தம் தந்து அருள்வீராக! மூமீன் முகம்மது நபி (ஸல்) ஆகிய அருட் செல்வமே! முத்தம் தந்து அருள்வீராக!

விளக்கவுரை

அறுசீர்க்குச் சென்று — 'மி..முஜ்' முன்னரே விளக்கப் பட்டுள்ளது. ஓர் குடையில் முக்கியமாக்கிட — அறபு நாட்டில் மக்கள் பல குலங்களாகவும் கோத்திரங்களாகவும் சிதறுண்டு கிடந்தனர். ஒவ்வொரு பிரிவினரும் தனித்து வாழ்ந்தனர். 'தடி யெடுத்தவன் தண்டல்காரன்' என்ற நிலை நிலவியது. சித றுண்டு கிடந்த அறபு நாட்டு மக்கள் அத்தனைபேரும் இஸ்லாத் தினுல் இணைப்புண்டனர். ஆட்சிமுறையறியாத அறபு மக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமையில் ஒன்று பட்டு ஒப்பற்ற சமுதாயமாக, சிறப்பு மிக்க செம்மையான ஆட்சி கொண்டு சிறந்து விளங்கினர்.

கௌசு — பாதுகாப்பு எனும் பொருள் கொண்ட அறபுச் சொல்.

இலக்கணக் குறிப்பு

இணையடி — பண்புத் தொகை. சுபுகானல்லா — சுபு ஹானல்லா என்ற அறபுச் சொல்லின் தமிழ் வடிவம். தூய்மை யான இறைவன் என்பதாகும்.

மூதுரை — பண்புத்தொகை, பற்றலர் எதிர்மறை வினையாலணையும் பெயர், செழுமழை — பண்புத் தொகை, தவநிதி — இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

53. முரனுட மரகத மலையினுக் கதிபா
முத்தந் தந்தருளே
முடவர்கள் நடந்திட வரஞ்செய்த நீதா
முத்தந் தந்தருளே
முருகு பொருந்திய கறுப்பாறு நாதா
முந்தந் தந்தருளே
மோட்ச பதிக்கதி பதியுள தாதா
முத்தந் தந்தருளே

முரடனுக் கறிவுரை பயிற்றிய வேதா
முத்தந் தந்தருளே
மூரிய நபிக்கெலா மூப்புள தூதா
முத்தந் தந்தருளே

முருடுமு ழங்கிய நகர்மதி னுபதி
முத்தந் தந்தருளே
மூமின் முகம்மது வானகிரு பாநிதி
முத்தந் தந்தருளே. (10)

பதவுரை

முரனுட மரகத மலையினுக்கு அதிபா — வலிமை யுடைய மரகத மலைக்குத் தலைவரே, முத்தம் தந்தருளே — முத்தம் தந்து அருள்வீர்களாக, முடவர்கள் நடந்திட வரஞ் செய்த நீதா — முடவர்கள் நடக்கும் படியாக வரங்கள் கொடுத்த நீதரே, முத்தம் தந்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக, முருகு பொருந்திய கறுப்பாறு நாதா — மணம் பொருந்திய கறுப்பாறு நாதரே, முத்தந் தந்தருளே — முத்தம் தந்து அருள்வீர்களாக. மோட்ச பதிக் கதிபதியுளதாதா — சுவன பதிக்கு அதிபதியான வள்ளலே, முத்தம் தந்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக. முரடனுக் கறிவுரை பயிற்றிய வேதா — முரடனுக்கு அறிவுரைகள் போதித்த வேதத்தை உடையவரே, முத்தந் தந்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக, மூரிய நபிக் கெலாம் மூப்புள தூதா — வலிமையான முன்பு வந்த நபிமார் களுக்கெல்லாம் முன்னவரான தூதரே, முத்தம் தந்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக. முருடு முழங்கிய நகர்மதினுபதி — முரசு முழங்கு மதினுநகரின் தலைவரே, முத்தம் தந்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக. மூமின் முகம்மது வான கிருபா நிதி — மூமினுன முகம்மது (ஸல்) ஆன கருணைச் செல்வரே, முத்தந் தந்தருளே — முத்தம் தந்தருள்வீர்களாக.

தெளிவுரை

வலிமையுடைய மரகத மலைக்குத் தலைவரே! முத்தம் தந்து அருள்வீராக. முடவர்கள் நடக்கும் படியாக வரங்கள் கொடுத்த நீதரே முத்தம் தந்தருள்வீர்களாக! மணம் பொருந்திய கறுப் பாறு நாதரே முத்தம் தந்து அருள்வீர்களாக! சுவனபதிக்கு அதி பதியான வள்ளலே முத்தம் தந்தருள்வீர்களாக! முரடருக்கு அறிவுரைகள் போதித்த வேதத்தை உடையவரே. முத்தம் தந் தருள்வீராக. வலிமையான முன்பு வந்த நபிமார்களுக்கெல் லாம் முன்னவரான நாதரே முத்தம் தந்தருள்வீராக. முரசு முழங்கு மதினு நகரின் தலைவரே! முத்தம் தந்தருள்வீர்களாக! பூமினை முகம்மது (ஸல்) அவர்களே! கருணைச் செல்வரே முத்தம் தந்தருள்வீர்களாக!

விளக்கவுரை

மூப்புலி துதா — நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுல கிற்கு வந்த ஒருலட்சத்து இருபத்திநான்காயிரம் நபிமார்களுள் இறுதி நபியாவார்கள். எனினும் உலகங்களையும் உயிர்களையும் படைப்பதற்கு முன்னால் இறைவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களை ஒளி மயமாகப் படைத்தான் என்பது மரபுச் செய்தி. இது கொண்டு பார்க்கும் பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏனைய நபிமார்களுக்கெல்லாம் முன் படைக்கப்பட்டவர்களாக அமைகிறார்கள்.

இலக்கணக் குறிப்பு

இருபாநிதி — பண்புத்தொகை.

(முத்தப் பருவம் முற்றிற்று).

வருகைப் பருவம்

பிள்ளைத்தமிழின் ஆருவது பருவம். 13ம் மாதத்தில் நிகழ்வது. தளர் நடை பயின்று வரும் பிள்ளையை 'வருக! வருக!' என வாய் குளிர மனமகிழ அழைப்பது. வாராநீப் பருவம் எனவும் வழங்கப்படும். சிறந்த பருவங்களுள் ஒன்று.

54. கடவு ளுவந்த பொருள்வருக
கற்றோர் பெரியோர்க் குயிர் வருக
கல்வி நிறைந்த மனதுடைய
கபீபு வருக கண்ணடங்காச்

செடிவு குலவு மெக் கீன் மரத்திற்
சென்று தொழுத முவ்வா வருக
திணையிற் றினின் பயிரேற்றும்
தேவே வருக செழுமுகில் போற்

கொடைகள் கொடுக்கும் நபிமாரின்
கோமகன் வருக கொடுமை யுறுங்
கூடார் களுக்கு ஏறுவருக
குயிலு மயிலு மகலாத

துடவை செறிந்த மக்கநகர்த்
தோன்றல் வருக வருகவே
துய்ய நபியே முகம்மதிற
சூலே வருக வருகவே (1)

பதவுரை

கடவுள் உவந்த பொருள் வருக—இறைவன் விரும்பிய செல்வமே வருவீராக! கற்றோர் பெரியோர்க்கு உயிர் வருக—கற்றோர், பெரியோர் முதலியோரின் உயிரே வருவீராக! கல்வி நிறைந்த மனதுடைய கபீபு வருக—கல்வி யறிவு இயல்பாகவே நிரம்பிய உள்ளமுடைய ஹபீபாகிய இறைநேசரே வருவீராக! கண்ணடங்காச் செடி குலவும் எக்கீன் மரத்தில்—கண்பார்வையில் அடங்காத ஒளிதிகழும் எக்கீன் எனும் விண்ணுலக மரத்தில், சென்று தொழுத முவ்வா வருக புருவடிவில் சென்று தொழுதிருந்த

தோன்றலே வருவீராக! திணையில் தினின் பயிர் ஏற்றும் தேவே வருக—உலகில் தீன் எனும் சன்மார்க்கப் பயிரை ஓங்கிவளரச்செய்யும் தேவே வருவீராக! செழு முகில் போல் கொடைகள் கொடுக்கும்—செழுமையான மழை பொழியும் மேகம்போல் கொடைவழங்கும், நபிமாரின் கோமகன் கவரு-நபிகளின் அரசே வருவீராக, கூடார்களுக்கு ஏறு வருக—பகைவர்களுக்கு ஏறே வருவீராக! குயிலும் மயிலும் அக லாத—குயில்களும் மயில்களும் நீங்காத, துடவை செறிந்த மக்க நகர்—பொழில்கள் சூழ்ந்துள்ள மக்கமா நகரின், தோன்றல் வருக வருகவே—தோன்றலே வருவீராக! வருவீராகவே! துய்ய நபியே முகம்மது ரசூலே வருக வருகவே—தூய்மை யான நபியே முஹம்மது றஸூல்(ஸல்) அவர்களே வருவீராக! வரு வீராகவே!

தெளிவுரை

இறைவன் விரும்பிய செல்வமே வருவீராக! கற்றோர், சான்றோர் முதலியோரின் உயிரே வருவீராக, விண்ணகத்தி லுள்ள கண்ணிலடங்காத ஒளிதிகழும் எக்கீன் மரத்தில் புறுவடிவில் தொழுதிருந்த தோன்றலே வருவீராக! உலகில் தீன் எனும் சன்மார்க்கப் பயிரை ஓங்கி வளரச்செய்யும் தே வே வருவீராக! செழுமையான மழைபொழியும் மேகம் போல் கொடைவழங்கும் நபிகளின் அரசே வருவீராக! பகை வர் ஏறே வருவீராக! குயில்களும் மயில்களும் நீங்காத பொழில்கள் சூழ்ந்துள்ளள மக்கமாநகரின் தோன்றலே வரு வீராக! வருவீராகவே! தூய்மையான நபியே! முஹம்மதி ற சூல் (ஸல்) அவர்களே வருவீராக! வருவீராகவே!

விளக்கவுரை

கடவுள்—சொல்லையும் மனத்தையும் கடந்திருப்பவன். உருவமறற வரம்பற்ற ஆற்றலுள்ள இறைவன் காலமும் இட முழம் கடந்திருப்பவன் எனும் இஸ்லாமியக் கொள்கையை கொண்டுள்ளது.

எக்கீன் மரம்—இதுபற்றிய விளக்கம் முன்னரே தரப் பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

கற்றோர்— தெரி நிலை வினையாலணையும் பெயர், பெரி யோர்—குறிப்புவினையாலணையும் பெயர், வருக — வியங்கோள் வினைமுற்று, கண்ணடங்கா — எதிர்மறைப் பெயரெச்சம், கூடார்—எதிர்மறை வினையாலணையும் பெயர். செழுமுகில்— பண்புத்தொகை, பொருள், உயிர், முளை, ஏறு—உருவகங்கள்.

55. நன்றி விளைக்குந் தவத்தோர்க்கு
நாதா வருக வேத மொழி
நவிலும் பவள இதழுடைய
நாவே வருக நாடுதனில்

வென்றி யுளநூல் நான்மறைக்கும்
வித்தே வருக விக்கினங்கள்
விளக்குங் குருவாய் வந்துதித்த
விளக்கே வருக மெய்யறிவில்

சென்று வரவே புவி பிறந்த
தீரா வருக திருவடியுஞ்
சேக நிழலுந் தோற்றுத
சீமான் வருக செந்நெல் கனற்

றுன்ற வுடைய மக்கநகர்த்
தோன்றல் வருக! வருகவே!
துய்ய நபியே முகம்மதுற்
ற சூலே வருக வருகவே (2)

பதவுரை

நன்றி விளைக்கும் தவத்தோர்க்கு—நன்மை பயக்கும் தவம் செய்வார்க்கு, நாதா வருக நாதாவே வருகவே! வேத மொழி நவிலும்—மறையு ரகளைக் கூறும், பவள இதழுடைய நாவேவருக—பவளம் போன்ற செவ் இதழ்களை உடைய நாவே வருக. வென்றி உளநூல் நான்மறைக்கும்—வெற்றியினைப் பொருந்தியுள்ள நூல்களாகிய தெளருத், ஸபூர், இன்ஜில், குர் ஆன் என்னும் நான்கு மறைகளும் தோன்றுவதற்கு, வித்தே வருக—வித்தானவரேவருக! விக்கினங்கள் விளக்கும் குருவாய் வந்துதித்த விளக்கேவருக—தீமைகள் இவை யென்று விளக்கிக்காட்டும் குருவாக வந்து தோன்றிய விளக்கே வருக, மெய் அறிவில் சென்று வரவே—மெய்ப் பொருளாகிய இறைவனின் விண்ணகத்து அறிவுக்குச் சென்று வருதற்கு, புவி பிறந்த தீரா வருக—இம் மண்ணகத்தில் பிறந்த தீரரே வருக! திருவடியும் சேக நிழலும் தோற்றுத—அழகிய பாதங்களும் செறித்த நிழலும், தோற்றுத சீமான் வருக—நிலத்தில் பொருந்தாத சீமானே வருக! செந்நெல் கனல் துன்றல் உடைய செந்நெல்லும் கரும்பும் செறிந்திருத்தலை உடைய, மக்க நகர்த் தோன்றல் வருக வருகவே—மக்க மா நகரத்திற் தோன்றலே வருக! வருகவே!

தெளிவுரை

நன்மை பயக்கும் தவம் செய்வார்க்கு நாதரே வருக! திருமறையின் வரைகளே மொழியும் பவள இதழ் நாவே வருக வெற்றி பொருந்திய நால்களாகிய நான்கு வேதங்கள் தோன்று வதற்கு வித்தானவரே வருக! நன்மை தீமைகளை விளக்கிக் காட்டும் குருவாய் வந்து தோன்றிய விளக்கே வருக! மெய்ப் பொருளாகிய இறைவனின் விண்ணகத்தில் உள்ள அறுசிற்குச் சென்று வருவதற்கு இம்மண்ணகத்தில் பிறந்த தீரரே வருக அழகிய பாதங்களும் செறிந்த நிழலும் நிலத்தில் பொருந் தாத சீமானே வருக! செந் நெலும் கன்னலும் செறித்து சூழ்ந்துள்ள மக்கமாநகர்த் தோன்றலே! வருக! வருகவே!

விளக்கவுரை

விளக்கு— இருளை அகற்றிப் பொருளைக் காட்டும். நபிகள் நாயகம் அறியாமை இருளை நீக்கி அறநெறியினைக் காட்டினார்கள். மருள் நீங்கியது. அருள் பெருகியது. ஒரு விளக்கினால் சுடர் கொண்டு பல கோடிக்கணக்கான விளக்குகளுக்கும் சுடரேற்றிக் கொள்ள முடியும். நபிகள் நாயகம் (ஸல்) ஆகிய விளக்கினால் பல கோடி மன விளக்குகள் ஒளியேற்றப் பெற்றன; பெற்று வருகின் றன.

மி.·.ராஜ் — அறுசுக்குச் சென்று வந்தது குறித்து முன்னரே விளக்கப்பட்டுள்ளது.

திருவடியும் சேகநிழலும் தோற்றுத — நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்கள் நிலத்தில் படியாதென்றும், அவர் களின் நிழல் தரையில் விழாதென்றும் கூறுவது மரபு.

இலக்கணக் குறிப்பு

தவத்தோர்க்கு—நான்காம் வேற்றுமை உருபுஏற்ற வினையா லணையும் பெயர். பவள இதழ்-உவமைத் தொகை. நா-வினையாகு பெயர். வென்றி-மெலித்தல் விகாரம். நான்மறைக்கும்-முற் றும்மை. மெய்-பண்பாகு பெயர். புவிபிறந்தது-7ஆம் வேற்று மைத் தொகை. கனல்-கன்னல் என்பதன் இடைக்குறை; தொகுத் தல் விகாரம். தோன்றல்-ஆண்பாற் சிறப்புப் பெயர் விளியாக வந்துள்ளது. விளக்கே உருவகம்.

56. நாலி யொழுகுஞ் செங்கமல
மலரின் பொகுட்டில் வீற்றிருக்கு
மணிசே ரன்னந் துயில்கொள்ள
வலையின் மணிகள் கொழித்தெறியு

நீல மலர்கள் விரித்திலங்க
ஞ்மிறு வினங்க ளிசைபாட
நெளிந்தே வாளை விண்பாய்ந்து
நீக மழைக்கு மின்னிடிப்பாய்

போல வுழக்கி மழைபொழியப்
புனரி குளங்காற் றடாகமொடு
பொங்கிக் கலக்கப் போதினங்கள்
பூத்துச் சொரியத் தேனெழுகுஞ் (3)

சோலை செறிந்த மக்கநகர்த்
தோன்றல் வருக வருகவே
துய்ய நபியே முகம்மதுற்
றசூலே வருக வருகவே

பதவுரை

மாலி ஒழுகும்—தேன் சிந்தும், செங்க மலரின் பொகுட்டில் வீற்றிருக்கும்—செந்தாமரை மலரின் நடுவிலுள்ள பொகுட்டில் வீற்றிருக்கும், மணிசேர் அன்னம் துயில்கொள்ள—மணி பொருந்திய அன்னப்பறவை உறக்கம் கொள்ள, வலையின் மணிகள் கொழித்தெறியு—சங்குகள் முத்துக்களை ஈன்று கொழிக்க, நீல மலர்கள் விரிந்திலங்க ஞ்மிறு இனங்கள் இசைபாட—நீலோற்பல மலர்கள் மலர்ந்து விளங்கும்படியாக வண்டினங்கள் இசைபாட, நெளிந்தே வாளை விண்பாய்ந்து நீகம் அழைக்கும் மின்னிடிப்பாய் போல—வளைந்து தாவி வாளை மீன் வானத்திலே மின்னலைப்போல ஒளி செய்ய, தவளை இடியைப்போல் ஒலிக்க இவைபோல், உழக்கி மழைபொழிய—மேகம் மின்னி, இடித்து மழையைப் பொழிய, புனரி குளக் கால் தடாகமொடு பொங்கிக் கலக்க—அலைகளுடைய குளங்கள் முதலியவற்றுடன் மழை நீர் பெருகிக் கலக்க, போது இனங்கள் பூத்துச் சொரிய—மலர்க் கூட்டங்கள் பூத்துச் சொரிகின்ற, தேனெழுகும் சோலை செறிந்த—தேன் சிந்தும் சோலைகள் அடர்ந்த, மக்க நகர்த் தோன்றல் வருக வருகவே—மக்கமா நகரின் தோன்றலே வருக! வருகவே, துய்ய நபி றசூலே வருக வருகவே—தூய நபியே முகம்மது றசூல் (ஸல்) அவர்களே வருக வருகவே!

தெளிவுரை

தேன் சிந்தும் செந்தாமரை மலரின் நடுவிலுள்ள பீடத்தில் வீற்றிருக்கும் மணி பொருந்திய அன்னப் பறவை உறக்கம் கொள்ள, சங்குகள் முத்துக்களை ஈன்று கொழிக்க, நீலோற்பல

மலர்கள் மலர்ந்து விளங்கும்படியாக வண்டினங்கள் இசைபாட வீசுந்து தாவி வாளை மீன் வானத்தில் மின்னலைப்போல் ஒளி செய்ய தவளை இடியைப்போல ஒலிக்க இவைபோல் மேகம் மின்னி இடித்து மழையைப் பொழிய, அலைகளு டைய குளங்கள், கால்வாய்கள், தடாகங்கள் முதலியவற் றுடன் மழை நீர் பெருகிக் கலக்கவும், மலர்க் கூட்டங்கள் பூத்துச் சொரிகின்ற தேன் சிந்தும் சோலைகள் அடர்ந்த மக்க மா நகரின் தோன்றலே வருக வருகவே! கூய நடியே முஹம்மது மசூல் (ஸல்) அவர்களே வரு வீர்களாக! வரு வீர் களாகவே!

விளக்கவுரை

தேனெழுகும் செந்தாமரை மலர், அதன் பீடத்தில் உறங்கும் அன்னப்பறவை, முத்துக்களை ஈன்றெறியும் சங்கு கள், நீல மலர்களில் வண்டிசைபாடுதல், மின்னலைப் போல் பாய்ந்தெழும் வாளை மீன், இடியைப் போல் ஒலிக்கும் தவளை, இடித்து முழங்கிப் பொழியும் மழை, பொங்கிப் பெருகும் ஏரி குளம் கால்வாய் தடாகங்கள், விரிந்து தேனெழு கும் மலர்கள் நிறைந்த சோலைகள் செறிந்த மக்கமா நகர் என்பதில் புலவரின் கற்பனை சிறகடித்துப் பறக்கக்கண்டு மகிழ்கின்றோம்.

இலக்கணக் குறிப்பு

செங்கமலம்...பண்புத் தொகை கொள்ள, இலங்க, பாட, பொழிய, கலங்க, சொரிய— செய்ய எனும் வாய்ப்பாட்டு வினை எச்சங்கள். தோன்றல்...ஆண்பாற் சிறப்புப்பெயர். வருக... வியங்கோள் வினைமுற்று. வருக வருக ... அடுக்குத்தொடர். எ...அசை

57 அல்லில் வீரியாக் கமலமல
ரடியிற் சிலம்பு கிண்கிணியும்
அணிய வருக அவனிதனி
லலைவா ரிதிபோ லெதிர்சீறும்

ஒல்லார் மயங்கக் கழன் மணியை
யுவந்து வணிய வருக மணி
யொலியி லணிய வருக நெடு
வோங்க லனைய புயமார்பில்

நல்ல களபமத் தார்பன்னீர்
நாலு வகையின் பரிமளமு
நன்றுய்ப் புலர்த்தக் கலையுடுத்த
நாடி வருகத் தொட்டில்தனில்

உல்லா சமதாய் வைத்தாட்ட
வுவப்பாய் வருக வருகவே
உண்மை யுடைய முகம்மதுவே
உவப்பாய் வருக வருகவே! (4)

பதவுரை

அல்வில் விரியாக் கமல மலரடியில் — இரவில் மலராது கதிரவனைக் கண்டு மலரும் செந்தாமரை போன்ற திருவடியில், சிலம்பு கிண்கிணியும் அணிய வருக—சிலம்பும் கிண்கிணியும் அணிதற் பொருட்டு வருக, அவனிதனில் அலை வாரிதி போல்—உலகத்தில், அலைகளையுடைய கடல் போல், எதிர் சீறும் ஒல்லார் மயங்க—எதிர்த்துச் சீறி வரும் பகைவர் பயந்து மயங்கும் படியாக, கழன் மணியை உவந்து அணிய வருக—வீரக் கழலை மகிழ்ந்து அணியும் பொருட்டு வருக, மணியொலியில் அணிய வருக—ஒலி செய்கின்ற மணியை அணிதற் பொருட்டு வருக, நெடுவோங்கலனைய புயமார்பில்—நெடுமலை போன்ற தோள்களிலும் மார்பினிலும் நல்ல கனபம் அத்தர் பன்னீர் நாலுவகையின் பரிமளமும்—சிறந்த நறுமணச் சாந்து பூசி அத்தர் பன்னீர் நாலுவகையான நறுமணப் பொருள்களும், நன்முப்புலர்த்தக் கலையுடுத்த நாடி வருக—நன்முக ஊட்டிய ஆடை அணிதற் பொருட்டு வருக, தொட்டில் தனில் உல்லாசமாய் வைத்தாட்ட உவப்பாய் வருகவருகவே —தொட்டிலில் வைத்து மகிழ்வுடன் ஆட்டுதற் பொருட்டு களிப்புடன் வருக வருகவே, உண்மையுடைய முகம்மதுவே உவப்பாய் வருக வருகவே—உண்மையுடைய முகம்மது நபி (ஸல்) அவர்களே களிப்புடன் வருக! வருகவே!

தெளிவுரை

இரவில் மலராது, கதிரவனைக் கண்டு மலரும் செந்தாமரை மலர் போன்ற திருவடியில் சிலம்பும் கிண்கிணியும் அணிதற் பொருட்டு வருக வருக! உலகத்தில், அலைகளையுடைய கடல் போல் எதிர்த்துச் சீறிவரும் பகைவர் பயந்து மயங்கும் படியாக வீரக் கழலை மகிழ்ந்து அணியும் பொருட்டு வருக. ஒலி செய்கின்ற மணியை அணிதற் பொருட்டு வருக. நெடுமலை போன்ற தோள்களிலும் மார்பினிலும் சிறந்த நறுமணச் சாந்து பூசி அத்தர் பன்னீர் நாலு வகையான நறுமணப் பொருள்களும் நன்முக ஊட்டிய ஆடை அணிதற் பொருட்டு வருக. தொட்டிலில் வைத்து மகிழ்வுடன் ஆட்டுதற் பொருட்டு களிப்புடன் வருக வருகவே! உண்மையுடைய நபி (ஸல்) அவர்களே களிப்புடன் வருக! வருக!

விளக்கவுரை

உண்மையுடைய முகம்மது; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளர் (அஸ்ஸாதிக்) என்றழைப்பர். இவர்களின் கடும் பகைவரும் இவர்களின் உண்மை கூறுதலை மறுத்தார்களில்லை!

இலக்கணக் குறிப்பு

விரியாக் கமலம்... சுறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். அணிய—செய எனும் வாய்ப்பாட்டு வினை எச்சம். அலை வாருதி--2-ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. ஒல்லார்—எதிர் மறை வினையாலணையும் பெயர். நெடு ஒலிகல்--பண்புத் தொகை. புய மார்பு--உம்மைத் தொகை. வருக வருக--அடுக்குத் தொடர்.

58 கந்தம் பொதித்த திருவுடலிற்
கவசம் இசாறும் புனைந்துமுடுக்
கணமுத் தரித்த சிகரமதிற்
கதிர்போற் றுலங்கச் சறுபந்துவை

அந்தம் பெறவே யணிந்துமறை
யகலாக் குங்கும மாலையது
வசைய மணிகள் மழைபோல
வருளுந் தருக்கை யசையசினி

உந்த மலர்த்தாள் கௌதிடனே
வுலகி லடிகள் தோயாம
லூறிக் கவிகை நிழல் மீதி
லுவப்பாய் நடந்தே விளையாடிப்

பந்தோ குதித்தாள் நோவாமற்
பைய வருக வருகவே
பறக்கும் புருக்கு மாவலரே
பண்பாய் வருக வருகவே! (5)

பதவுரை

கந்தம் பொதிந்த திருவுடலில்—நறுமனம் பொருந்திய திரு மேனியில், கவசம் இசாறும் புனைந்தும் — கவசமும் இசாறும் அணிந்தும், உடுக்கணமும் தரித்த சிகரமதில் கதிர்போல் துலங்க —நட்சத்திரங்களையும் தரித்துள்ள சிகரத்தில் பொருந்தின கதிரவன்போல் விளங்கும்படி, சறுபந்துவை அந்தம் பெறவே

அணிந்து—சறுபந்து எனும் தலையணியை அழகுபெற அணிந்து, மறையகலாக் குங்கும மாலையது அசைய—மறைப் பொருள் நீங்காத குங்கும மாலை அசைய, மணிகள்மழைபோல அருளுந் தருக்கை அசைய—மணிகளை மழைபோல வழங்கும் கற்பகத் தருவனைய கைகள் அசைய, நனி உந்தம் மலர்த்தாள் கௌதி டனே—மிகவும் சிறந்த தங்களின் தாமரை மலரனைய திரு வடிகள் பாதுகாப்புடன், உலகில் அடிகள் தோயாமல் ஊறி—நிலத்தில் திருவடிகள் பதியாமல் உற்று, கவிதை நிழல் மீதில்—மேகக் குடைநிழலில், உவப்பாய் நடந்தே விளையாடி—மகிழ்வாய் நடந்து விளையாடி, பந்தோ குதித்தாள் நோவாமல் பைய வருக வருகவே—திரண்டு மெத்தென்ற குதியும் பாதமும் வருந்தாமல் மெதுவாக வருவீராக! வருவீராகவே! பறக்கும் புருக்கு மாவலரே பண்பாய் வருக வருகவே — பறந்துசெல்லும் புருக்கினை விரைந்து செலுத்திய மாவலரே! பண்புடன் வருவீராக! வருவீராகவே!

தெளிவுரை

நறுமணம் கமழும் திருமேனியில்கவசமும் இசாறும் அணிந்தும, நட்சத்திரங்களைத் தரித்துள்ள மலைச் சிகரம் பொருந்திய கதிரவனைப்போல விளங்கும் சறுபந்து என விளங்கும் தலையணியை அழகுபெற அணிந்தும், மறைப் பொருள் நீங்காத குங்கும மாலை அசைய, மணிகளை மழைபோல வழங்கும் கற்பகதருவனைய கைகள் அசைய, மிகச் சிறந்த தங்களின் தாமரை மலரனைய திருவடிகள் பாதுகாவலுடன் நிலத்தில் தோயாமல் உற்று மேகக் குடை நிழலில் மகிழ்வாய் நடந்து விளையாடி, திரண்டு மெத்தென்ற குதியும் பாதமும் வருந்தாமல் மெதுவாக வருவீராக! வருவீராகவே! பறந்துசெல்லும் புருக்கினை விரைந்துசெலுத்திய மாவலரே! பண்புடன் வருவீராக! வருவீராகவே!

விளக்கவுரை

கந்தம்...திருவுடல்! நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருமேனில் கந்தூரி மணம் கமழும் என்பது மரபுச் செய்தி, நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் விருப்பமானவற்றுள் நறுமணப் பொருளும் ஒன்று.

இசாறு—மேலுடம்பில் அணியும் உடை, சறுபந்து—தலையில் அணியும் அணி, தரு—வேண்டுவார்க்கு வேண்டியவற்றை வேண்டியாங்கு தரும் வானுலகத்து கற்பகவிருட்சமாகும். பறக்கும் புருக்கு மாவலரே—நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மி...ராஜ் சென்றுவந்த வரலாறு முன்னரே கூறப்பட்டுள்ளது. யி...ராஜ் செல்லும் போது ஏறிச் செல்லும வாகனமாக அமைந்தது புருக். வலவர்—செலுத்துபவர், ஓட்டுபவர் எனப் பொருள்படும்.

உந்தம்... நடந்து—நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடக்கும்போது பாதங்கள் நிலத்தில் படியாதென்றும், காரிமேகம் குடைபோல் மேல்நின்று நிழல்செய்து வருமென்றும் கூறப்படுகிறது.

இலக்கணக் குறிப்பு

திருவுடல்-அடையடுத்தபெயர், அகலாக் குங்குமம்-ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், தருக்கை-உவமைத்தொகை மீதில் - 7ஆம் வேற்றுமை உருபுப் பொருளில் வந்துள்ளது. மாவலரே- உரிச்சொல் தொடர், வலர் - வலவர் என்பதன் தொகுத்தல் விகாரம். பைய, பண்பாய்—வினையெச்சங்கள். வருக—வியங்கோள், வருக வருக—அடுக்குத்தொடர், ஏ-அசை,

59 பொன்னைப் பழித்தமரைத்திருத்தாள்
புழுதி புரளா மல்வருக
பொற்பு கவலாப் புவனத்துள்
புனித மடவார் துரைவருக

மின்னைப் பழித்த வானவர்கள்
விரும்பும் பெருமா னேவருக
விரும்பி யுவந்தே யுவந்தார்க்கு
வினையைத் தவிர்க்குந் தவம்வருக

தன்னைப் பழியாப் பொருள்வருக
சார்ந்தோர்க் குரிய துணைவருக
தமரின் றுனிதீர்த் திடவருக
சான்றோர் கண்ணின் மணிவருக,

வண்ணிப் படங்காப் புகழுடைய
வரதர் வருக வருகவே
வறுமைய கற்றிச் செல்வந்தரும்
வள்ளல் வருக வருகவே! (6)

பதவுரை

பொன்னைப் பழித்த மரைத்திருந்தாள் புழுதி புரளாமல் வருக—பொன்னைப் பழிக்கும் தாமரை மலர்போன்ற திருவடிகள் புழுதியில் புரளாமல் வருவீராக! பொற்பு கவலாப் புவனத்துள் புனித மடவார் துரை வருக—பொலிவு குறையாத உலகத்தில் புனிதமுடைய பெண்களின் துரையே வருவீராக! மின்னைப் பழித்த வானவர்கள் விரும்பும் பெருமானே வருக—இனியில் மின்னலைப் பழிக்கும் வானவர்கள் விரும்பும் பெருமானே வருவீராக! விரும்பி உவந்தே உவந்தார்க்கு வினையைத் தவிர்க்கும் தவம் வருக—விரும்பி மகிழ்ந்து வந்தவர்க்கும் தீவினையை

மகிழ்வுடன் நீக்கும் தவமே! வருவீராக! தன்னைப் பழியாப் பொருள் வருக—தன்னை எதுவும் பழிக்கமுடியாதபடிச் சிறந்த பொருளே! வருவீராக! சார்ந்தோர்க்குரிய துணை வருக—தம்மைச் சார்ந்தோர்க்குரிய துணையே! வருவீராக! தமரின் துனி தீர்த்திட வருக—உறவினரின் துன்பம் தீர்ப்பதற்கு வருவீராக! சான்றோர் கண்ணின் மணி வருக—குணஞ் செயல்களால் நிரம்பியவரின் கண்மணியே வருவீராக! வன்னிப் படங்காப்புகழுடைய வரதர் வருக வருகவே—வர்ணித்தலில் அடங்காத புகழையுடைய வரமளிப்போரே வருவீராக! வறுமை அகற்றிச் செல்வம் தரும் வள்ளல் வருக வருகவே—வறுமையினை நீக்கிச் செல்வமளிக்கும் வள்ளலே வருவீராக! வருவீராகவே!

தெளிவுரை

பொன்னைப் பழிக்கும் தாமரை மலர்போன்ற தங்களின் திருவடிகள் புழுதியில் புரளாமல் வருவீராக! பொலிவு குறையாத இவ்வுலகில் புனிதமுடைய பெண்களின் துரையே வருவீராக! ஒளியில் மின்னலைப் பழிக்கும் வானவர்கள் விரும்பும் பெருமானே! வருவீராக! விரும்பி மகிழ்ந்து வந்தவர்க்கு மகிழ்வுடன் தீவினையை நீக்கும் தவமே! வருவீராக! ஏதும் பழிக்கவியலாச் சிறந்த பொருளே! வருவீராக! சார்ந்தோர்க்கு உரிய துணையே! வருவீராக! சுற்றத்தவரின் துன்பம் தீர்ப்பதற்கு வருவீராக! வர்ணிப்பிற்கடங்காத புகழுடைய வள்ளலே! வருவீராக! வருவீராகவே!

விளக்கவுரை

புனித மடவார் துரை—நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் குணத்தில் சிறந்த பெண்களே மணந்திருக்கிறார்கள். இவருள் புனித குணவதியான கதிஜா நாயகியார் தொடங்கிப் பலரும் விதவைகளே. ஆயிஷா நாயகியார் ஒருவரே கன்னிப் பெண்ணாக இருத்து கடிமணம் புரிந்துகொண்டவர். கணவனை இழந்து கைம்மையால் வருந்திய பெண்ணை மணந்து அவர்தம் கண்ணீர் துடைத்தார்கள். வன்னிப் படங்காப் புகழ், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் திருப்பெயர்களாகிய 'முஹம்மது', 'அஹ்மது' என்பன புகழ் எனும் பொருள்கொண்ட ஹம்து எனும் அறபு மூலத்திலிருந்து தோன்றியவை என்பது ஈண்டு கருதற்பாலது.

இலக்கணக் குறிப்பு

மரை—தாமரை என்பதன் முதல் குறை, கவலாப் புவனத்துள், பழியாப் பொருள், அடங்காப் புகழ் — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள், சார்ந்தோர், சான்றோர் — வினையாலணையும் பெயர்கள், வருக வருக—அடுக்குத்தொடர்—ஏ அசை,

60. முந்த சலாலு சமாலியத்தாய்
முளைத்து வெழுந்த முதல்வருக
மூதி ருளினுக் சத்தலிபாய்
மூரி யுதித்த குரு வருக
விந்தம் பணைத்த நாகந்தனை
வென்றே காகா நகருடைய
வேந்தன் மகளை மணமுடிக்க
வேந்தாய்ப் பிறந்த நபி வருக
சிந்து வுடைய மகரந்தனைத்
தியங்கப் பிடித்து வதைத்ததுவைச்
சீவனளித்து எழுப்பவத்த
சிபத்து வுடையோரே வருக
மந்தம் படிறும் விலக்கவந்த
வரதர் வருக வருகவே
வறுமை யகற்றிச் செல்வந்தரும்
வள்ளல் வருக வருகவே (7)

பதவுரை

முந்த சலாலு சமாலியத்தாய்—முன்னர் ஜலாலாகிய ஆற்றலும் ஜமாலாகிய அழகுமாய், முளைத்து எழுந்த முதல் வருக—தோன்றி எழுந்த முதலே வருவீராக! முது இருளின் தூக்கத்து அலிபாய்—பழமையான இருளிலிருந்து புள்ளியாகிப் பின்னர் அதிலிருந்து அலிபாக, மூரி உதித்த குருவருக — வலிமையுடன் தோன்றிய குருவே வருவீராக, விந்தம் பணைத்த நாகம் தனை வென்றே — மாணிக்கம் பருத்து விளைந்த நாகப் பாம்பை வென்று, காகா நகருடைய வேந்தன் மகளை—காகா என்றும் நகரின் வேந்தனுடைய மகளை, மணம் முடிக்க வேந்தாய்ப் பிறந்த நபி வருக — திருமணம் செய்ய வேந்தராய்த் தோன்றிய நபியே வருவீராக! சிந்து உடைய மகரந்தனை — கடலில் உள்ள சுறு மீனை, தியங்கப் பிடித்து வதைத்ததுவை — மயங்கும்படி பிடித்து வதைத்துக் கொன்ற அதனை, சீவனழித்து எழுப்ப வந்த விபத்து உடையோரே வருக — உயிர்கொடுத்து எழுப்புதற்காக வந்த பெற்றியுள்ளோரே வருவீராக! மந்தம் படிறும் விலக்க வந்த வரதர் வருக வருகவே— அழிவையும் கொடுமையையும் அகற்ற வந்த உபகரியே வருவீராக! வருவீராகவே; வறுமை அகற்றிச் செல்வம் தரும் வள்ளல் வருக வருகவே — வறுமையை நீக்கிச் செல்வ வளம் தரும் வள்ளலே வருவீராக! வருவீராகவே!

தெளிவுரை

முன்னர் ஜலாலாகிய வலிமையும் ஜமாலாகிய அழகுமாய்த் தோன்றி எழுந்த முதலே! வருகவீராக! பழமையான இருளிலிருந்து புள்ளியாகிப் பின்னர் அப்புள்ளிகள் அலிபாக் வலிமையுடன் தோன்றிய குருவே! வரு

வீராக! மாணிக்கம் பருத்து விளைந்த நாகப் பாம்பை வென்று காகா எனும் நகரின் வேந்தனின் மகளை திருமணம் செய்ய வேந்தராய்த் தோன்றிய நபியே வருவீராக! கடலிலுள்ள சுறு மீனை மயங்கும்படி பிடித்து வதைத்துக் கொன்று அதனை உயிரளித்து எழுப்பவந்த பெற்றியுள்ளோரே! வருவீராக! அழிவையும் கொடுமையையும் அகற்றவந்த உபகாரியே! வருவீராக! வருவீராகவே! வறுமையினை நீக்கிச் செல்ல வளத்தினைத் தரும் வள்ளலே! வருவீராக! வருவீராகவே!

விளக்கவுரை

ஜலால் — வலிமை, ஆற்றல் என்றும் பொருள் கொண்ட அறபுச்சொல். சலால் எனத் தமிழ் வடிவம் பெற்றுள்ளது.

ஜமால் — அழகு எனும் பொருள் கொண்ட அறபுச்சொல் சமால் என்று தமிழ் வடிவத்தைக் கொண்டுள்ளது. முந்த — முதல் — நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைவன் பல உலகங்களையும் பல்லுயிர்களையும் படைப்பதற்கு முன் தன் ஒளியிலிருந்து படைத்தான். அவ்வொளி நிலையிலிருந்து ஜலாலாகவும் ஜமாலாகவும் திகழ்ந்து அனைத்திற்கும் மூலமாக அமைந்துள்ளார்கள். — இது குறித்த விளக்கம் முன்னரே விரிவாகத் தரப்பட்டுள்ளது. நுக்கத்—புள்ளி. ஓர் அறபுச் சொல். அலிப் என்ற எழுத்து புள்ளிகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளது.

அலிபு...அறபு எழுத்துக்களுள் முதல் எழுத்து. தத்துவக் கருத்துக்களுக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படுகிறது.

சிபத்து — தன்மை எனும் பெயர் கொண்ட அறபுச் சொல், விந்தம்—ஷாம் நகர் செல்லும் வழியில் மலையெனப் பருத்த பாம்பு இடைப்பட்டது மருட்டி எழுந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்பாம்பினை வதம் செய்தார்கள்.

இலக்கணக் குறிப்பு

முந்த — செய்த எனும் வாய்பாட்டு வினையெச்சம் முதல்— உருவம், முதுவிருள் — பண்புத் தொகை

குரு, நபி, வரதர், வள்ளல்: அண்மை விளிகள்

பிணைத்த நாகம் — பெயரெச்சத்தொடர், மந்தம் படிறு — உம்மைத்தொகை. வருக — வியங்கோள் வினைமுற்று வருக வருக — அடுக்குத்தொடர் எ — அசைச் சொல்.

61. மருள்பெறுங் குபிர்ரக ளகத்தினில் வெடிவுற பயம்
வயவரிப் புலியதுவும்
வளர்ந்துடல் வடிவுள வரிக்கழுத் தொட்டையு
மறியொடு மறியதுவும்
இருளுறு வனத்திடை யுலவிய யுகிரடி

யிருகவை நாதடியு
மெறிதிரைக் கடலிடங் குலவிய கயல்களுக்
கிறையென்ற கலை யதுவுந்

தெருளுறும் பிறை நிமிர் விரிதலைப் புயங்கமுஞ்
சினமுறுஞ் செஞ்சுணங்குஞ்
சித்திரத் தம்புலி சுடரொடு முதற் பல
செந்துக ளுடன் திரமாய்

அருளொடு பறைந்திட விடைமொழி யுனரத்திடு
மகுமது நபிவரவே
அணிமலர்ப் புயத்துறு முறுசல் முகம்ம
தகுமது நபிவரவே. (8)

பதவுரை

மருள் பெறும் குபிர்கள் அகத்தினில் — மயக்கத்தினைப் பொருந்திய காபிர்களின் நெஞ்சில், வெடி உற வயவரிப் புலி அதுவும்—அச்சம் உண்டாகும் படி வலிய வரிகளை உடைய புலியும், வளர்ந்து உடல் வடிவுள வரிக் கழுத்து ஒட்டையும்—உயர்ந்து வளர்ந்த உடலும் வடிவும் வரிகளை உடைய கழுத்தையும் கொண்ட ஒட்டகமும், மறியொடு மறியதுவும் — தாய் மானுடன் சேய்மானும், இருளுறு வனத்திடை யுலவிய—இருள் செறிந்த காட்டில் திரிந்த, உகில் அடி இரு கவை நாதடியும்—நகங்களையுடைய அடிகளும் இரண்டு பாகம் பிளந்த நாக்கும் கொண்ட உடும்பும், எறிதிரைக் கடலிடம் குலவிய கயல்களுக்கும்—வீசுகின்ற அலைகளையுடைய கடலின் கண் நீந்தும், மீன்களுக்கு இறை என்ற கலை அதுவும்—அரசன் என்ற மகரமும், தெருளுறும் பிறை நிமிர் விரிதலைப் புயங்கமும்—தெளிந்த ஒளிபொருந்திய பிறையினை நிமிர்ந்து பற்றிய படம் விரிந்த பாம்பும், சினமுறும் செஞ் சுணங்கும்—சீற்றமுடைய ஓநாயும், சித்திரத்து அம்புலி சுடரொடும்—பேரழகுள்ள சந்திரன் ஆகிய சுடருடனும், முதல் பல செந்துகளுடன் திரமாய்—இவை முதலான பல சீவராசிகளுடன் திறமாக, அருளொடும் பறைந்திட—அருளுடன் சொல்லவும், விடைமொழி உரைத்திடும் அகுமது நபி வரவே—பதில் கிமாழி கூறிடும் அஹ்மது நபி (ஸல்) அவர்களே! வருவீர்களாக! அணிமலர்ப் புயத்து உறு முறுசல் முகம்மது அகுமதி நபி வரவே—மலர்மாலையைப் புயத்தில் சூடிய திருத்தூதராகிய முஹம்மது அஹ்மது நபி (ஸல்) அவர்களே வருவீர்களாக !

தெளிவுரை

மயக்கம் பொருந்திய காபிர்களின் நெஞ்சில், அச்சம் உண்டாகும்படி வலிய வரிகளையுடைய புலியும், உயர்ந்து வளர்ந்த உடலும் வடிவும் வரிகளையுடைய கழுத்தும் கொண்ட ஒட்டகமும், தாய் மானுடன் சேய்மானும், இருள் செறிந்த காட்டில் திரிந்த நகங்களையுடைய அடிகளும் இரண்டாகப் பிளந்த நாக்கும் கொண்ட உடும்பும், வீசுகின்ற அலைகளையுடைய கடலின் கண் நீந்தும் மீன்களுக்கு அரசன் என்ற மகரமும் தெளிந்த ஒளி பொருந்

திய பிறையினை நிமிர்த்து பற்றிய படம் விரிந்த பாம்பும், சிற்ற முடைய ஒநாயும், பேரழகுள்ள சந்திரனுகிய சுடரும் இவை முத லான பல சீவராசிகளுடன் திறமாக அருளுடன் சொல்லவும், பதில் மொழி கூறிடும் அவ்மது நபி (ஸல்) அவர்களே வருவீராக! மலர் மாலையைப் புயத்தில் சூடிய திருத்தூதராகிய முஹம்மது அஹம்மது நபி (ஸல்) அவர்களே வருவீர்களாக!

விளக்கவுரை

நபிகள் நாயகம் (ஸல்) நுபுவ்வத்திற்கு முன் வாணிபத்தின் பொருட்டு ஷாம் நகர் சென்ற போது வழியில் புலி, பாம்பு முதலியன பேசின. நுபுவ்வத்திற்குப் பின் காட்டில் வேடன் ஒரு பெண் மானைப் பிடித்து வைத்த போது அம்மான் தனது குட்டிக் குப் பால் கொடுத்துக் கலைமானைக் கண்டுவர விழைந்தது. இதனை யுணர்ந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மானுக்குப் பிணையாக இருந்து அதன் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார்கள். தாய் மானும் சேய் மானும் திரும்பி வரக் கண்ட வேடன் வியந்து நபி கள் நாயகம் (ஸல்) அவர்களைப் போற்றி இஸ்லாத்திற்கு வந்தான்

மானை துரத்தி வந்த ஒநாயி ஹரம் ஷரீபில் மான் நுழைய வும் துரத்தாமல் நின்று விட்டது. இதைக் கண்டு அபூஜகில் முத லிய கொடியோர் கண்டு வியந்தனர். அவர்களிடம் ஒநாய் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மானிலம் தழைக்க வந்த மாநபி என் பதை எடுத்துக் கூறியது.

நபிகள் நாயகம் (ஸல்) அமா வாசை நாளில் முழுமதியை அழைப்பித்த போது மதியுடன் உரையாடினார்கள்.

முறுசல்—தூதர் என்னும் பன்மைப் பொருள் தரும் அறபுச் சொல்

இலக்கணக் குறிப்பு

வெடி—முதனிலைத் தொழிற் பெயர், வய—உரிச் சொல் வரிப்புலி, திரைகடல்—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கவை நா, விரிதவ—வினைத் தொகை. அம்புலிச் சுடர், விசைமொழி—இருபெயரொட்டுப் பண்புத் தொகை

92. மலைகடல் வையகந் திசையொரு குடையினில்
மகிழ்வொடு செய்திடவும்
வல்வினை துன்பமும் தீர்த்து நெறிமுறை
மார்க்க நடத்திடவுங்

கொலைபுரி வையயில் மரைமலர்க் காமுறுங்
குறைகிக ளறபிகளுங்
குணமொடு தினந்துதி செயவதி செயங் கொண்டு
கொண்டு ஏத்திடவுஞ்

சிலேகரங் கொளும்பல குபிரர்கள் வணங்கிய
சிறுக்குள புத்துகளே
சிதறிட வடித்துடைத் தழித்து வெறிந்திடச்
செயம் பெற வந்தவரே

அலைபிறழ் தடரதி சூழ்மதி ஞவினுக்
கதிபதி நபிவரவே
அணிமலர்ப் புயத்துறு முறுசல் முகம்ம
தகுமது நபிவரவே

(9)

பதவுரை

மலைகடல் வையகம் திசையொரு குடையிலில் மகிழ்வொடு செய்திடவும் — மலைகள், கடல்கள் உலகத்தில் திசைகள் அனைத்திலும் உள்ள நாடுகள் ஆகிய அனைத்தையும் ஒரு குடையின் கீழ் கொணர்ந்து மக்கள் மகிழ்வோடு இருக்கச் செங்கோல் செலுத்தவும், வல்வினை துன்பமும் தீர்த்து நெறிமுறை மார்க்கம் நடத்திடவும் — வலிய தீவினையையும் துன்பத்தையும் நீக்கி நெறியும் ஒழுங்கும் பொருந்திய சன்மார்க்கம் நடத்தியும், கொலை புரிவையினில் மரை மலர்க் காமுறும் குறைசிகள் அறபிகளும் குணமொடு இனம் துதிசெய — கொலைத் தொழிலையுடைய கூர்மையான வேலாயுதத்தை ஏந்திய செந்தாமரை மலர் போன்ற கரங்களையுடைய விரும்பும் குறைசிக் குலத்தவரும், ஏனைய அறபிகளும் பன்போடு நாள் தோறும் போற்றிட, அது செயங் கொண்டு கொண்டு ஏத்திடவும் — அதிகமான வெற்றிகளை மேலும் மேலும் பெற்றுப் போற்றிடவும், சிலேகரங் கொளும் பல குபிரர்கள் வணங்கிய சிறுக்கு உள புத்துகளே — விற்பசையைக் கையில் கொள்ளும் எண்ணிக்கையில் பலராகிய காபிர்கள் வணங்கி வந்த 'விர்க்கு' என்னும் இணைவைத்தலுக்குக் காரணமான விக்கிரகங்களை, சிதறிட அடித்து உடைத்து அழித்து எறிந்திடச் செயம்பெற வந்தவரே — சிதறும்படி, அடித்து உடைத்து அழித்து எறிந்து வெற்றிபெற வந்தவரே, அலைபிறழ் தட நதி சூழ் மதி ஞவினுக்கு அதிபதி நபி வரவே — அலைகள் புரள்கின்ற அகன்ற நதிகள் சூழ்ந்து வளஞ் செய்யும் மதினமா நகருக்குத் தலைவராகிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே வருவீர்களாக. அணிமலர்ப் புயத்துறும் முறுசல் முகம்மது அகமது நபி வரவே.

தெளிவுரை

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் உயிர் நிலையாக ஏகத்துவத்தைக் கொண்டார்கள் ''ஒன்றே இறை ஒன்று மக்கள்'' என்பதை உறுதி பெறச் செய்தார்கள். நிறம், மொழி, குலம், இனம், நிலம், எல்லை முதலிய தொல்லைகளைக் களைந்தெறிந்தார்கள். வேறுபட்ட பல நாடுகளையும் ஒருங்கிணைத்து ஒற்றுமையுடைய இலட்சிய அரசினை நிறுவினார்கள், மக்களாட்சி நிறுவி மக்களெல்லாம் இன்புறச் செய்தார்கள், பேரரசின் தலைவராகத்

திகழ்ந்த போதும் மண்குடிசையில் வாழ்ந்தார்கள் ஓட்டுப் போட்ட சடையணிந்து எளிமையைப்போற்றினர்கள், மக்களின் மகிழ்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டார்கள்.

மக்காவை வெற்றி கொண்ட பிறகு க.ப.த்துல்லாவினுள் நுழையு முன்பு லாத், உஸ்ஸா, குபல் முதலிய 360 எக்கிரகங்க ளையும் உடைத்து அப்புறப்படுத்தச்செய்து துப்பரவு செய்தார்கள்

இலக்கணக் குறிப்பு

மலை, கடல், வையகம், நெறிமுறை — உம்மைத் தொகை, வல்வினை — பண்புத் தொகை, வையயில் — உரிச் சொற்றொடர், மரை — தாமரை என்பதன் முதற் குறை. மலர்க்கரம் — உவமைத் தொகை, குறைவி அறபுகள் — உம்மைத் தொகை, கொண்டு கொண்டு — அடுக்குத் தொடர், சிறுக்கு — விரிக் எல்லும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம், சூழ் மரீஞ — வினைத் தொகை.

63. வடவையி னரகம தடைத்திடச் சொல்லிய
வல்லவ னபிவரவே
வருடமது தொறுங்களிற் வருவதை விலக்கின
வரபதி நபிவரவே

நடவையி னெய்த்திடு மொட்டக முன்செல
நடத்தின நபிவரவே
நயன்மங்கள் பொன்றினர் நயனங்க பொன்றிட
நவஞ் செய்த நபிவரவே

புடவியிற் பலபிணி யுரைமருந் தமுதெனப்
புண்ணிய நபிவரவே
புரவலர் துறவவர் கவிவலர்க் கல்பொடு
பொறியருள் நபிவரவே

அடவிய லிடையரின் கொறியமு துணும்பதி
யகுமது நபிவரவே
அணிமலர்ப் புயத்துறு முறுசல் முகம்ம
தகுமது நபிவரவே (10)

பதவுரை

வடவையின் நரகமது அடைத்திடச் சொல்லிய வல்லவன் நபி வரவே—வடவைக் கனலையுடைய நரகத்தை (நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த போது) அடைக்குமாறு ஏவிய வல்ல அல்லாஹ்வின் நபியே வருவீர்களாக, வருடமது தொறுங்களிற் வருவதை விலக்கின வரபதி நபிவரவே, நடவையின் எய்த்திடும் ஒட்டகம் முன்செல நடத்தின் நபி வரவே—நடையில் இளைத்துக்

களைத்துப் போன ஒட்டகம் வலிமை பெற்று முன்னால் நடக்கும் படி செய்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே வருவீர்களாக! நயனங்கள் பொன்றினர் நயனங்கள் தோன்றிட நவம் செய்த நபி வரவே — விழியிழந்தவர்கள் விழிபெற்றிடப் புதுமைகள் செய்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே வருவீர்களாக. புடவியில் பல பிணி உரை மருந்து அமுதெனப் புண்ணிய நபி வரவே—உலகத்தில் பல பிணிகளைப் போக்குவதற்கு உரியது என்று கூறப்படும் மருந்தாகிய அமுதெனும் புண்ணியம் மிக்க நபி (ஸல்) அவர்களே வருவீர்களாக, புரவலர், துறவலர், கவிவலர்க்கு அன்பொடு பொறி அருள் நபி வரவே—வள்ளல்களுக்கும், துறவி களுக்கும் கவிஞர்களுக்கும் வெற்றியை அருள்கின்ற நபி (ஸல்) அவர்களே வருவீர்களாக, அடவியில் இடையரின் கொறி அமுது உணும்பதி அகமது நபி வரவே—வனத்தில் இடையர்கள் மேய்க் கும் ஆடுகளின் பாலை உண்ணுகின்ற தலைவராகிய அகமது நபி (ஸல்) அவர்களே வருவீர்களாக, அணிமலர்ப் புயத்து உறும் முறுசல் முகம்மது அகம்மது நபி வரவே—மலர் மாலையைப் புயத்தில் சூடிய திருத்தூதராகிய முகம்மது அகமது (ஸல்) அவர்களே வருவீர்களாக.

விளக்கவுரை

வடவை.....வல்லவன்——நபிகள் நாயகம் (ஸல்) அவர் கள் இவ்வுலகில் பிறந்த போது சொர்க்க வாசலைத் திறக்கும்படி யாகவும் நரகத்தை அடைக்கும் படியாகவும் அல்லாஹ் ஆணை பிறப்பித்தான்.

பொறிஅறிவு, செல்வம், வெற்றி போன்ற பல பொருள் உண்டு அடவியில் இடையரின் கொறியமுது உண்ணும்—ஹலீமின் நக ரின் தம் செவிலித்தாயாகிய ஹலீமா அம்மையாரின் வீட்டில் வளர்ந்து வரும் போது அந்நகரத்துச் சிறுவர்களுடன் ஆடு மேய்த்தார்கள் அவ்வாடுகளின் பாலை அருந்தினர்கள்.

இலக்கணக் குறிப்பு

வடவையின் நகரம்—இரண்டாம் வேற்றுமை உருபும் பய னும் உடன் தொக்க தொகை, நடவை—நடை என்பதன் திரிபு, செல—செல்ல என்பதன் தொகுத்தல் விகாரம், மருத்தமுது—ஒரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

(வருகைப் பருவம் முற்றிற்று)

அம்புலிப் பருவம்

இது பிள்ளைத் தமிழின் ஏழாவது பருவம். 15-ம் மாதத்து நிகழ்வது கூறும். அழகிய பருவம். பாடுதற்கரிய பருவம். பிள்ளைக் கவிக் கம்புலி புலியாம் என்பர். அம்புலியை ஆட அழைக்கும் போது சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு வகை உபாயங்களை ஆள்வர். 'இன்னின்ன வகைகளில் உன்னைச் சமமெனக் கருதி விளையாட அழைப்பதறிந்து ஆடவா' என்பது சாம உபாயமாகும். 'நீயும் என் தலைவனும் இன்னின்ன வகைகளில் வேறுபடுகின்றீர்கள்; அருளுளம் கொண்டு விளையாட அழைக்கின்றான்; வருக' என்பது பேத உபாயமாகும். 'நீ இவனுடன் விளையாட வந்தால் இன்னின்ன நன்மைகள் கிடைக்கும்; வருக' என்பது தான உபாயமாகும். 'இவ்வாறெல்லாம் வருந்தி யழைத்தும் வராதிருப்பின் இன்னின்ன தண்டனைகள் கிடைக்கும்' என்பது தண்ட உபாயமாகும். இங்கு ஆசிரியர் இந்த நான்கு உபாயங்களையும் போற்றிப்பாடுகின்றார்.

64. ஓகையா யிறையாதி யண்ட மொடு மண்டலமுன்
டாக்குமுன் னுற்றதிவர்காண்
ஒப்புவகை யில்லாத வொளிபரவும் வெண்டரள
முருக்கொண் டிருந்த திவர்காண்

தோகையாய் வடிவுகொண் டனைகாள் வரையிலுந்
தொழுது கொண் டிருத்ததிவர்காண்
துய்தான வானவர் களிப்போடு வந்ததனைத்
துதிசெய்ய பெற்றதிவர் காண்

வாகையாய் நூலுகளை யெழுதுமொளி பலகையாய்
மைக்கலமு முற்றதிவர்காண்
பனியாத நபியான கைவிரலு கிர்களில்
வரமாயிருந் ததிவர்காண்

ஆகையா லடல்வீரங் குறையாத வரசுடன்
அம்புலி யாடவாவே
ஆகிறத்தில் மன்னுடி யீடேற்று நபியுட
னம்புலி யாடவாவே (1)

பதவுரை

ஓகையாய் இறையாதி அண்டமொடு மண்டலம் உண்டாக்கும் முன் உற்றது இவர்காண்—இறைவன் தொடக்கத்தில் அண்ட கோளங்களையும் பிற மண்டலங்களையும் மகிழ்வுடன் உண்டாக்குவதற்கு முன் படைக்கப்பட்டவர் இவரே, ஒப்பு வகை இல்லாத ஒளி பரவும் வெண் தரளம் உருக் கொண்டு இருந்தது இவர்காண்

—ஒப்பாகும் இனமற்ற அருள் ஒளி வீசுகின்ற வெண்மையான முத்து வடிவம் கொண்டு இருந்ததும் இவரே, தோகையாய் வடிவுகொண்டு அனேக நாள் வரையிலும் தொழுது கொண்டு இருந்தது இவர்கண்—மயிலின் வடிவங் கொண்டு பல நாட்கள் இறைவனைத் தொழுது கொண்டிருந்ததும் இவரே, துய்தான வானவர் களிப்போடு வந்து அதனைத் துதிசெய்யப் பெற்றது இவர்களண்—தூய்மையான அமரர்கள் மகிழ்ச்சியோடு வந்து அம் மயிலைப் போற்றிப் புகழ்ந்தனர் அவ் வாசல் புகழப் பெற்றதும் இவரே, வாகையாய் நூகுகளை எழுதும் ஒளி பலகையாய் மைக் கலமும் உற்றது இவர்கண்—வெற்றியோடு உயிர்கள் பற்றி எழு தப்படும் ''லவ்குல் மஹ்பூல்'' என்னும் பலகையும் கலம் வரை எழுது கோலுமாய் விளங்கியதும் இவரே, பனி ஆதம் நபியான கைவிரல் உகிர்களில் வரமாய் இருந்தது இவர்கண்—பனி ஆதம் நபிகளின் கைவிரல் நகங்களில் இறைவன் வரத்திலுல் உண்டான ஒளியாய இருந்ததும் இவரே, ஆகையால் அடல் வீரம் குறையாத அரசுடன் அம்புலி ஆடவாவே— எனவே ஆற்றலும்வீரமும் சற்றும் குறையாத அரசுடன் நிலவே நீ விளையாட வருவாயாத, ஆகி றத்தில் மன்றுடி ஈடேற்றும் நபியுடன் அம்புலீ ஆடவாவே— மறுமை உலகத்தில் தம்மைப் பின்பற்றுவர்களுக்குக் (உம்மத்துக் கள்) காக இறைவனின் 'ஷபாஅத்' என்னும் மன்றுட்டம் புரிந்து அவர்களை ஈடேற்று. நபிகள் நாதருடன் அம்புலியே நீ விளையாட வருவாயாக.

தெளிவுரை

''இறைவன் தொடக்கத்தில் அண்ட கோளங்களையும், பிற மண்டலங்களையும் உண்டாக்குவதற்கு முன் படைக்கப்பட்டவர் இவரே. ஒப்பாகும் இனமற்ற அருள் ஒளி வீசுகின்ற வெண்மை யான முத்து வடிவம் கொண்டிருந்ததும் இவரே. மயிலின் வடிவங் கொண்டு பல நாட்கள் இறைவனைத் தொழுது கொண்டிருந்ததும் இவரே. தூய்மையான அமரர்கள் மகிழ்ச்சியோடு வந்து, அம்மயி லைப் போற்றிப் புகழ்ந்தனர். அவ்வாறு புகழப் பெற்றதும் இவரே. வெற்றியோடு உயிர்கள் பற்றி எழுதப்படும் ''லவ்குல் மஹ்பூல்'' என்னும் பலகையும் 'கலம்' என்னும் எழுது கோலுமாய் விளங்கி யதும் இவரே. பனி ஆதம் நபிகளின் கைவிரல் நகங்களில் இறை வன் வரத்திலுல் உண்டான ஒளிவாய் இருந்ததும் இவரே. எனது ஆற்றலும் வீரமும் குறையாத அரசுடன் நிலவே நீ ஆட வருவா யாக. மறுமை உலகத்தில் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குகாக (உம்மத்துக்கள்) இறைவனின் ,ஷபாஅத்' என்னும் மன்றுட்டம் புரிந்து அலர்களை ஈடேற்றும் நபிகள் நாதருடன் அம்புலியே நீ விளையாட வருவாயாக''

இலக்கணக் குறிப்பு

எழுதும் ஒளி பலகை: லவ்ஹுல் மஹ்பூல் எனும் பாதுகாக் கப்பட்ட பலகையாகும். இவ்வுலகில் படைக்கப்படும் படைப்

பனை த்தின விவரங்களை இப் பலகையில் எழுதப் பெற்றிருக்கும் இது விண்ணகத்தில் இறைவன் சந்நிதானத்தில் இருக்கும். 'லெவ்ஹா' எனும் அறபுச் சொல் பலகை எனும் பொருள் கொண்டது. மஹ்பூல் என்றால் பாதுகாக்கப்பட்டது; விவரங்கள் பாதுகாக்கப் பட்டுள்ளதால் இப்பெயர் பெற்றது. இப்பலகையில் மேலே குறிப்பிட்டவாறு விவரங்களை எழுதும் கோல் கலமாகும். கலம் எனும் அறபுச் சொல் எழுது கோல் எனும் பொருள் தரும்.

இலக்கணக் குறிப்பு

ஓகை—உவகை என்பதன் மரூஉ, வெண்தரளம்—பண்புத் தொகை, அம்புலி—விளி.

65. முத்தவிரு ளானதில் நுக்கத்திரெ டலிபாயு
முச்சுடரு மானதிவர்காண்
முக்கோண வட்டமனைக் கதிபராயத் தோன்றின
மூலவடி வானதிவர்காண்

நந்திமுன் ஞாயில் சிருட்டித்த பொருளுக்கு
நல்லகரு வானதிவர்கா
ணழுவரமற் றெழுதபல நபிமார்கள் மெய்யிலொளி
நவ்விபெற துற்றதிதுகாண்

பந்தமுறு மமலான ஆமிரு அன்பிரெடு
பயின்ற மக வானதிவர்காண்
பதுமினியி ரெளிப்பான அலிமாவில் சூகையுலீப்
பாலுண்டபய காம்பரிவர்காண்

அந்தமிரு நபிநாத ரானதா லிவருடன்
அம்புலி யாடவாவே
ஆகிறத்தில் மன்றுடி ஈடேற்று நபியுடன்
அம்புலி யாடவாவே (2)

பதவுரை

முத்த இரு ளானதில் நுக்கத்திரெடு அலிபாயும் முச்சுடரும் ஆனது இவர்காண்—தொடக்கத்தில் உண்டாகி இருந்த இருள் புள்ளிவடிவாகவும், அலிபென்ற எழுத்தாகவும் மூன்று சுடர்களா கவும் தோன்றினதும் இவரே, முக்கோண வட்ட மனைக்கு அதி பராய்த் தோன்றிய மூலவடிவானது இவர்காண் — முக்கோண மாயும் வட்டமாயும் இருக்கும் மனைக்குத் தலைவராகத் தோன்றிய மூல வடிவமும் இவரே, நந்தி முன்னாயில் சிருட்டித்த மெய்யில் ஒளி நவ்விபெற உற்றது இவரே—ஆதி நாளில் பெருகி வளர்கின்ற படைப் பினங்களுக்கு நன்மையான கருவாக அமைந்த இவரே,

தழுவாமல் தொழுத பல நபிமார்கள் மெய்யில் ஒளி நவ்வி பெற உற்றது இவர்காண் — இடை விடாமல் இறைவனைத் தொழுது வந்த நபிமார்களின் மேனியில் ஒளியாக விளங்கியதும் இவரே, பந்தமுறும் அமலான ஆமினுர் அன்பினெடு பயின்ற மகவானது இவர்காண்—அழகு நிறைந்த நற்செயல்களையுடைய ஆமினு அம் மையார் அன்புடன் வளர்த்த மைந்தரும் இவரே, பது மினியின் ஒளிப்பான அலிமாவின் சூகை முலைந் பாலுண்ட பயகாம்பர் இவர்காண்—பதுமினி என்னும் உயர்சாதிப் பெண்ணின் ஒளி பெற்ற அலிமா அம்மையாரின் சூம்பிப் போன மார்பில் பெருகிய பாலையுண்ட பயகம்பார் இவரே, அந்த மிகு நபி நாதமகனதால் இவருடன் அம்புலி ஆடவாவே—அழகு மிக்க நபிகள் நாயகமா கையால் இவருடன் அம்புலியே விளையாட வருவாயாக, ஆகிறத் தில் மன்றுபுகழ்ந்தேற்றம் நபியுடன் அம்புலி ஆடவாவே-மறுமையுல கில் தம்மைப் பின் பற்றுவபர்களுக்காக இறைவனிடம் மன்றா டும், நபியுடன் அம்புலியே ஆட வருவாயாக.

தெளிவுரை

தொடக்கத்தில் உண்டாகி யிருந்த இருளில் புள்ளி வடிவாக வும் அலிபென்ற எழுத்தாகவும் மூன்று சுடர்களாகவும் தோன்றி னதும் இவரே. முக்கோணமாயும் வட்டமாயும் இருக்கும் மனக் குத் தலைவராகத் தோன்றிய மூலவடிவமும் இவரே, ஆதிநாளில் பெருகி வளர்கின்ற படைப்பினங்களுக்கு நன்மையான கருவாக அமைந்தவர் இவரே. இடைவிடாமல் இறைவனைத் தொழுது வந்த நபிமார்களின் மேனியில் ஒளியாக விளங்கியதும் இவரே. அழகு நிறைந்த நற்செயல்களையுடைய ஆமினு அம்மையார் அன் புடன் வளர்த்த மைந்தரும் இவரே. பதுமினி என்னும் உயர் சாதிப் பெண்ணின் ஒளிபெற்ற அலிமா அம்மையாரின் சூம்பிப் போன மார்பில் பெருகிய பாலையுண்ட பயகம்பர் இவரே. அழகு மிக்க நபிகள் நாயகம் (ஸல்) இத்தகுதிகள் பெற்றவர் ஆகையால் இவருடன் அம்புலியே! விளையாட வருவாயாக! மறுமையுலகில் தம்மைப் பின்பன்றுபவர்களுக்காக இறைவனிடம் மன்றாடும் நபி யுடன் அம்புலியே! ஆடவருவாயாக!

விளக்கவுரை

'முந்து விருள்.....அதிபராயி'—

படைப்புக்களையெல்லாம் படைப்பதற்குமுன் இருள்மயமாக இருந்து பின்னர் இறையொளியிலிருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒளியாகப் படைக்கப்பட்டார்கள். புள்ளியாகவும் அலிபாகவும், வளர்ந்து பேரொளிப் பிழம்பாகத் திகழ்ந்தார்கள். சூரியன், சந்திரன், அக்னி ஆகிய முச்சுடராகவும் விளங்கினர் கள் என ஆசிரியர் தமிழ் மரபில் கூறுகிறார்.

பதுமினி பெண்வகை நான்கின் முதலாமவள் உயர்ந்த, இலட்ச ணங்கள் பொருந்தியவள், நுகதா—அறபு எழுத்துக்களில் உள்ள புள்ளிகள், அலிபு — அறபு, நெடுங்கணக்கில் முதல் எழுத்து, நந்தி—இறைவனுக்கு அடையாள மொழி.

முக்கோணமனை: இறையருள் பெறுவதற்குரிய நான்கு நெறிகளுள் யோக நெறியும் ஒன்று. உடற் கூற்றில் ஆறு ஆதாரங்கள் உண்டு. யோகிகள் இவ்வாறு இடங்களிலும் இறைவனை ஒவ்வொரு நிலையிலும் வைத்து தியானம் செய்வர். இவ்வாறு நிலைகளுள் அநாகதம் என்பதும் ஒன்று. இதுநெஞ்சமாகிய இடமாகும் இது முக்கோண வடிவமுடையது; ஆதலின் இதனை முக்கோண மனை என்பர்.

வட்டமனை: மேற கூறிய ஆறு ஆதாரநிதளுள் இதுவும் ஒன்று. 'ஆக்ஞை' எனும் பெயர் கொண்டது; நெற்றியில் புருவ நடுவாகிய இடம்; வட்ட வடிவமானது; ஆதலின் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

இவ்விரு ஆதாரங்களும் முதலும் முடிவுமாகும். இவ்வாதாரங்களாகிய யோகமனைகளுக்கு நபிகள் நாயகம (ஸல்) அதிபதியாவார்கள்.

இலக்கணக் குறிப்பு

முச்சுடர்—பண்புத் தொகை, காண் — முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று, சூகைமுலை—பண்புத் தொகை, பயகாம்பர்—தீர்க்க தரிசி எனும் பொருள் கொண்ட பாரசீகச் சொல், ஆகிறம்—மறுமை எனும் பொருள் கொண்ட அறபுச் சொல்.

66. கணிதபுக ழடங்காத வல்லவ னுபுவ்வத்தைக்
கைப்புறங் கொண்டதிவர்காண்
காணவரி தானவெழு தாரகையைச் சென்னியிற்
கசிதமது கொண்டதிவர்காண்
மணிவிளாவு கொண்டவெழு பத்தலைப் போகியைவதை
செய்தரண சிங்கரிவர்காண்
வளர்ந்தமலை மீதிருந் தொட்டக நாற்பது
வகைவகை யழைத்ததிவர்காண்
துணியவு கற்றஅலி பணிதலுக் காகவொளி
சூரனை யழைத் ததிவர்காண்
சுடர் பரவு மெய்நெடிய மெய்குறிய துரையான
துய்யமகுமு தரிவர்காண்
அணியழகுக் கடங்காத காரண ராகையால்
அம்புலி யாடவாவே
ஆகிறத்தில் மன்ருடி ஈடேற்று நபியுடன்
அம்புலீ ஆடவாவே (3)

பதவுரை

கணித புகழ் அடங்காத வல்லவன் நுபுவ்வத்தைக் கைப்புறம் கொண்டது இவர்காண்-கணித்தலில்அடங்காத புகழுடைய

வல்ல இறைவனின் நுபுவ்வத்தைத் கைக் கொண்டது இவரே. காணஅரிதானஎழுதாகரையைச்சென்னியில்கரிதமதுகொண்டது இவர்காண்—காண்பதற்கு அரிய ஏழுவிண் மீன்களைத் தம் தலையில் தரித்துதுக் கொண்டதும் இவரே, மணி விளைவு கொண்ட எழுபத் தலைப் போகியை வதை செய்த ரணசிங்கர் இவர்காண்—மாணிக்கம் விளைகின்ற நிமிர்ந்த பத்தரைப் போன்ற தலையையுடைய பாம்பைக் கொன்றழித்த வீரசிங்கம் இவரே, வளர்ந்த மலை மீதிருந்து ஒட்டகம் நாற்பது வகை வகை அழைத்தது இவர்காண்—உயர்ந்த மலையின் மீது இருந்தபடியே ஒட்டகங்கள் நாற்பதை வகை வகையாக அழைத்ததும் இவரே, துணியறிவு கற்ற அலி பணிதலுக்காக ஒளி சூரனை அழைத்தது இவர்காண்—துணிவும் அறிவும் மிக்க அலி (ரலி) அவர்களுக்காக ஒளி சூரனை அழைத்ததும் இவரே, சுடர் பரவு மெய் நெடிய மெய் குறிய துரையான துய்ய மகுமூதரிவர்காண்—ஒளி பரவிய வடிவம் நீண்டது அது குறுகி மனித உருக் கொண்ட துரை தூய மஹ்மூது (ஸல்) இவரே, அணி அழகுக்கு அடங்காத காரணர் ஆகையால் அம்புலீ ஆடவாவே—அலங்காரம், அழகு இவற்றினுள் அடங்காத அற்புதங்கள் நிறைந்தவர் ஆகையால் அம்புலியே விளையாட வருவாயாக, ஆகிறத்தில் மன்றுடி ஈடேற்றும் நபியுடன் அம்புலி ஆடவாவே—மறுமையுலகில் தம்மைப் பின்பற்றுபவர்களுக்காக இறைவனுடன் மன்றுடும் நபியுடன் அம்புலியே ஆடவருவாயாக.

தெளிவுரை

கணித்தலில் அடங்காத புகழுடைய வல்ல இறைவனின் நுபுவ்வத்தை கைக் கொண்டது இவரே, காண்பதற்கரிய ஏழு விண் மீன்களைத் தம் தலையில் தரித்துக் கொண்டதும் இவரே, மாணிக்கம் விளைகின்ற நிமிர்ந்த பத்தரைப் போன்ற தலையையுடைய பாம்பைக் கொன்றழித்த வீரசிங்கம் இவரே. உயர்ந்த மலையின் மீது இருந்தபடியே ஒட்டகங்கள் நாற்பதை வகை வகையாய் அழைத்ததும் இவரே. துணிவும், அறிவும் மிக்க அலி (றலி) அவர்களுக்காக ஒளி சூரனை அழைத்ததும் இவரே. ஒளிபரவும் நெடிய புகழ் உடம் புடைய வரும், மெய்ம்மை தன் பேருருவைக் குறுக்கி மனித வடிவில் அமைத்தது என்னும் படியான மன்னர் தூய்மையுள்ள மகுமூது நபி நாதர் இவரே. அலங்காரம் அழகு இவற்றினுள் அடங்காத அற்புதங்கள் நிறைந்தவர் ஆகையால் அம்புலியே விளையாட வருவாயாக. மறுமையுலகில் தம்மைப் பின்பற்றுபவர்களுக்காக இறைவனுடன் மன்றுடும் நபியுடன் அம்புலியே ஆடவருவாயாக.

விளக்கவுரை

சுடர்பரவு... காண்—நபிகள் நாயகம் (ஸல்) ஒளியாகப் பரந்து விளங்கினர்கள் பின்னர் பரந்த ஒளிவடிவத்தைச் குறுக்கிக் கொண்டு மனித வடிவம் கொண்டார்கள்.

துணியறிவு கற்ற அவி...இவர்காண்—ஹஸரத் அலி(ரலி) துணி வும் அறிவும் கல்விச் சிறப்பும் கொண்டவர். அத்துடன் இறை வனிடம் நீங்காத பக்தி கொண்டவர். ஒருநாள் பஜ்று தொழுகை நேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டார்கள். இ...தறிந்த நபிகள் நாய கம் (ஸல்) தம்மருகர் தொழும் பொருட்டு சூரியனைச் சற்றுக் காலந் தாழ்ந்தி உதிக்கும்படி செய்தார்கள். இத்தொடர் இச் செய்தியினைக் கூறுகிறது.

காணவரிதான....கொண்டவர் காண்—ஒரு சமயம் ஜிப்றயீல் (அலை) வந்திருந்த போது பாத்திமா நாயகி பிள்ளை என்று அழை த்தார். சிறிய தந்தை என்றது அவர்க்குப் பிடிக்கவில்லை. இது குறித்துத் தம் தந்தையாரிடம் கூறினர். அடுத்து ஜிப்றயீல் (அலை) வந்த போது நபிகள் நாயகம் வானவர் கோனின் வயதை வின வினர்கள். அதற்கு அவர் 70000 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும் நட்சத்திரத்தை 72000 தடவை பார்த்ததாகப் பதி லிறுத்தார். இதனைக் கேட்ட நாயகம் தங்களின் தலைப் பாகை யைத் தூக்கிக் காட்டினர்கள். அதில் நட்சத்திரங்கள் இருந்தன. வானவர் கோனும் தாம்பார்த்த நட்சத்திரம் இருப்பதாகக் கூறி னர். இது மரபுச் செய்தி.

வளர்ந்த...யழைத்தவர் இவர்காண்—நபிகள் நாயகம் (ஸல்) 6 லிருந்து 8 வயது வரை மக்காவில் வசித்து வந்த போது தந்தை யின் சொத்தாக இருந்து 40 ஒட்டகங்களை மேய்த்து வந்தார்கள்.

இலக்கணக் குறிப்பு

எழுதாரகை-பண்புத் தொகை, பரவு மெய்-வினைத்தொகை

67. தாரகைக் குழுவுண் டுனக்கதிக குத்துபுத்
தாரகைக் குழுவுண்டுகாண்
சார்ந்த மு யலொன்று இவருக்கு இறைவசனத்
தகுதி முயல் பலவுண்டுகாண்

மார்பான சேணினுக் கதிகார னியிவர்
மண்விசும்புக் கதிகாரர் காண்
மாற்றவனைக் கொளியுண்டு இவருக்குக் குபிரை
மாற்றமறை மொழியுண்டுகாண்

ஏர்பெருகு மீரெட்டுக் கலையுண் டுனக்கதிக
மெட்டெட்டுக் கலையுண்டுகா
ணிடம்பெருக வளர்வதுங் குறைவது மூனக்குண்டு
இடர் குறையில் லாததிவர்காண்

ஆர்வமுள பொருளான தாகையா லிவருடன்
அம்புலி ஆடவாவே
ஆகிறத்தில் மன்றுடி ஈடேற்று நபியுடன்
அம்புலி ஆடவாவே (4)

மூலவுரை

தாரகைக் குழு உண்டு உனக்கு, அதிக குத்துபுத் தாரகைக் குழுவுண்டுகாண்—உனக்கு விண் மீன்களாகிய கூட்டம் உண்டு, இவருக்கு அதிகமான குத்துபுமார்களாகிய தாரகைக் கூட்டம் உண்டு, சார்ந்த முயல் ஒன்று உண்டு இவருக்கு இறைவசனத் தகுதி முயல் மிக உண்டுகாண்—உன் மேலியில் படிந்துள்ள முயல் வடிவம உனக்கு ஒன்று உண்டு. இவருக்கு இறைவசனம் கூறியாங்கு முயல்கின்ற தகுதி மிக உண்டு, மார்பான சேணினுக்கு அதிகாரன் நீ—அகலமான தூரத்தில் உள்ள வானுலகின் அதிகாரி நீ, இவர் மண் விரும்புக்கு அதிகாரர் காண்—இவர் மண்ணகத் திற்கும் விண்ணகத்திற்கும் அதிகாரியவார், மாற்ற உனக்கு ஒளியுண்டு இவருக்குக் குபிரை மாற்ற மறை மொழியுண்டுகாண்—உனக்கு இருளை மாற்றும் ஆற்றல் உள்ள ஒளியுண்டு இவருக்கு நேர்வழியை அறியாத காபிர்களை மாற்ற வல்ல திருக்குர் ஆனின் வசனங்கள் உண்டு. ஏர்பெருகும் ஈரெட்டுக் கலையுண்டு உனக்கு அதிகம் எட்டெட்டுக் கலையுண்டு காண்—அழகு பெருகும் பதினறு கலைகள் உனக்குண்டு. இவருக்கு மிகுந்த 64 கலைகளின் அறிவும் உண்டு, இடம் பெருக வளர்வதும் குறைவதும் உனக்கு உண்டு இடர்குறை இல்லாதது இவர்காண்—வடிவம் பெருகி வளர்வதும் பிறகு குறைவதுமான குறை உனக்குண்டு. இவரோ துன்பமும் குறைகளும் அறவே இல்லாதவர், ஆர்வமுள பொருளானது ஆகையால் இவருடன் அம்புலி ஆடவாவே—ஆர்வத்துடன் விரும் பப்படும் பொருளாதலால் இவருடன் அம்புலியே விளையாட வருவாயாக, ஆகிறத்தில் மன்னுடி ஈடேற்றும் நபியுடன் அம்புலி ஆடவாவே—மறுமையுலகத்தில் தம்மைப் பின்பற்று வோருக்காக இறைவனிடத்தின் மன்னுடி ஈடேற்றம் அடையச் செய்யும் நபிகள் நாயகத்தாருடன் அம்புலியே ஆடவருவாயாக.

தெளிவுரை

உனக்கு விண் மீன்களாகிய கூட்டம் உண்டு. இவருக்கு அதிக மான குத்துபுமார்களாகிய தாரகைக் கூட்டம் உண்டு. உள் மேனி யில் படிந்துள்ள முயல் வடிவம் உனக்கு ஒன்றுண்டு. இவருக்கு இறைவசனம் கூறியாங்கு முயல்கின்ற தகுதி மிகவுண்டு. அகல மான தூரத்தில் உள்ள வானுலகின் அதிகாரி நீ. இவர் மண்ணகத் திற்கும் விண்ணகத்திற்கும் அதிகாரியாவார். உனக்கு இருளை மாற்றும் ஆற்றல் உள்ள ஒளியுண்டு. இவருக்கு நேர்வழியை அறி யாத காபிர்களை மாற்றவல்ல திருக்குர் ஆனின் வசனங்கள்உண்டு. அழகு பெருகும் பதினறு கலைகள் உனக்குண்டு. இவருக்கு மிகுந்த 64 கலைகளின் அறிவும் உண்டு. வடிவம் பெருகி வளர்வதும், பிறகு குறைவதுமான குறை உனக்கு உண்டு. இவரோ துன்பமும் குறை களும் அறவே இல்லாதவர். ஆர்வத்துடன், விரும்பப்படும். பொருளாதலால் இவருடன் அம்புலியே விளையாட வருவாயாக மறுமையுலகில் தம்மைப் பின்பற்றுவோருக்காக இறைவனிடத் தில் மன்னுடி ஈடேற்றம் அடையச் செய்யும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் அம்புலியே ஆட வருவாயாக.

சார்த்த முயல்...காண்—ஒளிப் பிழம்பாகிய சந்திரனிடத்து களங்கம் உண்டு, இது முயல் உருவில் தோன்றுவதால் இதனை முயல் என்பர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறை உரைக் கேற்ப முயலும் தகுதி உண்டு எனச் சிலேடையில் கூறுவது நயம் பயக்கின்றது. உனக்கு நட்சத்திரங்களுண்டு இவர்க்குக் குத்புகள் அதிகமாக உள்ளனர். உன்னிடம் களங்கமாய் முயல் உண்டு, இவரிடம் தகுதிமிக்க முயற்சியுண்டு. நீயோ தொலைவிலுள்ள வானுலகின் அதிகாரி; இவரோ மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் அதிகாரி. உனக்கு இருளகற்றும் ஒளியுண்டு; இவருக்கு அறியமை யகறறும் இறை மொழியுண்டு. உனக்கு 16 கலைகள் உண்டு; இவருக்கு, 64 கலை ஞானமுண்டு. குறைவதும் மறைவதும் ஆகிய குறை உனக்குண்டு; இவர் குறைகளில் லாதவர் என ஒப்பிடுவது போல் வேறுபடுத்தி நாயகப் புகழ் கூறி அம்புலியை ஆட அழைப்பது நயமிக்க தாகும். இதில் பேதம் எனும் உபாயம் அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு

தாரகைக்குழு—6-ம் வேற்றுமைத் தொகை, குத்துபுத் தாரகை—உருவகம், சேண்-ஆகு பெயர். மன்றுடி—செய்து எனும் வாய்பாட்டு வினை யெச்சம்.

68. துளிமேக மனதினில் மறைவது மலைவதுந்
தோன்றுத மதியாகு நீ
சொல்லிசைக ளொவ்வாத பெருக்குள்ள பேரறிவு
துலங்குமதி யுள்ளதிவர்காண்

ஒளியேற வொருபட்சம் வளர்வதும் பெருமையோ
யுலகுதனிற் குன்றுமலே
ஒரு நாளுக் கொருநாளுக் கதிகமாய் வளர்கின்ற
வொளிவுள்ள வடிவாளர்காண்

தளிமேகக் குடைவள்ளல் தாமரைத் தாள் தன்னை
தான்கண் டிறைஞ்சாமலே
தாமதிப் பாகவுயர் விண்ணினி லிருப்பதே
தாழ் வாகுந் தனுவாகுமுன்

அளியாக வந்துவிளை யாடவே நீதிகாண்
அம்புலீ யாடவாவே
அகிலதலம் புகழ்குறைசி நபிகள் பெருமானுடன்
அம்புலி யாடவாவே (5)

பதவுரை

துளி மேகம் ஆனதில் மறைவதும் அலைவதும் தோன்றுத மதியாகும் நீ—மழைத்துளிகள் நிறைந்த மேகத்தில் மறைவதும் பிறகு அங்குமிங்குமாக அலைவதும் திங்களில் ஒரு நாள் அறவே தோன்றுததுமான மதி நீ, சொல்லிசைகள் ஒவ்வாத பெருக் குள்ள பேரறிவு துலங்கு மதியுள்ளது இவர்கண்—பேசப்படும் பெரும் புகழ்கள் அனைத்தும் குறைவாய்த் தோன்றும் பெருமை

புள்ள பேரறிவு விளங்கும் மதியுள்ளவர் இவர், ஒளியோர ஒரு பட்சம் வளர்வதும் பெருமையோ—ஒளியானது கூடி சுக்கில பட்சம் 15 நாட்களும் வளர்வதும் ஒரு பெருமையாகுமா, உலகுதனில் குன்றுமலே ஒரு நாளுக்கொரு நாளுக்கு அதிகமாய் வளர்கின்ற ஒளிவுள்ள வடிவாளர் காண்—குறையாமல் உலகில் நாளுக்கு நாள் அதிகமாய் வளர்கின்ற புகழ் வடிவமானவர் இவர், தளிமேகக் குடைவள்ளல் தாமரைத் தார் தன்னைத் தான் கண்டு இறைஞ்சாமலே—நீர்த்துளியுடன் கூடிய மேகம் குடை பிடிக்கும் வள்ளலின் தாமரை போன்ற தாள்களைக் கண்டு பணியாமல், தாமதிப்பாக உயர் விண்ணினில் இருப்பதே தாழ்வாகும்—உடனே வராமல் தாமதித்து விண்ணில் இருப்பதே தாழ்வாகும், தனுவாகுமுன் அளியாக வந்து விளையாடலே நீதி காண் அம்புலீ ஆடவாவே—சிறுமைப்படுவதற்குமுன் அன்புடன் வந்து விளையாடலே நீதியாகும் அம்புலியே ஆட வருவாயாக, அகிலதலம் புகழ் குறசி நபிகள் பெருமானுடன் அம்புலீ ஆடவாவே — எல்லா உலகங்களும் புகழும் குறைசிக் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் அம்புலியே ஆட வருவாயாக.

தெளிவுரை

மழைத்துளிகள் நிறைந்த மேகத்தில் மறைவதும் பிறகு அங்குமிங்குமாக அலைவதும் மாதத்தில் ஒரு நாள் அறவே தோன்றுததுமான மதி நீ. பேசப்படும் பெரும் புகழ்கள் அனைத்தும் குறைவாகத் தோன்றும் பெருமையுள்ள பேரறிவு உள்ள மதியுள்ளவர் இவர், ஒளியானது கூடி சுக்கில பட்சம் 15 நாட்களும் வளர்வதும் ஒரு பெருமையாகுமா? குறையாமல் உலகில் நாளுக்கு நாள் அதிகமாய் வளர்கின்ற புகழ் வடிவமானவர் இவர். நீர்த்துளியுடன் கூடிய மேகக் குடை பிடிக்கும் வள்ளலின் தாமரை போன்ற தாள்களைக்கண்டு பணியாமல், உடனே வராமல் தாமதித்து விண்ணில் இருப்பதே தாழ்வாகும். சிறுமைப் படுவதற்கு முன் அன்புடன் வந்து விளையாடலே நீதியாகும். அம்புலியே ஆட வருவாயாக. எல்லா உலகங்களும் புகழும் குறைஷிக் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் அம்புலியே ஆட வருவாயாக.

விளக்க வுரை

தனு.....நீதிகாண் — 'சிறுமையடைவதற்கு முன் வந்து கண்டு விளையாடுதலே நீதியாகும்' என்று கூறுவதனுல் இது தண்டம் எனும் உபாயம் கொண்டுள்ளது. தனு எனுல் வில்லினை போன்று சிறுமையடைவதைத தெய்வதை இங்கு குறிக்கும்.

இலக்கணக் குறிப்பு

துளிமேகம், துவங்குமதி, புகழ் குறைசி—வினைத் தொகைகள். பெருமையோ—ஓகாரம் எதிர்மறைப் பொருளது. துளிமேகம்—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை தாமரைத் தார்—உவமைத் தொகை.

69. நேமியின் புள்வந் துனீச்செயு மிடரதனை
நீக்கிடு மன்னரிவர்காண்
நெடியவுடல் ராகிஞெடு சஞ்சல நீக்கிடு
நிறவண்ணத் தோகைமயில்காண்
நேமிகடல் சூழ்ந்தபடிக் கரசாகத் தோன்றின
நீதிசெறி மக்காவினில்
நிருபரதி பதியான கபீபர சனுக்காக
நெறியிஞெடு அமாவாசையிற்
ருமத மின்றிமுன் கூவியுனை வாரமாய்த்
தான் செயப் போறபடியாற்
சவிபெருக வதற்குமுன் நீவந்து தாமரைச்
சரண்தொழுதன்பாகவே
ஆமினர் மகனுன தருமையுள நபியுட
னம்புலி யாடவாவே
அகிலதலம் புகழ்குறைசி நபிகள் பெருமானுடன்
அம்புலி யாடவாவே (6)

பதவுரை

நேமியின் புள்வந்து உனைச் செயும் இடரதனை நீக்கிடும் மன்னவர்வர் காண்— சக்கரவாகப் பறவை உனக்குச் செய்யும் துன்பத்தை நீக்கக் கூடிய மன்னர் இவர், நெடிய உடல் ராகிஞெடு சஞ்சலம் நீக்கிடும் நிற வண்ணத் தோகையில் காண்— நீண்ட உடலையுடைய இராகு என்னும் பாம்பினால் வரும் கவலையை நீக்கக் கூடிய அழகிய வண்ணங்களுடன் கூடிய தோகையுடைய மயில் இவரே, நேமிகடல் சூழ்ந்த படிக்கு அரசாகத் தோன்றின நீதி செறி மக்காவினில்—வளையம் போல் கடல் சூழ்ந்துள்ள உலகத்திற்கு அரசாகத் தோன்றியுள்ள மக்கமா நகரத்தில் நிருபாதி பதியான கபீபு அரசனுக்காக நெறியிஞெடு அமாவாசையில்—அரசர்களுக்குத் தலைவனை ஹபீபரசனுக்காக நேர் வழியொடு அமாவாசை யிருளில், தாமதம் இன்றிமுன் கூவியுனை வாரமாய் தான் செயப் போறபடியால்—தாமதிக்காமல் உன்னை அழைத்துத் தன் ஏவலனைச் செய்யப் போகிற படியால், சவிபெருக நீ வந்து அதற்கு முன் தாமரைச் சரண் தொழுது அன்பாகவே—செவ்வி பெருக நீயே முந்திக் கொண்டு வந்து அவர்களின் தாமரைப் பாதங்களைத் தொழுது அன்பாக, ஆமினர் மகனுன அருமையுள நபியுடன் அம்புலி ஆட வாவே — ஆமினு அம்மையாரின் அருமை மகனுன நபிகள் நாகயம் (ஸல்) அவர்களுடன் அம்புலியே ஆட வருவாயாக, அகிலதலம் புகழ் குறைசி நபிகள் பெருமானுடன் அம்புலி ஆடவாவே — எல்லா உலகங்களும் புகழ்கின்ற குறைஷிக் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் அம்புலியே ஆட வருவாயாக.

தெளிவுரை

சக்கரவாகப் பறவை உனக்குச் செய்யும் துன்பத்தை நீக்கக் கூடிய மன்னரிவர். நீண்ட உடலையுடைய இராகு என்னும் பாம்பி

ஞல் வரும் கவலையை நீக்கக் கூடிய அழகிய வண்ணங்களுடன் கூடிய தோகையை யுடைய மயில் இவரே. வஞ்சியம் போல் கடல் சூழ்ந்துள்ள உலகத்திற்கு அரசாகத தோன்றியுள்ள மக்க மா நகரில் அரசர்களுக்குத் தலைவனன ஹபீபரசனுக்காக நேர் வழி யோடு அமாவாசை இருளில் தாமதிக்காமல் உன்னை அழைத்துத் தன் ஏவலனைப்ச் செயீயப் போகிற படியால், செவ்வி பெருக நீயே முந்திக் கொண்டு வந்து அவர்களின் தாமரைப் பாதங்களைத் தொழுது அன்பாக ஆமினு அம்மையாரின் அருமை மகனன நபி கள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அம்புலியே! ஆட வருவாயாக! எல்லா உலகங்களும் புகழுகின்ற குறைஷிக் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் அம்புலியே! ஆட வருவாயாக!

விளக்கவுரை

இப்பாடல் தானும் எனும் உத்தியைக் கொண்டுள்ளது நேமியின் புள்—சக்கரவாகப் பறவை இரவில் இணை பிரித்து வரும் தும் இயல்பினது என்பர். நிருபாதிபதி.....படியாய்—மதியை யழைப்பித்த தனைக் குறிப்பிடுகின்றார். இது முன்னரே விளக்கப் பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

தோகை மயில்—2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. செறி மக்காவில் — வினைத் தொகை. போற—போகிற என்பதன் தொகுத்தல் விகாரம் தாமரைச் சரண் —உவமத் தொகை.

70. சேணினுக் கரசான வறுசின்முடி தீண்டவுஞ்
சேடனோடு முடி மீதினிற்
செஞ்சரணந் தடவிவருத் திடம்வீரம் குறையாத
சிபத்துடைய செம்மலிவரே

ஊணினை டுறக்கமு மில்லாத வாதியுட
னுவகையொடு மொழிபேசியு
மொப் புவமை யில்லாத அறுசினிற கௌசுட
னுலவியே மீளதிபரே

பாணினுக் கமையாத காரணங் காட்டிடும்
பார்த்திப ரானதிவரே
பதவிதருங் குருவான செக மண்ட லாதிபதி
பது மமல ரடியானதை

ஆண மொடு வந்துநீ தழுவிவீ யாடல் செய
அம்புலி யாடவாவே
அகிலதலம் புகழ் குறசி நபிகள் பெருமானுடன்
அம்புலி யாடவாவே (7)

பதவுரை

சேணினுக்கு அரசான அறுசின் முடி தீண்டவும் — விண்ணகத்திற்கு அரசான அறுசுடைய முடியைத் தீண்டவும், சேடனெடு முடி மீதினில் செஞ்சரணம் தடவி வரும்—ஆதி சேடனின் தலையின் மீதினில் சிறந்த பாதங்கள் தடவவும், திடம் வீரம் குறையாத சிபத்துடைய செம்மல் நபி இவரே—வலிமையும் வீரமும் குறையாத குணமுடைய செம்மல் நபி இவரே, ஊனினெடு உறக்கமும் இல்லாத ஆதியுடன் உவகையோடு மொழி பேசியும்—உணவும், உறக்கமும் இல்லாதவனுகிய இறைவனுடன் மகிழ்ச்சியோடு உரையாடியும், ஒப்புவமை இல்லாத அறுசினில் கௌசுடன் உவமீயே மீள் அதிபரே—ஒப்பும் உவமையும் இல்லாத அறுசில் கௌசு எனும் பாதுகாப்புடன் உலாவி மீண்ட தலைவரே, பாணினுக்கு அமையாத காரணம் காட்டிடும் பாத்திபர் ஆனது இவரே—புகழ்ந்து கூறுதற்கு அமையாத அற்புதங்கள் காட்டிடும் மன்னர் இவரே, பதவி தரும் குருவான செகம் மண்டல அதிபதி பதுமமலர் அடியானதை—உயர் நிலையைத் தரும் குருவான உலகம் மற்றும் பிற மண்டலங்களுக்கும் தலைவரான இவருடைய தாமரை மலர் போன்ற பாதங்களை, ஆணமொடு வந்து நீ தழுவி விளையாடல் செய அம்புலி ஆட வாவே—அன்புடன் வந்து தழுவி விளையாடுவதற்கு அம்புலியே வருவாயாக, அகிலத்தில் புகழ் குறைசி நபிகள் பெருமானுடன் அம்புலி ஆடவாவே—எல்லா உலகங்களும் புகழும் சூறைஷ்க் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் அம்புலியே விளையாட வருவாயாக.

தெளிவுரை

விண்ணகத்திற்கரசான அறுசுடைய முடியைத் தீண்டவும், ஆதிசேசனின் தலையின் மீதினில் சிறந்த பாதங்கள் தடவவும், வல்ல வலிமையும் பண்பு முடைய செம்மல் நபி இவரே. உணவும், உறக்கமும் இல்லாதவனுகிய, இறைவனுடன் மகிழ்ச்சியோடு உரையாடியும், ஒப்பும் உவமையும் இல்லாத அறுசில் கௌசு என்னும் பாதுகாப்புடன் உலாவி மீண்ட தலைவரே, புகழ்ந்து கூறுதற்கு அமையாத அற்புதங்கள் காட்டிடும் மன்னரிவரே. உயர் நிலையைத் தரும் குருவான உலகம் மற்றும் பிற மண்டலங்களுக்கும் தலைவரான இவருடைய தாமரை போன்ற பாதங்களை அன்புடன் வந்து தழுவி விளையாடுவதற்கு அம்புலியே வருவாயாக. எல்லா உலகங்களும் புகழும் குறைஷ்க் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் அம்புலியே விளையாட வருவாயாக.

விளக்கவுரை

ஊனினெடு.....ஆதி—உணவும் உறக்கமும் இல்லாத இறைவன். இறைவன் தூய்மையானவன். எவ்வித தேவையும் அற்றவன். தேவை என்பது ஒரு குறைபாடாகும். இறைவன் குறை வற்ற நிறையுடையவனுவான் எனும் இறை பற்றிய இஸ்லாமிய கொள்கையை இரத்தினச் சுருக்கமாக நவில்கிறது. ஆதியுடன் மொழி பேசிய வரலாறு முன்னரே விளக்கப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

செஞ் சரணம்—பண்புத் தொகை. அறுசு—அர்ஷ் எனும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம், சிபத்—குணம் எனும் பொருள் கொண்ட அறபுச் சொல், கௌசு—பாதுகாப்பு எனும் பொருள் தரும் அறபுச் சொல், பதுமலர்—இரு பெய ரொட்டுப் பண்புத் தொகை, புகழ் குறைசி—வினைத் தொகை.

71. கோடான கோடி யொளி சூரியனு மொவ்வாத
கோலவுடல் நாதர்வர்காண்
குவிர்ந்தமரை வதனமு மருளான பார்வையுங்
குடிகொண்ட குணசீலர்காண்

கேடான கேடுவினை வந்துனக் கேற்றாலும்
கிட்டாம லொட்டாமலே
கிஞ்சுகமு மாருத செவ்வரி துலங்கின
கிருபையுறுங் கண்ணேக்கிஞல்

நாடான நாடுவின் ணழியுநாள் வரையிலும்
நடலீலையது நாடாதுமெய்
நாயனுடன் மன்றுடி மீட்சிதரு நாதரால்
நழுவாமல் விரைவாக நீ

ஆடாம லாடி நிதங் கூடவினோயாடல் செய
அம்புலி யாடவாவே
அகிலதலம் புகழ் குறைசி நபிகள்பெரு மானுடன்
அம்புலி ஆடவாவே (8)

பதவுரை

கோடான கோடி ஒளி சூரியனும் ஒவ்வாத கோல உடல் நாதர் இவர் காண்—கோடிக்கான ஒளி மிக்க சூரியர்களும் ஒவ்வாத அழகுமிக்க உடம்பை உடைய தலைவர் இவரே, குளிர்ந்த மரை வதனமும் அருளான பார்வையும் குடி கொண்ட குண சீலர் காண்—குளிர்ச்சியான தாமரை போன்ற முகமும் அருள் நிறைந்த பார்வையும் குடி கொண்ட பண்பு மிக்க சான்றோர் இவரே. கேடான கேடு வினை வந்து உனக்கு ஏற்றாலும்—கேடுகளில் பெரிய கெடுதியே உனக்கு வந்த போதிலும், கிட்டாமல் ஒட்டாமலே —அது உன்னை நெருங்காமல் பற்றாமல், கிஞ்சுகமும் மாருத செவ்வரி துலங்கின கிருபையுறும் கண் நோக்கிஞல்—செம்மை நிறம் மாறாத செவ்வரிகள் விளங்குகின்ற கருணை நிறைந்த கண் பார்வையால், நாடான நாடு வின் அழியும் நாள் வரையிலும் நடலீலை அது நாடாதுமெய் நாயனுடன் மன்றுடி மீட்சி தரும் நாதரால் —நாடுகள் அனைத்தும் விண்ணகமும் அழிகின்ற இறுதிநாள் வரையிலும் துன்பங்கள் நெருங்காது உண்மையான இறைவனிடம் மன்றுடி ஈடேற்றம் தரும் தலைவராகையால், நழுவாமல் விரை

வாக நீ ஆடாமல் ஆடி நிதங் கூடி விளையாடல் செய—நழுவி விடாது வேகமாக ஆட்ட மெல்லாம் ஆடி தினமும் கூடி விளையாட அம்புலி ஆடவாவே—அம்புலியே வருவாயாக, அகிலதலம் புகழ் குறைசி நபிகள் பெருமானுடன் அம்புலி ஆட வாவே — எல்லா உலகங்களும் புகழ்கின்ற குறைஷ்க் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் விளையாட அம்புலியே வருவாயாக.

தெளிவுரை

கோடிக் கணக்கான ஒளி மிக்க சூர்யர்களும் ஒவ்வாத அழகு மிக்க மேனியை உடைய தலைவர் இவரே. குளிர்ச்சியான தாமரை போன்ற முகமும், அருள் நிறைந்த பார்வையும் கூடி கொண்ட பண்பு மிக்க சான்றோர் இவரே. கேடுகளில் பெரிதான கேடு உனக்கு வந்த போதிலும், அது உன்னை நெருங்காமல் பற்றுமல், செம்மை நிறம் மாறுத செல்வரிகள் விளங்குகின்ற கருணை நிறைந்த கண் பார்வையால், நாடுகள் அனைத்தும் விண்ணுமும் அழிகின்ற இறுதி நாள் வரையிலும் துன்பங்கள் நெருங்காது உண்மையான இறைவனிடம் மன்றாடி ஈடேற்றம் தரும் தலைவராகையால், நழுவ விடாது வேகமாக ஆட்டமெல்லாம் ஆடி தினமும் கூடி விளையாட அம்புலியே வருவாயாக! எல்லா உலகங்களும் புகழுகின்ற குறை ஷக் குலத்தில் தோன்றிய நபிகள் பெருமானுடன் விளையாட அம்புலியே! வருவாயாக!

விளக்கவுரை

நாடான நாடு..... மீட்சி தரும் நாதர்— நாடுகளை உடைய மண்ணுலகும் விண்ணுலகும் அழிகின்ற இறுதி நாள் வரையிலும் துன்பங்கள் அணுகாமல் இறைவனிடம் மன்றாடி ஈடேற்றம் தரும் தலைவர்; ஆதலின் நழுவி விடாமல் விரைவாக ஆடித் தினமும் கூடி விளையாட அம்புலியே வருவாயாக! என்று கூறுவதில் தாளம் எனும் உத்தி அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு

ஒளி சூரியன் — 2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. மறை—தாமரை என்பதன் முதல் குறை. மரைவதனம் — உவமத் தொகை. கேடு — முதனிலை திரிந்த தொழிற் பெயர். செல்வரி—பண்புத் தொகை. நாதராள்— ஆள் அகை

72. முதலவ னென்னுட தூதரை யழைத்திவண்
வருகென மொழிந்திடவே

மூவர்கள் கேட்டுப் பரிகொடு வந்து
மொழிந்திடக் கேட்டவர்காண்

மதிகதி யுள்ள புருக்கினி லேறின
மாவல ரானவர்காண்

பயித்துல் முகத்திசில் கல்லைத் துளைத்ததில்
வாசியைக் கட்டினவர்காண்

கதிரவனெனவொளி குலவிய ஏணியீற்
கழலொடு ஏறினர்காண்

ககன மடங்களும் கண்டு களித்த
கபீபு முகம்மது காண்

அதபுநெறியுள ராகையா லிவருடன்
ஆடவா வம்புலியே

ஆதியும் லெளலாக் கென்றிசைத் தரசுட
னாடவா வம்புலியே (9)

பதவுரை

முதலவன் என்னுட தூதரை அழைத்து இவன் வருக என மொழிந்திடவே—இறைவன் என் தூதரை இங்கு அழைத்து வருக என்று கூறவும், மூவர்கள் கேட்டுப் பரிகொடு வந்து மொழிந்திடக் கேட்டவர் காண் — ஜிப்ரூயில், மீக்காயில், இஸ்ரூபீல் என்ற அமரர்கள் மூவரும் வாகனம் ஒன்றைக் கொண்டு வந்து இறைவனின் ஆணையை மொழியக் கேட்டவர் இவரே, மதிகதி உள்ள புருக்கினில் ஏறின மாவலர் ஆனவர் காண்—விரைவாகச் செல்லும் புருக்கில் ஏறிச் சென்ற பெரிய வல்லமையுடையவர் இவரே, பயித்துல் முகத்திசில் கல்லைத் துளைத்து அதில் வாசியைக் கட்டினவர் காண்—பயித்துல் முகத்திஸ் என்னும் இடத்திலுள்ள பள்ளி வாசலில் சென்று புருக்கினின்றும் இறங்கி, அங்கு உள்ள ஒரு கல்தூணில் தம் விரலால் துளை செய்து அதில் குதிரையைக் கட்டினதும் இவரே, கதிரவன் என ஒளி குலவிய ஏணியில் கழலொடு ஏறினர் காண்—சூரியன் என ஒளியோடுவிளங்கிய ஏணியில் புனிதக் கால்களை வைத்து ஏறிச் சென்றவர் இவரே. ககனம் தம் அடங்களும் கண்டு களித்த கபீபு முகம்மது காண்—ஆகாய மண்டலத்தும் கண்டு களித்த நேசர் முகம்மது (ஸல்) இவரே. அதபு நெறியுளர் ஆகையால் இவருடன் ஆடவா அப்புலியே—மரியாதை பொருந்திய நடத்தையுள்ளவர் ஆகையால் இவருடன் அம்புலியே விளையாட வருவாயாக. ஆதியும் லெளலாக் என்று இசைத்த அரசுடன் அம்புலி ஆடவாவே—இறைவனும் லெளலாக் என்று அன்புடன் மொழிந்த அரசான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அம்புலி விளையாட வருவாயாக.

தெளிவுரை

இறைவன் எம் தூதரை இங்கு அழைத்து வருக என்று கூறி யும், ஜிப்ராயீல், மீக்காயில், இஸ்ராபீல் என்ற அமரர்கள் மூவரும் வாகனம் ஒன்றைக் கொண்டு வந்து இறைவனின் ஆணையை இவரிடம் மொழிந்தனர். அவ்வாறு மொழியக் கேட்டவர் இவரே பயித்துல் முகத்திஸ் என்னும் இடத்திலுள்ள பள்ளி வாசலில் சென்று புரூக்கினின்றும் இறங்கி அங்குள்ள ஒரு கல் தூணில் தம் விரலால் துளை செய்து அதில் அப்புரூக்கினைக் கட்டினதும் இவரே. சூரியன் என ஒளியோடு விளங்கிய ஏணியில் தம் புனிதக் காலினை வைத்து ஏறிச் சென்றவர் இவரே. ஆகாய மண்டலத்தும் மகிழ்ந்த நேசர் முகம்மது (ஸல்) அவர்களும் இவரே. மரியாதை பொருந்திய நடத்தையுள்ளவர் ஆகையால் இவருடன் அம்புலியே விளையாட வருவாயாக இறைவனும் ''லெளலாக்'' என்று அன்பு டன் மொழிந்த அரசான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அம்புலியே விளையாட வருவாயாக.

விளக்கவுரை

லெளலாக்—இறைவன் ''லெளலாக வமா கலக்கல் அவ்லாக்'' என்று நபிகள் நாயகத்திடம் 'நீரில்லையானால் வானங்களையும், சூரிய சந்திரர்களையும் மற்றும் உள்ள எல்லாப் படைப்புக்களையும் படைத்திருக்க மாட்டேன்' என்று கூறினன்.

இலக்கணக் குறிப்பு

பயித்தில் முகத்திஸ்—ஜெருஸலத்தில் உள்ள பகுதி இங்குள்ள பள்ளியிலிருந்து நான் இறையளித்த ஏணியேறி இறைவனிடம் சென்றார்கள். மி...ராஜ் குறித்த விவரம் முன்னர் தரப்பட்டுள்ளது. அதபு—மரியாதை ஒழுக்கம், எனும் பொருள் கொண்ட அரபுச் சொல். என்னுடை—உடைய என்பதன் மரூஉ. பரிகொடு வந்து—கொண்டு என்பதன் தொகுத்தல் விகாரம்.

13. அரிகடல் சூழ்ந்திடு புவிமன்னர் மகிழ்ந்திட
வருந்தசைக் கட்டிதன்னை
யழகுள மங்கையாய்ச் சிருட்டித்த வரசுட
னுடவா வம்புலியே
அரியென வபூபக்கர்க் கணுகிய விடமதை
யமுதெனு முமிழ் நீரால்
அகன்றிடும் படிசெய்த சஞ்சீவி மருந்துட
னுடவா வம்புலியே
அருமறை நான்கையுந் தெளிவுற வறிந்திடு
மறிவுள சல்மானி
னலந்தை யந்தீரவே பொன்னளந் தவருட
னுடவா வம்புலியே
அருள்தவம் பெற்றவ குமது நபியுட
னுடவா வம்புலியே
ஆதியும் லெளலாக் கென் றிசைத் தரசுட
னுடவா அம்புலியே (10)

பதவுரை

அரிகடல் சூழ்ந்திடும் புவிமன்னர் மகிழ்ந்திட—நீர் பெருகிய சூழ்ந்த உலகின் மன்னரெல்லாம் மகிழும் படியாக, அரும் தசைக் கட்டி தன்னை அழகு உள்ள மங்கையார் சிருட்டித்த அரசு டன்—அரிய தசைக் கட்டியை அழகுள்ள மங்கையாகப் படைத்த அரசுடன், ஆடவா அம்புலியே—அம்புலியே ஆடவருவாயாக' அன்யெை அபூபக்கர்க்கு அணுகிய விடம் அதை அமுது எனும் உமிழ் நீரால்—நெருப்புப்போல் அபூபக்கர் (ரலி) அவர்களைத் தின்டிய விடத்தைத் தமது அமுது பேபன்ற உமிழ் நீரைக் கொண்டு, அகன்றிடும்படி செய்த சஞ்சீவி மருந்துடன் ஆடவா அம்புலியே, அகலும்படி செய்த சஞ்சீவி மருந்தாகிய நபிகள் பிரானுடன் அம்புலியே ஆடவருவாயாக, அருமறை நான்கையும் தெளிவுற அறிந்திட அறிவுள சல்மானின் அலந்தையதீரவே பொன் அளித்தவருடன் ஆடவா அம்புலியே — அரிய வேதங்களாகிய தவ்ராத், ஸபூர், இன்ஜில், புர்கான் என்ற நான்கையும் நன்கு அறிய, அறிவு மிக்க கல்மானுல் பார்சியின் துன்பம் தீரப் பொன் னளித்த நாயகம்(ஸல்)அவர்களுடன் அம்புலியே ஆடவருவாயாக அருள் தவம் பெற்ற அகுமது நபியுடன் ஆடவா அம்புலியே— அருளும் தவமும்புகழிப் பெற்ற அகமது நபியுடன் அம்புலியே ஆட வருவாயாக, ஆதியும் லெளலாக் என்று இசைத்த அரசுடன் ஆடவா அம்புலியே—இறைவனும் லெளலாக் என்று இசைத்த அரசுடன் அம்புலியே ஆட வருவாயாக.

தெளிவுரை

நீர் பெருகிய கடல் சூழ்ந்த உலகின் மன்ன ரெல்லாம் மகி ழும் படியாக, அரிய தசைக் கட்டியை அழகுள்ள மங்கையாகப் படைத்த அரசுடன் அம்புலியே ஆட வருவாயாக, நெருப்புப் போல அபூபக்கர் (ரலி) அவர்களைத் தின்டிய விடத்தைத் தமது அமுது போன்ற உமிழ் நீரைக் கொண்டு அகலும்படி செய்த சஞ் சீவி மருந்தாகிய நபிகள் பிரானுடன் அம்புலியே ஆட வருவா யாக, அரிய வேதங்களாகிய தவ்ராத், ஸபூர், இன்ஜில், புர்கான் என்ற நான்கையும் நன்கறிய அறிவு மிக்க கல்மானுல் பார்ஸீயின் துன்பம் தீரப் பொன் அளித்த நாயகம் (ஸல்) அவர்களுடன் அம்புலியே ஆட வருவாயாக. அருளும், தவமும் மிகப் பெற்ற அகமது நபியுடன் அம்புலியே ஆட வருவாயாக. இறைவனும் ''லெளலாக்'' என்று மொழிந்த அரசுடன் அம்புலியே! ஆட வருவாயாக!

விளக்கவுரை

தசைக் கட்டியைப் பெண்ணுருவாக்கியது: நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சோதிப்பதற்காக ஹபீபரசர் மதியை அமா வாசை இருளில் அழைக்கும்படி கேட்டார். அல்வாறே மதி அழை த்து அற்புதம் நிகழ்த்திக் காட்டினுர்கள் இது கண்டு வியந்து மகிழ்ந்த ஹபீபரசர் தமக்குத் தசைக் கட்டியாகப் பிறந்தபெண் ஹ

அழகிய வடிவிலாகும் படி செய் தருள வேண்டினர். இறையருள் கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அழகு நங்கையாக வடிவங் கொள்ளும்படிச் செய்தருளினர்கள். சீறுப் புராணம் இதனை விவரிக்கின்றது. அபூபக்கர்க்கு விடம் நீக்கியது; நபிகள் நாயகம்(ஸல்) அபூபக்கர் (ரலி) யுடன் மக்காவை விட்டும் மதினாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்கள். வழியில் மக்காவிற் கருகிலுள்ள தெளர் எனும் குகைக்குள் மறைந்திருந்தார்கள். அபூபக்கர் (ரலி) யின் மடியில் தலைவைத்து நாயகம் உறங்கிவிட்டார்கள். அப்போது குகைக் துவாரத்திலிருந்து பாம்பொன்று வர முற்பட்டது. அபூபக்கர் (ரலி) நாயகத்தின் தூக்கம் கெடாமலிருக்கும் பொருட்டுத் தம் காலை நீட்டித் துவாரத்தை அடைத்துக் கொண்டார். பாம்பு தீண்டியது, விடம் தலைக் கேறியது. கண்கள் நீரைச்சிந்தின. நாயகம் விழித்தார்கள். நடந்ததை அறிந்த நாயகம் விடத்திலு கடிவாயில் தங்களின் உமிழ் நீரைத் தடவ விடம் இறங்கி விட்டது.

அம்புலிப் பருவம் முற்றிற்று

சிறுபறை பருவம்

முதல் ஏழு பருவங்கள் இரு வகைப் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவாகும். அடுத்து மூன்று பருவங்களும் வேறுபடும். ஆண் பாற் பிள்ளைத் தமிழில் சிற்றில் பருவம், சிறு தேர்ப் பருவம், சிறு பறைப் பருவம் என அமையும். ஆனால் இந் நூலில் சிறுபறைப் பருவம் எட்டாவதாகக் கொள்ளப்படுகிறது. பாட்டுடைத் தலை வரைச் சிறுபறை முழங்கியருளும்படி வேண்டுவது இதன் அமைதி யாகும்.

74. புத்திமதிக் கமையாத விறையாதி முன்னுள்ற்
பொலிவாக பல செந்துவின்
புட்கலனு முண்டாக் கிருந்தபின் களிப்பாக
புங்கவர்க் கரசனுரைப்
பத்திபெற வேழுபத் தாயிர மாண்டுதான்
படைப்பித்துக் கலிமாவையும்
றையென்ற சொற்கேட்டுக் கலிமாவை முழுவதும்
பறையாத காலத்திலே
முத்திபெற சிபுறயீலுக் கறிவான் கலிமாவை
முழுவது முறையாகவே
மொழித்தவழி நேராகக் காட்டின குணமுள்ள
மூதறிவு அகமீறிய
சித்தீக்கு மகள்தன்னை மணங்கொண் டகிங்கமே
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபறை முழக்கியருளே
(1)

பதவுரை

புத்திமதிக்கு அமையாத இறை ஆதி முன் நாளில் பொலி வாகப் பல செந்துவின் புட்கலனும் உண்டாக்கி இருந்த பின்— மனித அறிவுக்கு எட்டாத தொடக்க நாளில் ஆதியாகிய இறை வன் பல பிராணிகளின் உடல்களையும் அழகாகப் படைத்து முடி த்த பிறகு, களிப்பாகப் புங்கவர்க்கு அரசனுரைப் பந்தி பெற ஏழு பத்து ஆயிரம் ஆண்டுதான் படைப்பித்து — எழுபதினாயிரம்

ஆண்டுகளுக்கு முன்னரே வானோர்க்கு அரசரானவரை மகிழ்வோடு படைப்பித்து, கலிமாவையும் மறையென்ற சொல் கேட்டுக் கலிமாவை முழுவதும் பறையாத காலத்திலே—படைப்பினங்களைப் பார்த்து, கலிமாவை மொழிக என்று இறைவன் ஆணையிட அவை கலிமாவை முழுவமையாக உரைக்க இயலாத காலத்தில், முத்தி பெற சிறுபயிலுக்கு அறிவான கலிமாவை முழுவதும் முறையாகவே மொழித்து வழி நேராகக் காட்டின—முக்தி பெறுவதற்குரிய மெய்யறிவான கலிமாவை ஜிபுறயில் (அலை) அவர்களுக்கு முழுவதும் முறையாக மொழிந்து நேர் வழியைக் காட்டிய, சித்தீக்கு மகள் தன்னை மணம் கொண்ட சிங்கமே — அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் மகளாராகிய ஆயிஷா நாயகியாரை மணந்து கொண்ட சிங்கம் போன்றவரே; சிறுபறை முழக்கி அருளே—சிறிய பறையினை முழக்கியருளுங்கள், செழுமுகிலின் கவிதை நிழல் உடைய மகுமூதரே சிறுபறை முழக்கி அருளே—செழுமையான கார் மேகக் குடை நிழலை உடைய முகமது நபி (ஸல்) அவர்களே சிறிய பறையினை முழக்கியருளுங்கள்.

தெளிவுரை

மனித அறிவுக்கு எட்டாத தொடக்க நாளில் ஆதியாகிய இறைவன் பல பிராணிகளின் உடல்களையும் அழகாகப் படைத்து முடித்த பிறகு எழுபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வானோர்க்கு அரசரானவரை மகிழ்வோடு படைப்பித்துப் படைப்பினங்களைப் பார்த்து, கலிமாவை மொழிக என்று இறைவன் ஆணையிட அவை கலிமாவை முழுமையாக உரைக்க இயலாத காலத்தில் முக்தி பெறுவதற்குரிய மெய்யறிவான கலிமாவை ஜிபுறயில் (அலைஹி) அவர்களுக்கு முழுவதும் முறையாக மொழிந்து நேர் வழியைக் காட்டிய அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் மகளாராகிய ஆயிஷா நாயகியாரை மணந்து கொண்ட சிங்கம் போன்றவரே சிறிய பறையினை முழக்கியருளுங்கள். செழுமையான கார் மேகக் குடை நிழலை உடைய முஹம்மது நபி (ஸல்) அவர்களே சிறிய பறையினை முழக்கியருளுங்கள்

விளக்கவுரை

முத்தி பெற சிறுபயிலுக்கு.....மொழிந்தது: இறைவன் 7000 ஆண்டுகளுக்கு முன்னால் விண்ணுலகில் அமரர்களின் தலைவரைப் படைத்து கலிமாச் சொல்லும்படி கூறினான். அவர் தெரியாதிருந்தார். பின்னர் நாயகம் (ஸல்) அவர்களை வரவழைத்துக் கலிமாக் கூறும்படி சொல்ல இனிது மொழிந்து அமரர் கோனாகிய ஜிப்ரயில் (அலை) அவர்களுக்கு உணர்த்தினார்கள்.

ஹஸரத் அபுபக்கர்: நாயகத் தோழருள் முதன்மையானவர் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வயதுவந்த ஆடவர். உடல் பொருள் ஆவி அனைத்தையும் நாயகத்திற்காக அர்ப்பணம் செய்ய முற்பட்டார். தன் இனிய மகள் ஆயிஷா (ரலி) நாயகத்திற்கு மணம் செய்து கொடுத்தார்

இலக்கணக் குறிப்பு

மூதறிவு, சிறுபறை, செழுமுகில்— பண்புத் தொகை. சிங்கமே—உவமையாகு பெயர், கவிதை நிழல் — ஆம் வேற்றுமைத் தொகை.

75. அருவுருவி லமையாத ஆதிறகு மான்றனே
யறிவாகப் போற்றுமலே
அழலின் பதிக் கிறையான யிபுலீசின் செயல்செய்யு
தீயவர் மகிதர்குலம் வெடிகொள்ளவே

பொருள்களொடு தவறுத வேதமொடு தீன்மார்க்கம்
பொலிவாக வளர்ந்தேறவே
புண்யநிலே குணமான தொழுகையொடு மனுமுறை
பொறுமையொடு மற மீறவே

திருவினிலே மாறும வினசுற்றங் குறையாமல்
தீவினைக ளணுகாமலே
சிறுமைநிலே யேறும வரசுநெறி தவறுமல்
சிறப்பாகப் பெருத்தோங்கவே

செருநர்பறை தொனிமாற வலைகடலின் நிரைசோரச்
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபறை முழக்கியருளே (2)

பதவுரை

அரு உருவில் அமையாத ஆதி றகுமான் தனே — அருவமாகவோ உருவமாகவோ அமையாத ஆதியாகிய அருள் நிறைந்த இறைவனே, அறிவாகப் போற்றுமலே அழலின் பதிக்கு இறையான இபுலீசின் செயல் செய்யும் மகிதர் குலம் வெடிகொள்ளவே வளர்ந்தேறவே—அறிவோடு போற்றுமல் நெருப்பின் இடமான நரகத்திற்கு இறையான இபுலீசின் செயலைச் செய்கின்ற தீயவர்களின் கூட்டம் அச்சம் அடைய, பொருள்களொடு தவறுத வேதமொடு தீன் மார்க்கம் பொலிவாக வளர்ந்தேறவே — மெய்ப் பொருள்களோடு மாறுபடாத வேதமும் தீனுல் இஸ்லாமாகிய சன்மார்க்கமும் அழகாக வளர்ந்து உயர, புண்ய நிலே குணமான தொழுகை யொடு மனுமுறை பொறுமையொடும் அற மீறவே—புண்ணிய நிலே பெறுவதற்குரிய பண்பான தொழுகையும் நீதி முறையும், பொறுமையும் மிகவும் சிறந்து விளங்க, திருவின் நிலே மாறுமல் இனசுற்றம் குறையாமல் தீவினைகள் அணுகாமலே—செல்வ நிலே மாறுது, இனத்தவர் சுற்றத்தவர் குறைவுபடாமல் தீயவினைகள் நெருங்காமல், சிறுமை நிலே ஏறுமல் அரச நெறி தவறுமல் சிறப்பாகப் பெருத்து ஒங்கவே—இழிந்த நிலே பெருகாமல் அரச நெறி தவறுமல் சிறப்பாகப் பெருகி வளர, செருநர் பறை தொனி மாற அலே கடலின் நிரை சோரச் சிறுபறை முழக்கி அருளே—போர் புரிவோரின் முரசொரிகளின் ஒலி மாறுதல் அடையுமாறும், அலேகின்ற கடலின் அலேயோசைகள் குறைந்து போகுமாறும், சிறிய பறையை முழக்கி அருள்வீர்களாக செழுமுகிலின் கவிகை நிழல் உடைய மகுமூதரே சிறுபறை முழக்கி அருளே — செழுமையான கார் மேகக் குடை நிழலே யுடையீ முகம்மது நபி (ஸல்) அவர்களே சிறிய பறையினை முழக்கி அருளுங்கள்.

தெளிவுரை

அருவமாகவோ உருவமாகவோ அமையாத ஆதியாகிய அருள் நிறைந்த இறைவனே அறிவோடு போற்றுமல் நெருப்பின் இட மான நரகத்திற்கு இரையான இபுலிசின் செயலைச் செய்கின்ற தீயவர்களின் கூட்டம் அச்சம் அடைய மெய்ப் பொருள்களோடு மாறுபடாத வேதமும் தீனுல் இஸ்லாமாகிய சன்மார்க்கமும் அழகாக வளர்ந்து உயர, புண்ணிய நிலை பெறுவதற்குரிய பண் பான தொழுகையும், நீதிமுறையும் பொறுமையும் சிறந்து விளங் கச் செல்வ நிலை மாறுது, இனத்தவர், சுற்றத்தவர் குறைவுபடா மல், தீயவினைகள் நெருங்காமல், இழிந்த நிலை பெருகாமல், அரச நெறி தவருமல், சிறப்பாகப் பெருகி வளரப்போர் புரிவோரின் முரசின் ஒலி மாறுதல் அடையு மாறும் அலை கடலின் அலை யோசைகள் குறைந்து போகுமாறும், சிறிய பறையை முழங்கி அருள்வீர்களாக. செழுமையான கார் மேகக் குடை நிழலையுடைய முஹம்மது நபி (ஸல்) அவர்களே சிறிய பறையினை முழக்கி யருளுங்கள்.

விளக்கவுரை

இபுலிசு—இறைவன் ஆரம்பத்தில் விண்ணுலகின் அமரர்களை நெருப்பைக் கொண்டு படைத்தான். இப்லிஸ் தன் தவத்தின் சிறப்பால் மிகவும் உயர்ந்தான். மண்ணுல் ஆதம் (அலை) அவர் களைப் படைத்து அமரர்களைப் பணியும்படி இறைவன் பணித் தான். பலரும் அவ்வாறு செய்தனர். ஆனல் இப்லிஸ் பணிய மறுத்தான். ஆதனின் சுவர்க்கத்திலிருந்து எறியப்பட்டான். எரி யும் நெருப்புடைய நரகத்தின் தலைவனுக அமைந்து விட்டான்.

இலக்கணக் குறிப்பு

அருவுருவு, இவை சுற்றும்—உம்மைத் தொகை, அலை கடல்—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கு தொகை. அரசு நெறி—4-ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. நீலினை, சிறுமை நிலை—பண்புத் தொகை.

76. புன்மாரி மாறுத வன்தோறு மிடிபோலப்
புலி சிங்க முழக்க வாசம்
புழுங்காத மலரீறை வாலியின் துறைதோறும்
வணிகர்கள் பொறிகளின் முழக்கவிண் வாழ்
கன மேவு மதில்சூழ்ந்த நகர் தோறும் பல்லியங்
கடல் போல முழக்கக்கலியோர்
கலிபாடி வீணையொடு கின்னரி முழக்கமிடு யாழி
பணைவீ முத்தாரை கத்தல் செய்துதான்
தினந்தோறு மாறுத வெல்றியுந் தானமுஞ்
செயமான சுபமங்களச்
செய்கையொடு வகையான சோதியே மும்முரசு
தெருக்களில் முழக்க மீறுஞ்

சினமாறி மறையோர்கள் மும்மறை முழக்குநீர்
சிறுபறை முழக்கியருளே
குடை செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமுதரே
சிறுபறை முழக்கியருளே (3)

பதவுரை

புனல்மாரி மாறுத வனந்தோறும் புலி சிங்க முழக்க—மழை நீர் குறையாத காடுகள் தோறும் புலி, சிங்கங்கள் முழக்கவும், வாசம் புழுங்காத மலரின்ற வாவியின் துறை தோறும் பொறி களின் முழக்க—விண்ணளவு உயர்ந்து தோன்றுகின்ற பெருமை மிக்க மதில்கள் சூழ்ந்த நகரங்கள் தோறும் பல்வேறு இசைக் கருவிகள் கடல் போல முழக்கவும், கலியோர் கவிபாடி வீணை யொடு கின்னரி முழக்க—கலைஞர்கள் கவிதைகள் பாடி வீணையை யும் யாழையும் முழக்க, மிகு கருதாரைக் கத்தல் செய்து—மிகுதி யான பகைவர்களை வெட்டிச் சாய்த்து, தினந்தோறும் மாறுத வென்றியும் தானமும், செயமான சுபமங்களச் செய்கையொடு வகையான சோதியே மும்முரசு தெருக்களில் முழக்க — நாள் தோறும் மிகுத வெற்றியும், வெற்றியுள்ள நல்ல மங்களகரமான செயல்களும், பலவகை ஒலிகளும் நிறைய, தெருக்கள்ல் முன்று வகை முரசங்கள் முழக்க, மறையோர்கள் மும்மறை முழக்க மீதும் சினம் மாறி நின் சிறுபறை முழக்கியருளே—மறை ஓதுப வர்கள் ஸபூர், தவ்ரூத், இன்ஜீல் ஆகிய மூன்று மறைகளை முழக்க மிகுதியாகும் கோபம் மாறி நீங்கள் சிறிய மறையை, முழக்கியருளு ங்கள், செழுமுகிலின் கவிகை நிழல்உடைய மகுமுதவரே சிறுபறை முழக்கி அருளே—செழுமையான கார்மேகக் குடைநிழலை உடைய முகம்மது நபி(ஸல்)அவர்களே சிறிய பறையை முழக்கியருளுங்கள்.

தெளிவுரை

மழை நீர் குறையாத காடுகள் தோறும் புலி, சிங்கங்கள் முழங்கவும் மணமூள்ள வாடாத மலர்களை உடைய குளங்களின் துறைகளில் வண்டுகள் இனிமையாய் முழக்கவும், விண்ணளவு உயர்ந்து தோன்றுகின்ற பெருமை மிக்க மதில்கள் சூழ்ந்த நகரங் கள் தோறும் பல் வேறு இசைக் கருவிகள் கடல் போல முழங்க வும், கலைஞர்கள் கவிதைகள் பாடி வீணையையும் யாழையும் முழக்க மிகுதியான பகைவர்களை வெட்டிச் சாய்த்து, நாள் தோறும் மாறுதான மும் வெற்றியுள்ள நல்ல மங்களகர மான செயல்களும் பலவகை ஒலிகளும், நிறைய தெருக்கள்ல் மூன்றுவகை முரசங்கள் முழங்க மறை ஓதுபவர்கள் ஸபூர், தவ்ரூத் இன்ஜீல் ஆகிய மூன்று மறைகளை முழக்கி மிகுதியாகும். கோபம் மாறி நீங்கள் சிறிய பறையை முழக்கி யருளுங்கள். செழுமை யான கார்மேகக் குடை நிழலை உடைய முஹம்மது நபி (ஸல்) அவர்களே. சிறிய பறையை முழக்கியருளுங்கள்.

விளக்கவுரை

கத்தல்—கொல்லுதல் எனும் பொருள் கொண்ட அறுபுச் சொல்:

இலக்கணக் குறிப்பு

புலி மாரி—2-ம் ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கருதார்—வினையால் அணையும் பெயர். மும்மறை —பண்புத் தொகை. புலி சிங்கம்—உம்மைத் தொகை. இடிபோல கடல் போல்—2-ம் ஆம் வேற்றுமைத் தொகை.

77. திரைபிறழ்த்த லகலாத ஆழியின் முழக்கமுஞ்
செழுமையுள வெண்முத்தமே
செழிப்புள்ள சங்கின் முழக்கமும் விரிவான
சேணினிற் செறித்தோடிய

கரியபுயல் மின்னிடி முழக்கமுங் கதிரொத்த
காயமின் மடவார்களும்
களிப்பார வாழ்கின்ற வானுலகி லுள்ள பல
கருவியின மயராமலே

வரிபெருக நன்றதாய் முழக்கவும் பாரினில்
வளமுடைய வடல்கால்களில்
வாழ்கின்ற செங்கயல் முழக்கமும் பலபல
வளர்தொழில் முழக்கமாதந்

தீரிமாரி முழக்கமுள மக்க நகர் வள்ளலே
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமுதரே
சிறுபறை முழக்கியருளே (4)

பதவுரை

திரை பிறழ்தல் அகலாத ஆழியின் முழக்கமும்—அலை புரள் வது நீங்காத கடலின் முழக்கமும், செழுமை உள வெண்முத்தமே செழிப்புள்ள சங்கு இன முழக்கமும்—செழுமைபான வெண்மை நிற முத்துக்களை ஈனுகின்ற சங்குக் கூட்டங்களின் முழக்கமும், விரிவான சேணினில் செறிந்து ஓடியகரிய புயல் இன் முழக்கமும் —விரித்த ஆகாயத்தில் செறிவாக நிறைத்து ஓடுகின்ற கார்மேகத் தின் மின்னல் இடி முழக்கமும், கதி விரித்த காயம் மின் மட வார்களும், களிப்பார வாழ்கின்றவான் உலகில் உள்ள பல கருவி யினம் அயராமலே வரி பெருக நன்ற தாய் முழக்கவும்—சூரியனைப் போன்ற ஒளி பெற்ற உடலை உடைய மின்னலை ஒத்த பெண் களும் மகிழ்வு நிரம்பி வாழ்கின்ற வானுலகில் உள்ள பல இசைக் கருவிகளும் இடைவிடாமல் இசைப் பாடல் பெருக நன்றாக

முழக்கவும், பாரினில் வளம் உடைய வயல் காலகளில் வாழ்கின்ற செங்கால் முழக்கவும்—உலகில் வளம் மிக்க வயல்களில் வாழும் செம்மையான கயல் மீன்களின் முழக்கமும், பலபல வளர் தொழில் முழக்க, மாதம் திரிமாரி முழக்கமுள மக்க நகர் வள்ளலே சிறுபறை முழக்க அருளே—பற்பல வாக வளர்கின்ற தொழில்களால் ஏற்படும் முழக்கமும், மாதம் மும்மாரி பொழிவதால் உண்டாகும் முழக்கமும் உள்ள மக்க மாநகரின் வள்ளலே சிறிய பறையினை முழக்கியருங்கள், செழும் முகிலின் கவிகை நிழல் உடைய முகம்மது நபி (ஸல்) சிறிய பறையை முழக்கி அருளுங்கள்.

தெளிவுரை

ஆலை புரள்வது நீங்காத கடலின் முழக்கமும் செழுமையான வெண்மை நிற முத்துக்களை ஈனுகின்ற சங்குக் கூட்டங்களின் முழக்கமும், விரிந்த ஆகாயத்தில் செறிவாக நிறைந்து ஓடுகின்ற கார் மேகத்தின் மின்னல் முழக்கமும், சூரியன் போன்ற ஒளி பெற்ற உடலை உடைய மின்னலை ஒத்த பெண்களும் மகிழ்வு நிரம்பி வாழ்கின்ற வானுலகில் உள்ள பல இசைக் கருவிகளும் இடைவிடாமல் இசைப் பாடல் பெருக முழக்கமும் உலகில் வளம் மிக்க வயல்களில் வாழும் செம்மையான மீன்களின் முழக்கமும் பற்பல வகையாக வளர்கின்ற தொழில்களால் ஏற்படும் முழக்கமும், மாதம் மும்மாரி பொழிவதால் உண்டாகும் முழக்கமும் உள்ள மக்கமா நகரின் வள்ளலே சிறிய பறையினை முழக்கியருளுங்கள். செழுமையான கார் மேகக் குடையின் நிழலை உடைய முஹம்மது நபி (ஸல்) அவர்களே சிறிய பறையை முழக்கியருளுங்கள்.

விளக்கவுரை

முழக்கங்கள் பாங்குறக் கூறப்படுகின்றன.

இலக்கணக் குறிப்பு

செங்கயல், வெண்முத்தம்—பண்புத் தொகை. வானுலகு—இருபெயரொட்டுப் பண்புத் தொகை. வளர்தொழில்—வினைத் தொகை.

78. ஒங்கலுள் வனங்களிற் றிருந்துமும் மதங்களை
யொழுகின்ற களிற்கோட்டினி
லொளி வருக விலைவற்ற முத்தமுற் றனமுத்தும்
வாடைமோசையில் வீழ்முத்தமும்
வாங்க லணுகாதநீள் கழுகில் வீழ்முத்தமும்
வாரியுறை துறைதோறுமே
வால்வளை முத்தமொடு தாமரை முத்தமும்
வாரியொத்த மள்ளரொலிகள்

நீங்காத மருதநிலச் செந்நெலொடு கன்னல்தரு
நித்திலங் கொழிக்கும்வாவி
நெருங்குவள மாருத புடைசூழ்ந்த மக்கநகர்
நெறியுடைய மதிஞ்ஞையும்

தீங்குவினை மாற்றவே வந்தமணி வள்ளலே
சிறுபறை முழக்கியருளே
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபறை முழக்கியருளே (5)

பதவுரை

ஒங்கலுள் வனங்களுள் திரிந்து மும் மதங்களே ஒழுகின்ற களறு கோட்டிலில் ஒளி பெருக விளைவுற்ற முத்தமும்—மலைகளிலும் வனங்களிலும் திரிந்து மூன்று உறுப்புக்களில் மதநீரை வடிக்கின்ற ஆண்யானையின் தந்தங்களில் ஒளி பகுதியாக விளைந்த முத்துக்களும், கழை முத்தமும் ஓசையில் விளைமுத்தமும்—கரும்பில் விளையும் முத்துக்களும் வாழையில் விளையும் முத்துக்களும், வாங்கல் அணுகாத நீர் கமுகில் விளை முத்தமும்—வளையாத நீண்ட பாக்கு மரங்களில் விளைகின்ற முத்துக்களும், வாரி உறை துறை தோறுமே வால் வளை முத்தமொடு தாமரை முத்தமும்—நீர் நிறைந்த துறைகள் தோறும் வெண்மையான சங்குகள் ஈன்ற முத்துக்களும் தாமரையில் விளையும் முத்துக்களும், வரி ஒத்த மனவர் ஒலிகள் நீங்காத மருதநிலச் செந்நெலொடு கன்னல் தரும் நித்திலம் கொழிக்கும் வாவி—இசைப் பாடலைப் போன்ற உழவரின் குரவை ஒலிகள் நீங்காத மருத நிலத்தில் விளையும் செந் நெல்லும் கரும்பும் தருகின்ற முத்துக்களும் நிறைந்து விளையும் முத்துக்களும், நெருங்கு வளம் மாருத புடை சூழ்ந்த மக்க நகர்—நெருங்கி வளம் மாறுமல் சுற்றிலும் அமைந்துள்ள மக்கமா நகரும், நெறியுடைய மதிஞ்ஞையும்—நேர்வழி உடைய மதினமா நகரையும், தீங்குவினை மாற்றவே வந்த மணி வள்ளலே சிறு பறை முழக்கி அருளே—தீங்கான வினைகளே மாற்றி உயர்ந்த வந்த மணி போன்ற வள்ளலே சிறிய பறையை முழக்கியருளுங்கள்.

தெளிவுரை

மலைகளிலும் வனங்களிலும் திரிந்து மூன்று உறுப்புக்களில் மத நீரை வடிக்கின்ற ஆண்யானையின் தந்தங்களில் ஒளி மிகுதியாக உள்ள விளைந்த முத்துக்களும் கரும்பில் விளையும் முத்துக்களும் வாழையில் விளையும் முத்துக்களும் வளையாத நீண்டபாக்கு மரங்களில் விளைகின்ற முத்துக்களும் நீர் நிறைந்த துறைகள் தோறும் வெண்மையான சங்குகள் ஈன்ற முத்துக்களும், தாமரையில் விளையும் முத்துக்களும் இசைப்பாடலைப் போன்ற உழவரின் குரவை ஒலிகள் நீங்காத மருத நிலத்தில் விளையும் செந் நெல்லும் கரும்பும் தருகின்ற முத்துக்களும் நிறைந்து விளங்கும் குளங்கள் நெருங்கி வளம் மாறுமல் சுற்றிலும் அமைந்துள்ள மக்கமா நகரையும் நேர்வழிஉடையமதினமா நகரையும் தீங்கான வினைகளே

மாற்றி உயர்த்த வந்த மணி போன்ற வள்ளலே சிறிய பறையை முழக்கியருளுங்கள் செழுமையான கார் மேகக் குடையின் நிழலை உடைய முஹம்மது நபி (ஸல்) அவர்களே சிறிய பறையினை முழக்கியருளுங்கள்.

தெளிவுரை

பல்வேறு இடங்களில் தோன்றும் முத்துக்கள் அருமையாக அமைந்துள்ளன.

இலக்கணக் குறிப்பு

ஓங்கல்—தொழிலாகு பெயர். வாங்கல்—தொழிற் பெயர். விசும்புத்தம்—வினைத்தொகை. களிற்கோடு — 6-ஆம் வேற்றுமைத் தொகை, கலைமுத்தம், தாமரைமுத்தம்-7-ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

79. விண்ணுல கடங்கலுந் தள்ளாட வெழுமேகம்
வெறி கொண்டு வெருண்டோடவே
விசும்பன வுமட்ட கிரிமேருட நடுங்கிட
வேலைகட லதிர் கொள்ளவே
மண்ணுல கடங்கலு மசைந்திடவே சேடனு
மயக்கமது மிகக் கொள்ளவே
மாதிரத் துறைகின்ற யிருநான்கு யானைகள்
மதஞ் சிந்தி மருள் கொள்ளவே
கண்ணெளி விலைமையா துகனமுந் திடுக்கிடக்
கனலியொடு மதியாண்டுங்
கருத்தினில்க லக்கமது கொண்டுதா னிலையன்றி
கதிரியொடு கலந்தோடவே
திண்ணமுள மெய்யான வடிவுள்ள கைகொண்டு
சிறுபறைமு ழக்கியருளே
செழுமுகி லின்கவிகை நிழலுண்ட மகுமூதரே
சிறுபறைமு ழக்கியருளே (5)

விண்ணுலகு அடங்கலும் தள்ளாட—வானுலகங்கள் எல்லாம் தடுமாற, எழுமேகம் வெறிகொண்டு வெருண்டோடா—ஏழு மேகங்களும் வெறித்து வெருண்டோட, விசும்பனவும் அட்ட கிரி மேருட நடுங்கிட—விண்ணளாவும் எட்டு மலைகளும் மேரு மலையுடன் நடுங்க, வேலைகடல் அதிர் கொள்ளவே—கடல் களெல்லாம் அதிர, மண்ணுலகு அடங்கலும் அசைந்திடவே — நில உலகம் முழுவதும் நடுங்க, சேடனும் மயக்கம் அது மிகக் கொள்ளவே—ஆதிசேடனும் மயக்கம் மிகக் கொள்ள, மாதிரத்து உறைகின்ற இரு நான்கு யானைகள் மதம் சிந்தி மருள் கொள்ளவே— எட்டுத்

திசைகளிலும் உள்ள எட்டு திக்கு யானைகள் மதநீர் பொழிந்து மருள் கொள்ள, கண்ணெளிவில் அமையாத ககனமும் திடுக்கிட —கண் பார்வையில் அமையாத ஆகாயமும் திடுக்கிட, கலலி யொடு மதி ஆனதும் கருத்தினில் கலக்கம் அது கொண்டு—சூரிய னுடன் சந்திரனும் மனத்தில் கலக்கம் கொண்டு, கற்கியொடு கலந்தோடவே—குதிரையுடன் கலந்து ஓட, திண்ணம் உள்ள மெய்யான வடிவுள்ள கைகொண்டு—வலிமையுள்ள உண்மையின் வடிவமான தங்களின் கைகொண்டு, சிறுபறை முழக்கியருளே! செழுமுகிலின் கவிகை நிழல் உடைய மகுமுதரே—செழிய மேகத் தின் குடை நிழலை உடைய முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுபறை முழக்கியருளே!

தெளிவுரை

வானுலகங்கள் எல்லாம் தடுமாற, ஏழு மேகங்களும் வெறித்து வெருண்டோட, வானளாவும் எட்டு மலைகளும் மகா மேருமலை யுடன் நடுங்க, கடலனைத்தும் அதிர, நில உலக முழுவதும் நடுங்க, ஆதி சேடனும் மயக்கம் மிகக் கொள்ள, அட்டதிக்கு யானைகள் மதங் கொண்டு மருள, கண்ணுக் கடங்காத ஆகாயமும் திடுக்கிட சூரியனும் சந்திரனும் கலக்கம் கொண்டு குதிரையுடன் கலந்தோட வலிமையுள்ள உண்மையின் வடிவமான தங்களின் கைகொண்டு சிறுபறை முழக்கியருள் வீராக! செழிய மேகத்தின் குடை நிழலையுடைய முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுபறை முழக்கியருள்வீராக!

விளக்கவுரை

அட்ட கிரி; எட்டு மலைகள். சேடன்—உலகைத் தாங்கும் ஆயிரம் தலையுள்ள பாம்பு. இதுபற்றி முன்னரே கூறப்பட்டுள்ளது. அட்டதிக்கு யானைகள்—எட்டுத் திக்குகளிலும் உள்ள யானைகள் உலகைப் பாதுகாத்து வருகின்றன. சூரியனும் குதிரைகளும்: சூரியன் ஒற்றைச் சக்கரமுள்ள தேரில் ஊர்ந்து செல்லுகிறான்; ஏழு குதிரைகள் அத்தேரினை இழுத்துச் செல்லுகின்றன—இது இந்து சமயப் புராணம் தரும் செய்தி.

இலக்கணக் குறிப்பு

தள்ளாட, வெருண்டோட, நடுங்கிட, அசைந்திட, கொள்ள, திடுக்கிட, கலந்தோட—செய வென் வாய்பாட்டு வினையெச்சங் கள். வெறி, அதிர், மருள்—முதனிலை தொழிற் பெயர்கள். செழுமுகில், சிறுபறை—பண்புத் தொகைகள்.

80. ஏர் பெருகு சூரியனு மொவ்வாத யிமையவர்க
ளின்பமொடு விசைகொள்ளவே
யிரு நான்கு திசையுள்ள அபுதாக்க ளானந்த
மின்புற்றுச் செவிகொள்ளவே

கார் பெருகுங் குழலுடைய கூருனி மாதர்கள்
கவிபாடிக் குனிந்தாடவே
கக்கனுரை தவருத நபிமார்க ளனைவர்கண்
காட்சி பெற்று இச்சிக்கவே
போர் பொருதும் விஜைவிட்டுக் குபிரரசர் கலிமாவைப்
புகன்றடுமை யென்றோதவே
புகழாகத் தண்டமிழின் கவிகளுரை செய்கின்ற
புலவோர்கள் கவிபாடவே
சீர்பெருகு மாமறை முழக்கவே வந்த நபி
சிறுபறை முழக்கியருளே!
செழுமுகிலின் கவிகைநிழ லுடைய மகுமூதரே
சிறுபதை முழக்கியருளே (7)

பதவுரை

ஏர் பெருகு சூரியனும் ஒவ்வாத இமையவர்கள் இன்பமொடு இசை கொள்ளவே — அழகு பெருகும் சூரியனும் நிகராகாத அமரர்கள் இன்பமுடன் புகழ்ந்து பாட, இரு நான்கு திசையுள்ள அபுதாக்கள் ஆனந்தம் இன்பமுற்றுச் செவி கொள்ளவே— எட்டுத் திசையிலும் உள்ள அபுதாக்களாகிய திக்குப் பாலகர்கள் ஆனந்தத்தை இன்பமுடன் செவி கொள்ள, கார் பெருகுங் குழலுடைய கூருனி மாதர்கள் கவிபாடிக் குனிந்தாடவே—கார் மேகம் போன்ற கரிய செறிந்த கூந்தலுடைய கூருனி மகளிர் கவிகள் பாடி குனிந்து ஆட, கக்கன் உரை தவருத நபிமார்கள் அனைவர் கண் காட்சி பெற்று இச்சிக்கவே — ஹக்காகிய இறை வனின் மொழி தவருத நபிமார்கள் அனைவரும் கண் காட்சி பெற்று விரும்ப, போர் பொருதும் விஜைவிட்டுக் குபிர் அரசர் கலிமாவைப் புகன்று அடிமை என்று ஓதவே—போர்த் தொழிலை விட்டு இறை மறுப்பினைக் கொண்ட காபிராகிய அரசர்கள் மூல மந்திரத்தைக் கூறித் தங்களின் அடிமை என்று சொல்ல, புகழாகத் தண்டமிழின் கவிகள் உரை செய்கின்ற புலவோர்கள் கவி பாடவே—புகழ் மிகுந்த தண்டமிழ்க் கவிகளியற்றும் புலவர்கள் கவிபாட, சீர்பெருக மாமறை முழக்கவே வந்த நபி சிறுபறை முழக்கியருளே — சிறப்பு மிகும் பெருமை பொருந்திய திருமறை முழக்க இவ்வுலகிற்கு வந்த நபியே சிறுபறை முழக்கி அருள்வீராக! செழுமுகிலின் கவிகை நிழலுடைய மகுமூதரே சிறுபறை முழக்கியருளே—செழிய மேகக் குடை நிழலை உடைய முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுபறை முழக்கி அருள்வீராக!

தெளிவுரை

அழகுபெருகும் சூரியனும் நிகராகாத அமரர்கள் இன்பமுடன் புகழ்ந்துபாட, எட்டுத்திக்கிலுமுள்ள அபுதாக்கள் இன்பமுற்று ஆனந்தம் செவி கொள்ள, கார் மேகம் போன்ற கரிய கூந்தலை யுடைய கூருனிப் பெண்கள் கவிபாடிக் குனிந்தாட, இறைவனின் உரை தவரு நபிமார்கள் அனைவரும் இனிய காட்சி பெற்று விரும்பி

பார்த்தொழிலே விட்டுவிட்டு இறை மறுப்பாளராய அரசர்கள் மூலமந்திரத்தைக் கூறித் தங்களின் அடிமை யென்று சொல்ல, புகழ் மிகுந்த தண்டமிழ்க் கவிகளியற்றும் புலவர்கள் கவிபாட, சிறப்புமிகு மாமறை முழக்க மாநிலம் வந்த மாநபியே சிறுபறை முழக்கியருள் வீராக! செழிய மேகக் குடை நிழலே யுடைய முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுபறை முழக்கியருள் வீராக!

விளக்கவுரை

அபுதாக்கள்—அப்தால் (Abdhal) கள் எனும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம். வலிமார்களிலிடமேம்பட்டவர்கள்குத்புகள். குத்புகளுள் மேம்பட்டவர்கள் அப்தால்கள், இறைவனின் அருளும் நேசமும் பெற்றவர்கள். கூருனி—கூறுல் ஈன் எனும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம் கூறுலின் குறித்து முன்னரே கூறப்பட்டுள்ளது. கக்கள்—இறைவன் எனும் பொருள் கொண்ட ஹக்கு எனும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம். ஹக்கு—உண்மை மெய்ப் பொருளாகிய இறைவன். 'புகழாகத்.....கவிபாடவே' புகழ் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய தமிழில் கவி (உரையும்) இயற்றுகின்ற புலவோர்கள் கவிபாடவே — என்பதில் கவிதையின் மொழிப் பற்று வெளிப்படுகின்றது.

இலக்கணக் குறிப்பு

பெருகு சூரியன்—வினைத் தொகை. செவி கொள்ள—செவியின் கண் கொள்ள—7-ம் வேற்றுமைத் தொகை. காட்சி—தொழிற் பெயர், குபிரரசர்—2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. மாமறை—உரிச் சொற்றொடர்.

81. பொங்கிவரும் புனலுள்ள ஆற்றினிலு ழைப்பின்னே மான்
புகுமிரைச் சென்றது வுநீர்
புருட்முதல் பலசெந்தை யிடர் மிறக் கொலைசெய்த
புலியவதை யெய்தது வுநீர்

மீன் பொங்கரினை யானதொரு போகியைத் துரும்பதாற் மாமனை
பூமிதனிற் கொன்றது வுநீர்
போச்சுவழி தப்பிவிட வொட்டையொடு முன்சென்ற
பொருந்தும்படி சென்றது வுநீர்

....

....

கணிதபுக ழிடங்காத ராகையா லுமைநம்புங்
கசடன்வினை யகன் றோடவே

செங்கமல மொவ்வாத வதனமதி வள்ளலே
சிறுபறை முழக்கியருளே
தீன்பயிர் விளக்கிடவே வந்தநபி நாதரே
சிறுபறை முழக்கியருளே (8)

பதவுரை

பொங்கிவரும் புனலுள்ள ஆற்றினில் உழைப் பின்னே புகழாகச் சென்றதுவும் நீர் —பெருகிவரும் நீருள்ள ஆற்றில் மானின் பின்னுல் புகழுடன் சென்றதும் நீங்களே, புருடர் முதல் பல செந்தை இடர் நீறக் கொலை செய்த புலியை வதை செய்த துவும் நீர்—மனிதர் முதலாகப் பல உயிரினங்களையும் துன்பம் தீதுரக் கொன்று வந்த புலியை அழித்ததும் நீங்களே, பொங்கர் இணையாது ஒரு போகியைத் தும்பதால் பூமீதனில் கொன்றதுவும் நீர்—மலை போன்ற ஒரு பாம்பை தும்பினுல் நிலத்தில் கொன்றதுவும் நீங்களே, போக்கு வழி தப்பி விட ஒட்டை யொடு முன் சென்று பொருந்தும்படி சென்றதுவும் நீர் —செல்லும் வழி தவறிவிட ஒட்டகையுடன் முன் நடந்து நன்மை பொருந்தும்படிச் சென்றதும் நீங்களே, கணித புகழ் அடங்கா தார் ஆகையால் உமை நம்பும் கசடன் வினை அகன்று ஓடவே— கணித்தலிடங்காத புகழுடையீர், ஆகையால் உங்களை நம்பும் கீழ் மகனுகிய என் தீவினை நீங்கி ஓட, செங்கமலம் ஒவ்வாத வதன மதி வள்ளலே சிறுபறை முழக்கியருளே — செந்தாமரை நிசராகாத முகமாகியமதி கொண்ட வள்ளலே சிறுபறை முழக்கி யருள் வீராக! தீன்பயிர் விளக்கிடவே வந்த நபி நாதரே சிறுபறை முழக்கியருளே—சன்மார்க்கமாகிய பயிரை விளக்க வந்த நபிகள் நாயகமே சிறுபறை முழக்கியருள்வீராக!

தெளிவுரை

பெருகிவரும் நீருள்ள ஆற்றில் மானுக்குப் பின்னுல் புகழ் பரவும்படிச் சென்றதும் நீங்களே. மனிதர் முதலாக உள்ள பல உயிரினங்களையும் துன்பம் தீதுரக் கொன்று வந்த புலியை அழித் ததும் நீங்களே. மலை போன்ற பாம்பைத் தும்பினுல் அழித் ததும் நீங்களே, செல்லும் வழி தவறவே ஒட்டகையுடன் முன் சென்று நன்மை செய்யும்படி போனதும் நீங்களே. கணிக்க வியலாப் புகழுடையோர் தாங்கள், அதலின் உங்களை நம்பும் கீழ் மகனுகிய என் தீவினை நீங்கி ஓட செந்தாமரை நிகராகா முகமா கிய மதி கொண்ட வள்ளலே சிறுபறை முழக்கியருள்வீராக! சன்மார்க்கமாகிய பயிரை விளக்க வந்த நபிகள் நாயகமே! சிறு பறை முழக்கியருள்வீராக!

விளக்கவுரை

பொங்கி.....சென்றதும் நீர்—நாயகம் வாலிபராக இருக்கும் போது ஷாம் நகருக்குச் செல்லும் வணிகர் கூட்டத்துடன் கதிஜா நாயகியின் பேராளராக வாணிகம் செய்யச் சென்றிர்கள். வணி கக் கூட்டத்தின் வழி நடத்தும் மதிப்பு வாய்ந்த தலைவராக அமைந்தார்கள். வழியில் பொங்கிப் பெருகி வரும் காட்டாறு அச்சுறுத்தியது. இறைவன் திருவருளால் ஒரு மான் தோன்றி ஆற்றின் மேல் நடந்து சென்றது நாயகம் அவர்களும் நடந்தார்

கள். பிற வணிகரும் நடந்தனர். பிரளயம் போல் பெருகி வந்த ஆற்றின் ஆழம் முழங்கால் அளவாக அமைந்துவிட்டது. அச்சுறுத்திய ஆற்றைக் கடந்தனர். அனைவரும் நாயகம் அவர்களைப் புகழ்ந்தனர். புருடர்.....புலியை வதை செய்ததுவுநீர்— நாயகம் கதிஜா நாயகியின் பேராளராக வாணிகம் செயயச் சென்றபோது வணிகர் கூட்டத்திற்கு அபுஜகீல், உத்பா, ஆசு முதலியோர் முன்னே முன்னமைந்து நடத்திச் சென்றனர். அபுஜகீலின் ஒட்டகம் இடறி விழுந்தது; உத்பா வேங்கைப் புலி கண்டு அஞ்சினார்; ஆசின் ஒட்டகம் வழி தவறிச் சென்றது. பெரும் துன்பங்களுக்குள்ளாயினர். பின்னர் நாயகம் முன்னடத்திச் செல்ல ஏற்பாடாகியது. அவர்களின் ஒட்டகையின் மீதிருந்து நல்வழியில் நடத்திச் சென்றார்கள். பொங்கர்.....கொன்றதுவு நீர் — நாயகம் ஷாம் நகர்க்கு வணிகருடன் சென்ற போது மலைபோன்ற பெரும் பாம்பு வழியில் எதிர்ப்பட்டது. பல உயிரினங்களை விழுங்கி வந்தது. வணிகர் அஞ்சினர். நாயகம் ஒரு சிறு தூரம்பை எடுத்து அதன் மேல் எறிந்தனர். அப்பாம்பு செத்தொழிந்தது.
(மூன்றும் அடியில் முதல் பாதி விடுபட்டுள்ளது.)

இலக்கணக் குறிப்பு

மீற—செய வென் வாய்பாட்டு வினையெச்சம். செங்கமலம் —பண்புத் தொகை. வதனமதி, தின்பயிர்—உருவகங்கள்

82. அகம்பல தமைக்குமுன் னறுவாகி லலிபதா
யழகாயிருந் தவருளே
அவ்வல்பசிர் தொழுததோ ராதநபி நுதலினி
லரியதா யிருந்த பொருளே
சுகம்பல தருள் செய்த அப்துல்லா நுதலினிற்
றுலக்கமா யிருந்த சுடரே
தோகையர்க் கரசான ஆமினுர்க் கறிவுள்ள
தோன்றலா யுதித்தமணியே
முகம்பல துஞக்கொண்ட செந்துகளின் பாடைபோல்
மூதறிவுரைத் தகுருவே
முப்புவனத் தப்புறஞ் சென்றுயிறை பாலினில்
மொழிந்திவணில் மீண்டதுரையே
செகம் புகழும் சிபத்துடைய ராகையாற் செம்பலே
சிறுபறை முழக்கியருளே
தின்பயிர் விளக்கிடவே வந்தநபி நாதரே
சிறுபறை முழக்கியருளே (9)

பதவுரை

அகம் பலது அமைக்கு முன்—உலகம் பல அமைப்பதற்கு முன் அறுவாகில் அலிபு அதாய் அழகாய் இருந்த அருளே—ஆலம் அறுவாஹ் எனும் ஆவியுலகில் அலிபாக அழகாக இருந்த அருளே,

அவ்வல் பசிர் தொழுததோர் ஆத நபி நூதலினில் அனிதாய் இருந்த பொருளே—முதலில் பஜ்ர் தொழுகை தொழுத ஒப்பற்ற நபி ஆதம் (அலை) நெற்றியில் அருமையாக இருந்த பொருளே, சுகம் பலது அருள் செய்த அப்துல்லா நூதலினில் துலக்கமாய் இருந்த சுடரே—சுகங்கள் பலவும் அருளிய அப்துல்லாவின் நெற்றியில் விளக்கமாய் இருந்த ஒளியே! தோகையர்க்கு அரசான ஆமினர்க்கு அறிவுள்ள தோன்றலாய் உதித்த மணியே — மங்கையர்க்கரசான அன்னை ஆமினுக்கு அறிவான மகவாய்த் தோன்றிய மணியே! முகம் பலது உருக் கொண்ட செந்துகளின் பாடை போல் மூதறிவு உரைத்த குருவே—பல்வேறு முகங்களையும் உருவங்களையும் கொண்ட உயிர்களுள் மொழிகளைத் தெரிந்தவர் போல் முதிர்ந்த ஞானத்தினைப் பேரதித்த குருவே! முப்புவனத்து அப்புறம் சென்று இறைபாலினில் மொழிந்து இவணில் மீண்ட துரையே—மூன்றுலகங்களுக்கும் அப்பால் சென்று இறைவனிடத்து உரையாடி இங்கு மீண்டு வந்த அரசரே! சகம் புகழும் சிபத்துடையர் ஆகையால் செம்மலே சிறுபறை முழக்கி அருளே—தாங்கள் உலகெல்லாம் புகழும் இயல் புடையவர்; ஆகையால் தலைவரே சிறுபறை முழக்கி யருள் வீராக; தீன் பயிர் விளக்கிடவே வந்த நபி நாதரே சிறுபதை முழக்கி அருளே — சன்மார்க்கமாகிய பயிரை விளக்க வந்த நபிகள் நாயகமே! சிறுபறை முழக்கி யருள் வீராக.

தெளிவுரை

உலகங்கள் பலவற்றையும் அமைக்கு முன் ஆலம் அறுவாஹ் எனும் ஆவி உலகில் அலிபெனும் எழுத்து வடிவாக அழிகாக இருந்த அருளே! முதலாவதாகப் பஜர் தொழுத ஒப்பற்ற நபி ஆதம் (அலை) நெற்றியில் அரிதாக இருந்த பொருளே! சுகங்கள் பலவும் அருளிய அப்துல்லாவின் நெற்றியில் விளக்கமாயிருந்த ஒளியே! மங்கையர்க் கரசான அன்னை ஆமினுவிற்கு அறிவுள்ள மகவாய்த் தோன்றிய மணியே! பல்வேறு முகங்களையும் வடிவங்களையும் கொண்ட பல்லுயிர்களின் மொழி போல் முதிர்ந்த ஞானத்தினைப் போதித்த குருவே! மூவுலகங்களுக்கும் அப்பால் சென்று இறைவனிடம் உறையாடி இங்கு மீண்டு வந்த அரசரே! தாங்கள் உலகமெலாம் புகழும் இயல் புடையீர்; ஆதலால் தலைவரே! சிறுபறை முழக்கி அருள் வீராக! சன்மார்க்கப் பயிரை விளக்க வந்த நபிகள் நாயகமே! சிறுபறை முழக்கியருள் வீராக!

விளக்கவுரை

அறுவாகில்—அறுவாஹ் எனும் அறபுச் சொல் அறுவாகு எனத் தமிழ் வடிவம் பெறுகிறது. அறுவாஹ் என்பது ஆன்மா எனும் பொருள் கொண்டது. ஆலம் அறுவாஹ் என்றால் ஆன்ம உலகம் எனப் பொருள்படும். ஆலம் அறுவாகில் என்பது அறுவாகில் என்று வந்துள்ளது. இவ்வான்ம உலகில் நாயகம் அறபு முதல் எழுத்தாகிய அலிபு வடிவில் ஒளியாகத் திகழ்ந்தார்கள்.

பின்னர் இறைவனைத் தொழுத ஆதம் (அலை) அவர்களின் நெற்றியில் அவ்வொளி பொருந்தியது. இவ்வாறே நபிமார்களின் மேனி வழி வந்து அப்துல்லாவின் நெற்றியில் பொருந்தியது. அன்னை ஆமினு மணிவயிற்றில் தரித்துக் கருவாகி அருமகனைத் தோன்றினார்கள்.

அப்துல்லா — நாயகம் அவர்களின் தந்தை. மகன் தாய் வயிற்றிலிருக்கும் போதே இறந்து விட்டார். அப்துல் முத்தலிப் என்பவரின் புதல்வர். ஆமினு—நாயகம் அவர்களின் அன்னையார் யத்ரிப் நகரைச் சேர்ந்தவர். சிறுவயதிலேயே கணவரை இழந்து விட்டார். மகன் பிறந்த ஆறு ஆண்டுகளில் இவரும் இறந்து விட்டார்

முப்புவனம்..... மீண்டதுரை—மி...ருஜ், முன்னரே விளக்கப்பட்டுள்ளது. அவ்வல்—முதல் எனும் பொருள் கொண்ட அறபுச் சொல். பஸிர்—பஷ்ர் என்னும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம் வைகறை எனும் பொருள் கொண்டது

இலக்கணக் குறிப்பு

அகம் பலது—'அது' அசை. தோகையர்—குறிப்பு வினையாலணையும் பெயர். தீன் பயிர்—உருவகம்.

83. செக்கர் நிறமாரூத செந்தமாரைப் பாத
சித்தீக்கு மருகேசரே
தீனு னபயிருக்கு மழையான போசரே
சிறுபறை முழக்கியருளே

சிக்கமுன் சிகிவீட்டிற் சேராமற் பிறதவுஸில்
செயமாக சேர்ந்தாளவே
செகத்தினிற் கிபத்தாக வந்த மகுமூதரே
சிறுபறை முழக்கியருளே

சிக்கல் மனதணுகாத நபிமார்க ளொலிமார்கள்
செயமன்னர் விறலாளருந்
தேவர் களுமடியதனைச்சே விக்க யேற்றதுரை
சிறுபறை முழக்கியருளே

திக்குலகு புகழ்மக்கங் குறைசிகுல திலகமே
சிறுபறை முழக்கியருளே
தீவினைக ளண்டாம லெனைக் காக்கும் வள்ளலே
சிறுபறை முழக்கியருளே (10)

பதவுரை

செக்கர் நிறமாரூத செந்தாமரைப் பாத சித்தீக்கு மருகேசரே—சிவப்பு மாரூத செந்தாமரை போன்ற பாதங்களை உடைய ஹளரத் சித்தீக் அவர்களின் மருமகனாரே! தீனுன பயிருக்கு

மழியான போசரே—தீஞகிய சன்மார்க்கப் பயிருக்கு மழை யாகிய மன்னரே! சிறுபறை முழக்கி அருளே—சிறுபறை முழக்கி யருள் வீராக! சிக்க முன்சிகி வீட்டில் சேராமல் — நரகத்திற்குச் செல்லாமல், பிறுதவுசில் செயமாக சேர்ந்து ஆளவே—பிர்தௌஸ் என்னும் சொர்க்கத்தில் வெற்றியுடன் சென்று ஆள, செகத்தினில் சிபத்தாக வந்த மகுமுதரே சிறுபறை முழக்கியருளே — உலகில் உயர் பண்பாக வந்த முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுபறை முழக்கி யருள் வீராக! சிக்கல் மனதனுகாத் நபிமார்கள் ஒளி மார்கள் செய மன்னர் விறலாளரும் தேவர்களும்—மனதில் சிக்கல் தோன்றுத நபிமார்களும் வலிமார்களும் வெற்றி வேந்தரும் வலி யோரும் தேவர்களும். அடியதனைச் சேவிக்க ஏற்ற துரை சிறுபறை முழக்கி அருளே—உங்களின் திருவடிகளை வணங்கும் தகுதி கொண்ட மன்னரே சிறுபறை முழக்கி அருள் வீராக! திக்கு உலகு புகழ் மக்கள் குறைசி குல திலகமே சிறுபறை முழக்கி அருளே— உலகின் திக்கெல்லாம் புகழும் மக்கமா நகரக் குறைஷிக் குல திலகமே! சிறுபறை முழக்கி யருள் வீராக! தீவினைகள் அண்டாமல் எனைக் காக்கும் வள்ளலே சிறுபறை முழக்கி அருள்—தீய செயல் கள் நெருங்காமல் என்னைக் காப்பாற்றும் வள்ளலே! சிறுபறை முழக்கி யருள்வீராக!

தெளிவுரை

சிவப்பு மாருத செந்தாமரை போன்ற பாதங்களையுடைய ஹளரத் சித்தீக்(ரலி) அவர்களின் மருகரே! தீஞகிய சன்மார்க்கப் பயிருக்கு மழையாகிய மன்னரே! சிறுபறை முழக்கியருள் வீராக! நரகம் செல்லாமல் பிர்தௌஸ் எனும் சொர்க்கத்திற்கு வெற்றி யுடன் சென்று ஆள, உலகில் சிபத்தென்றும் உயர் பண்பாக வந்த முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுபறை முழக்கி யருள் வீராக! மனதில் சிக்கல் தோன்றுத நபிமார்களும் ஒலிமார்களும் வெற்றி வேந்தரும் வலியோரும் அமரரும் உங்களின் திருவடிகளை வணங்கும் தகுதி கொண்ட மன்னவரே! சிறுபறை முழக்கி அருள் வீராக. உலகின் திக்கெலாம் புகழும் மக்கமா நகரின் குறைஷிக் குல திலகமே! சிறுபறை முழக்கி யருள் வீராக! தீய செயல்கள் நெருங்காமல் என்னைக் காப்பாற்றுகின்ற வள்ளலே சிறுபறை முழக்கி யருள் வீராக!

விளக்கவுரை

சித்தீக்கு மருகரே — ஹளரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) நாயகத் தோழருள் தலைமையானவர். முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வயது வந்த ஆடவர். நாயகம் கதிஜா நாயகியாரை இழந்து வருந்திய போது தம் அருமை மகள் ஆயிஷா (ரலி) வை மணம் செய்து கொடுத்தார். இஸ்லாத் திற்காக அனைத்தையும் அர்ப்பணம் செய்ய முன் வந்தார். முதல் கலிபாவாகச் சிறந்து விளங்கினார்.

சிக்க முன்சிகி வீடு—நரகம். சிகி—நெருப்பு, சிகிவீடு—நெருப் பாலான வீடு, நரகம். பிறுதவுசு — பிர் தெ ள ஸ் எனும் அறபுச சொல்லின் தமிழ் வடிவம். சொர்க்கத்தைக் குறிக்கும். சிபத்து—தன்மை, பண்பு எனும் பொருள் கொண்ட அறபுச் சொல்.

இலக்கணக் குறிப்பு

செந்தாமரை—பண்புத் தொகை. தாமரை — முதலாகு பெயர். தாமரைப் பாதம்—உவமைத் தொகை. வந்த மகுமூதர்—பெய ரெச்சத் தொடர். நபிமார்கள் ஒலிமார்கள் செய மன்னர் விறலார்—உம்மைத் தொகை. செய மன்னர்—2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. தீவினை—பண்புத் தொகை.

இறுபறை பருவம் முற்றிற்று

சிற்றிற் பருவம்

18 - 19

இது ஆண்பாற் பிள்ளைத் தமிழின் 9-ம் பருவமாகும், வெண்மணலில் சிற்றில் இழைத்து விளையாடும் சிறுமியர் பாட்டுடைத் தலைவராகிய பிள்ளை சிற்றிலை அழிக்க முற்படும் போது, 'சிறியேன் சிற்றில் சிதையேலே' என்று பாடுவது.

84. மூரி யகலா மும்மாரி
முத்துஞ் சலமு மிகப் பொழிந்தே
முயற்சி வளமுங் குவளை மரை
முளைத்த நதிகாற் குளம்பணையில்

ஊரி னினமுஞ் சலஞ்சலமு வலம்புரிசங்கு
முறைந்து வுறுமி பீளுளைந்து
வுருத்த மணிவெண் முத்தங்களை
யன்னத் தினங்க ளண்டமென்று

வாரி யணைக்கும் வளஞ் செறிந்த
மச்கா. மதீன நன்னகரை
வாழு மரசே புவிக்கரசே
மன்னர்க் கரசே விரிவான

சேரி தனிலே விளையாடுஞ்
சிறியேன் சிற்றில் சிதையேலே
செய்ய திறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (1)

பதவுரை

மூரி அகலா மும்மாரி—பெருமை நீங்காத மாதந்தோறும் பெய்யும் மூன்று மழைகள், முத்தும் சலமும் மிகப் பொழிந்தே—முத்துக்களையும் நீரையும் மிகவும் பொழிந்திட, முயற்சி வளமும்—முயற்சியும் வளமும் பொருந்திய, குவளை மரை முளைத்த—குவளைகளும் தாமரைகளும் முளைத்திருக்கும், நதி கால் குளம் பணையில்—நதிகளிலும் கால் வாய்களிலும் குளங்களிலும் வயல்களிலும், ஊரி இனமும் சலஞ் சலமும்—சங்குகளும் வலம்புரிச் சங்குகளும், உறைந்து உறுமி பீள் உளைந்து—தங்கி, ஒலித்து, கரு முதிர்ந்து வருந்தி ஒன்று, உருத்த மணி வெண் முத்தக்களை—சிந்திய மணிகளாகிய

வெள்ளிய முத்துக்களை, அன்னத்து இனங்கள் அண்டம் என்று —அன்னப் பறவைகளின் தொகுதிகள் முட்டைகள் என்று எண்ணி, வாரி அணைக்கும் வளம் செறிந்த—வாரி அணைத்து அடைகாக்கும் வளம் நிறைந்த, மக்கா மதினு நன்னகரை— மக்கா மதினு ஆகிய இரு நல்ல நகர் களிலும், வாழும் அரசே —வாழ்ந்திடும் அரசரே! புவிக்கு அரசே—புவியனைத்திற்குமான அரசரே! மன்னர்க்கு அரசே—அரசர்களுக் கெல்லாம் அரசரே! விரிவான சேரி தனிலே—விரிந்துள்ள வீதியில், விளையாடும் சிறி யேன் சிற்றில் சிதையேலே — சிறியேனுகியயான் மணலில் அமைந்து விளையாடும் சிறிய வீட்டைச் சிதையாதீர், செய்யது இறசூல் முகம்மதுவே — தலைவராகிய துாதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களே; சிறியேன் சிற்றில் சிதையேலே — சிறியே னுடைய சிறிய விட்டைச் சிதையாதீர்

தெளிவுரை

பெருமை நீங்காத மாதந்தோறும் பெய்யும் மும்மழையும் முத்துக்களையும் நீரையும் மிகுதியாகப் பொழிந்திட, முயற்சியும் வளமும் பொருந்தி, குவளைகளும் தாமரைகளும் மலர்த்திருக்கும் ஆறுகளிலும் கால்வாய்களிலும் குளங்களிலும் வயல்களிலும் சங்குகளும் வலம்புரிச் சங்குகளும் தங்கி, ஒலித்து, கருமுதிர்ந்து ஈன்று சிந்திய மணிகளாகிய வெண்முத்துக்களை, அன்னப் பறவை களின் தொகுதிகள் தம்முட்டைகள் என்று எண்ணி, வாரி, அணைத்து, அடைகாக்கும் படியான வளம் நிறைந்த மக்கா, மதினு ஆகிய இரு திரு நகர்களிலும் வாழ்ந்திடும் அரசரே! விரிந்துள்ள வீதியிலே சிறியேனுகிய நான் மணலில் அமைத்து விளையாடும் சிறிய வீட்டைச் சிதையாதீர்! தலைவராசிய திருத் துாதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களே! சிறியேனுடைய சிறிய வீட்டைச் சிதையாதீர்!

விளக்கவுரை

சிற்றில் சிதையேல்: சிறுமிகள் மணல் வீடு கட்டி விளையாடு வர். சிறுவர் அம்மணல் வீட்டினைச் சிதைப்பர், பிள்ளைத் தமிழில் பாட்டுடைத் தலைவர் மணல் வீட்டைச் சிதைப்பதும் மகிழ்ச்சி தருவதாக அமைகிறது. குழந்தையின் குறும்பிலும் பெறுவது பெரு மகிழ்வுதானே. முந்திய பருவம் அம்புலிப் பருவம். அம்பு லியை ஆடி மகிழ்வதற்கு அழைத்தும் வராததனால் வெறுப்பும் வெகுளியும் கொண்ட தலைவன் மணல் வீட்டினைச் சிதைப்பது இயல்பு தானே! இங்குப் புலவர் தம்மை மணல் வீடு கட்டி விளையாடும் சிறுமியாகப் பாவித்துப் பாடுகிறார், படிப் போரி டமும் இவ் வுணர்ச்சி உண்டாக்கும்படி செய்துவிடுகிறார்.

பாலை சூழ்ந்த மக்கா மதினு நகர்களை நீர் வளமிகுந்த சோலை சூழ் நகரங்களாக வர்ணிக்கின்றார். தாமிர வருணிப் பகுதியைத் தீட்டிக் காட்டித் தம் நாட்டுப் பற்றை வெளிப் படுத்துகின்றார். மணி வெண் முத்துக்களை,.....வாரியணைக்கும்.

சங்குகள் ஈன்று சிந்திக் கிடக்கும் முத்துக்கள் அன்னப் புறவையின் முட்டை போன்று படுத்திருக்கின்றன என்பதை நயம்பட நவில்கின்றார். மக்கா—அறபு நாட்டிலுள்ள நகரம். நாயகம் பிறந்த திருத்தலம், க.ப.த்துல்லா இங்குதான் உள்ளது மதீனா...நாயக நகரம் எனப் பெயர் கொண்டது. அறபு நாட்டிலுள்ள திருநகரம். ஹிஜ்றத்திற்குப் பிறகு நாயகம் இங்கு தான் வாழ்ந்து வழி காட்டினார்கள். நாயகத்தின் அடக்கமான பள்ளி இங்குள்ளது.

இலக்கணக் குறிப்பு

அகலா மும்மாரி—ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். மும்மாரி—பண்புத் தொகை. குவலை மரை — உம்மைத் தொகை. மரை—தாமரை என்பதன் முதல் குறை. நதி கால் குளம் பதி—உம்மைத் தொகை. உறைந்து, உறுமி, உலைந்து —செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள். நன்னகரை உருபு மயக்கம். சிறறில்—பண்புத் தொகை.

85. அறிவுக் கடலைத் தெளிந்து துரைக்கு
மறிஞ ரிசைகள் கேளாத
வசடர் மதிக ளறிவீரோ
அரிய பெரியோன் றனக்காக

மறமாய் முனிந்தே கையிறுகள்
கொடா பகிலரில் லந் தெரியாதோ
வண்ண மகற்றி வழக்குரைக்கும்
வஞ்சர் பதியைக் காணீரோ

இறைவன் மறைநூ லுணர்ந்த வரை
யிகழ்ந்தோ ரிடநீர் நோக்கிலையோ
யிடர்க ளதின்மே விளைக்கின்ற
யிரிஞர் வசதியீ தல்லவே

சிறுவர் மணலில் விளையாடுஞ்
சிறியேன் சிற்றிற் சிதையேலே
செய்யி றிறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றிற் சிதையேலே (2)

பதவுரை

அறிவுக் கடலைத் தெளிந்து உரைக்கும்—அறிவாகிய கடலைக் கடந்து தெளிந்து கூறும், அறிஞர் இசைகள் கேளாத—அறிஞர்கள் புகழ் மொழிகளைக் கேளாத, அசடர் மதிகள் அறிவீரோ—கீழ் மக்களின் வீடுகளை அறியமாட்டீரோ! அரிய பெரியோன் தனக்காக—அருமையும் பெருமையும் உடைய அல்லாஹ்விற்காக, மறமாய் முனிந்தே கையிறுகள், கொடா — கடுமையாகக்

கோபித்து கைகூகிய தர்மங்கள் கொடுக்காத, பகிர் இல்லம் தெரியாதோ — கஞ்சர்களின் வீடுகள் தெரியமாட்டீரோ, வண்ணம் அகற்றிட வழிக்கு உரைக்கும் — நன்மையை விலக்கி வழிக்காடும், வஞ்சர் பதியைக் காணீரோ — வஞ்சகர் வாழும் வீடுகளைக் காணமாட்டீரோ, இறைவன் மறைநூல் உணர்ந்த தவரை — இறைவனுல் ஆருளப் பெற்ற திருமறைப் பொருளை உணர்ந்தவர்களை, இகழ்ந்தோர் இடம் நீர் நோக்கிலையோ— இகழ்ந்துரைத்தவர்கள் வாழும் இல்லிடங்களை நீர் நோக்க வில்லையோ? இடர்கள் அதின்மே விளைக்கின்ற—துன்பங்களும் அழிவுகளும் தோற்றுவிக்கின்ற இரிஞர் வசது சுதல்லவே— தீயவர்களின் குடில் இதுவல்லவே, சிறுவர் மணலில் விளையா டும்—சிறுவர்களுடன் மணலில் செய்து விளை ாடும், சிறியேன் சிற்றில் சிதையேலே—சிற்யேனுகிய என்னுடய சிற்றிலைச் சிதைக் காதீர்! செய்யிது இறசூல் முஹம்மதுவே—தலைவராகிய திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே, சிறியேன் சிற்றில் சிதை யேலே—சிறியேனின் சிறறிலைச் சிதைக்காதீர்!

தெளிவுரை

அறிவாகிய கடலைக் கடந்து தெளிந்து கூறும் அறிஞர் தம் பொன் மொழிகளைக் கேளாத கீழ் மக்களின் வீடுகளிருப்பதை அறியமாட்டீரோ? அருமையும் பெருமையும் பொருந்திய அல்—ாஹ்வின்காகக் கடுங் கோபத்துடன் எகருகிய தர்மங்கள் தராத கஞ்சர்களின் வீடுகளிருப்பதைத் தெரிய மாட்டீரோ? நன்மையை நீக்கி வழிக்காடும் வஞ்சகர் வாழும் வீடுகளை காண மாட்டீரோ? இறைமறைப் பொருளை நன்குணர்ந்தவர்களைப் பழித்துரைத்தவர்களின் இல்லிடங்களை நீங்கள் நோக்க வில்லையோ? துன் பங்களும் அழிவுகளும் தோற்றுவிக்கின்ற தீய வரின் குடில் இது வல்லவே. சிறுவர்களுடன் மணலில் செய்து விளையாடும் சிறியேனின் சிற்றிலைச் சிதைக்காதீர்! தலைவராகிய திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே! சிறியேனின் சிறறிலைச் சிதைக்காதீர்!

விளக்கவுரை

அறிவுக் கடலை.....அசடர் மனைகளறியிரோ. துறைபோகக் கற்றுத் தெளிந்த அறிஞர் புகழ் மொழி கேளாத கீழ் மக்கள் வாழும் வீடுகளையன்ரே அழிக்க வேண்டும் எனும் குறிப்பைப் புலப்படுத்துகின்ருர். அறிஞர் சொல் கேட்டால் புகழ் உண்டாகும். புகழ் பூத்த வாழ்வு உண்டாகும். அவர் தம் புகழுரைகளைக் கேட்கவில்லை என்ருல் இகழ் உண்டாகும். தாழ்வும் வாழ்வும் உண்டாகும். இதனை இத் தொடர் குறிப்பிடுகின்றது.

அரிய பெரியோன்... தெரியாதோ — இறைவன் இப்படியன் இவ்வளவுத்தன் என்று எடுத்துக் கூற வியலாத அருமை உடை யவன், அரும்; அவனே பெரியவன். அவனுக்கு இணையாருமில்லை

செய்கின்ற தான தர்மங்களே விளம்பரத்திற்காகச் செய்தல் கூடாது. வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் செய்வது வலிமை சான்றது. இறைவனே எண்ணியே செய்தல் வேண்டும். இவ்வாறு ஒருவர்க்கு ஒன்று கொடுக்காதவர் மறவழி நடப்போராவர். அக்கஞ்சர் வாழ்வதிலும் வீழ்வது நன்று எனும் கருத்துக்கள் பொதிந்துள்ளன.

கைறு — தர்மம் எனும் பொருள் தரும் அறப்புச் சொல்
பகீல் — கஞ்சர் எனும் பொருள் கொண்ட அறப்புச் சொல்

'அழித்தற்குரிய வீடுகள் அறிஞர்சொல் கேளாதவர் வீடுகளும் அறம் செய்யாதார் அகங்களும் ஆலிம்களே இகழ்ந்தோர் இல்லங்களும் துன்பமும் அழிவும் செய்கின்ற துட்டர்களின் குடில்களுமேயாம். ஒரு பாவமும் அறியாது விளையாடி மகிழும் மனல் வீட்டினைச் சிதைப்பது பொருந்தாது என்பது நயம்பட அமைத்துள்ளது.

இலக்கணக் குறிப்பு

அறிவுக் கடல்—உருவகம். பெரியோன், இகழ்ந்தோர்—குறிப்பு வினையாலணையும் பெயர்கள். கொடாபகிலர்—ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். அறியிரோ தெரியாதோ நோக்கி லையோ காணீரோ—ஓகாரங்கள் வினாப் பொருளன.

86. நல்லான் மறையு மும்துரையு
நலமென் றறியார் நகரமல்ல
நாட்டிற் றீனு னவர் கிடறு
நடத்துங் குபிர சூருமல்ல

பொல்லா தவர்க்கு தவிசெய்யும்
புருட ருறைந்த புரமுமல்ல
பொய்யை மெய்யாய்ப் புகலுகின்ற
புல்ல ரிருக்கு மனையல்லவே
தொல்லை முறையா யாடுவர் போற்
சூழ்ந்தே நாங்கள் வீதியிலே
துலங்கு டைய நுண்மணலிற்
சுபசோ பனம்போ லிந்நாளிற்
செல்வத் தனமாய் விளையாடுஞ்
சிறியேன் சிற்றில் சிதையேலே
செய்ய திறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (3)

ஐதவுரை

நல்லான் மறையும் உமது உரையு—இறைவனின் திருமறையும் உங்களின் மணி மொழியும், நலம் என்று அறியார் நகரம் அல்ல—நலம் தரும் என்று அறியாதவர்

வாழும் நகரம் இதுவன்று. நாட்டில் தீனைவர்க்கு இடறு நடத்தும் குபிரர் ஊரும் அல்ல—நாட்டில் சன்மார்க்க நெறி போற்றும் சான்றோர்க்குத் துன்பம் தரும் காபிராகிய இறைமறுப்பாளர் வாழும் ஊருமன்று. பொல்லாதவர்க்கு உதவி செய்யும் புருடர் உறைந்த புரமு மல்ல—கொடியவர்க்கு உதவி செய்யும் ஆடவர் வதியும் புரமு மன்று, பொய்யை மெய்யாய்ப் புகலுகின்ற புல்லர் இருக்கு மனையல்லவே—பொய்யையே மெய்யாயத் திரித்துக் கூறுகின்ற அற்பர்களிருக்கும் வீடுமன்று; தொல்லை முறையாய் ஆடுவர் போல்—தொன்று தொட்டு விளையாடி வரும் முறையைப் போற்றி விளையாடு பவரைப் போல, சூழ்ந்தே நாங்கள் வீதியிலே—திரண்டு நாங்கள் வீதியில் துலங்கல் உடைய நுண்மணலில்—ஒளி பொருந்திய நுண்ணிய மணலில், சுபசோபனம் போல் இந்நாளில்—மங்களம் போல் இந்நாளில், செல்லத்தனமாய் விளையாடும்—செல்லமாக விளையாடும், சிறியேன் சிற்றில் சிதையேலே—சிறியேனின் சிறு மணல் வீட்டைச் சிதைக்காதீர், செய்யது இறசூல் முகம்மதுவே—தூலவராகிய திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே, சிறியேன் சிற்றில் சிதையேலே—சிறியேனின் சிறு மணல் வீட்டைச் சிதைக்காதீர்.

தெளிவுரை

இறைவனின் திருமறையும் தங்களின் மணி மொழியும் நலம் தருமென்று அறியாதவர் வாழும் நகரம் இதுவன்று; சன்மார்க்க நெறி போற்றும் சான்றோர்க்குத் தீங்கு செய்யும் காபிராகிய இறைமறுப்பாளர் வாழும் ஊருமன்று; தீயோர்க்கு உதவும் ஆடவர்வதியும் புரமுமன்று; பொய்யையே மெய்யாகத் திரித்துக் கூறும் அற்பர்களின் வீடுமன்று; தொல்லையான முறையைப் போற்றி விளையாடுபவரைப் போல திரண்டு நாங்கள் வீதியில் ஒளிதிகழும் நுண்ணிய மணலில் மங்களமான இந்நாளில் செல்லமாக விளையாடும் சிறியேனின் சிறுமணல் வீட்டைச் சிதைக்காதீர்! தலைவராகிய திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே! சிறியேனின் சிறுமணல் வீட்டைச் சிதைக்காதீர்!

விளக்கவுரை

நல்லான்—படைத்துப் பாதுகாப்பளிக்கும் நிலையில் நன்மை செய்பவன் இறைவன் ஆதலின் நல்லான் என்றார். அடியோர்க்கு அருள் செய்யும் அல்லாஹ் கொடியவரைத் தண்டிப்பதும் அவரின் நன்மையின் பொருட்டே யாகும். குபிரர் — இறைமறுப்போர் எனும் பொருள் பயக்கும் அறபுச் சொல். சுபம் — நன்மை வாழ்த்து எனப் பொருள் தரும் வடசொல். சோபனம்—நன்னிமித்தம், மகிழ்ச்சி, மங்களம் எனப் பொருள் தரும் வடசொல். செல்லத்தனமாம்—செல்வமாக, அன்பாக.

இலக்கணக் குறிப்பு

நல்லான்—குறிப்பு வினையாலணையும் பெயர். துலங்கல்—தொழிற்பெயர். சிதையேல்—முன்னிலை எதிர்கல வினைமுற்று

87. ஆடற் கடங்கா திறைமுனிவு
அடைந்த அள்ளற் பதியுமல்ல
வகத்தில் கொடிய வினைவிளைத்த
பூசகல் லோட கமுமல்ல

வாடி வருவோர்க் குறவர்க் கன்னம்
வழங்கர திருக்கு மாடமல்ல
மகிழ்வாய் பெருமை பேசுகின்ற
மடையர் உறைந்த வயினலவே

தோடு விரிந்த கமலக்கை
யுந்தோ ளுமயரச் சிறுவீடு
சுடர் சேர் மணலால் வீதிதனில்
சுமமா வனைந்தோ மாகாதோ

தேடி யிவணில் வந்த தென்ன
சிறியேன் சிற்றில் சிதையேலே
செய்ய திறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (4)

பதவுரை

ஆடற்கு அடங்காத இறை முனிவு அடைந்த அள்ளல் பதியும் அல்ல—சொல்லுதற்கு அடங்காத இறைவனின் கோபத்தினைப் பெற்ற நெருக்கமான நகரமும் இதுவன்று, அகத்தில் கொடிய வினை விளைத்த அபூசகலோட அகமுமல்ல மனத்தில் கொடுமையான செயல்களையெல்லாம் நினைத்துச் செய்த அபூஜகிலுடைய வீடுமன்று, வாடி வருவோர்க்கு உறவர்க்கு அன்னம் வழங்காது இருக்கும் மாடமல்ல — பசியினால் வாடி வருபவர்க்கும் உறவினர்க்கும் உணவளிக்காமல் இருக்கும் மாளிகையுமன்று, மகிழ்வாய் பெருமை பேசுகின்ற மடையர் உறைந்த வயின் அவே—மகிழ்ந்து தற் பெருமை பேசித் திரியும் அறிவிலிகள் வதியும் வீடன்று, தோடு விரிந்த கமலக் கையுந் தோளும் அயர—இதழ் அவிழ்ந்த செந்தாமரை மலர் போன்ற கையும் தோளும் சோர்வடையும்படி, சுடர் சேர் மணல் வீதிதனில் சும்மா வனைந்தோம் ஆகாதோ—ஒளிதிகழும் மணலால் வீதியில் எவ்வித நோக்கமும் இல்லாமல் அமைத்தோம். இது தகாததோ? தேடி இவண் இல் வந்தது என்ன—இங்குள்ள வீட்டைத் தேடி வந்த தன் காரணம் என்ன? சிறியேன் சிற்றில் சிதையேலே—சிறிய என்

சிறு மணல் வீட்டைச் சிதைக்காதீர் செய்யிது இறசூல் முகம் மதுவே—தலைவராகிய திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே! சிறியேன் சிற்றில் சிதையேலே—சிறிய என் சிறு மணல் வீட்டைச் சிதைக்காதீர்.

விளக்கவுரை

அபூஜகில்: குறைஷித் தலைவருள் முக்கியமானவன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் இஸ்லாத்தையும் அழிப்பதற்கு முழுமூச்சுடன் முயன்றவன். பொருளனைத்தையும் பயன்படுத்தினான். குறைஷிகளையும் தூண்டி விட்டான். நாயகத்திற்கும் அவர்களின் அருமைத் தோழர்களுக்கும் சொல்லொணாத் துன்பம் விளைவித்தான். நாயகத்தைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்தான். மக்காவை விட்டு மதினு சென்ற போதும் விட்டானில்லை. படை கொண்டு தாக்கினான். பத்றுப் போர்க்களத்தில் பட்டொழிந்தான்.

சும்மா வனைந்தோம் ஆகாதோ—சும்மா எனும் சொல் பல பொருட்களை இடத்திற்கும் தொனிக்கும் ஏற்றவாறு தரும். சும்மா—ஏதுமில்லை, அடிக்கடி என்பன இது தரும் பல பொருட்கள். அமையும் இங்கு இறைவன் கோபத்திற்குக் காரணமான தகாத செயலோ, வருந்தி வருவார்க்குத் தராமல் சேர்த்து வைக்கும் எண்ணமோ அறப்பயிரைக் கெடுக்கும் தீய அபூஜகில் போன்ற தீய திட்டமோ தற்பெருமையோ எதுவும் எங்கட்கு நோக்கமல்ல. சும்மா சிற்றில் அமைக்கின்றோம். அடிக்கடி அமைத்து விளையாடி வருகிறோம். இது ஒன்றும் ஆகாத செயலன்றே என்னும் பொருட்களைப் பயக்கின்றது.

இலக்கணக் குறிப்பு

ஆடற்கு — 4-ம் வேற்றுமை உருபேற்ற தொழிற்பெயர். அபூசகல்—அபூஜகல் எனும் அறபுப் பெயரின் தமிழ் வடிவம். அபூசகல்லோட — 'ஓட' உடைய என்பதன் மரூஉ. வாடி — செய்து எனும் வாய் பாட்டு வினையெச்சம். கமலத்தை — உருவகம். சேர் மணல் — வினைத் தொகை.

88. செம் பொற் சதங்கைச் சிலம்பணிந்த
செந்தா மரைத்தாள் நோகாதோ
இனமே யிறைபாற் றுவாக் கேட்குஞ்
செழுங்கை ரண்டுஞ் சிவக்காதோ

அம்பர் மணமு மாறுத
வங்கம் புழுக்கங் கொள்ளாதோ
அங்கிச் சருவந் திசார்த்தனிலே
அதனு ளழுக்கு மேறுதோ

உம்பர் மதிபோல் வதனமது
ஒல்க வியர்வை தோற்றுதோ
ஓடித் திரிந்தாற் றுகமிக
வுற்றே நாவு முலராதோ

செம்பொன் மகுட முடிவேந்தே
சிறியேன் சிற்றிற் சிதையேலே
செய்ய திறசூல் முகம்மதுவே
சிறியேன் சிற்றிற் சிதையேலே (5)

பதவுரை

செம் பொன் சதங்கைச் சிலம்பு அணிந்த—செந் நிறப் பொன்னால் செய்த சதங்கையையும் சிலம்பையும் அணிந்த (தங்களின்) செந்தாமரைத் தாள் நோகாதோ—செந் தாமரை மலர் போன்ற பாதங்கள் வருந்தாவோ? தினமே இறைபால் துவாக் கேட்கும் செழுங்கையிரண்டும் சிவக்காதோ—நாள் தோறும் இறைவனிடம் உம்மத்துக்களுக்காக இறைஞ்சும் தங்களின் செழுமையான கையிரண்டும் கன்றிச் சிவக்காதோ? அம்பர் மணம் மாறுத—அம்பர் எனும் நறுமணம் மாறுத, அங்கம் புழுக்கம் கொள்ளாதோ—திருமேனி புழுக்கம் அடையாதோ? அங்கி சருவந்தி சார்தனிலே—மேல் சட்டை, தலைப்பாகை கால் சட்டை ஆகிய வற்றில், அதனால் அழுக்கும் ஏறுதோ—மணல் வீட்டைச் சிதைப்பதனால் அழுக்குப்படியாதோ? உம்பர் மதி போல் வதனம் அது ஒல்க வியர்வை தோற்றுதோ—விண்ணகத்துச் சந்திரனைப் போன்ற முகம் சோர்ந்து வியர்வையை வெளிப்படுத்தாதோ? ஓடித் திரிந்தால் தாகம் மிக உற்றே நாவும் உலராதோ—ஓடித் திரிந்தால் தாகம் மிகவும் உண்டாகி நாவறண்டு விடாதோ? செம் பொன் மகுடம் முடி வேந்தே—செம் பொன்னால் செய்த முடியினையணிந்த அரசரே! சிறியேன் சிற்றிற் சிதையேலே —சிறியேனின் சிற்றிலைச் சிதைக்காதீர்; செய்யது இறசூல் முகம்மதுவே — தலைவராகிய திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே! சிறியேன் சிற்றிலைச் சிதையேலே—சிறியேனின் சிற்றிலைச் சிதைக்காதீர்.

தெளிவுரை

செம் பொன்னால் செய்த சதங்கையையும் சிலம்பையும் அணிந்துள்ள தங்களின் செந்தாமரை போன்ற பாதம் நோகாதோ? நாள் தோறும் நாணில மக்களுக்காக இறைவனிடம் இறைஞ்சும் செழுங்கையிரண்டும் கன்றிச் சிவக்காதோ? நறுமணம் மாறுத திருமேனி புழுக்கம் பெறுதோ? தாங்களணிந்துள்ள மேல் சட்டை தலைப்பாகை, கால் சட்டை ஆகியவற்றில் இதனால் அழுக்குப் படியாதோ? விண்மதி போன்ற தங்களின் முகம் தளர்ச்சி கொண்டு வியர்வையை வெளிப்படுத்தாதோ? ஓடித் திரிந்தால் மிகவும் தாகம் ஏற்பட்டு நாவும் வறண்டு விடாதோ? செம் பொன் மகுட

முடி மன்னரே! சிறியேன் சிற்றிற் சிதைக்காதீர்! தலைவராகிய திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே! சிறியேன் சிற்றில் சிதைக்காதீர்!

விளக்கவுரை

செந் தாமரைக் கால், செழுங்கை, மணங்கமழும் மேனி ஆகிய உறுப்புக்கள் சிற்றில் சிதைப்பதால் வருந்தும்; அங்கி சருவந்து, இசார் முதலிய உடைகள் அழுக்காகும்; முகம் சோர்ந்து வியர்வை தோற்றும்; ஓடித் திரிவதால் தாகமிக ஏற்பட்டு நாவறளும்; ஆதலின் சிறியேன் சிற்றில் சிதையேல் என வேண்டுவது நயம் பயப்பதாகும்.

இறைபால் துவா கேட்டல்: துவா என்பது இறைஞ்சுதல் எனும் பொருள் கொண்ட அறபுச் சொல். இது குறித்து முன்னரே வினக்கப்பட்டுள்ளது. அங்கி, சருபந்து, இசார்—உடைகள்

இலக்கணக் குறிப்பு

செம் பொன் — பண்புத் தொகை, பொற் சதங்கை — பொன்+சதங்கை 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. செழுங்கை—பண்புத் தொகை. ரண்டு—இரண்டு என்பதன் முதற் குறை. அங்கி, சருவந்தி, இசார்—உம்மைத் தொகை, சார்—இசார் என்பதன் முதற் குறை, வதனம் அது—அசை, ஓல்க—செய எனும் வாய்பாட்டு வினையெச்சம். பொன் மகுடம் — 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. நோகாதே — ஏகாரம் எதிர் மறைப் பொருளது.

89. சங்க முழங்கு மலைகடல் சூழ்
தரைவாழ் மன்னர் வந்துமரைத்
தாளிற் றொழவே தவமேற்ற
வத்தா ரபுதல் முத்தலிபுந்
துங்க ரபித்தா லீபுவுமைத்
தொட்டு வெடுத்து முத்தமிட்டு
தொங்கல் புயந்தி லிருத்திடுங்காற
சுண்ண மார்பிற் றோயாதோ
மங்கைக் கரசரா மினம்மாவா
வென்றெடுத் தமருங் கில்வைத்தால்
வண்ண மிகுந்த பட்டுடையில்
மலர்க்காற் றூளி புரளாதோ
செங்கை வருந்த நுண்மணலிற்
செய்கோள் சிற்றில் சிதையேலே
செய்யி றிறசூல் முகம்நோவே
சிறியேன் சிற்றில் சிதையேலே (6)

பதவுரை

சங்கம் முழங்கும் அலை கடல் சூழ் தரை வாழ் மன்னர்— சங்குகள் ஒலிக்கும் அலைகளையுடைய கடல் சூழ்ந்துள்ள நிலவுலகில் வாழும் அரச ரெல்லாம், வந்து மரைத் தாளில் தொழவே— வந்து செந் தாமரை போன்ற பாதங்களில் பணிந்து வணங்கிட, தவமேல் தவத்தார் அப்துல் முத்தலிபும்—மிக மேலான தவத் தினை உடைய அப்துல் முத்தலிபும், துங்கர் அபீத்தாலிபு— பெருமை பொருந்திய அபூத்தாலிபும், உமைத் தொட்டு எடுத்து முத்தமிட்டு தொங்கல் புயத்தில் இருத்திடுங்கால் — உம்மை அள்ளி யெடுத்து முத்தமிட்டு மாலையணிந்துள்ள தோள்களில் அணைத்திடும் போது, சுண்ணம் மார்பில் தோயாதோ—சிற்றில் சிதைப்பதால் உண்டாகும் புழுதி அவர்களின் மார்பில்படியாதா? மங்கைக் கரசர் ஆமினு அம்மா வா என்று எடுத்து மருங்கில் வைத்தால்— மங்கையர்க் கரசியாகிய ஆமினு அம்மா தங்களை வருக என்று அழைத்து எடுத்து இடுப்பில் வைத்தால், வண்ணம் மிகுந்த பட்டுடையில் மலர்க்கால் தூளி புரளாதோ—வர்ணங் கள் சிறந்த அவர்களின் பட்டுடையில் தங்களின் மலர் போன்ற பாதங்களில் பொருந்தும் புழுதி படியாதா? செங்கை வருந்த நுண்மணலில் செயீகோள் சிறறில் சிதையேலே — நுண்ணிய மணலில் செய்துள்ள சிறந்த சில்றிலைத் தங்களின் செம்மை நிறக் கைகள் வருந்தும்படி சிதைக்காதீர், செயீயிது இறசூல் முகம் மதுவே சிறியேன் சிற்றில் சிதையேலே — தலைவராகிய திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே சிறியேனின் சிற்றிலைச் சிதைக்காதீர்!

தெளிவுரை

சங்கு முழங்கும் அலை கடல் சூழ்ந்த நிலவுலகிலுள்ள அரச ரெல்லாம் வந்து தங்களின் செந் தாமரை போன்ற பாதங்களில் பணிந்து வணங்கிட மேலான தவத்தினை உடைய அப்துல் முத்த லிபும்பெருமை பொருந்திய அபூதாலிபும் உங்களை அள்ளியெடுத்து முத்தமிட்டு மாலையணிந்துள்ள தோள்களில் அணைக்கும் போது சிற்றில் சிதைப்பதால் உண்டாகும் புழுதி அவர்களின் மார்பில் படியாதா? மங்கையர்க் கரசாகிய ஆமினம்மா தங்களை வருக வென்று அழைத்து அள்ளியெடுத்து இடுப்பில் வைத்தால் வர்ணங் கள் சிறந்த அவர்களின பட்டுடையில் தங்களின் மலர்ப் பாதங் களில் பெருந்தும் புழுதி படியாதா? நுண்ணிய மணலில் செய் துள்ள சிறந்த சிற்றிலை தங்களின் செந் நிறக் கைகள் வருந்தும்பட சிதைக்காதீர்! தலைவராகிய திருத் தூதர் முஹம்மது (ஸல்) அவர் களே! சிறியேள் சிற்றில் சிதைக்காதீர்!

விளக்கவுரை

அப்துல் முத்தலிபு—நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாட்டனார். அப்துல்லாவின் தந்தையார். தந்தை அப்துல்லா

நாயகம் பிறப்பதற்கு 6 திங்களுக்கு முன்னர் காலமாகிவிட்ட தனால் இவரே நாயகக் குழந்தையைப் பேணி வளர்த்து வந்தார். அந்திய காலத்தில் தம் மைந்தர் அபூத்தாலிபிடம் நாயகத்தை வளர்க்கும் பொறுப்பைத் தந்து தம் வாழ்வை முடித்துக் கொண்டார்.

அபூத்தாலிப்— நாயகத்தின் பெரிய தந்தையார். ஹஸரத் அலி (ரலி) யின் தந்தையார். தம் தந்தையாரின் விருப்பத்திற் கேற்ப நாயகத்தை நன்கு பேணி வளர்த்து வந்தார். குரைஷிகள் எதிர்த்துக் கொடுமை செய்த காலத்தில் நாயத்திற்குப் பாதுகாப்பளித்து ஆதரித்து வந்தார். தம் மகன் அலி (ரலி) யை நாயகத்தின் நற்பணிக்கு அர்ப்பணித்தார். ஆனால் தாம் முஸ்லிமாகாமலே இறந்து விட்டார்.

ஆமினம்மா — நாயகத்தின் அன்னையார். பெற்று 6 வயது வரை பேணி வளர்த்து வந்தார். பின்னர் இவரும் காலமாகி விட்டார்.

செங்கை.....சிற்றில் சிதையேலே...அரசே செந் நிறக் கைகளினால் யாம் செய்திடும் சிற்றிலைச் சிதைக்காதீர் எனவும் பொருள் கொள்ளலாம். இப்பாடலில் முன்னோர் பற்றிய பெருமை அருமையாக அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு

அலைகடல்—2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; வினைத் தொகையுமாம். வாழ் மன்னன் — வினைத் தொகை. தவத்தார்—வினையாலணையும் பெயர். தொட்டு, எடுத்து, முத்தமிட்டு—செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள். தொங்கல்—தொழிலாகு பெயர். தோயாதோ புரளாதோ —ஓகாரங்கள் எதிர் மறைப் பொருளன. செங்கை—பண்புத் தொகை.

90. செகம் விண் கடலு மலைகள் பல
சீவ செந்து முதலெவையுந்
சிறப்பாய்ச் சிருட்டித் தழிக்கவிறை
செயலே யுமது தீனில்வரா

தகித குறைந்த புரிந்தனையு
மடுத்து வொருவர்க் கொருவருக்குள்
அகமு முதலு மபகரித்த
வசட குறைந்தயில் விடஞ் சென்

றிகலிட் டழிக்கக் குடிகுடிக
ளேற்ற சறகின் விதிமுறையே
விறைவர்க் கரசே நபிக்கரசே
யிவ்வீ டழிக்கக் கடனுமுண்டோ

அகமி லுமது வழியுடைய
வடியேன் சிற்றி லழியேலே
ஆல நபியே முகம்மதுவே
அடியேன் சிற்றி லழியேலே (7)

பதவுரை

செகம் விண் கடலும் மலைகள் பல சீவ செந்து முதல் எவை யும்—மண்ணுலகமும் விண்ணுலகமும் கடலும் மலைகளும் பல உயிர் இனங்களும் முதலாக உள்ள எல்லா வற்றையும், சிறப்பாய்ச் சிருட்டித்து அழிக்க இறை செயலே — சிறப்பாகப் படைத்து அழிப்பது இறைவனின் செயலாகும், உமது தீனில் வராத அகிதர் உறைந்த புரந்தனையும்—தங்களின் சன்மார்க்கத்தில் வந்து சேராத தீயோர் வதியும் ஊரினையும், ஒருவர்க் கொருவருக்குள் அடுத்து அகமும் முதலும் அபகரித்து அசுடர் உறைந்து அயில் இடம் சென்று—ஒருவர்க் கொருவர் தம்முள் அடுத்து வீடுகளையும் செல்வங்களையும் அபகரித்த கீழ் மக்கள் உறைந்து உண்ணும் இடங்களையும் சென்று, இகல் இட்டு அழிக்க குடிகுடிகளேற்ற— பொருது அழித்து நன் மக்களை அங்குக் குடியேற்றுவது, சறகின் விதிமுறையே—மார்க்க விதியாகிய ஷறகின் சட்ட ஒழுங்காகும், இறைவர்க்கும் அரசே நபிக்கு அரசே—அரசர்க்கசே! நபிகளுக்கு அரசே! இவ்வீடு அழிக்கக் கடனும் உண்டு—இம்மனல் வீட்டை அழிப்பதற்கு மார்க்கக் கடமையும் உண்டோ? அகமில் உமது வழி உடைய அடியேன் சிற்றில் அழியேலே—மனதில் தங்களின் திரு நெறியை அடைய அடியேன் இழைத்த சிற்றிலை அழிக்காதீர்! ஆல நபியே முகம்மதுவே அடியேன் சிற்றில் அழியேலே— அகில உலகத்துக்கும்வழி காட்டியே முஹம்மது (ஸல்) அவர்களே அடியேன் சிற்றிலை அழிக்காதீர்.

தெளிவுரை

மண்ணுலகம், விண்ணுலகம், கடல், மலை, பல்வேறு உயிரினங்கள் முதலாக உள்ள அனைத்தையும் சிறப்பாகப் படைத்து அழிப்பது இறைவன் செயலாகும்; தங்களின் சன்மார்க்கத்தில் வந்து சேராத தீயோர்வதியும் ஊர்களையும், ஒருவர்க் கொருவர் தம்முள் அடுத்துப் பிறரின் வீடுகளையும் செல்வங்களை யும் அபகரித்த கீழ் மக்கள் உறைந்து உண்ணும் இடங்களையும் சென்று, பொருதி, அழித்து, நன்மக்களை அங்குக் குடியேற்று வது மார்க்க விதியாகும். அரசர்க்கரசே! நபிகளுக்கரசே! இம்மனல் வீட்டை அழிப்பதற்கு மார்க்கக் கடமையும் உண்டோ? மனதில் தங்களின் திருநெறியை உடைய அடியேன் அமைத்த சிற்றிலைச் சிதைக்காதீர்! உலக வழி காட்டியே! முகம்மது (ஸல்) அவர்களே! சிறியேன் சிற்றில் சிதைக்காதீர்!

விளக்கவுரை

செகம்.....செயலே—படைப்பவன் அழிப்பது முறையாகும் நாங்கள் அமைக்க நீங்களழிப்பது சரியாகுமா? எனக் கேட்பது போல் உள்ளது. 'நன்னெறிக்கு வராத தீயோர் வாழிடங்களையும் தம்முள் அடுத்துக் கெடுத்து ஒருவர் பொருளை ஒருவர் பறித்து வாழும் கீழோர் வாழிடங்களையும் அழிப்பது சன்மார்க்க விதிமுறையாகும்' என்பதில் ஆசிரியர்க்குள்ள மார்க்க விதிகளில் இருக்கும் பயிற்சியும் பற்றும் வெளிப்படுகின்றன.

சறகு-விதிமுறை எனும் பொருள் கொண்ட ஷறஹ் என்ற அறபுச் சொல்லின் தமிழ் வடிவம். ஷரு எனும் சொல் தமிழறிந்த ஒன்று. அகிதர்—தீயோர் எனும் பொருள் தரும் வட சொல் ஆலம்—உலகம் எனும் பொருள் கொண்ட அறபுச் சொல்.

இலக்கணக் குறிப்பு

செகம் விண் கடல்—உம்மைத் தொகை. விதி முறை—ஆரும் வேற்றுமைத் தொகை.

91. பாணி நிறைந்த புவியெவையும்
படைத்த யிறைவ னொருவனென்று
பத்தி யகத்திற் கொள்ளாத
பாவிக் குபிரோர் வந்தெதிர்த்துக்

கேணி மதில்சூழ் திருமனைகள்
கீழ்த்தல் புரிய வருபவரைக்
கெடுத்து முடுக்கிப் புரிசையொடு
கிரிநேர் மனைக ளழியாமற்

பேணு மரச ரழித்திடவே
பிரிய மனதிற் கொண்டாக் காற்
பீடை யெவர்பா லினிதுரைப்போ
மெனவே பெரியோ ரெளிவிலுள

ஆணி மணியே தினிலுள்ள
வடியேன் சிற்றி லழியேலே
ஆல நபியே முகம்மதுவே
அடியேன் சிற்றில் சிதையேலே (சீ)

பதவுரை

பாணி நிறைந்த புவியெவையும் படைத்த இறைவன் ஒருவன் என்று—பொருட்கள் பலவும் நிறைந்த உலகம் அனைத்தையும் படைத்த இறைவன் அல்லாஹ் ஒருவனே என்று, பத்தி அகத்

தில் கொள்ளாத பாவிக்குபிரோர் வந்தெதிர்த்து—கடவுள் பக்தி மனதில் கொள்ளாத பாவிகளாகிய காபிர்கள் வந்து எதிர்த்து, கேணி மதில் சூழ் திருமனைகள் கீழ்த்தல் புரிய வருபவரைக் கெடுத்து முடுக்கி—அகழியும் மதில் சுவரும் சூழ்ந்த அழகிய அரண் மனைகளை அழிக்க வருவோரை முறியடித்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்து, புரிசையொடு திரிநேர் மனைகள் அழியாமல் பேணும் அரசே—கோட்டையுடன் மலிகளைப் போன்ற மாளிகைகளை அழியாமல் பாதுகாக்கும் அரசரே! அழித்திட பிரியம் மனதில் கொண்டாக்கால் பிடி எவர்பால் இனிது உரைப் போம் — தாங்களே அழித்திட விரும்பித் திருவுளம் கொண்ட போது எவரிடம் போய் எங்கள் துன்பத்தினை நீக்கும் படி இனிது கூறுவோம். எவே—ஆதலின், பெரியோன் ஒளியில் உள ஆணி மணியே — பெரியோனுகிய அல்லாஹ்வின் பேரொளிப் பிழம்பிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட ஆணிமுத்தே, தினைஞள்ள அடியேன் சிற்றில் அழியேலே—சன்மார்க்கத்தில் சார்ந்துள்ள அடியேன் சிற்றிலைச் சிதையேலே—உலக வழி காட்டியே! முஹம்மது (ஸல்) அவர்களே! சிற்றில் சிதைக்காதீர்,

தெளிவுரை

பொருட்கள் பலவும் நிறைந்த உலகங்கள் அனைத்தும் படைத்த இறைவன் அல்லாஹ் ஒருவனே என்று பக்தி மனதில் கொள்ளாத பாவிகளாகிய காபிர்கள் வந்து எதிர்த்து அகழியும் மதிலும் சூழ்ந்த அழகிய அரண்மனைகளை அழிக்க வருவர்; அவ்வாறு வருவோரை முறியடித்துப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்து கோட்டையுடன் மலிகளைப் போன்ற மாளிகைகளை அழியாமல் பாதுகாக்கும் அரசரே! தாங்களே எங்கள் மனல் வீடுகளை அழித்திடத் திருவுளங்கொண்டால் வேறுயாரிடம் போய் எங்கள் துன்பத்தினை எடுத்துச் சொல்வோம். ஆதலின், பெரியோனுகிய அல்லாஹ்வின் பேரொளிப் பிழம்பிலிருந்து தோன்றிய ஆணி முத்தே! சன்மார்க்கத்தைச் சார்ந்த அடியேனின் சிற்றிலைச் சிதைக்காதீர்! அகில உலக வழி காட்டியே! முஹம்மது (ஸல்) அவர்களே! சிறியேன் சிற்றில் சிதைக்காதீர்!

விளக்கவுரை

பாவிக் குபிரர் தாக்கினுல் அவரைத் தடுத்துக் கெடுத்து அரண்மனைகளையும் அரிய மாளிகைகளையும் பாதுகாக்கும் பண்பாளரே சன்மார்க்கத்திலுள்ள எங்கள் மணல் வீடுகளை அழிக்க முற்பட்டால் வேறுயாரிடம் புகழ் தேடுவது என்று கூறுவது நயம் பயப்பதாகும்.

பெரியோன்... மணியே ! உலகங்களையும் உயிர்களையும் வேறு உள தாம் பொருட்களையும் படைப்பதற்கு முன்னர் இருள் சூழ்ந்திருந்த போது தமது பேரொளியில் ஒரு பிடி எடுத்து ஆகுக என்றான் இறைவன். முஹம்மது (ஸல்) ஒளிமயமாகத் தோன்றினார்கள். பின்னர் முத்து வடிவு கொண்டார்கள். பின்னர் மயிலாகவும் புறுவாகவும் வடிவமெடுத்து இறை துதியில் இருந்தார்கள். ஆதம் நபியவர்களின் முதுகிடத்து இவ்வொளி தரிபாடானது. அடுத்துவரும் நபிமார்களின் மேனியில் பொருந்தி வந்து இறுதியில் தந்தை அப்துல்லா வழி வந்து, அன்னை ஆமினுவின் மணிவயற்றில் கருவாகத் தரித்தார்கள் என்பது மரபு செய்தி. ஆலம்: உலகம் எனும் பொருள் கொண்ட அறபுச் சொல்,

இலக்கணக் குறிப்பு

பாவிக் குபிரர்—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. கேணிமதில்—உம்மைத் தொகை. கடுத்து; முடுக்கி—செய்து எனும் வாய்பாட்டுப் வினையெச்சங்கள். நேர்—உவம உருபு. கொண்டாக்கால்—கொண்ட+அ+கால் எனப் பிரியும் பெயரெச்சத் தொடர். உள—உள்ள என்பதன் தொகுத்தல் விகாரம்.

92. வையந் தனையா ளரசர்களு
மறை நூல் தேர்ந்த மாதவரும்
மகிழ்ச்சி பெருக வந்துதிறை
வழங்கிச் சென்தா மரைத்தாளை

மெய்மை பெறவே தொட்டுமுத்தி
மெய்யோன் கலிமாத் தனைப்படித்து
வினையை யகற்றி யிசுலாமில்
மேவ வருவோ ரவர்களெல்லாந்

தொய்யல் மிகுந்த மனதுடைய
துரைதா னெங்கே யெனத்தேடி
சுற்றி யலைவா ராகையினும்
சுடர் சேர் தவிசி லிருந்துநெறி

அய்யர் புரியச் செல்லெனவே
அடியேன் கிற்றி லழியேலே
ஆல நபியே முகம்மதுவே
அடியேன் கிற்றி லழியேலே (9)

பதவுரை

வையம் தனை ஆள் அரசர்களும் — உலகத்தை ஆளுகின்ற அரசர்களும், மறை நூல் தேர்ந்த மாதவரும் — வேதங்களில் தேர்ந்த பயிற்சியும் பெரியதவம் இயற்றுதலும் உடையோரும், மகிழ்ச்சி பெருக வந்து திறை வழங்கி—மகிழ்ச்சி பெருகும்படி வந்து திறை செலுத்தி, செந் தாமரைத் தாளை மெய்மை பெறவே தொட்டு முத்தி—மெய்ப் பொருளாகிய இறையருளைப் பெறும் பொருட்டு செந் தாமரை போன்ற பாதங்களைத் தொட்டு முத்தமிட்டு, மெய்யோன் கலிமாத் தனைப் படித்து — மெய்ப் பொருளாகிய அல்லாஹ்வின் மூலமந்திரமாகிய கலிமாவை ஓதி வினையை அகற்றி இசுலாமில் மேவ வருவோர் — தங்களின் தீவினைகளை நீக்கி இஸ்லாத்தினைத் தழுவ வருவார், அவர்கள் எல்லாம் தொய்யல் மிகுந்த மனதுடைய துரை தான் எங்கே எனத்தேடி சுற்றியலைவார்—அவர்கள் அனைவரும் மகிழ்ச்சி மிகவும் பொருந்திய மனமுடைய மன்னர் எங்கே என உங்களைத் தேடிச் சுற்றித் திரிவர், ஆகையினால், சுடர்சேர் தவிசில் இருந்து நெறி அய்யர் புரிய செல் — அண்ணலே ஒளி பொருந்திய ஆசனத்திலிருந்து அறம் புரியச் செல்வீராக! எனவே, அடியேன் சிற்றில் அழியேலே—அடியேனின் சிற்றிலை அழிக்காதீர்! ஆல நபியே முகம்மதுவே அடியேன் சிற்றில் அழியேலே—உலக வழி காட்டியே! முஹம்மது (ஸல்) அவர்களே! அடியேனின் சிற்றிலை அழிக்காதீர்!

தெளிவுரை

உலகத்தை ஆளும் அரசர்களும் வேதங்களில் தேர்ந்த மாதவரும் மகிழ்வு பெருக வந்து, திறை செலுத்தி மெய்ப் பொருளாகிய இறையருளைப் பெறும் பொருட்டு, செந்தாமரை போன்ற தங்களின் திருவடிகளைத் தொட்டு முத்தமிட்டு, மெய்ப் பொருளாகிய அல்லாஹ்வின் மூலமந்திரமாகிய கலிமாச் சொல்லி தம் தீவினைகளை நீக்கி இஸ்லாத்தைத் தழுவ வருவார்கள்; அவர்களனைவரும் 'மகிழ்ச்சி மிகும் மனமுடைய' மன்னவர் எங்கே' என்று உங்களைத் தேடிச் சுற்றித் திரிவர்; ஆதலின், அண்ணலே! ஒளி பொருந்திய ஆசனத்திருந்து அறம்புரியச் செல்வீராக! எனவே அடியேனின் சிற்றிலை அழிக்காதீர்! அகில உலக வழி காட்டியே! முஹம்மது (ஸல்) அவர்களே! அடியேன் சிற்றிலை அழிக்காதீர்!

விளக்கவுரை

'செந் தாமரைத் தாள்களை மெய்மை பெறவே தொட்டு முத்தி' — செந் தாமரை மலர் போன்ற திருவடிகளை மெய்யன்புடன் தொட்டு முத்தமிட்டு எனவும் உண்மையினைப் பெறும் பொருட்டு தொட்டு முத்தமிட்டு எனவும் பொருள் கொண்டும் மகிழலாம். கலிமா—முஸ்லிம்களின் மூலமந்திரம்; முன்னரே விளக்கப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

ஆள் அரசர்—வினைத் தொகை. மறை நூல்—இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. தொட்டு, முத்தி—செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள். மேவ புரிய—செய எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள். செந் தாமரை — பண்புத் தொகை. தாமரைத்தாள் — உவமத் தொகை.

93. எல்லி தனிற்பேர் பதித்தவர்க்கு
இருநா வரியின் விடமகற்றி
யின்பம் பெருகக் கிருபைசெய்த
விறையே சிற்றி லழியேலே

இல்லை யணுகான் மொழி மறுத்த
இபுலீ சுடைய பேரனுக்கு
யிடரை விலக்கி யருள் புரிந்த
விறையே சிற்றி லழியேலே

முல்லை நிலத்தில் வாழ் மூப்பி
முதுமை யகற்றி மங்கையதாய்
முறையே யுலகி லாக்கிவைத்த
முத்தே சிற்றி லழியேலே

வல்லை யுடைய மக்க நகர்
வாழ்வீர் சிற்றி லழியேலே
வையம் புகழு மதீன நகர்
மன்னே சிற்றி லழியேலே (10)

பதவுரை

எல்லி தனில் பேர் பதித்தவர்க்கு—சூரிய ஒளியில் தம் பெயரைப் பதித்த அபூபக்கர்(ரலி) அவர் களுக்கு, இருநா அரியின் விடம் அகற்றி இன்பம் பெருகக் கிருபை செய்த இறையே சிற்றில் அழியேலே—இரண்டாகப் பிளவுபட்ட நாக்கினை உடைய பாம்பின் விடத்தை, நீக்கி இன்பம் பெருகும்படி அருளிய தலைவரே சிற்றில் அழிக்காதீர் இல்லை அணுகான் மொழி மறுத்த இபுலீசுடைய பேரனுக்கு—இறைவனின் சொல்லை மறுத்த இபுலீசின் பேரனுக்கு, இடரை விலக்கி அருள் புரிந்த இறையே சிற்றில் அழியேலே—துன்பத்தை யகற்றி அருள் செய்த தலைவரே சிற்றில் அழிக்காதீர். முல்லை நிலத்தில் வாழ் மூப்பி முதுமை யகற்றி—காட்டு நிலத்தில் வாழ்ந்த மூதாட்டியின் முதுமையை நீக்கி, மங்கையதாய் முறையே உலகில் ஆக்கிவைத்த முத்தே சிற்றில் அழியேலே—இளமை கொழிக்கும் மங்கையாய் முறையாக இவ்வுலகில் ஆக்கி வைத்த முத்து வடிவில் இருந்தவரே! சிற்றில் அழிக்காதீர்! வல்லை உடைய மக்க நகர் வாழ்வீர் சிற்றில் அழியேலே—வலிமை

யுடைய மக்க மா நகரில் வாழ்பவரே! சிற்றிலே அழிக்காதீர் வையகம் புகழும் மதீன நகர் மன்னே சிற்றில் அழியேலே— உலகம் புகழும் மதீன மா நகர் மன்னரே! சிற்றில் அழிக்காதீர்!

தெளிவுரை

சூரிய ஒளியில் தம் பெயரைப் பதித்த ஹளரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு பாம்பின் விடத்தை நீக்கி இன்பம் பெருகச் செய்த தலைவரே! சிற்றிலே அழிக்காதீர்! இறைவனின் சொல்லே மறுத்த இபுலீசின் பேரனுக்குத் துன்ப மகற்றி அருள் செய்த தலைவரே! சிற்றிலே அழிக்காதீர்! முல்லே நிலத்து மூதாட்டியின் மூப்பை யகற்றி மங்கையாய் ஆற்றிவைத்த முத்தே! சிற்றிலே அழிக்கா தீர்! வலிமையுடைய மக்கமாநகரில் வாழ்பவரே! சிற்றிலே அழிக்காதீர்! மானிலம் புகழும் மதீனமாநகர் மன்னரே! சிற்றிலே அழிக்காதீர்!

விளக்கவுரை

'இருநா..... கிருபை செய்த' — ஹளரத் அபூபக்கருக்குப் பாம்பின் விடம் தீர்த்த வரலாறு முன்னரே விளக்கப்பட்டுள்ளது இல்லே பணுகான்—இறைவன் இல்லே என்பதைப் பொருந்த மாட்டான். இறைவன் உண்டு என்பதை இவ்வாறு எதிர் மறை யில் உணர்த்தினர். கேட்டால் இல்லே எனது அருள்வான். இல்லே என மாட்டான்.

'வமா அர்சல்னுக்க இல்லா றஹ்மத்துல் லில் ஆலமீன், எனும் இறைவாக்கு அருளப்பட்டபோது இபுலீசு தானும் உலகத்தாருள் ஒருவன் தனக்கும் அந்த அருள் கொடை கிடைக்க வேண்டும் என் றான். அதுவரை அவனுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுத்து வந்த தண்டனை நாயகத்தின் பொருட்டால் நீக்கப்பட்டது.

முல்லே..... .....மங்கையாய் ஆக்கிவைத்தல்— நாயகம் அவர்களின் செவிலித்தாய் இளமையும் வளமையும் பெற்ற வரலாறு முன்னரே விளக்கப்பட்டது. இறை — தலைவர் எனும் பொருள் கொண்டது.

இலக்கணக் குறிப்பு

அணுகாண்—வினையாலணையும் பெயர். மக்க நகர் — இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. அகற்றி, விலக்கி—செய்துஎனும் வாய்பாட்டு வினையெச்சம். வாழ் மூப்பி — வினைத் தொகை.

சிற்றிற் பருவம் முற்றிற்று.

சிறுதேர்ப் பருவம்

இது ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பத்தாவது பருவமாகும். இந்நூலை நிறைவு செய்கிறது. பாட்டுடைத் தலைவரைச் சிறுதேர் உருட்டி அருளும்படி வேண்டிப் பாடுவது.

94. பொன்னென்ற தேரொளிவு அகலாத ஞானியிது
போல வொளிதான் வீசவே
பொற்புவக லாதகொடிக் கரத்தினுற் புழுதியை
விலக்கு தலின் போலாடவே

மின்னென்ற பிரவைவேல் வெறிமரைக் கரங்கொண்ட
வேந்தரொடு பலபேர்களும்
வீதிவிட் டகலுங்க ளென்றுமுர சோதை போல்
வெம்பரிகளைப் போங்கவே

மன்னென்ற நபிநாதர் மெய்வாசந் தூது போல்
வாராரென் றறிவிக்கவே
வந்துநவ ரத்னமணி யாசனத் தட்டிருந்து
வன்பிஞ்ஞெடு வலசாரியாய்

தென்றை யிடமொடு வடக்குமேல் கிழக்குமாய்
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்திற் பிறுதவுசுக் கரசான காதரே
சிறுதேர் நடத்தியருளே (1)

பதவுரை

பொன்னென்ற தேர் ஒளிவு அகலாத ஞானி இது போல— பொன்னுல் ஆகியது என்று கூறப்படும் தேரின் ஒளி நீங்காத பரஞான முள்ளவரே போல, ஒளிதான் வீசவே — ஒளியைப் பரப்ப, பொற்பு அகலாத கொடிக் கரத்தினுல் புழுதியை விலக்கு தலின் போலாடவே—சிறப்பு நீங்காத கொடியாகிய கையினுல் எழுகின்ற புழுதியை அகற்றுவது போல் ஆட, மின் என்ற பிரவை வேல் வெறிமரைக் கரம் கொண்ட வேந்தரொடு—மின்ன லென்று கூறும்படியான ஒளி பொருந்திய வேலை மணங்கமழும் தாமரை போன்ற கையில் கொண்ட வேந்தருடன், பல பேர்

களும் வீதி விட்டு அகலுங்கள் என்று—பலரும் வீதியை விட்டு அகன்று செல்லுங்கள் என்று கூறுமாப் போல், முரசு ஒதை போல் வெம்பரிகணப்பு ஒங்கவே—முரசின் ஒலி போல் வலிய குதிரைகளின் கணைப் பொலி மிகுந்தெழ, மன்னென்ற நபிநாதர் மெய் வாசம் தூது போல் வாராரென் றறிவிக்கவே — மன்னவர் என்றும் நபிகள் நாயகம் உண்மை பொருந்திய தூதராக வருகின் றார்கள் என்று அறிவிக்க, வந்து நவரத்ன மணி ஆசனத் தட்டு இருந்து அன்பினொடு—வந்து நவ மணிகளால் இழைத்துச் செய்த அமரும் பலகையிலிருந்து அன்புடன், வலசாரியாய் தென்றை இடமொடு வடக்கு மேல் கிழக்குமாய்—வலப் பக்கமாகவும். இடப் பக்கமாகவும் தெற்கிலும் வடக்கிலும் மேற்கிலும் கிழக் கிலுமாக, சிறுதேர் நடத்தியருளே — சின்னஞ் சிறிய தேரை நடத்தி யருள் வீராக! சென்னத்தில் பிறதவுசுக்கு அரசான தூதரே—சென்னத் எனும் சொர்க்கத்தில் பிர்தெளஸ் எனும் பகுதியின் அரசான திருத்தூதரே! சிறுதேர் நடத்தி அருளே— சிறிய தேரை நடத்தி யருள் வீராக.

தெளிவுரை

பொன்னாலாகியது என்று கூறப்படும் தேரின் ஒளி நீங்காத பரஞான முள்ளவர் போல் ஒளிவீச, சிறப்பு நீங்காத கொடி யாகிய புழுதியை அகற்றுவது போல் ஆட, மின்னலைப் போல் ஒளி பொருந்திய வேல்களைத் தாமரை போன்றகைகளில் கொண்ட வேந்தரும் பல பேர்களும் வீதியை விட்டு விலகிச் செல்லுங்கள் என்று கூறுமாப் போல முரசின் ஒலியினை வலிய குதிரை யின் கணைப்பொலி மிகுந்தெழ மன்னராகிய நபிகள் நாயகம் உண்மை பொருந்திய திருத்தூதராக வருகின்றார்கள் என்று அறிவிக்க, வந்து நவமணிகளால் இழைத்துச் செய்த தேர்த் தட்டில் இருந்து அன்புடன் வலப் பக்காமாகவும் இடப் பக்க மாகவும் தெற்கிலும் கிழக்கிலுமாக சிறுதேர் உருட்டி யருள் வீராக! சென்னத்திற் பிர் தெ ளஸ் எனும் சொர்க்கத்தின் அரசே! திருத் தூதரே சிறுதேர் உருட்டி அருள் வீராக!

விளக்கவுரை

கொடிகள் புழுதியை அகற்றும் கைகளைப் போல் ஆடின என்பதில் கற்பனை சிறந்தமைந்துள்ளது. இதில் தற்குறிப்பேற்ற அணி இடம் பெறுகிறது. சென்னத், பிர்தெளஸ்—விண்ணகத் திலுள்ள சொர்க்கத்தைக் குறிக்க வந்த அறபுச் சொற்கள்.

இலக்கணக் குறிப்பு

கொடிக் கரம்—உருவகம். வெறி மணை—உம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. மணை—முதற் குறை. மலிக் கரம்—உவமத் தொகை. முரசோதை—ஏ-ம் வேற்றுமைத் தொகை. வாரார்—உடல் பாட்டு வினை முற்று. மணியாசனம் —உ-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. சிறுதேர்—பண்புத் தொகை.

95. சடசடென் றுருள் நிதிச் சகடெலாஞ் சிலைகளிற்
ருவிநிறை யுறை யாளதாற்
றங்க நிறம் போலவெளி காட்டவே பூமியைத்
தாங்கின பணிச்சடலமும்

மடமடென் றிடமுடிகள் நிலையின்றிப் பனிகொள்ள
மாசற்ற திக்கானதில்
வாழ்கின்ற அட்டகயந் தள்ளாடிச் செவிகேட்டு
மயல் கொண்டு நிலைநிற்கவே

நெட நெடென் றேறுபரி வருங் கதிரித வாம்பரி
நெருப்பினினை கினமிஞ்சியே
நினைவதனில் வெடிவுற்று வொதுங்கி வலமிடமாக
நெடியவான் றனிற்செல்லவே

திடுதிடென் றேடுபரி பருக்கினுக் கரசே
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்தில் பிறதவகுக் க்ரசான தூதரே
சிறுதேர் நடத்தியருளே (2)

பதவுரை

சடசடென்று உருள் நிதிச் சகடுலலாம்—சடசட வென்று உருள்கின்ற செல்வங்களைக் கொண்ட தேர்களெல்லாம், நிலைகளில் தாவி நிறையுறை ஆனதால்—மலைகளைப் போலத் தாவிச் சென்று நிறைந்து தங்குகின்றதனால், தங்க நிறம் போல ஒளி காட்டவே—தங்கத்தின் நிறத்தைப் போல ஒளி வீசிட, பூமியைத் தாங்கின பணிச் சடலமும்—பூவுலகத்தைத் தாங்கும் பாம்பும், மடமடென்றிட முடிகள் நிலையின்றிப் பனிகொள்ள—மட மடவென்று பாம்பின் தலைகள் நிலை கொள்ளாமல் நடுங்க, மாசறற திக்கு ஆனதில் வாழ்கின்ற அட்டகயம் — குற்ற மற்ற திசைகளில் வாழ்கின்ற அட்டதிக்கு யானைகள், தள்ளாடி செவி கேட்கு மயல் கொண்டு நிலை நிற்கவே—தள்ளாடி கட் செவியால் கேட்டு மயக்கங் கொண்டு உணர் விழந்து நிற்க, நெடு நெடு என்று ஓடி வரும் கதிர் இரத வாம்பரி—நெடு நெடுவென்று அதி வேகமாக ஓடி வரும் சூரியனின் தேரில் பூட்டிய அழகிய குதிரைகளும், நெருப்பின் இனகு இனம் மிஞ்சியே—நெருப்பின் எரியும் தொகுதியை விஞ்சி, நினைவதனில் வெடி உற்று ஒதுங்கி வலம் இடமாக நெடிய வான் தனில் செல்லவே—எண்ணம் அழிவுற்று ஒதுங்கி வலப் பக்கம், இடப் பக்கமாக விரிந்து வானில் செல்ல, திடு திடு என்று ஓடு பரி புரூக்கினுக்கு அரசே—திடு திடு என்று விரைந்து செல்லும் புரூக் எனும் வாகனத்திற்கு அரசரே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி யருள் வீராக! சென்னத்தில் பிறதவகுக்கு அரசான தூதரே—சென்னத் எனும் எட்டு சொர்க்கங்களுள் ஒன்றான பிர் தெளஸ் என்பதன் அரசரே! திருத் தூதரே! சிறுதேர் நடத்தியருளே—சிறுதேர் உருட்டி யருள் வீராக!

தெளிவுரை

சடசட வென்று உருள்கின்ற செல்வங்களைக் கொண்ட தேர்களெல்லாம் மலைகளைப் போன்று தாவிச் சென்று நிறைந்து தங்குவதனால் தங்கத்தைப் போல் ஒளி வீசவும் பூவுலகத்தைக் தாங்கும் ஆதி சேடனுகிய பாம்பின் முடிகள் நிலை கொள்ளாமல் மடமடவென்று நடுங்கவும், மாசற்ற எட்டுத் திசைகளில் வாழும் அட்டதிக்கு யானைகள் தள்ளாடிக் கட் செவியால் கேட்டு, மயங்கி, உணர் விழந்து நிற்கவும், நெடு நெடுவென்று ஓடி வரும் சூரியனின் தேரில் பூட்டிய அழகிய குதிரைகள், நெருப்பின் எரியும் தொகுதியை விஞ்சி எண்ணம் அழிவுற்று ஒதுங்கி வலம் இடமாக விரிந்த வானில் செல்லவும், திடு திடுவென்று விரைந்து செல்லும் புருக்கிற்கு அரசரே சிறுதேர் உருட்டி யருள் வீராக! சென்னத் எனும் சொர்க்கத்தின் எட்டுவகையுள் ஒன்றுன பிர் தெளஸ் என்பதன் அரசரான திருத் தூதரே! சிறுதேர் உருட்டி யருள் வீராக.

விளக்கவுரை

சடசடவென்றுதேர் ஓடுவதாகவும் மடமடவென்று ஆதி சேடன் முடிகள் நடுங்குவதாகவும் நெட நெடென்று சூரிய வின்தேர் ஒடுவதாகவும் திடு திடு வென்று புருக்ஸ் விரைந்து செல்லுவதாகவும் கூறுவது பாடலில் பயிலும் ஒலியிலுல் அவை உருண்டும் விரைந்தும் செல்லுவதையும் நடுங்குவதையும் காட்சிகளாக உணர்த்தி விடுகின்றார்.

பணிச் சடலம்—பாம்பின் உடல். அட்டகயம் — எட்டு திக்கு யானைகள்; இது குறித்து முன்னரே விளக்கப்பட்டுள்ளது. கதிர் இரதம் வாம்பரி—கதிரவனின் தேரில் பூட்டியுள்ள அழகிய குதிரைகள் விளக்கம் முற் பகுதியில் காண்க.

நினைவு தனில்..... செல்லவே—நினைவழிந்து ஒதுங்கி அங்கு மிங்குமாக விரிந்த வானத்தில் செல என்றும் வலப் பக்கம் என்று இடப் பக்கத்திலும் மயங்கிச் செல்ல என்றும் பொருள் கொள்ளலாம். புருக்—நாபகம் மி..ருஜ செல்லும் போது மக்காவிலிருந்து பைத்துல் முகத்திஸ் வரை ஏறிச் செல்வதற்குப் பயன்பட்ட அற்புத வாகனம். இது குறித்து ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

சடசட, மடமட, நெடநெட, திடுதிடு—இரட்டைக்கிளவிகள். தங்க நிறம்—6-ம் வேற்றுமைத் தொகை. பனி—முதல் நிலை தொழிற் பெயர். அட்டகயம் — அஷ்ட கஜம் எனும் | வட மொழித் தொடரின் தமிழ் வடிவம். பண்புத் தொகை. தள்ளாடி, ஒடி — செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள்.

96 கருவுருவி லமையாத யிறையாதி யொளிவினில்
கலித்தலா லுருவாகினோர்
கண்ணிமைத் துறங்காத வானவர்க டினம்வந்து
களிப்பாகப் பணிந்தேற்றலும்

மருவுருவி னிறைவான நபிமார்கள் பலசெந்தும்
வகையான தொகையாவுமே
வணங்குதலு மேயாம லோங்கலே மகுடமீடி
மன்னர்பல மனுவோர்களுங்

குருவின்முறை தவறுத தீனன பேர்களும்
கொண்டாடி நிலைநாடியே
குணமாகப் பணிந்தேற்று மாலயமுனைகின்ற
கோபதியின் மக்காவிலே

திருவிளை யாடல் விளையாடி வரும் செய்யிதே
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்திற் பிறுதவுகுக் கரசான தூதரே
சிறுதேர் நடத்தியருளே (3)

பதவுரை

கரு உருவில் அமையாத இறை ஆதி ஒளி வினில்—கருவாகி உருவில் அமையாமல் அருவாக உள்ள ஆதி இறைவனின் ஒளியிலிருந்து, கலித்தலால் உருவாகினோர் — இறைவன் மகிழ்ந்து படைத்தலால் உருவாகியவரே! கண்ணிமைத்து உறங்காத வானவர்கள் தினம் வந்து களிப்பாகப் பணிந் தேற்றலும்—கண்ணிமைகள் மூடித்துத் தூங்காத அமரர்கள் நாள் தோறும் வந்து மகிழ்வாகப் பணிந்து போற்றவும், மருவு உருவினில் நிறைவான நபிமார்கள்—பொருந்தும் உருவங்களில் நிறைவுள்ள நபிமார்களும், பல செந்தும் வகையான தொகை யாவுமே—பல உயிர்களும் வகையும் தொகையுமான அனைத்தும், வணங்குதலும், ஓயாமல் ஒங்கவே—வணக்கம் புரிதலும் ஓயாமல் ஒங்கி வர, மகுட முடி மன்னர் பல மனுவோர்களும்—மகுடங்களை முடியில் தரித்துள்ள அரசர்களும் பல மனிதர்களும், குருவின் முறை தவறுத தீனன பேர்களும் — குருவினது நெறி முறை தவறாத சன்மார்க்கச் சான்றோரும், கொண்டாடி நிலைநாடியே—கொண்டாடித் திரண்டு கூடி மகிழ்ந்து, குணமாகப் பணிந்து ஏற்றும் ஆலயம் உறைகின்ற -பண்பாகப் பணிந்து போற்றும் ஆலயமாகிய க..பத்துல்லா இருக்கும், கோபதியின் மக்காவிலே—அரச நகரான மக்கமா நகரத்திலே, திருவிளையாடல் விளையாடி வரும் செய்யிதே — அழகிய விளையாட்டுக்களை ஆடிவரும் தலைவரே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி யருள் வீராக! சென்னத்திற் பிறுதவுகுக்கு அரசான தூதரே — சென்னத்தில் பிர் தௌளஸ் எனும சொர்க்கத்திற்கு அரசான தூதரே! சிறுதேர் நடத்தி அருளே — சிறுதேர் உருட்டி யருள் வீராக!

தெளிவுரை

கருவாகி உருவில் அணுவாமல் அருபமாகவுள்ள ஆதி இறைவனின் ஒளியில் மகிழ்தலால் உருவாகியோரே! கண்மூடித் தூங்காத அமரர்கள் நாள் தோறும் வந்து மகிழ்ந்து பணிந்து போற்றவும், நிறைவான வடிவுள்ள நபிமார்களும் பல் வேறு உயிர்களும் வகையும் தொகையுமான அனைத்தும் வணங்குவது ஒயாமல் ஒங்கிவர, மகுடஞ் சூடிய முடி மன்னர் பலரும், பல மனி தர்களும், குருமுறை தவறாத சன்மார்க்கச் சான்றோருந் திரண்டு கொண்டாட பண்பாகப் பணிந்து போற்றும் ஆலயமாகிய க.'.பத்துல்லா இருக்கும் அரச நகராமன மக்காவில் அழகிய திருவிளையாடல்களை ஆற்றிவரும் தலைவரே! சிறுதேர் உருட்டி யருள் வீராக! எட்டுச் சொர்க்கங்களுள் ஒன்றான ஜன்னத்துல் பிர்தௌஸுக்கு அரசராகிய திருத்தூதரே சிறுதேர் உருட்டியருள் வீராக!

விளக்கவுரை

கரு உருவில்..இறை-இறைவன் பெறவும் இல்லை. பெறப்படவும் இல்லை. உருவமற்றவன். ஒளிமயமாக உள்ளவன். அங்கிங் கெனாத படி எங்கும் நிறைந் திருப்பவன். மறைவு.... நபிமார்கள் — நறு மணம் பொருந்திய வடிவம் நிரம்பியுள்ள நபிமார்கள் எனவும் பொருள் கொள்ளலாம். சென்னத் பிறுதகை—முன்னரே விளக் கப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

பணிந்து, வந்து, கொண்டாடி, நின்றுடி—செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சங்கள். ஏற்றல், வணங்குதல்—தொழிற் பெயர்கள்.

97. குருமொழியை யயராம லுளமீதி லறிவோடுங்
குடிகொண்ட வொருமாது தான்
குணமாக நல்லறிவு பலநாளு மகனுக்கு
கூறிவரக் கேளாமலே

முருகெழுகு கராபான மிண்டவெறியால் வந்து
மெய்த்தாயி னெருநேத்திர
முகம் விட்டுத் துள்ளிழு வடித்துபி வலட் கொண்ட
மோகவெறி தீர்த்தவடனே

கருவிகொடு கரமதனை யறுத்தனன் பின்புதாய்க்
கண்ணிரெரு மகன் கையையுங்
காணியிற் புகழ்துன்ன பொருந்தும்படி செய்வித்த
காட்சியுள குருநாதரே

திருமதின நகராள கல்விமா னிதியமே
சிறுதேர் நடத்தியருளே
சென்னத்திற் பிறதவுகக் கரசான தூதரே
சிறுதேர் நடத்தியருளே (4)

பதவுரை

குரு மொழியை அயராமல் உளமீதில் அறிவோடு குடி கொண்ட ஒருமாது தான்—குருவின் அருள் மொழிகளைத் தவறு மல் மனதில் அறிவுடன் பொருந்தியிருக்கும்படி செய்த ஒரு பெண், குணமாக நல்லறிவு பல நாளும் மகனுக்கு கூறிவர —பண்புடன் நல்லறிவுரைகளை பல நாட்களாகத் தன் மகனுக்குக் கூறிவர, கேளாமலே முருகெனுடு சுராபானம் உண்ட தெரியால் அத்தாய்ச் சொல்லைக் கேட்காமல் மதுவும் கள்ளும குடித்த, போதையினால், மெய்த்தாயின் ஒரு நேத்திரம் முகம் விட்டுத் துள்விழ—உண்மையான தாயின் ஒருகண் அவளின் முகத்திலி ருந்து தெறித்து விழும்படி, அடித்தபின் அவன் கொண்ட மோக வெறி தீர்ந்த உடனே—அடித்த பின்னர் அவன் கொண்டிருந்த மயக்கம் தீர்ந்ததும், கருவி கொடு கரமதனை அறுத்தனன்—வாள் கருவி கொண்டு அடித்த சரத்தினை அறுத்து விட்டான், பின்பு தாய்க் கண்ணிலெனுடு மகன் கையையும் சாகினியில் புகழ்துன்வ பொருந்தும்படி செய்வித்த—பின்னர் தாயின் கண்ணையும் மகன் கையையும் உலகில் புகழ் நிரம்பும் வண்ணம் பொருந்தும்படி செய்த, காட்சியுள குருநாதரே—மெய்யறிவுள்ள குருநாதரே! திருமதின நகர் ஆளி — அழகிய மதின மாநகரின் அரசரே! கல்வி மானிதியமே — கல்விப் பெருஞ் செல்வமே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி யருள் வீராக! சென்னத்தில் பிறதவுகக்கு அரசான தூதரே—சென்னத் எனும் சொர்க்கத் தில் எட்டுப் பிரிவுகளுள் ஒன்றான பிரதௌஸுக்கு அரசான திருத் தூதரே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி யருள் வீராக!

தெளிவுரை

குருவின் அருள் மொழி மாறாமல் மனதில் அறிவுடன் கொள் ளச் செய்துள்ள, ஒரு மாது பண்புடன் தன் மகனுக்குப் பல நாட் களாக நல்லறிவு கூறி வந்தாள்; அவன் அவ்வுரைகளைக் கேட்க வில்லை, மதுவும் கள்ளும் குடித்த போதையினால் அத்தாயின் கண் தெறித்து விழும்படி அடித்து விட்டான்; பின்னர் கோபம் தணிந் தது,வாள்கருவி கொண்டுஅடித்ததன்கரத்தைஅறுத்து விட்டான் உலகின் புகழ் நிரப்பும் வண்ணம் தாயின் தெறித்து விழுந்த கண் ணையும் திற்று விழுந்த மகன் கையையும் மீண்டும் பொருந்தும்படி செய்த மெய்யறிவுள்ள குருநாதரே! அழகிய மதின மாநகரின் அரசரே! கல்விப் பெருஞ்செல்வமே! சிறுதேர் உருட்டி யருள் வீராக! ஜென்னத் என்னும் சொர்க்கத்தின் எட்டுப் பிரிவுகளுள் ஒன்றான பிரதௌஸுக்கு அரசரான திருத் தூதரே! சிறுதேர் உருட்டி யருள் வீராக!

விளக்கவுரை

காட்சியுள குருநாதரே—அறுஷில் இறைவனுடன் உரை யாடி வந்த போது இறைவன் ஒளிமயமான திருக் காட்சியைக் கண்டு வந்த குருநாதரே என்றும் அற்புதக் காட்சிகளைத் தோற்று வித்த குருநாதரே என்றும் பொருள் காணவும் கூடும். கண்ணும் கரமும் பொருந்திய வரலாறு தெள்வுரையில் தெளிவாக உள்ளது.

இலக்கணக் குறிப்பு

குருமொழி—6-ம் வேற்றுமைத் தொகை. அயராமல்—வினை யெச்சம். நல்லறிவு—பண்புத் தொகை. மெய்த்தாய்—பண்புத் தொகை. கொடு—கொண்டு என்பதன் தொகுத்தல் விகாரம். துன்ன—செயவெனும் வாய்பாட்டு வினையெச்சம்.

98. அகதா யிருந்த யிறை ஐநா லிருனீவிட்
டழியாநூக் கத்தெழுந்தது நீ
ரழகே மிகுந்த வரியானே உயர்த்தியுள
அலிபாய் முனைத்தவு நீர்

உகமேழ் விசும்பனைத் துதியே துதிக்க மீ
முருவா யுதித்தவு நீ
ருயர்தீன் பயிர்வளர்த்து நெறிகோல் நடத்தமனு
வுருவாய்ப் பிறந்தது நீர்

பகைசேர் நரகுதலி லணுகாம லுஞ்சுவர்க்கப்
பதியே புகுத் துமிறை நீர்
படரே யலுவெனினுந் துடராய் பதவியுள்ள
பதியாயு தித்தவரசே

திகைவா னடுங்க வுயர்கொடியாடப் பொல் மகுடச்
சிறுதேர் நடத்தியருளே
சிறுதீ யொகிக்குரிய மகுமுது நந்நபி
சிறுதேர் நடத்தியருளே (5)

பதவுரை

அகதாய் இருந்த இறை—ஏகனுய் இருந்த இறைவன், நாள் இரனை விட்டு—நான்கு இருனை விட்டும், அழியா நூக்கத் தெழுந்த தும் நீர்—அழியாத புள்ளையாகத் தோன்றியதும் நீரே, அழகே மிகுந்த அரியானே—அழகு மிகுந்த இறைவனே, உயர்த்தி யுள அலிபாய் முனைத்தது நீர்—போற்றியுள்ள அலிபாகத் தோன் றியதும் நீரே, உகம் ஏழ் விசும்பு அனைத்தும்—ஏழ் உலகங்களும் ஆகாயம் அனைத்தும், துதியே துதிக்க மீம் உருவாய் உதித்தவும் நீ—போற்றி போற்றியென்று துதிக்க மீம் எனும் அறபு எழுத்து

வடிவாய்த தோன்றியதும் நீரே, உயர்நீன் பயிர் வளர்த்தும்—உயரும் சன்மார்க்கப் பயிரை வளரச் செய்து, நெறி கோல் நடந்த—அறநெறியில் செங்கோல் நடத்த,மனு உருவாய்ப் பிறந்தவதும் நீர்—மனித வடிவில் பிறந்ததுவும் நீரே, பனகசேர் நரகு தனில் அணுகாமலும்—பகைமை பொருந்திய நரகில் அணுகாமலும், சுவர்க்கப் பதியே புகுத்தும் இறை நீர் — சுவர்க்கத்தில் செலுத்தும் தலைவர் நீரே, படரே அணு எனினும் துடராப் பதவியுள்ள பதியாய் உதித்த அரசே—துயரம் அணு அளவேனும் தொடராத பதவி கொண்ட தலைவராய் உதித்த அரசரே! திகை வான் நடுங்க—திகைத்து வானம் நடுங்க, உயர் கொடி ஆட—உயர்ந்த கொடி ஆடும் படியாக, பொன் மகுடச் சிறுதேர் நடத்தி அருளே—பொன் மகுடம் பொருந்திய சிறுதேரை உருட்டி அருள் வீராக! சிபுறில் ஓகிக்கு உரிய மகுமூது நந்நபி — ஜீபுற மீல் (அலை) இறை மொழியை எடுத்து வந்து கூறுதற்குரிய நம்தபி முஹம்மது (ஸல) அவர்களே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி அருள் வீராக!

தெளிவுரை

ஏகனுப் இருந்த இறைவன் ஐந்நான்கு (20) இருளை விட்டும் அழியாத புள்ளியாகத் தோன்றியதும் நீரே, அழிகு மிகுந்த இறைவனை போற்றும் அலபாகத தோன்றியதும் நீரே, ஏழு உலகங்களும் ஆகாய மனைத்தும் 'போற்றி போற்றி!' என்று துதிக்க மீம் எனும் அறபு எழுத்து வடிவமாய்த் தோன்றியதும் நீரே, உயரும் சன்மார்க்கப் பயிரை வளரச் செயது, அறநெறியில் செங்கோல் நடத்த மனித வடிவில் பிறந்ததும் நீரே. பகைமை பொருந்திய நரகில் அணுகாமல்சுவர்க்கத்தில் செலுத்தும் தலைவர் நீரே. துயரம் அணுவேனும் அணுகாத பதவி கொண்ட தலைவராயித் தோன்றிய அரசரே! திகைத்து வானம் நடுங்கும்படி உயர்ந்த கொடி ஆட பொன் மகுடம் பொருந்திய சிறுதேரை உருட்டி யருள் வீராக! ஜிபுற மீல் (அலை) இறை மொழியை எடுத்து வந்து கூறுதற்குரிய நந்நபி முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுதேர் உருட்டி யருள் வீராக!

விளக்கவுரை

ஆதியில் இருளாக இருந்தபோது இறைவனுல் ஒளியிலிருந்து நபிகள் நாயகம் படைக்கப்பட்டார்கள். முதலில் புள்ளியாகவும் பின்னர் அலிபாகிய ஒரு கோடு போலிருந்து இறைவனைத் துதித்தார்கள்; பின்னர் அறபு எழுத்தாகிய மீம் எழுத்து வடிவம் கொண்டார்கள். பின்னரே மனித வடிவில் தோனினர்கள்—இது மரபுச் செய்தி.சிபுறில்—ஜிபுற மீல் எனும் அறபுப் பெயரின் தமிழ் வடிவம். அமரர் தலைவர். நாயகத்திற்கும் நபிமார்களுக்கு இறைமொழி எடுத்து வந்தளித்தவர். வகி—வஹி எனும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம். இறைமொழி எனும் பொருள் கொண்டது. அகது—அஹத் எனும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம். ஒருவன் எனும் பொருள் தரும்.

இலக்கணக் குறிப்பு

இருந்த யிறை — பெயரெச்சத் தொடர். அரியானை — 2-ம் வேற்றுமை உருபேற்ற வினையாலணையும் பெயர். கோல் — ஆகுபெயர். துரர — ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உயர் கொடி — வினைத் தொகை.

99. இறையோன் றனைப்பிரிய முடனே தொழுதுபணிந்
தியல்பா யிருந்த விறை யிர்
இடரே தவிர்த்தமறை மறையோர் களுக்குமுய
றீறேழ் இல்முள கனிநீர்

பெறிசேர் மனக்கருபு புலவோர் தனக்குக்கலே
புகழா யளித்த பொருள் நீர்
புனலே சுரத்திடத்தி லழைத்தே யருந்தும்படி
புகலே புரிந்த தருளுநீர்

மறியோ டுரைபகர்ந் திடரே விலக்கி யினமறிபா
லணுகும்படி விடுத்தீர்
வனஞ் சூற் புவியிவ்வ வாற்போல் வினையகறறி
வரமே எனக் கருளுவீர்

நிரிலோர் புகழுமக்க மதினு நகராச
சிறுதேர் நடத்தியருளே
பிறரீ லொகிக் குர்ய மகுபது நந்நபி
சிறுதேர் நடத்தியருளே (6)

பதவுரை

இறையோன் தனைப் பிரிய முடனே தொழுது பணிந்து இயல்பாய் இருந்த இறை யிர் — இறைவனை விருப்பமுடன் வணங்கி அடிபணிந்து நல்லியல் புடன் இருந்த தலைவரே, இடரே தவிர்த்த — துன்பத்தை நீக்கிய, மறை மறையோர்களுக்கும் — மறைகளைக் கற்றுணர்ந்த மறை வல்லோர்களுக்கும், உயர் ஈர் ஏழ் இல்முள கனி நீர் — உயர்ந்த 14 கல்வித் துறைகளைக் கொண்டுள்ள செல்வர் நீரே, பொறிசேர் மனக் கருபு புலவோர் தனக்கு — அறிவு பொருந்திய மனமுடைய கருபு என்னும் கனி ஞர்க்கு, கலை புகழாய் அளித்த பொருள் நீர் — தங்கள் திருமேனியில் தரித்திருந்த புகழுக்குரிய மேலாடையை அளித்து பொருளாகியவரும் நீரே, புனலே சுரத்திடத்தில் அழைத்தே — பாலை வனப் பாதையில் தண்ணீரை வரவழைத்து, அருந்தும்படி புகலே புரிந்த அருளும் நீர் — வருந்திய உடலிருந்தோர் அருந்தும்படி உபயோகம் செய்த அருளாகியவரும் நீரே; மறியோடு உரைபகர்ந்து — மானுடன் பேசி, இடரே விலக்கி — இடரை விலக்கி, இனமறி

பால் அணுகும்படி விடுத்தீர்—தன் ஆண் மானிடத்தும் குட்டி களிடத்தும் சேரும்படி அனுப்பினீர், எனும் சூழ் புவியில்—காடு கள் சூழ்ந்த இவ்வுலகில், இவ்ஆல் போல் விரிந்தகற்றி—இவ் வாறு ஆலமரம் போல் பெரிதாக வளர்ந்து வரும் நீவிரைகளை விலக்கி, இவ்வழி நடந்தது(போல நீவிரைந்தகற்றி),எமை எப்பொழு அருள்வீர்—எனக்கு அருள் செய்வீராக, திரிலோர் புகழும்—மூவுலகோரும் புகழும், மக்க மதீனு நகர் ராச—மக்கா மதீனா ஆகிய நகர்களின் அரசரே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி யருள் வீராக! கிபுறில் ஒகிக் குரிய—ஜிப்ரயீல் (அலை) எனும் அமரர் கோன் கொண்டு வரும் இறைமொழி பெறு தற்குரிய, மகுமூது நந்நபி—நந்நபி முகம்மது (ஸல்) அவர்களே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி அருள் வீராக.

தெளிவுரை

இறைவனை விரும்பி வணங்கிப் பணிந்து நல்லியல்புடன் இருந்த கலீவரே! துன்பத்தை நீக்கிய மறை வல்லோர்க்கும் 14 கல்விகளைக் கொண்டுள்ள கனி நீரே! அறிவு நிரம்பிய கபுபு எனும் கவிஞர்க்கு புகழ்தரும் மேலாடை அளித்த பொருளும் நீரே! பாதையில் தண்ணீரை வரவழைத்துத் தாகத்தால் வருந்தி யவர் அருந்தும்படி உதவிய அருளும் நீரே! மானுடன் உரை யாடி இனமானிடம் சென்றுவரச் செய்தீர். இவ்வாறெல்லாம் நடத்தியது போல என் தீவினைகளை அகற்றி எனக்கு அருள் செய் வீராக! மூவுலகும் புகழும் மக்கா மதீனு நகர் அரசரே! சிறுதேர் உருட்டி அருள் வீராக! ஜிப்ரயீல் (அலை) கொண்டு வரும் இறை மொழி பெறுவதற்கு உரிய நந்நபி முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுதேர் உருட்டி அருள் வீராக!

விளக்கவுரை

கனி—அறிவில் செல்வர் எனும் பொருள். தமிழ்ச் சொல் லாகவே கொண்டு 'கல்விக் கனியும் நீரே!' எனப் பொருள் கண்டு மகிழலாம். கவிஞர்க்கு ஆடை அணிவித்தல்: கபுபு என்பார் நாயகம் காலத்துப் பெருங் கவிஞர். நாயகத்தை எதிர்த்துக் கவிபாடியவர். இவரின் கவி நலம் கண்டு மகிழ்ந்த நாயகம் தங்கள் மேனியில் போர்த்தியிருந்த ஆடையை அவர்க்குப் பரிசாக அளித்தார்கள். புனல் அழைத்தது: நுபுவ்வத்திற்கு முன்பு நாயகம் வாணிபம் செய்யும் பொருட்டும் ஷாம் நகர் சென்ற போது உடன் சென்றவர். வழி நடந்த வருத்தத்தாலும் தாகத்தாலும் துன்புற்றனர். நாயகமவர்கள் தண்ணீர் தருவிக்க விழைந்தார்கள். அவர்கள் ஏறிவந்த ஒட்டகை கால்களைத் தூக்கித் தரையில் மிதித்தது. தண்ணீர் அமுதெனச் சுரந்தது. அங்கிருந்த அனைவரும் அள்ளிப் பருகி அகமகிழ்ந்தனர்.

மானுடன் பேசியது: முன்னரே விளக்கப்பட்டுள்ளது. மறை —மறைந்துள்ள பொருட்களை யெல்லாம் தன்பால் கொண்டுள்ள

தான் வேத நூலுக்கு இப்பெயர் வந்தது. கல்வி அறுபுமொழி யில் கல்வியைப் பதினொன்று வகைகளாகப் பிரித்துள்ளனர். அவைவருமாறு: வினைச் சொல், தர்க்கம், அகராதிக் கலை, சட்டக் கலை, கணிதம், வான சாத்திரம், மெய்ஞானம், வரலாறு, மருத்துவம், பூகோளம், இலக்கணம், எழுத்துக்கலை, திருக் குரான, விளக்கவுரை ஹதீதுக் கலை. திரிலோர்— மூன்று எனும் பொருள் கொண்ட வட சொல் திரி+இல்+ஓர் —மூவுலகத்தவர்.

இலக்கணக் குறிப்பு

மறையோர், படவோர்—குறிப்பு வினையாலணையும் பெயர்கள் சூழ்புவி—வினைத்தொகை. திரிலோர்—வினையாலணையும் பெயர்.

100. புவியே முழுகுமுய ரெழுவான் குறுசுறுசும்
பொருள்சேர் சுவர்க்கப் பதியும்
புரியூர்க் கடல் மலையும் பொன்னு தமரரொடும்
பூணுர் அணங்கினமும்
சனிசே ரிரவியொடு மதியோடு டுவினமுங்
சரமாரி பெய்யுமழையுஞ்
சதுநான் குலகுநனி விருந்தே மிகுதியுள
தரமா யெழுந்தவுயிரும்
நபிமா ரனைவரொடு கவிராசர் முற்றும்பல
நவகோடி புருடரிறையு
நந்தா திறை விதித்த பலவே செந்துமுதல்
நன்னூய்த் துதிதுதிக்கவே
செவிகேள் விகொண்டு வரமுடனே கொடித்த நபி
சிறுதேர் நடத்தியருளே
சிபுரி லொகிக்குரிய மகுமூது நந்நபி
சிறுதேர் நடத்தியருளே (7)

பதவுரை

புவி ஏழ் உலகும்—பூவுலகம் ஏழு உலகங்களும், எழுவான —ஏழு வானுலகங்களும், குறுகும் அறுகும்—அறுகும் குறுகும், பொருள் சேர் சுவர்க்கப் பதியும்—பொருள் பொருந்திய சொர்க் கமும், புரி ஊர்—கோட்டைகளைக் கொண்ட கோநகரங்களும் பிற ஊர்களும், கடல் மலை—கடல்களும் மலைகளும், பொன்னுத அமரர்—அழியாத வானவர்களுடனும், பூண் ஆர் அணங்கினமும் —ஆபரணங்கள் அணிந்துள்ள வானுலகப் பெண்களும், சனிசேர் இரவி யொடு—ஒளி பொருந்திய சூரியனுடன்; மதியோடு டுவினமும்—சந்திரனுடு நட்சத்திரக்கூட்டமும், சரமாரி பெய்யும் மழையும்—இடை விடாமல் பொழியும் மழையும், சது நான்கு உலகும்—எட்டு உலகங்களையும், நனி இருந்தே மிகுதியுள தர மாய எழுந்த உயிரும் — சிறப்பாயிருந்து மிகுந்த இரத்துடன்

தோன்றிய உயிர்களும், நபிமார் அனைவரோடு— 124000 பேர் என்று கூறப்படும் நபிமார்கள் அனைவருடன், கவி ராசர் முற்றும் —கவியரசர்கள் முழுவதும், பல நவ கோடி புருடர் இறையும் —பல புதுமையான கோடிக் கணக்கான மனிதர்களின் தலைவர் களும், நந்தாத இறை விதித்த— அழிவற்ற இறைவன் திட்ட மிட்டுப் படைத்த, பலசிவ செந்து முதல்—பல வகையான உயிர் இனம் முதலாக உள்ள அனைத்தும், நன்றுய்த் துதிதுதிக்கவே— நன்றுகப் போற்றிப்புகழ, செவி கேள்வி கொண்டு—செவி வழி யாகக் கேட்டது கொண்டு, வரம் உடனே கொடுத்த நபி—வரம் உடன் வழங்கிய நபியே, சிறுதேர் நடத்தி அருளே — சிறுதேர் உருட்டி யருள் வீராக! சிறுறில் ஒசிக்கு உரிய மகுமூது நந்நபி— ஜிபுருயீல் (அலை) கொண்டு வரும் இறை மொழிக்குரிய நந்நபி முஹம்மது(ஸல்) அவர்களே! சிறுதேர் நடத்தி அருளே—சிறுதேர் உருட்டி யருள் வீராக!

தெளிவுரை

ஏழு உலகங்களும் ஏழு வானங்களும், அறுசுரம் குறுஷும், சொர்க்கமும், நகரங்களும், ஊர்களும், கடல்களும் மலைகளும், வானவர்களுடன் வானுலகப் பெண்களும் ஓவ்திகமும் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும், மழை மேகங்களும், எட்டுலகங் களிலும் எழுந்துள்ள உயர்தரமான உயிர்களும், நபிமார்களும் கவியரசர்களும், மக்கள் தலைவர்களும் இறைவன் படைத்த பல வகை உயிரினங்கள் முதலாக உள்ள அனைத்தும் நன்றுகப் போற்றிப் புகழ் கேட்டதும் வரமளித்த நபியே! சிறுதேர் உருட்டி அருள் வீராக! ஜிபுறயில் (அலை) கொண்டு வரும் இறைமொழிக் குரிய நந்நபி முஹம்மது (ஸல்) அவர்களே! சிறுதேர் உருட்டி யருள் வீராக!

இலக்கணக் குறிப்பு

ஏழுலகம் எழுவான்—பண்புத் தொகை. ஆர் அணங்கு— வினைத் தொகை. தனி—உரிச் சொல். புருடரிறை—6-ம் வேற்று மைத் தொகை.

101. ஆவண மீதினி லெழுதகள் விண்புக
அமரர்கள் விழியிமைக்க
அவையின் விடுஞ்செழு மழைமுகி லெழுந்தடர்
பெறக்குடை கவிக்க

பாவலை பீதுள்ள சறுவந்து சிரசினிற்
பசுங்கதி ரென விரிக்க
பரிமள மெய்யினி லணிகலே இயாளிவுக்கும்
பகலவ னெளியொளிக்க

பூவண மீதொடு வறிவு கடங்கிய
புலவர்கள் துதிதுதிக்க
புறவலர் துறவலர் சதசத கோடி
புருடர் சலாமுரைக்க

சீவன மூரிய கரிபரி யகன்றிடத்
தேரை நடத்துகவே
செய செய சிங்க முகம்மது நந்நபி
தேரைநடத்துகவே (8)

பதவுரை

ஆவணம் மீதினில் எழு துகள் விண்புக—வீதிகளில் எழுகின்ற புழுதி விண்ணில் சென்றுபுக, அமரர்கள் விழியிமைக்க—வானவர்களும் அஞ்சி விழிகளை இமைக்க, அணி மின் விடும்—அழகிய மின்னல் வீசும், செழுமழை முகில் எழுந்து அடர்பெறக் குடைபிடிக்க—செழிய மழை மேகம் எழுந்து அடர்ந்து குடைபோல நிழல் செய்ய, பாவனம் மீதுள்ள சறுவந்து—சொர்க்கத்திலுள்ள சறுவந்து எனும் தலை அணி, சிரகினில் பசுங்கதிர் என விரிக்க—தலையில் சந்திரனைப் போல ஒளிபரப்ப, பரிமளம் மெய்யினில் அணிகலை யொளிவுக்கு—நறுமணம் கமழும் திருமேனியில் அணிந்த ஆடையின் பிரகாசத்திற்கு, பகலவன் ஒளி ஒளிக்க—சூரிய ஒளி வீச, பூவனம் மீதொடு அறிவுகள் தங்கிய—உலகின் மீது அறிவு உறைகின்ற, புலவர்கள் துதிதுதிக்க — புலவர்கள் துதித்துப் போற்ற, புறவலர் துறவலர்—புறத்துறைகளிலும் தவவொழுக்கத்திலும் சான்றோரும், சதசத கோடிப் புருடர் — நூற்றுக் கணக்கான மனிதர்களும், சலாம் உரைக்க — சலாம் கூறி, சீவனம் மூரிய— உயிரினங்களில் வலிமை சான்ற, கரிபரி அகன்றிட—யானைகளும் குதிரைகளும் விலகும்படி, தேரை நடத்துக—தேரை உருட்டி அருள் வீராக! செய செய சிங்கம் முகம்மது நந்நபி—வெற்றிச் சிங்கமாகிய நந்நபி முஹம்மது (ஸல்) அவர்களே தேரை நடத்துக—தேரை உருட்டி அருள் வீராக.

தெளிவுரை

வீதிகளில் எழுகின்ற புழுதி விண்ணகத்தில் புக, வானவரும் விழிகளைச் சிமைக்க, அழகிய மின்னல் வீசும் மழை மேகம் குடைபிடிக்க, சொர்க்கத்தில் உள்ள சறுவந்து என்னும் தலையணி சந்திரனைப் போல் ஒளி பரப்ப, நறுமணம் கமழும் திருமேனியில் தரித்த ஆடை கதிரவனைப் போல ஒளி வீச, உலகெலாம் அறிவு நிரம்பிய புலவர்கள் துதிபாட, புறவலரும் துறவலரும் பன்னூறுக் கணக்கான புருடர்களும் சலாம் கூற உயிரினங்களில் வலிமையுடைய யானைகளும் குதிரைகளும் விலகி ஓட தேரை நடத்தி அருள் வீராக! வெற்றிச் சிங்கமாகிய முகம்மது (ஸல்) அவர்களே! தேரை நடத்தி அருள் வீராக!

வளக்கவுரை

ஆளை.....விழியிலமைக்க! அமரர்கள் இமையாது விழித்திருக்கும் இயல்பினர்; இவ்வாறு இமையா விழி கொண்டோரும் விழியினை இமைத்து விடும்படி நாயகப் பிள்ளை நடத்தும் தேர் அதிகமான புழுதியை எழுப்பியது என்பது எண்ணி மகிழ்தற்கு உரியது.

சறுவந்து — தலையணி — முன்னரே கூறப்பட்டுள்ளது. புறவலர்—இது 'புரவலர்' என்று இருந்திருக்கும்மோ என்ற ஐயம் தோன்றுகின்றது. சதசத கோடி—ஆயிரம் எனும் பொருளும் கொள்ளலாம் சதம்—நூறு எனும் பொருள் கொண்டது.

சலாம்—முஸ்லிம்கள் சந்திக்கும் போது ஒருவர்க் கொருவர் கூறிக் கொள்ளும் வாழ்த்தாகும். இந்துப் பெருமக்களில் தமிழர் வணக்கம் என்பர், வடவர் நமஸ்தே என்பர். இது மனிதரை மனிதர் வணங்கும் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. ஆங்கிலேயர் 'Good Morning', 'Good After Noon', Good Night' முதலியன சொல்லிக் கொள்கின்றனர். 'நற் காலை' 'நற் பகல்', 'நல்லிரவு' போன்ற வற்றிலும் பொருளும் சிறக்கவில்லை.' உங்கள் மீது சாந்தி உண்டாவதாக' எனும் பொருள் கொண்ட 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்பதில் அரிய இனிய பொருள் நிறைந்துள்ளது. பல செல்வங்களைச் சேர்த்துப் பெற்ற போதிலும் மனிதன் மனக் கவலையை மாற்றும் மன அமைதி இன்றி வேதனைப்படுகின்றான். இறைவன் அருள் பொருந்தியவர்க்கு மன அமைதி கிடைக்கும். இம்மையிலும் மறுமையிலும் பேரின்பம் படைக்கும். ஆதலின் இருமையிலும் நலம் பயக்கும். சாந்தி பெறுக என்று வாழ்த்துவது சாலச் சிறந்ததாகும். இஸ்லாத்தின் இனிய தத்துவமே இதில் அமைந்துள்ளதுளனலாம்.

இலக்கணக் குறிப்பு

எழுதுகள்—வினைத் தொகை. இமைக்க, களிக்க, விரிக்க, துதிக்க, உரைக்க—செய்ய எனும் வாய்பாட்டு வினை எச்சங்கள். செழுமை, பசுங்கதிர்—பண்புத் தொகைகள். அறிவு கடந்திய—அறிவுகள் தங்கிய, எழுவாய்த் தொடர். கரிபரி—உம்மைத் தொகை. சத சத, செய செய—அடுக்குத் தொடர்.

102. காரண மெங்கும் விளங்கிடக் கலிலெலா
கட்டிய மிகக் கூறக்
கடல்வரை நூரையெனக் கவரிக ளிருபுறங்
கன்னியர் மிகவீச

ஆரண மோதிய வேதிய ரிசையொடு
அறவெனுங் கவிபாட
அணங்கு மெய்த்தகுதிய கறுவின் மாத
ரரிதிற மலர்தூவ

மாரணம் புரிந்திடு மறுவகைச் சேனை
வடகட லென நடக்க
வகை வகை வாச்சிய மிடியெனத் தொனித்திட
மகிழ்வொடு வலப்புறமாய்ச்

சீரணி குலவிய ஆவண வீதினில்
தேரை நடத்துகவே
செய செய சிங்க முகம்மது நந்நபி
தேரை நடத்துகவே (9)

பதவுரை

காரணம் எங்கும் விளங்கிட—அற்புதங்கள் எங்கும் தோன்றிட, காவலர் கட்டியம் மிகக் கூற—காவல் செய்வோர் கட்டியம் அதிகமாக்க கூற, கடல் நுரை நுரையென கவரிகள்—கடல் நுரையைப் போன்ற வெண் சாமரைகளை, இரு புறம் கன்னியர் மிக வீச—கன்னிப் பெண்கள் இரு புறங்களிலும் இருந்து வீச, ஆரணம் ஓதிய வேதியர்—மறைகளை ஓதித் தெளிந்த மறையோர், இசையோடு அறுபெனும் கவிபாட—இசையோடு கூடி அறுபுப்பாடல்கள் பாட, அணங்கு மெய் தங்கிய கூறுலின் மாதர்—தெய்வீக உடல் பொருந்திய கூறுலின் பெண்கள், அரி நிறம் மலர் தூவ—அழகிய வண்ண மலர்களைத் தூவ, மாரணம் புரிந்திடும்—கொல்லுதலைச் செய்திடும், அறுவகைச் சேனை—ஆறுவகைப் படைகளும் வட கடல் என நடக்க—வட திசைக் கடல் போல நடக்க, வகை வகை வாச்சியம்—பலவகை வாத்தியக் கருவிகள், இடியெனத் தொனித்திட—இடி போல் ஒலி செய்ய, மகிழ்வொடு வலப் புறமாய—மகிழ்ச்சியுடன் வலது பக்கமாய், சீர் அணி சூலவிய ஆவணம் மீதில்—சிறந்த அழகு மிகுந்த வீதியில், தேரை நடத்துகவே—தேரை நடத்துவிராக! செய செய சிங்க முகம்மது நந்நபி—செய சிங்கமான நந்நபி முஹம்மது (ஸல்) அவர்களே! தேரை நடத்துகவே—தேரை நடத்து விராக!

தெளிவுரை

அற்புதங்கள் எங்கும் தோன்றிச் சிறக்க, காவலர் கட்டியும் மிகக் கூற, கன்னிப் பெண்கள் இரு புறங்களிலுமிருந்து கடல் நுரை போன்ற வெண் சாமரைகளை விச, மறை யோதிய மறையவர் அறுபுப் பாடல்களை இசையுடன் பாட, வானுல கத்துப் பெண்களாகிய கூறுலின்கள் வண்ணமலர்களைத் தூவ, அறுவகைத் தானைகளும் வட திசைக் கடல் போல் நடக்க, பல வகை வாத்தியக் கருவிகள் இடி போல ஒலிக்க, அழகு மிகுந்த வீதியில் வலப் பக்கமாய்த் தேரை நடத்து விராக! வெற்றிச் சிங்கமாகிய நந்நபி முஹம்மது (ஸல்) அவர்களே! தேரை நடத்து விராக!

விளக்கவுரை

காரணம்.....விளங்கிட: காரணம் எனும் சொல் ஏது, வாயில் எனும் பொருட்களைக் கொண்டது. இவ்வுலகம், இவ்வுலகிலுள்ள பொருட்கள், மனிதன் முதலிய படைக்கப்பட தன் காரணம் —நோக்கம்—எங்கும் தெரிந்து எழுதும்படி நாயகம் அவர்களின் வாழ்வும் வாக்கும் அமைந்தன. 'படைப்பின் காரணம் எங்கும் விளங்கிட (தேரை நடத்துக)' எனவும் பொருள் கொள்ளலாம். முஸ்லிம் தமிழ்ப் புலவர்களும் உரையாளர்களும் காரணம் எனும் கொல்லுக்கு அற்புதம் என்ற பொருளையே பெரும்பாலும் தந்துள்ளனர். நாயகம் 'நான் கொண்டு வந்த அற்புதம் திருக் குரானையிருக்கும்' என்று கூறியுள்ளார்கள்; எனினும் அவர்களின் வாழ்வில் பல அற்புதங்கள் நடந்தனவாக இலக்கியங்கள் இயம்புகின்றன.

அறுவகைச் சேனை— நால்வகைச் சேனையே கூறப்படும். இங்கு புலவர் ஆறுவகைச் சேனைகளைக் கூறுகிறார். அவையாவன: வில் படை, வேற் படை, காலாட் படை, குதிரைப் படை, யானைப் படை, தேர் படை.

இலக்கணக் குறிப்பு

வலர்—வினையாலணையும் பெயர் நூரை நூரை, வகை வகை, செய செய—அடுக்குத் தொடர். கூற, விச, பாட, தூவ, ஊக்க, தொனித்திட—செய வென் வாயபாட்டு வினையெச்சம்.

03: ஆதியி னருளொடு வரிசைக டங்கிய
அகுமது நபிவாழ்க
ஆலக காபொடு தீனவ ரடங்கலு
மறிஞரு முதல்வாழ்க

மேதினி மீதினி லிசைபொடு படிப்பவர்
விதிமுறை யுடன்வாழ்க
விழையொடு கேட்பவர் கொடுப்பவர் கிளையொடு
வியல்பெற மிகவாழ்க

தேம தெரடுபல சீவசெந் தடங்களும்
செழுமையி னுறவாழ்க
கேதமு மணுகிடா விண்ணவர் கூறலின்
கிருபை யுடன்வாழ்க

நிதொடு பலவின யகற்றியும் வாழ்கத்
தேரை நடத்துகவே
செய செய சிங்க முகம்மது நந்நபி
தேரை நடத்துகவே (10)

பதவுரை

ஆதியின் அருளொடு—இறைவனின் அருளுடன், வினைகள் தங்கிய—சிறப்புகள் பொருந்திய, அகுமது நபி வாழ்க—புகழுக்குரிய நபி வாழ்க! ஆல் அகுகாபு ஒடு — நாயகத் தோழர்களின் கிளைஞர், தீனவர் அடங்கலும்—சன்மார்க்கத்திலுள்ளவர்களான சீலர்களனைவரும், அறிஞர்முதல்—அறிஞர் முதலாகவுள்ள சான்றோரும், வாழ்க—வாழ்வார்களாக! மேதினி மீதினில் இசையொடு பாடிப்பவர்—இவ்வுலகில் இசையுடனே இப்பாடல்களைப் பாடிப்பவர், விதி முறையுடன் வாழ்க—மார்க்க நெறிமுறைகளின் படி வாழ்வார்களாக!, கிளைஞரொடு கேட்பவர் — விரும்பிக் கேட்பவரும், கொடுப்பவர் கிளையொடு—கொடுப்பவரும் இனத்துக்களுடன், வியம் பெற மிக வாழ்க—பெருமை பெற்றுச் சிறந்து வாழ்வார்களாக! கிதம் மது ஒடு—ரீங்காரம் செய்யும் மதுவுண்டு வாழும் வண்டினத்துடன், பவ சீவ செந்து அடங்கலும்—பல்வேறு உயிரினங்கள் அனைத்தும், கெழுமையின் உற வாழ்க—நிறைந்து வாழ்க! கேதம் அணுகிடா விண்ணவர்—துன்பம் அணுகாத விண்ணவர்களும், கூறுவின்—விண்ணகத்துப் பெண்களாகிய கூறுவின்களும், கிருபையுடன் வாழ்க—இறைவனருளுடன் வாழ்வார்களாக! திதொடு பலவீன அகற்றியும் வாழ்க—கேடுகளுடன் தீய பல வினைகளையும் அகற்றி வாழ்வார்களாக! தேரை நடத்துகவே—தேரை நடத்துவீராக! செய செய சிங்க முகம்மது நந்நபி—வெற்றிச் சிங்கமாகிய நந்நபி முஹம்மது (ஸல்) அவர்களே! தேரை நடத்துகவே—தேரை நடத்துவீர்களாக!

தெளிவுரை

இறைவனின் அருளுடன் சிறப்புக்கள் பொருந்திய புகழுக்குரிய நபியே வாழ்வீர்களாக! நாயகத் தோழரின் கிளைஞருடன் சன்மார்க்க சீலரும் அறிஞர் முதலாகவுள்ள அனைவரும் வாழ்வார்களாக! இவ்வுலகில் இசையுடன் இந்நூற் பாடல்களைப் பாடிப்போர் மார்க்க நெறி முறைகளின்படி நடப்பார்களாக! விரும்பிக் கேட்போரும் கொடுப்போரும் பெருமை பெற்றுச் சிறந்து வாழ்வார்களாக! இசைபாடும் மது கரங்களுடன் பல வகை உயிர்களனைத்தும் நிரம்பி வாழ்க! துன்பம் தெருங்காத அமரர்களும் கூறுலின் பெண்களும் அருளுடன் வாழ்வாகளாக! தீமையுடன் கேடு பயக்கும் வினைகளையும் நீக்கி வாழ்வாகளாக! தேரை நடத்து வீர்களாக! வெற்றிச் சிங்கமாகிய நந்நபி முஹம்மது (ஸல்) அவாகளே! தேரை நடத்து வீாகளாக!

விளக்கவுரை

அகுகாபு—அல்ஹாபி—என்னும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம், தோழிர் எனும் பொருள் கொண்டது. இங்கு நாயகத் தோழா எனப் பொருள்படும். ஆலகுகாபு — நாயகத் தோழாகளின் கிளைஞர்.

அகுமது—அஃகமது என்னும் அறபுச் சொல்லின் தமிழ் வடிவம் புகழுக் குரியவர் என்பது பொருள்.

முத்திரைப் பாடலான இதில் மங்களம் கூறுகிறார் ஆசிரியர். இந் நூல் படிப்பவர்கள் நெறி முறைகளுடன் வாழ வேண்டும் எனக் கவிஞர் ஆசைப்படுவது எவ்வளவு சிறப்பாக உள்ளது.

இலக்கணக் குறிப்பு

வினைச கடங்கிய—வினைசகள் தங்கிய எழுவாய்த் தொடர் கேட்பவர் கொடுப்பவர்—வினையாலணையும் பெயர்கள். திரு—உவம ஆகுபெயர். செய செய—அடுக்குத் தொடர்.

சிறுதேர்ப் பருவம் முற்றிற்று.

செய்யது அனபியாப் புலவர் இயற்றிய
நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்
முடிவுற்றது.

பிரசித்தி பெற்ற பிள்ளைத் தமிழ நூல்கள்

1. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்— ஆசிரியர் குமர குருபரர்
2. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்—ஆசிரியர் குமர குருபரர்
3. திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் — பகழிக் கூத்தர்
4. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் — சிவஞான முனிவர்
5. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் — சிவஞான முனிவர்
6. திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்—சிவஞான முனிவர்
7. திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் — சிவஞான முனிவர்
8. புள்ளிருக்குவேளூர் முத்துக் குமார சுவாமி பிள்ளைத் தமிழ் — சிவஞான முனிவர்
9. சேலூர் முருகன் பிள்ளைத் தமிழ் — அத்தக்கவி வீரராகவ முதலியார்
10. திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழ் — மீனாட்சி சுந்தரம் பிள்ளை
11. திருவானைக்கா அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்— மீனாட்சி சுந்தரம் பிள்ளை
12. திருமலை முருகன் பிள்ளைத் தமிழ் — கவிராசபண்டாரம்
13. நால்வர் பிள்ளைத் தமிழ் — காரைக்குடி சொக்கலிங்கம் செட்டியார்
14. காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் — அழகிய சொக்கநாதர்

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றியவை

1. இறசூல் நாயகம் பிள்ளைத் தமிழ் — மேலப்பாளையம் பீரான் சாகிபுப் புலவர்
2. நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ் — தொண்டி பீர்முகம்மதுப் புலவர்
3. நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ்—செய்யிது அனபியாசாஹிபு
4. நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் — செய்கு பீரான் புலவர்
5. பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ் — செய்கு பீரான் புலவர்
6. முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்—சவாதுப் புலவர்
7. முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்-செய்யிது முகியித்தீன் கவிராயர்
8. ஷாஹுல் ஹமீது நாயகம் பிள்ளைத் தமிழ்—மேலப்பாளையம் பதீரப்பா
9. பீரான் சாகிபு பிள்ளைத் தமிழ் — இளையான்குடி பாட்சாப் புலவர்
10. ஜெதக்கா சாகிபு வலியுல்லாஹ் பிள்ளைத்தமிழ்—அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர்
11. ஸாலிஹ்வலியுல்லாஹ் பேரில் திருச்சந்தப் பிள்ளைத் தமிழ் —கடலூர் செய்கு முகம்மது காதிறு மீரா லெப்பை
12. ஷெய்கு தாவூது வலியுல்லாஹ் பிள்ளைத் தமிழ்—சொர்ணகவி நயினா முஹம்மது
13. செய்யிது மூகம்மது புகாரி பிள்ளைத் தமிழ் — மீரு கனிபுப் புலவர் (காலங் குடியிருப்பு)
14. நத்தர் வலியுல்லா பிள்ளைத்தமிழ்—பிச்சை இபுறுகீம் புலவர்
15. நாகூர் பிள்ளைத் தமிழ் — பிச்சை இபுறுகீம் புலவர்
16. கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ் — செய்குத்தம்பிப் பாவலர்
17. ஞானப் பிள்ளைத் தமிழ் (ஹல்லாஜ்) ஞானியார் சாஹிபு

Swarnly. S.

Albion Press (Colombo) Ltd.
157, Jayantha Weerasekera Mawatha
Colombo-10

ரூபா 8/-